வரு.75 இல. 33 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

24 பக்கங்கள் 100/-

கருணை இல்லம் கோகுலம்



ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, நல்வாழ்வு, சிறந்த எதிர்காலம் ஏற்படுத்திக்கொடுக்கும் கருணை இல்லம் கோகுலம், பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்கள் திருமண நாள், அன்புக்குரியவர்களின் நினைவு தினம் போன்ற எந்தவொரு விசேட நிகழ்வுகளுக்காகவும் இச்சிறியோரின் ஒரு நாளுக்கான பராமரிப்புச் செலவு தொகை 65,000 ரூபாவை வழங்கி உதவலாம்.

நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:

Commercial Bank A/C No : 1050669901 Office : Sri Sri Radhakirsana Temple.
A/C Name :- ISKCON,Shift Code CCEYLKLX No : 188, Newchetty Street, Colombo-13
Gokulam No : 607 A, Negombo Road Mabola, Wattala. Phone : 0112433325 , Email: iskcon@slt.lk

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2023 ஓகஸ்ட் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

August 20 Sunday, 2023



ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டிட வேலைகள் இறுதிக்கட்டத்தில்

ஆலய திருப்பணிக்கு நிதியை பணமாகவோ காசோலையாகவோ வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்

Commercial Bank - Colombo-13
A/C Name: ISKCON Temple Fund
A/C No:- 1120017042
Hatton National Bank - Colombo-13
A/C Name: ISKCON
A/C No- 207010000891

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண (ஆலயம்)
188, புதுச்செட்டித்தெரு,கொழும்பு –13, தொலைபேசி:–011–2433325
Fax:2471089, Email:iskcon@slt.lk Web: www.iskcon.lk

/ Thinakaran.lk / ThinakaranLK




02 நிலவை வெற்றிகொள்ளும் முயற்சியில் சந்திரயான் – 3



05 விவசாயிகள் மத்தியில் அமைதியின்மை ஏற்படுத்த முயற்சி!



15 தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் பயணம்



24 யார் தவறு?

# நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்து விரைவில் மீளாய்வு

## புதிய பொருளாதார போக்கு, காலநிலை மாற்றம் தொடர்பாகவும் விசேட கவனம்

### கடற்படையின் தொண்டர் படையணிக்கு ஜனாதிபதி வர்ணம் சூட்டும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பான மீளாய்வொன்றை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் இதன் போது புதிய பொருளாதார போக்குகளை போன்றே காலநிலை மாற்றம் உள்ளிட்ட அனைத்துக் காரணிகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதற்காக மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) சன்ன குணதிலக்க தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் அறிக்கை கிடைத்த பின்னர் தேசிய பாதுகாப்பு சபையின் நவீன பாதுகாப்புக் கொள்கைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை கடற்படையின் தொண்டர் படையணிக்கு ஜனாதிபதி வர்ணம் சூட்டும் நிகழ்வு 06

## வடக்கில் ஐ.தே.க. மறுசீரமைப்பு வேலைத்திட்டம்



நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் நேற்று வடக்கிலும் நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஏற்பாடு செய்த கிளிநொச்சி தொகுதிக் குழுக் கூட்டம், கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டாரவின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது. பெருந்தொகையான கட்சி உறுப்பினர்கள் இக்கூட்டத்தில்கலந்துகொண்ட போது பிடிக்கப்பட்ட படம்.

600 விசேட வைத்திய நிபுணர்கள் உட்பட

## நாட்டில் 3,000 டாக்டர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது

சுகாதார அமைச்சு அதிர்ச்சி தகவல் 06

## தமிழரை பாதிக்கும் விடயத்தில் தொல்லியல் திணைக்களம்

### உணர்வுகளை பாதிப்பதாக உள்ளது என்கிறார் டக்ளஸ்



தமிழர்களை பாதிக்கும் செயற்பாடுகளையே தொல்லியல் திணைக்களங்கள் முன்னெடுத்துள்ளன. தற்போதுள்ள அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி விரைவான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென, கடற்றொழில் அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். 06

## குறைந்தளவில் நாணயங்களை வெளியிடும் மத்திய வங்கி

### 2018 உடன் ஒப்பிடுகையில் 50 வீதம் குறைப்பு – பந்துல



இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களம் வருடாந்த புழக்கத்துக்காக வெளியிடப்பட்ட நாணயங்கள் மற்றும் நாணயத் தாள்களின் தொகையை கடந்த 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுமார் 50 வீதத்தால் குறைத்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இலங்கையின் நாணயம் மற்றும் 06

## ஜனாதிபதியினால் மட்டுமே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லலாம்

### அதனை அவர் உணர்த்தி வருகிறார் – விஜயகலா புகழாரம்

பருத்தித்துறை விசேட நிருபர்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியுமென, யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை தொகுதி ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலக திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். 06

## G.C.E. (A/L) பெறுபேறுகள் இந்த மாத இறுதியில்!

### பரீட்சைகள் ஆணையாளர் அமித ஜயசுந்தர



கடந்த 2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக, பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

இதற்கமைய உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை இந்த மாத இறுதியில் வெளியிட முடியுமென, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம். சி.அமித ஜயசுந்தர தெரிவித்தார். 06

## பொலிஸ் அதிகாரம் மத்திய அரசிடம் மட்டுமே இருக்க வேண்டும்

### ஜனாதிபதிக்கு அமைச்சர் நஸீர் அஹமட் கடிதம்



முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்களின் பங்கேற்பின்றி 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அமுல்படுத்துவதன் மூலமோ அல்லது வேறு நடவடிக்கை மூலமோ கொண்டு வரப்படும் எந்தத் தீர்வும் ஒருபோதுமே நீடித்த நிலைபேறான தீர்வாக அமையாதென, அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொலிஸ் அதிகாரங்கள், மத்திய அரசாங்கத்திடம் மாத்திரமே இருக்க வேண்டுமெனவும், அவர் தெரிவித்துள்ளார். 06

## உள்ளூராட்சி மன்றங்களில் 25 வீத இளைஞர் பிரதிநிதித்துவம்

### சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு



உள்ளூராட்சிமன்றங்களில் 25 வீதம் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருப்பதாக, பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி.தொலவத்த தெரிவித்தார்.

இலங்கையில் நீண்டகாலமாக இருந்து வந்த ஆனால், கடந்த காலத்தில் இழந்த அந்த வாய்ப்பை மீண்டும் இளைஞர்களுக்கு வழங்குவதே இதன் நோக்கமாகுமெனவும் அதற்காக அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் பெறப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (18) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து 06

யாழ். பல்கலைக்கழகத்தின்

## துணைவேந்தராக சிறிசற்குணராஜா

### ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டார்



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 28ஆம் திகதி முதல் அடுத்து வரும் மூன்று 06

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## எங்கள் கருத்து

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

### இலவசக் கல்வியை ஊட்டிய தாயகத்தை மறந்து விடுவதா?

இலங்கையில் இருந்து கல்வி கற்றோர் சமூகத்தினர் தற்போது அதிகளவில் வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருப்பதாக ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருக்கும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவையல்ல. அதேவேளை இந்த விவகாரத்தை மிகைப்படுத்தியவாறு பெரும்பாலான ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டிய செய்தியாகும்.

மருத்துவர்கள், பொறியியலாளர்கள் போன்ற நிபுணர்கள் மாத்திரமன்றி ஏனைய பட்டதாரிகள் பலரும் சமீப காலமாக நாட்டை விட்டு வேறு நாடுகளுக்குச் சென்றுள்ளனர். இவர்களில் ஒரு தொகுதியினர் அந்நாடுகளில் தொழில்வாய்ப்புக்காகச் சென்றிருக்கின்றனர். மற்றொரு தொகுதியினர் அந்நாடுகளில் நிரந்தரமாகக் குடியேறி வாழும் நோக்குடன் சென்றுள்ளனர்.

எவ்வாறாயினும் கல்விச் சமூகத்தினரின் இந்த வெளியேற்றத்துக்குக் காரணம் இலங்கையில் உருவெடுத்துள்ள பொருளாதார நெருக்கடியேயாகும் என்பது வெளிப்படையானதாகும். இலங்கையில் பொருளாதார நெருக்கடி உருவெடுத்ததன் காரணமாக வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்திருக்கின்றன. இந்நாட்டில் தங்களது 06

## வாக்காளர் பதிவேட்டில் பெயரை உறுதிப்படுத்தவும்

### மக்களுக்கு தேசிய தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்து




2023 தேருநர் பதிவேட்டில் தமது பெயர் உள்ளதா? என்பதை தகுதியான வாக்காளர்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று பொதுமக்களுக்கு தேசிய தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

www.elections.gov.lk இணையத்தளத்துக்குள் பிரவேசித்து விபரங்களை சரி பார்க்க முடியுமென்பதுடன், தகவல்களை சரி பார்ப்பதற்காக தத்தமது தேசிய 06

## வீட்டினுள் பதுங்கியிருந்த காணாமல் போன வர்த்தகர்

### கடன் கொடுத்தவர்களிடமிருந்து தப்பிக்க தந்திரம்

மிரிஹான பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்

கொலொன்ன பிரதேசத்தில் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்ட வர்த்தகர், மிரிஹான பொலிஸாரால் நேற்று முன்தினம் (18) இரவு கைது செய்யப்பட்டார்.

நண்பர் ஒருவரின் வீட்டில் இந்த வர்த்தகர் பதுங்கியிருந்த போதே கைது செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வர்த்தகரிடம் நடத்திய விசாரணையின் போது, கடன் கொடுத்தவர்களிடமிருந்து தப்பிப்பதற்காகவே 06

## 13ஆவது திருத்த விடயத்தில் சஜித் இரட்டை வேடம்

### ஜ.ம.கா. தலைவர் பிரபா கணேசன் கண்டனம்



13ஆவது திருத்தம் தொடர்பாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இரட்டை வேடம் போடுவதாக, ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன் கண்டனம் தெரிவித்தார். ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஏற்பாடு 06

கண்டி எசல பெரஹராவை முன்னிட்டு

## கொழும்பிலிருந்து கண்டி நகருக்கு விசேட ரயில்

### 26 முதல் 30ஆம் திகதிவரை ஏற்பாடு



கண்டி, எசல பெரஹராவை முன்னிட்டு பொது மக்களின் பயண வசதி கருதி நான்கு விசேட ரயில் சேவைகளை நடத்தவுள்ளதாக, இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்தது. 06

தலையை வெட்டி எடுத்து வருவேன்;

## மேர்வினின் கூற்றுக்கு CYP ராம் கண்டனம்



வடக்கிலுள்ள விகாரைகள் மற்றும் மகா சங்கத்தினர் மீது வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள் கை வைத்தால் அவர்களின் தலையை களனிக்கு 06

## கச்சதீவை நிச்சயம் மீட்டெடுப்போம்

### இராமேஸ்வரத்தில் ஸ்டாலின் சூளுரை



இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்பதற்கு அடுத்த மத்திய அரசாங்கத்தினுடைய ஆட்சியின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். 06

## சவூதிக்கு அனுப்புவதாக கூறி பண மோசடி

### மட்டக்களப்பில் ஒருவர் கைதானார்



சவூதி அரேபியாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி இருவரிடம் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயை மோசடி செய்த மட்டக்களப்பு, இருதயபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபரொருவரை நேற்று (19) கைது 06

# நிலவை வெற்றிகொள்ளும் முயற்சியில் சந்திரயான் - 3



அருள் சத்தியநாதன்

**எதிர்வரும் 23ஆம் திகதி, இந்திய நேரப்படி அதிகாலை 5.47 மணிக்கு, இந்தியா சந்திரனுக்கு அனுப்பிய சந்திரயான் –3 விண்கலத்தில் தரையிறங்–கும் கலம் சந்திரனின் தென்துருவப் பகுதி–யில் தரையிறங்கும் என எதிர்பார்க்கப்படு–கிறது. முன்னர் சந்திரயான் – 2 திட்டத்தின் கீழ் ஏவப்பட்ட விண்கலம் சந்திர சுற்றுவட்டப் பாதையை அடைந்து பின்னர் அதில் இருந்து புறப்பட்டு சந்திரனில் தரையிறங்–கும் கலம் தகுந்த வேகக் கட்டுப்பாட்டை மீறி செயற்பட்டதால் அது இறங்குவதற்கு பதிலாக சந்திரத் தரையில் மோதி செயல் இழந்தது.**

சந்திரயான்- 2 முழுமையான வெற்றியை ஈட்டாத நிலையில் இந்திய விண்வெளி ஆய்வு நிலையமான இஸ்ரோ கடந்த ஜூலை மாதம் 14ஆம் திகதி சந்திரயான் 3 விண்கலத்தை சந்திரனுக்கு ஏவியது. முதலாவதாக பூமியை சுற்றிவந்த இக்கலம் தற்போது சந்திரனை சுற்றி வருகிறது. 23ஆம் திகதி சந்திரனை 30 கி.மீ உயரத்தில் சுற்றிவரும் சமயத்தில் அதில் இருந்து பிரியும், தரை இறங்கும் கலம் சந்திரனின் தென் துருவத்தில் மெதுவாக இறங்கும். பின்னர் அதில் உள்ள சக்கரங்களுடன் கூடிய ரோவர் கலம் தரையில் இறங்கும். இது தென்துருவ சந்திரத்தரை தொடர்பான தகவல்களை சேகரித்து பூமிக்கு அனுப்பும். இந்த ரோவர் 14 நாட்கள் மட்டுமே செயற்படும். அதேசமயம் சந்திரனை சுற்றிவரும் கலன் மூன்று மாதம் முதல் ஆறுமாதம் வரை செயல்படும் என்று இஸ்ரோ அறிவித்துள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி முதல் அடுத்த 14 நாட்களுக்கு, இந்த ரோவர் வாகனம் இஸ்ரோ எதிர்பார்க்கும் தகவல்களை சேகரித்து அனுப்புமானால் சந்திரனில் வெற்றிகரமாக தரை இறங்கிய நான்காவது 'சந்திரன் கொண்டான் நாடு' என்ற பெயரை இந்தியா பெற்றுவிடும். 1969ஆம் ஆண்டு முதன்

**'சந்திரயான் இறங்கு கலம் நிலவில் தரை இறங்குமானால் 'சந்திரன் கிளப்'பில் நான்காவது உறுப்பு நாடாக இந்தியா இடம்பெறும்'**

முதலாக மனிதனை சந்திரனில் இறக்கி திரும்ப பூமிக்கு அழைத்து வந்த நாடு என்ற பெருமை இன்று வரை அமெரிக்காவுக்கு மட்டுமே உள்ளது.

இரண்டாவது நாடான ரஷ்யா, 1976ஆம் ஆண்டு அனுப்பிய லூனர் 24 கலம் சந்திர மண் மாதிரிகளை எடுத்துக் கொண்டு பூமி திரும்பியது. மூன்றாவது நாடு சீனா. 2013ஆம் ஆண்டு சீனா ஏவிய சாங் -3 கலம் டிசம்பர் 14ஆம் திகதி சந்திரன் தரையில் இறங்கியது. அதில் இருந்து தரை இறங்கிய 140 கிலோ எடை கொண்ட 'யூடு' என்ற ரோவர் அடுத்த மூன்று மாதங்களாக ஆய்வுகளை மேற்கொண்டது. தற்போது சந்திரனை வென்ற நான்காவது நாடு என்ற பெருமையை இந்தியா பெறப்போகிறது.

இதே சமயம் ரஷ்யாவும் சந்திரனின் தென் துருவத்தில் தரை இறங்கி ஆய்வுகளை மேற்கொள்வதற்காக லூனர் 24 விண்கலத்தை 41 ஆண்டுகளின் பின்னர் சந்திரனுக்கு அனுப்பி வைத்துள்ளது. திடீரென ரஷ்யாவும் லூனர் விண்கலத்தை சந்திர ஆய்வுக்காக அனுப்பி வைத்தமை இந்தியாவை திகைப்பில் ஆழ்த்தியது உண்மையே. இதுவரை தென் துருவப் பகுதியில் எந்த நாடும் கலமொன்றினை இறக்கி ஆய்வு மேற்கொள்ளவில்லை. அந்த பெருமையை இந்தியா அடையவிருக்கையிலேயே ரஷ்யா முந்திக் கொள்ள முயற்சித்துள்ளது. அது அனுப்பி இருக்கும் லூனர் 25 கலம் 21ஆம் திகதி அல்லது 22ஆம் திகதி தென் துருவப் பகுதியில் இறங்கவுள்ளது. அது இறங்கிய சுமார் 24 மணித்தியாலங்களின் பின்னரேயே இந்தியக் கலம் இறங்கும். அதாவது, தென் துருவத்தில் தரையிறங்கிய இரண்டாவது நாடு என்ற பெயரையே இந்தியா பெறும். முதலாவது என்ற பெருமை ரஷ்யாவுக்கு சென்றுவிடும்.





ஆகாய விமானத்தை கண்டு பிடித்த பின் மனிதனின் அடுத்த இலக்கு, விண்வெளியில் சஞ்சரிக்க வேண்டும், நிலவில் கால்பதிக்க வேண்டும் என்பதாகவே இருந்தது. இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்ததும் கம்யூனிச – முதலாளித்துவ யுத்தம் பனிப்போர் என்ற பெயரில் ஆரம்பமானது. அதில் ஒரு பகுதிதான் நிலவில் யார் கால்பதிப்பது – கம்யூனிஸ்டா, முதலாளிவாதியா என்ற போட்டா போட்டி!

1957 அக்டோபர் 4ஆம் திகதி 'ஸ்புட்னிக்' என்ற பெயர் கொண்ட சிறு செய்மதியை ரஷ்யா விண்ணுக்கு ஏவியது. அதிர்ந்துபோன அமெரிக்கா, 'எக்ஸ்பளோரர்' என்ற பெயர்கொண்ட செய்மதியை 1958ஆம் ஆண்டு விண்ணுக்கு அனுப்பி தன்னை ரஷ்யாவுடன் சமன்படுத்திக் கொண்டது.

1961இல் ஆட்சிப் பொறுப்பேற்ற ஜோன் கென்னடி, இந்த தசாப்தத்தின் முடிவுக்குள் அமெரிக்கா மனிதனை சந்திரனுக்கு அனுப்பும் என சூளுரைத்தார். 1963 இல் அவர் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டாலும், உறுதியளிக்கப்பட்டபடியே 1969ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதி நீல் ஆர்ம்ஸ்ட்ரோங்கை சந்திரத்தரையில் இறக்கி சபதத்தை நிறைவேற்றியது அமெரிக்கா. அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக பதவியில் இருந்தவர் ரிச்சர்ட் நிக்சன். 1960 அமெரிக்க அதிபர் தேர்தலில் கென்னடியிடம் தோற்றுப்

## பொருளாதாரத்தில் சீனாவை விஞ்சும் இந்திய நகர்வும் கூட

போனவர்!

முன்னர் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி இறக்குவது என்பது உலக சாதனை போல பார்க்கப்பட்டது. தற்போது அச் சிகரத்தில் ஏறி இறங்குவது என்பது தினசரி நிகழ்வு போலாகிவிட்டது. வயதானவர்களும் உடல் ஊனம் கொண்டவர்களும் எவரெஸ்ட் சிகரம் ஏறி இறங்கிவிட்டார்கள். அதேபோல உயர் விண்வெளித் தொழில்நுட்பங்கள் வந்துவிட்ட நிலையில் சந்திரன் நமக்கு மிகக் கிட்டத்தில் வந்துவிட்டது. நிலவுக்கு பயணம் மேற்கொள்வது, ரோவர் வகனங்களை இறக்கி ஆய்வுகள் மேற்கொள்வது என்பது,

சந்திர ஆய்வு என்பதைவிட, தமது பொருளாதார மற்றும் தொழில் நுட்ப வல்லமையை ஏனைய நாடுகளுக்கு வெளிப்படுத்துவதே இப் பயணங்களின் உண்மை நோக்கம்.

ஆர்ம்ஸ்ட்ரோங்கை தரையிறக்கியதன் மூலம், ரஷ்யாவை விட உலகின் 'சுப்பர் பவர்' தானே என்பதை அமெரிக்கா நிரூபித்தது. பின்னர் ரஷ்யாவை முந்திக் கொண்டு மனிதர் தங்கி ஆய்வுகளை நடத்தக் கூடிய ஆய்வு நிலையங்களை அமைத்தது. முதன்முதலில் விண் ஓடங்களை விண்ணுக்கு அனுப்பியது. தன்னுடன் போட்டியிட ஆளில்லை என்றதும் விண்ஓடத் திட்டத்தை நிறுத்திக் கொண்டது.

ஆர்தர் சி. கிளார்க் அறுபதுகளில் 2001: A Space Odyssy என்ற நாவலை எழுதினார். அதே நூல் அதே பெயரில் அறுபதுகளின் இறுதியில் திரைப்படமாக வெளியானது. பூமியில் இருந்து புறப்படும் பயணிகள் விண்ஓடம் சந்திரனில் தரையிறங்குவது போலவும் அங்கே குடியிருப்புகள் அமைக்கப்பட்டிருப்பது போலவும் காட்டியிருப்பார்கள். சந்திரனைத் தளமாகக் கொண்டு செவ்வாய்க் கிரகத்துக்கு பயணிப்பதாகவும் காட்டியிருப்பார்கள். இரண்டாயிரமாம் ஆண்டின் ஆரம்பத்திலேயே இவை சாத்தியமாகிவிடும் என ஆர்தர் சி. கிளார்க் நம்பினார். உண்மையில் அப்படி நடைபெறவில்லை. ஏனெனில் சந்திரப் பயணத்துக்கும் செவ்வாய்க்கு மனிதனை அனுப்பவும் தன்னுடன் போட்டியிட ஆளில்லை என்பதாலேயே இத் திட்டங்களில் அமெரிக்கா அதிக ஆர்வம் காட்டவில்லை.

இன்று சந்திரனில் பல நாடுகளுக்கு ஆர்வம் ஏற்பட்டிருப்பதற்கான காரணம், தமது பொருளாதார வல்லமையை வெளிக்காட்டுவதை நோக்கமாகக் கொண்டிருப்பதேயாகும்.

இன்று சந்திரத் தரையில் வெற்

## தென்துருவத்தில் முதலில் இறங்கப்போவது இந்தியாவா, ரஷ்யாவா?

றிகரமாக விண்கலத்தை இறக்கி ஆய்வுகளை இந்தியா மேற்கொள்ளுமானால் 'சந்திரன் கிளப்'பில் நான்காவது உறுப்பு நாடாகிவிடும் இந்தியா. ஏற்கனவே அமெரிக்கா ரஷ்யா மற்றும் சீனா ஆகிய மூன்று நாடுகளே சந்திரனில் மனிதர்களையும் சந்திரஆய்வு கலங்களையும் இறங்கிய பெருமை பெற்றன. அந்த வரிசையில் நான்காவது நாடாக இணைந்து கொள்ள சந்திரயான் -3 இன் மூலம் இந்தியா முயற்சிக்கிறது.

உலகின் இரண்டாவது பெரும் பொருளாதார நாடாக விளங்கும் சீனாவின் இலக்கு, அடுத்த 50 ஆண்டுகளில் அமெரிக்காவை அகற்றிவிட்டு முதன்மை உலக பொருளாதார வல்லரசாக தான் வரவேண்டும் என்பதுதான். இதே காலப் பகுதிக்குள் உலகின் இரண்டாவது பொருளாதார நாடாக முன்னேற வேண்டும் என்பது இந்தியாவின் இலக்கு. தற்போது மூன்றாவது இடத்தைப் பிடிப்பதற்கான முயற்சியில் இந்தியா தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

பொருளாதார வல்லரசாக விளங்க வேண்டுமானால் அதற்கென சில தகுதிகள் உள்ளன. தொழில்நுட்ப வளர்ச்சியில் உச்சத்தை எட்டியிருக்கும் அமெரிக்கா, இன்றைக்கும் ஐம்பது சதவீத விவசாய நாடாகவே திகழ்கிறது. அதேசமயம் எதிர்கால சவால்களை சந்திக்கக்கூடிய நாடாகவும் விளங்கும் அமெரிக்கா, நனோ தொழில்நுட்பம், லேசர் தொழில் நுட்பம், பசுமை வாகன உற்பத்தி (மின்சார வாகன தயாரிப்பு) செமி கண்டக்டர் உற்பத்தி என்பனவற்றில் முன்னணி வகிக்கத் தொடங்கியுள்ளது. இராணுவ தொழில்நுட்பங்கள் அடங்கலாக மேலே குறிப்பிடப்பட்ட துறைகளிலும் பெரும் பொருளாதார நாடுகள் சிறந்து விளங்க வேண்டும். அவற்றில் ஒன்றுதான் விண்வெளி அறிவியல் மேம்பாடு அடைவது. அவ்வகையில் சந்திரனில் விண்கலங்களை தரை இறக்கி ஆய்வுகள் நடத்தி மண் மாதிரிகளை எடுத்துவருவதும் உலக அளவில் ஒரு அங்கீகாரத்தை இந்நாடுகளுக்கு வழங்குகின்றன.

2013ஆம் ஆண்டு சந்திரனில் இறங்கிய சீன விண்கலம், ரோவர் வாகனத்தின் மூலம் ஆய்வுகளை மேற்கொண்டது. 2030இல் மனிதனை சந்திரனுக்கு அனுப்புவதே சீனாவின் திட்டம். ஒரு இந்தியனை சந்திரனில் இறக்கி மீண்டும் பூமிக்கு அழைத்துவரும் நோக்கம் இந்தியாவுக்கும் உள்ளது. அனைத்தும் ஒழுங்காக நடக்குமானால் 2040 இல் இந்தியாவுக்கும் இது சாத்தியமாகலாம்.

இதேசமயம் நாசாவின் தகவல் படி, அமெரிக்கா மீண்டும் தன் சந்திர ஆய்வை தொடக்கவுள்ளதாக அறிய முடிகிறது. மேலும் தென்கொரியா, ஜப்பான், இஸ்ரேல், ஐக்கிய அரபு குடியரசு, இத்தாலி ஆகிய நாடுகளும் தற்போது சந்திரனுக்கு விண்கலம் அனுப்புவதில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளன.

சந்திரயான் -2 பயணத்தை எடுத்துக் கொண்டால் அதில் முழு வெற்றி கிடைக்கவில்லையானாலும், நிலவின் தென் துருவத்தில் தண்ணீர் பனிக்கட்டி வடிவில் இருப்பதாக முதலில் கண்டு பிடித்





துச் சொன்னது இந்தியாவே. எதிர்வரும் 21ஆம் திகதி ரஷ்ய விண்கலமும், 23ஆம் திகதி இந்திய கலமும் தென்துருவப் பகுதியில் இறங்கி மேற்கொள்ளவுள்ள ஆய்வு, அங்கே பனிக்கட்டி வடிவில் தண்ணீர் இருப்பது உண்மைதானா என்பதை கண்டறிவதை நோக்கமாகக் கொண்டிருக்கும்.

தண்ணீர் பனிக்கட்டி வடிவில் இருந்தால் அதைத் தண்ணீராக மாற்ற முடியுமா? அதில் இருந்து ஒட்சிசனை உற்பத்தி செய்வது சாத்தியமாகுமா? இந்த ஆய்வுகள் வெற்றி பெறுமானால் மனித குடியேற்றங்களை சந்திரனில் உருவாக்கும் கனவு நனவாகுமா? என்பனவற்றைக் கொண்டதாக இந்திய, ரஷ்ய, அமெரிக்க ஆய்வுகள் அமைந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனைய நாடுகளுக்கும் சந்திர ஆய்வில் ஆர்வம் ஏற்பட்டதற்கு, இந்தத் தண்ணீர் விஷயம் காரணமாக இருப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

சீனாவை விஞ்ச வேண்டும் என்பதே இந்தியாவின் இலக்காக உள்ளது. சீனாவில் தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார மந்த நிலை, அது ஏற்படுத்திவரும் உள்நாட்டு பொருளாதார சிக்கல்கள் என்ற பின்னடைவுகளை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள இந்தியா விரும்புகிறது.

## பொதுஜன உரையாடலுக்கான நுட்பங்கள்;

# லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஊடக அக்கடமி ஏற்பாட்டில் விரிவுரை



'பொதுஜன உரையாடலுக்கான நுட்பங்கள்' (Techniques of Public Speaking) எனும் தலைப்பில் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஊடக அக்கடமியினால் ஊடகத் துறையில் ஆர்வமுடையோருக்காக விரிவுரையொன்று கடந்த புதன்கிழமையன்று (16) நடத்தப்பட்டது.

இதில் விரிவுரையாளராக பிரபல அறிவிப்பாளரும் ஊடகவியலாளருமான அருண் டயஸ் பண்டாரநாயக்க (Arun Dias Bandaranaike) கலந்துகொண்டு விரிவுரையாற்றினார்.

பொதுஜன உரையாடல், பொதுவெளியில் உரையாடல் மற்றும் சொற்பொழிவாற்றல் ஆகிய கோணங்களில் பார்வையாளர்கள் மற்றும் வாசகர்களை உணர்வுபூர்வமாக கவரும் வகையில் பொதுஜன உரையாடல் அமைய வேண்டுமெனும் வகையில் இந்த விரிவுரை அமைந்திருந்தது.

இதில் பல்வேறு துறைகளிலும் பணியாற்றி வருகின்ற, ஊடகத்துறையில் ஆர்வமுடைய 32 பேர் கலந்துகொண்டு நன்மையடைந்ததுடன், அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், நிர்வாகம் மற்றும் சட்டப் பணிப்பாளர் ஜனக ரணதுங்க, செயற்பாட்டுப் பணிப்பாளர் மஞ்சுள மாகும்புர, நிதிப் பணிப்பாளர் சுனில் ஜயந்த நவரத்ன ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

ஆர்.சுகந்தினி



கண்ணகி கலாலய ஏற்பாட்டில் இரு நாடகங்கள் மேடையேறவுள்ளன. நாடகங்களுக்கான பூஜைபோடும் நிகழ்வில். கலைஞர் இளங்கோ சுதாகர், புதிய அலை கலை வட்டத்தின் தலைவர் ஷன்மு ஆகியோர் கலந்துகொண்டனர். ஷன்மு நட்புக்காக சிறப்புப் பாத்திரத்திலும் நடிக்கவுள்ளார். இவர்களோடு சிரேஷ்ட நடிகை ஷர்மிளா நிஸார், கலைஞர்களான அப்துல்லா ரியாஸ், மொஹமட் நஸார், சந்தானம் முத்துக்குமார் மற்றும் ஸ்டார் அமால் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இவ்விரு நாடகங்களையும் விரைவில் அரங்குகளில் எதிர்பாருங்கள்...

# 'இனிய நந்தவனம்' இலக்கிய சஞ்சிகை கண்டியில் வெளியீட்டு விழா
















புரவலர் ஹாசிம் உமரின் அனுசரணையில் கண்டி இலக்கிய நண்பர்கள் கழகம், மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் இணைந்து நடாத்தும் தமிழகத்திலிருந்து வெளிவரும் 'இனிய நந்தவனம்' சஞ்சிகையின் இலங்கை இலக்கிய சிறப்பிதழ் வெளியீட்டு விழா கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே.இராதாகிருஷ்ணன், மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்காநாயக்க தினகரன், வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், முத்தையா ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துக்கொண்டனர். இவ்விழா கண்டி முத்தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் துரை. மனோகரன் தலைமையில் நடைபெற்றது. வாழ்த்துரையை மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கிய பேரவையின் செயலாளர் எம்.எம்.பீர்முகமது, கவி வாழ்த்தை கவிஞர் ரஷித் எம்.றியாழ், நூல்கருத்துரைகளை தினகரன், வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர்,ஞானம் இலக்கிய சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன், விமர்சகர் ரா.நித்தியானந்தன் ஆகியோர் நிகழ்த்தினர். ஏற்புரையை இனிய நந்தவனம் ஆசிரியர் சந்திரசேகரனும் நன்றியுரையை கண்டி எம்.தீபன் ஆற்றினார். இந்நிகழ்வில் கண்டி தமிழ் வர்த்தகர் சங்கம், முஸ்லிம் வர்த்தக சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

**படங்கள்: இக்பால் அலி,**
**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

UNITED NATIONS INDUSTRIAL DEVELOPMENT ORGANIZATION
UNIDO
BESPA-FOOD BEST STANDARDIZED PRACTICES FOR AGRI-FOOD

**முன்மொழிவுகளுக்கான அழைப்பு**

**விவசாய உணவு நிறுவனங்களுக்கான தொழில்நுட்ப உதவி**



ஐக்கிய நாடுகளின் தொழில்துறை மேம்பாட்டு அமைப்பானது (UNIDO) விவசாய உணவு நிறுவனங்களை "வேளாண்மை உணவுத் துறைக்கான சிறந்த தரப்படுத்தப்பட்ட நடைமுறைகள்" (BESPA-FOOD) வேலை திட்டத்தில் இருந்து பெறக்கூடிய தொழில்நுட்ப உதவிக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கின்றது. தேங்காய், வாழை, மரவள்ளிக்கிழங்கு, மற்றும் வெணிலா தொடர்பான உற்பத்தியாளர்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**வேலை திட்டத்தின் சிறப்பம்சங்கள்**
தேவைக்கு உகந்த தொழில்நுட்ப உதவியை (நிபுணர்களின் வழிகாட்டுதல், தொழில்நுட்ப அறிவு பரிமாற்றம் மற்றும் வலையமைப்பு வாய்ப்புகள்) பெற்றுக்கொள்ளுதல்.

- டிஜிட்டல் மற்றும் வேளாண்மை தொழில்நுட்ப தீர்வுகள்
- பொதி செய்தல் மற்றும் லேபிள் இடுதல்
- தரநிலைகள் இணக்கம், சான்றிதழ் மற்றும் பரிசோதனைகள்
- தயாரிப்பு மேம்பாடு மற்றும் பல்வகைப்படுத்தல்
- விநியோகச் சங்கிலியை பசுமையாக்குதல்
- பிராண்டிங், விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல்

**விண்ணப்பிக்கக்கூடியவர்கள் யாவர்?**
இலங்கை ரூபாய் 10 மில்லியனுக்கும் அதிகமான வருடாந்த வருவாய் மற்றும், 10 க்கு அதிகமான முழுநேர ஊழியர்களை கொண்ட உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், தயாரிப்பாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் வேளாண்மை வணிகச் சேவை வழங்குபவர்கள்

**விண்ணப்பிப்பதன் அனுகூலங்கள்**
- உற்பத்தி, உற்பத்தித்திறன், தர இணக்கம், மதிப்பு சேர்த்தல் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடு ஆகிய துறைகளில் நிறுவன செயல்திறனை மேம்படுத்துவதற்கு ஒவ்வொருவருக்கும் தொழில்நுட்ப வழிகாட்டுதல் வழங்கப்படும்.
- நிதி நிறுவனங்களுக்கான அணுகலை எளிதாக்குதல்.
- இலங்கை மற்றும் வெளிநாடுகளில் கொள்வனவு செய்பவர்களுடன் பொருத்துதல்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது?**
விண்ணப்ப வழிகாட்டுதல்கள் / படிவத்தைப் பதிவிறக்கம் செய்து, விண்ணப்ப செயல்முறை மற்றும் நிரல் நன்மைகள் பற்றிய interactive information session க்கு பதிவு செய்யுங்கள், QR குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள் அல்லது

https://open.unido.org/projects/LK/projects/190345 க்கு செல்லுங்கள்

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தை 2023 செப்டம்பர் 17 அன்று அல்லது அதற்கு முன் "SQP Technical Proposal" என தலைப்பிட்டு திருமதி. நிலாந்தி விஜேவிக்ரம அவர்களுக்கு [N.WIJEWICKRAMA@unido.org] அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

*நிபந்தனைகள் பயன்படுத்தப்படும். வரையறுக்கப்பட்ட இடங்கள் மட்டுமே உள்ளன மற்றும் தகுதியான நிறுவனங்களுடன் மட்டுமே தொடர்பு கொள்ளப்படும்.

Food and Agriculture Organization of the United Nations
In collaboration with the Government of Sri Lanka
Funded by the European Union





# செவிப் புலனற்றவர்களுக்கும் வாகன அனுமதிப் பத்திரம்

## கம்பஹாவில் முன்னோடித் திட்டம்

உலகில் எதுவும் அவர்களால் கேட்க முடியவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவர்களுக்கு இருப்பது அந்த ஒரே ஒரு பிரச்சினை மாத்திரமேயாகும். நாகரீக உலகில் ஒரு சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களையும் சமமாக நடத்துவது பற்றிய மனிதாபிமான உரையாடல் உருவாக்கப்பட்டு, அதற்காக தொழில்நுட்ப, மனிதாபிமான மற்றும் சமூக சிந்தனை மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் உலகில் நாம் பின் தங்கியே இருக்கிறோம் என்றே கூற வேண்டும்.

செவித்திறன் குறைபாடுள்ளவர்கள் நாட்டின் மக்கள் தொகையில் இரண்டு சதவீதமானவர்களாகும். இந்தப் பிரிவினரை நாட்டின் பொருளாதாரத்துடன் இணைத்துக் கொள்வதற்கு ஒரு முறையான வேலைத்திட்டம் முன்னெப்போதையும் விட அதிகமாக தேவைப்படுகிறது. அதற்காக அவர்களிடத்தில் சில பலவீனங்கள் இருந்தாலும் அவர்களிடம் சமமான திறன்கள் இருக்கின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்பதை ஒரு சமூகமாக உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். ஒருபுறத்தில் இது ஒரு மனிதாபிமான அணுகுமுறையாகும்.

கம்பஹா மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட முன்னோடித் வேலைத்திட்டம் வெற்றியடைந்துள்ளது. அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் இலங்கையில் காதுகேளாத சமூகத்தினருக்கு சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான சட்டபூர்வ வயதுடைய எவரும் இதற்கு விண்ணப்பிக்கலாம். சிறப்பான இந்தத் திட்டம் போக்குவரத்து அமைச்சினால் முன்னெடுக்கப்படுகிறது. அதற்குப் பொறுப்பாக இருந்த போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன இந்தத் திட்டம் எவ்வாறு தொடங்கப்பட்டது என்பது குறித்து தெளிவுபடுத்தினார்.

"கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களாக, செவித்திறன் குறைபாடுள்ளவர்களின் மத்திய தேசிய சம்மேளனம் உள்ளிட்ட பல அமைப்புகளால், இந்த செவித்திறன் குறைபாடுள்ள சமூகத்தினருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பில் மதிப்பீட்டை நடத்துமாறு அனைத்து அரசாங்கங்கங்களிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அதைப் பற்றி யாரும் கவனத்தில் எடுத்திருக்கவில்லை. செவித்திறன் குறைபாடுள்ள சிலர் வாகன உரிமையாளர்களாக இருந்தனர். அவர்கள் பொலிசாருக்கு பயந்து பல்வேறு உள் வீதிகளில் வாகனங்களைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். இவ்விடயத்தில், அவர்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டு பிரச்சினைகளை எதிர்கொண்டனர். எனினும் வைத்திய அறிக்கை இல்லாமல் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க முடியாது. மேலோட்டமாகப் பார்த்தால் அது உண்மையாகவே தெரிகிறது. ஆனால் உலகின் ஏனைய நாடுகள் பல்வேறு தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்து கொண்டு இவ்வாறானவர்களுக்கு பல காலங்களுக்கு முன்பே சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளன. உதாரணமாக, சில நாடுகளில் செவித்திறன் குறைபாடு மற்றும் விசேட தேவைகள் உள்ள சாரதிகளுக்காக தனிப் பாதைகள் போன்ற வசதிகள் வழங்கப்பட்டன.

என்றாலும் எமது நாட்டில் அவ்வாறான வசதிகள் இல்லை. அதேபோன்று, செவித்திறன் குறைபாடுள்ள ஒருவருக்கு சாரதி அனுமதிப் பத்திரத்தை வழங்க வேண்டியிருப்பதும் தற்போதுள்ளசட்டக்கட்டமைப்பிற்குள்ளேயாகும். அது விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாக இருந்தது. என்றாலும் நாம் படிப்படியாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் முறையைப் பலப்படுத்தினோம். சாரதிகளுக்கு வழங்கப்படும் மருத்துவச் சான்றிதழைப் பலப்படுத்தினோம். கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தை 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்தல், எட்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இலகுரக வாகனச் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்தல் போன்றன புதிய நடைமுறைகளாகும். செவித்திறன் குறைபாடுள்ள சமூகத்தினருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதற்கும் இந்த சிக்கலான சூழ்நிலையே காரணமாகும்" என இராஜாங்க அமைச்சர் தெளிவு படுத்தினார். எவ்வாறாயினும் இவ்விடயத்தில் பொலிஸாரும் மோட்டார் போக்குவரத்து திணைக்களமும் விசேட மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டிருந்தனர். பின்னர் இவ்விடயம் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டதுடன், காதுகேளாதவர்களுக்கு சட்ட ரீதியான சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை தொடர்பில் அமைச்சரவை அமைச்சர் பந்துல குணவர்தன கருத்து தெரிவித்தார். இந்த விடயத்தில் ஜனாதிபதி விசேட முன்னுரிமை வழங்கியிருந்தார். இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மிகுந்த திருப்தியுடன் கருத்து தெரிவிக்கின்றார்.



"இதனை இலங்கை முழுவதிலும் ஒரே தடவையில் நடைமுறைப்படுத்தாமல் கம்பஹா போன்ற மாவட்டத்தைத் தெரிவு செய்து முன்னோடி வேலைத்திட்டமாக முன்னெடுத்து குறைபாடுகளைச் சரிசெய்து கொண்டு முன்னோக்கிச் செல்வோம் என்றே அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் நாம் கம்பஹா மாவட்டத்தில் முதலில் சாரதி அனுமதிப்பத்திரம் பெற விரும்பும் கேட்கும் திறன் அற்றவர்களுக்கு உரிய பரீட்சை தொடர்பில் தெரிவிக்கப்பட்டது. பயிற்சி அனுமதிப்பத்திரம் வழங்கும் போது அவர்களின் ஹெல்மெட்டில், ஜாக்கெட் மற்றும் வாகனங்களில் ஒட்டுவதற்கு தனி பேட்ஜ்கள் வழங்கப்பட்டன"

அதேபோன்று இந்த அனைத்துச் சாரதிகளிடத்திலும் சைகைமொழி பேசுபவர்களின் தொலைபேசி இலக்கங்கள் இருக்க வேண்டும். இவ்வாறானவர்களைச் சோதனையிடும் போது பொலிஸாருடனான தொடர்பாடலுக்கு வசதியாக இந்த சைகைமொழி பேசுபவர்கள் இருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. செவிப்புலனற்றோர் மத்திய சம்மேளனம் தற்போது அந்த மொழிபெயர்ப்பாளர்களின் தொலைபேசி இலக்கங்களை எமக்கு வழங்கியுள்ளது. இந்த முன்னோடி வேலைத்திட்டம் மிகவும் வெற்றியளித்துள்ளது. எனவே வெற்றிகரமாக பயிற்சியை முடித்துக் கொண்ட 50 சாரதிகளுக்கு ஜனாதிபதியினால் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

தற்போது குருநாகல் மாவட்டத்தில் உள்ள செவிப்புலனற்றவர்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குருநாகல் மாவட்டத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் செவிப் புலனற்ற சுமார் 350 விண்ணப்பத்தாரிகள் வருகை தந்திருந்தார்கள்.

முன்னோடி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து கண், காது. மூக்கு தொடர்பான விசேட வைத்திய நிபுணர்களின் சங்கம் தலையிட்டு செவித்திறன் குறைபாடுள்ள நபரின் புலன் உணர்வு வடிவம் தொடர்பில் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்திற்கு விசேட அறிவினை வழங்கியுள்ளது. அந்த அறிவுடன் இந்த நடமாடும் சேவையில் மருத்துவ பரிசோதனைகளும் நடத்தப்பட்டன.

எழுத்துமூலப் பரீட்சை தொடர்பில் தெளிவு படுத்துவதற்காக அவர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். செப்டெம்பர் முதல் இரண்டு வாரங்களுக்குள் குருநாகல் செவிப்புலனற்ற விண்ணப்பத்தாரிகளுக்கு சாரதி பயிற்சிக்கான அனுமதிப்பத்தரம் வழங்கப்படவுள்ளது. மிகவும் அற்புதமான ஒரு திட்டத்தின் மனிதாபிமான அனுபவத்தை உணர்வதாக அமைச்சர் கூறினார்.

"ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இச்சந்தர்ப்பம் நாடு முழுவதற்கும் வழங்கப்படவுள்ளது. காதுகேளாதவர்களின் மத்திய சம்மேளனம் இவ்விடயம் தொடர்பில் பெரும் பங்காற்றியுள்ளது. அமைச்சர் என்ற வகையில் பந்துல குணவர்தன இச்செயற்பாட்டிற்கு முன்னுரிமை வழங்கியிருந்தார். ஜனாதிபதியும் சர்வதேச அனுபவத்திலிருந்து பெறப்பட்ட நடைமுறையில் இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கினார். அதனடிப்படையில் வரும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அனைத்து மாவட்டத்திலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்".

என்றாலும் காதுகேளாதவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவது சமூகத்தை எந்த வகையில் பாதிக்கும்? என்பது பலரிடம் இருக்கும் வினாவாகும். பாதசாரிகள், மற்றும் செவித்திறன் குறைபாடுள்ள ஓட்டுநர்களின் பாதுகாப்பு குறித்து என்ன உத்தரவாதம் அளிக்க முடியும்?

கலந்துரையாடலின் இறுதியில் நாம் இது தொடர்பில் அமைச்சரிடம் கேட்டோம்.

"முன்னோடி திட்டத்தில் இருந்து பெற்ற அனுபவத்தையும், சர்வதேச அளவிலான அனுபவத்தையும் மதிப்பீடு செய்ததன் பின்னரே நாம் செவித்திறன் குறைபாடுள்ள சமூகத்துக்கு இந்த வாய்ப்பை வழங்கினோம். செவித்திறன் குறைபாடுள்ள சாரதிகளை மற்றைய சாரதிகளால் அடையாளம் கண்டு கொள்வதற்காக ஒரு சின்னம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது".

(19ஆம் பக்கம் பார்க்க)

டானியா மோஸஸ்
தமிழில் எம். எஸ். முஸப்பிர்





# நீர் முகாமைத்துவத்தை வலியுறுத்தும் வரட்சி

- போதியளவு நீரை தினமும் பருக மருத்துவர்கள் வலியுறுத்து
- வரட்சியில் யாழ்ப்பாணம் முதலிடம்
- வழமையான குடிநீர் வழங்கலில் பாதிப்பு
- வீண் விரயம் செய்யப்படக்கூடாத வளம்

நாட்டில் கடும் வரட்சி நிலவுகிறது. உஷ்ணமும் வாட்டிவதைப்பதாக உள்ளது. அவற்றின் தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் மனிதர்கள் உட்பட எல்லா உயிரினங்களும் முகம் கொடுத்த வண்ணமுள்ளன.

1982, 1996 ஆண்டுகளில் கடும் வரட்சி காலநிலை ஏற்பட்டிருந்த போதிலும் அவ்வருடங்களை விடவும் இவ்வருடம் அதிக தாக்கமிக்கதாக விளங்குவதாக சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர். அதிகரித்த வெப்பமும், அதன் விளைவான வரட்சியும் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள், பாதிப்புக்கள் குறித்து நகரம் முதல் கிராமம் வரை எல்லா மட்டத்தினருமே கவனம் செலுத்துகின்றனர். அவை ஒரு முக்கிய பேசுபொருளாகவும் மாறியுள்ளது.

ஆனாலும் இவ்வரட்சியுடனான காலநிலைக்கும் கடும் உஷ்ணத்திற்கும் இலங்கை மாத்திரமல்லாமல் ஐரோப்பிய நாடுகள் உட்பட உலகின் பல நாடுகளும் முகம் கொடுத்துள்ளன.

அந்த வகையில் இவ்வரட்சிக் காலநிலையினால் இலங்கையில் ஆறுகள், குளங்கள், நீரேந்து பிரதேசங்கள், நீர்த்தேக்கங்கள் என எல்லாமே நீர் வற்றி வரண்டு போயுள்ளன அல்லது நீர் மட்டம் பெரிதும் குறைவடைந்துள்ளது. குறிப்பாக 73 பாரிய குளங்களின் நீர்மட்டம் 27 வீதத்துக்கும் கீழ் வீழ்ச்சியடைந்திருப்பதாக நீர்ப்பாசனத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்நிலையில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

அதனால் குழாய் மூலமான குடிநீர் விநியோகம் நாட்டின் பல பிரதேசங்களிலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சில பிரதேசங்களுக்கு ஒன்றுவிட்ட ஒருநாள் என்ற முறைப்படி குழாய் மூலமான குடிநீர் விநியோகம் முன்னெடுக்கப்பட்டுள்ள அதேநேரம், இன்னும் சில பிரதேசங்களுக்கு பவுஸர்கள் மூலம் குடிநீர் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

தெதுரு ஓயாவின் நீர் மட்டம் பெரிதும் குறைவடைந்துள்ளதால் குருநாகல் நகருக்கான குடிநீர் வழங்கல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் குருநாகல் மாவட்ட பொறியியலாளர் குசல் மனம்பேரி தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறு வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பிரதேசங்களிலும் வழமை போன்று குடிநீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதன் விளைவாக குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பலவிதமான அசௌகரியங்களுக்கு மக்கள் முகம் கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் சுதந்த ரணசிங்க, 'யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம், குருநாகல், பொலன்னறுவை, அநுராதபுரம், இரத்தினபுரி, பதுளை, ஹம்பாந்தோட்டை, மொனறாகலை உள்ளிட்ட 15 மாவட்டங்களில் வாழும் 54,979 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 83 ஆயிரத்து 38 பேர் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் கடும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்' என்று குறிப்பிட்டுள்ளார். 'இந்நெருக்கடிக்கு யாழ்ப்பாண மாவட்ட மக்கள் தான் பெரிதும் உள்ளாகியுள்ளனர்.

இம்மாவட்டத்தைச் சேர்ந்த 21 ஆயிரத்து 999 குடும்பங்களைச் சேர்ந்த 70 ஆயிரத்து 238 பேர் இந்நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 8892 குடும்பங்கள், அம்பாறை மாவட்டத்தில் 7739 குடும்பங்கள், இரத்தினபுரி மாவட்டத்தில் 4039 குடும்பங்கள், திருகோணமலை மாவட்டத்தில் 2320 குடும்பங்கள் என அதிக எண்ணிக்கையிலானோர் குடிநீருக்கான நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்றனர். அத்தோடு ஏனைய மாவட்டங்களிலும் இந்நெருக்கடிக்கு முகம் கொடுப்பவர்கள் இருக்கவே செய்கின்றனர்' எனவும் தெரிவித்திருக்கிறார் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க.

வரட்சியின் விளைவாக குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் எழுந்துள்ள அசௌகரியங்களின் பின்புலத்தில் பலர் நாளாந்தம் பருக வேண்டிய நீரின் அளவைக் குறைத்துக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இது ஆரோக்கியமான நிலைமை அல்ல.

கடும் உஷ்ண காலநிலை நிலவுவதால் அதிக வியர்வையின் ஊடாக உடலில் நீரிழப்பு ஏற்படும். அந்த நீரிழப்பை ஈடுசெய்வதற்கு ஏற்ப நீரைப் பருக வேண்டும். ஏனெனில் ஒவ்வொருவரதும் உடலில் போதியளவு நீர்ச்சத்து இருப்பது அவசியம். உடல் உறுப்புகளுக்கு ஒட்சிசனை கொண்டு செல்லும் பணியை செய்வது நீரேயாகும். அதற்கான நீரை சிறுநீரகமே வழங்கிக் கொண்டிருக்கின்றது.

என்றாலும் உடலில் நீரிழப்பு ஏற்படுகின்ற சூழலில் அதனை ஈடுசெய்யும் வகையில் நீரைப் பருகாவிட்டால் உடல் அவயவங்களுக்கு ஒட்சிசனைக் கொண்டு செல்லத் தேவையான நீரை உடலின் உள்ளுறுப்புக்களில் பெற்று சிறுநீரகம் வழங்கும். ஆனாலும் நீரிழப்புக்கு ஏற்ப தினமும் நீரைப் பருகத் தவறும் பட்சத்தில் உடலில் உபாதைகள் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களும் இருக்கவே செய்கின்றன. அதனால் தான் உஷ்ண காலநிலை உட்பட எந்த சூழலிலும் சிறுவர் முதல் வளர்ந்தவர் வரையானோர் தினமும் போதியளவு நீரைப் பருக வேண்டும் என்று மருத்துவர்கள் ஆலோசனை வழங்குகின்றனர். அவ்வாறான அறிவுறுத்தல் தற்போதும் வழங்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறான சூழலில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, 'தற்போது கடும் வரட்சி நிலவுவதால் குடிநீரைப் பருகுவதற்காக அன்றி வாகனங்களைக் கழுவுதல் போன்ற அத்தியாவசியமற்ற விடயங்களுக்கு நீரைப் பயன்படுத்தி வீண் விரயம் செய்ய வேண்டாம்' என்று மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது காலத்திற்கு அவசியமான வேண்டுகோளாகும். தண்ணீர் இல்லாவிட்டால் மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினத்தினதும் இருப்பே கேள்விக்குறியாகி விடும். அதனால் தண்ணீரின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை இவ் வேண்டுகோள் வெளிப்படுத்தி நிற்கின்றது.

நாலாபுறமும் உவர்த்தன்மை கொண்ட கடல் நீரால் சூழப்பட்டுள்ள இந்நாடு, பருகுவதற்கும் ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்தக்கூடிய வளமான நன்னீரைக் கொண்டிருக்கிறது. மழை வீழ்ச்சியின் ஊடாகவும் நாட்டுக்கு தேவையான தண்ணீர் கிடைக்கப்பெறுகிறது.

இவ்வாறு நாட்டில் நன்னீர் தாராளமாகக் கிடைக்கப்பெறுவதால் அதன் முக்கியத்துவம் உணரப்படாதுள்ளது. இது நீர் வளம் பெருமளவில் அசுத்தமடைவதற்கும் வீண்விரயம் செய்யப்படுவதற்கும் வழிவகுத்துள்ளதோடு மழை வீழ்ச்சி மூலம் கிடைக்கப்பெறும் நீர் பயன்படுத்தப்படாத நிலையில் கடலில் கலக்கவும் வழிவகை செய்திருக்கின்றது.

ஆனால் நீர் வளம் ஒழுங்குமுறையாக திட்டமிட்டு முகாமைத்துவம் செய்யப்படுவது அவசியம். அதிலும் குறிப்பாக அண்மைக் காலமாக முழு உலகமும் எதிர்கொண்டுள்ள காலநிலை மாற்றம் இதனை பெரிதும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது.

அவ்வாறான முகாமைத்துவத்தின் மூலம் வரட்சிக் காலநிலையிலும் தண்ணீர் பற்றாக் குறையால் ஏற்படக்கூடிய தாக்கங்களையும் பாதிப்புக்களையும் பெரிதும் தவிர்த்து குறைத்துக்கொள்ள முடியும். இதனைத் தான் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் இயற்கை வளங்கள் குறித்த பேராசிரியர் மெந்திக்கா விதானவே இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார். 'காலநிலை மாற்றத்திற்கு முகம் கொடுக்கக்கூடிய எந்தவித வேலைத்திட்டமும் இல்லாததால் தான் நாடு தற்போதைய நீர் நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கிறது. நீர் முகாமைத்துவம் இல்லாததால் எதிர்காலத்தில் நாடு கடும் நெருக்கடியை எதிர்கொள்ளமுடியும்' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையில் நீர் முகாமைத்துவம் இன்மையின் விளைவாகவே வரட்சி காலநிலையால் நாட்டில் பயிர்ச்செய்கை துறையும் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கின்றது. கமநல சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் சுமித் சந்தனவின் தரவுகளின் படி, வடக்கு, கிழக்கு, வடமேல், வட மத்தி, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் 16 ஆயிரத்து 164 ஹெக்டேயர் நெற்செய்கை பாதிப்படையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. அவற்றில் 11 ஆயிரத்து 231 ஹெக்டேயர் நெற்செய்கையில் 75 வீதம் பாதிப்படைந்துள்ளது.

நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் வீழ்ச்சியடைந்து வருவதன் விளைவாக நீர் மின்னுற்பத்தியும் பாதிக்கப்படக்கூடிய அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது. இதனை இலங்கை மின்சார சபையும் குறிப்பிட்டிருக்கின்றது. இது மின் வெட்டுக்குக் கூட வழிவகுக்க முடியும்.

ஆகவே நீரின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் உணர்ந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை இவை அனைத்துமே வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன.

ஆனால் தற்போதைய வரட்சிக் காலநிலையும் அது தோற்றுவித்துள்ள நெருக்கடிகளும் அசௌகரியங்களும் நீரை முகாமைத்துவம் செய்து பயன்படுத்துவதன் மூலம் தவிர்த்துக்கொள்ளக்கூடியவையாகும். அது தொடர்பில் கவனம் செலுத்தி செயற்பட வேண்டியது சம்பந்தப்பட்ட தரப்பினரதும் குறிப்பாக ஒவ்வொரு குடிமகனினதும் பொறுப்பு என்றால் அது மிகையாகாது.



மர்லின் மரிக்கார்






# வரட்சியைப் பயன்படுத்தி விவசாயிகள் மத்தியில் அமைதியின்மை ஏற்படுத்த சிலதரப்பினர் முயற்சி!

## அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் சந்திப்பு

**இன்றைய வரட்சியை சாதகமாகப் பயன்படுத்தி விவசாயிகள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்துவதற்கு சில தரப்பினர் முற்படுகின்றனர். ஆனால் விவசாயிகள் எதிர்கொள்ளும் தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். விவசாயத்துறையின் தற்போதைய நிலைமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து அமைச்சர் எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: தண்ணீர் தொடர்பில் தென்பிராந்திய விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களைத் தீர்க்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?**

பதில்: தற்போது தென்பிராந்திய விவசாயிகள் எதிர்கொள்ளும் நீர் தொடர்பான சவால்களை நாங்கள் தீவிரமாக எதிர்கொண்டு வருகிறோம். இந்தச் சிக்கல்களைத் தணிக்க, ஒரு மூலோபாய அணுகுமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. குறிப்பாக, உடவளவை நீர்த்தேக்கத்தை நிரப்புவதற்காக சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து நீர் திறந்துவிடப்பட்டு வருகின்றது. சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து நீரை விடுவிப்பது உட்பட எங்களின் உடனடி பதில் சாதகமான பலனைத் தந்துள்ளது. இந்த நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம், ஆபத்தில் இருந்த சுமார் 75 சதவீத விளைநிலங்களை எங்களால் பாதுகாத்து மீட்க முடிந்தது என்று மதிப்பிடுகிறோம். இந்தத் தலையீடு, வரட்சியால் ஏற்பட்டுள்ள சவால்களை முற்றாக ஒழிக்கவில்லை என்றாலும், சந்தேகத்திற்கு இடமின்றி நமது விவசாய சமூகத்திற்கு மிகவும் தேவையான உயிர்நாடியை வழங்கியுள்ளது. நீடித்த வரட்சியால் விவசாயிகள் கணிசமான இழப்பைச் சந்தித்துள்ளனர் என்பது உண்மைதான் என்றாலும், எங்கள் முயற்சியால் ஓரளவுக்கு நிலைமையைக் குறைக்க முடிந்தது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

**கே: உங்கள் அமைச்சுக்கும், நீர்ப்பாசன அமைச்சுக்கும், மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும் இடையில் இந்தப் பிரச்சினையில் முறுகல்நிலை தோன்றியுள்ளது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

பதில்: அமைச்சுகளுக்கிடையில் அல்லது அந்தந்த அமைச்சர்களுக்கிடையில் உண்மையான முரண்பாடுகள் எதுவும் இல்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நிலவும் நீர்ப்பற்றாக்குறை, நமது நீர்த்தேக்கங்களைப் பாதிக்கும் வரட்சி நிலைமைகளால் மோசமடைகிறது என்பதே அனைவருக்கும் காணப்படும் பொதுவான கவலையாகும். உடவளவை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவில் 50 வீதமாக உள்ள அதேவேளை, சமனலவெவ அதன் மொத்த நீர்க்கொள்ளளவில் 52 வீதத்தை மாத்திரமே தற்போது வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. நாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு வரட்சியே அடிப்படைக் காரணமாக விளங்குகிறது.

நீர்ப்பாசனத் திணைக்களம், மகாவலி அதிகாரசபை, இலங்கை மின்சார சபை உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு நிலைமையை பெரிதும் மேம்படுத்தியிருக்க முடியும் என்றாலும், இந்தப் பிரச்சினையானது அமைச்சுகளுக்கு இடையேயான முரண்பாடு அல்ல. அனைத்துத் தரப்பினரின் நெகிழ்வுத் தன்மை, குறிப்பாக இலங்கை மின்சாரசபை நிலைமையை கணிசமாகத் தணித்திருக்கும் என்பதை ஒப்புக்கொள்வது அவசியம்.

**கே: விவசாயிகளின் போராட்டங்கள் பரந்த அரகலயவுக்கு வழிவகுத்ததால் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் வீட்டுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இத்தகைய உணர்வுகளைத் தூண்டுவதற்காக சில பிரிவுகள் இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்திக் கொள்ள முற்படுகின்றனவா?**

பதில்: நிச்சயமாக, சில அரசியல் கட்சிகள் இன்றைய சவாலான சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சித்துள்ளன. வருந்தத்தக்க வகையில், சில அரசியல் தலைவர்கள் வரட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளின் இன்றைய நிலையைப் பயன்படுத்திக் கொண்டு விவசாய சமூகத்தினரிடையே அமைதியின்மையைத் தூண்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தனிப்பட்ட ஆதாயங்களைத் தேடும் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கு இது ஒரு முக்கிய வாய்ப்பாகத் தோன்றினாலும், இந்தப் பிரச்சினை வெறும் அரசியலுக்கு அப்பாற்பட்டது என்பதை உணர வேண்டியது அவசியம். நாட்டு மக்களின் நல்வாழ்வு மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார ஸ்திரத்தன்மையுடன் இவை ஆழமாக பின்னிப் பிணைந்துள்ளன.

எவ்வாறாயினும், விவசாயிகள் தங்கள் இக்கட்டான நிலையைப் பயன்படுத்திக் கொள்ள முற்படும் சில அரசியல்வாதிகளின் உள்நோக்கங்களை புரிந்து கொள்வது அவசியம். விவசாயிகள் அந்த விழிப்புணர்வைக் கொண்டுள்ளனர் என்பது தெளிவாகிறது.

**கே: நாடு முழுவதும் விவசாயிகள் எதிர்கொள்ளும் உரப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்த அறிவிப்பை வழங்க முடியுமா?**

பதில் : தற்சமயம் டி.எஸ்.பி உரம், யூரியா, எம்.ஓ.பி ஆகிய மூன்று வகையான இரசாயன உரங்களை கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் கணிசமாக குறைந்த விலையில் வெற்றிகரமாக விநியோகித்துள்ளோம். விவசாயிகளுக்கு ஏற்படும் நிதிநெருக்கடியை உணர்ந்து அவர்களின் உரம் கொள்முதலுக்கு நிதியுதவி அளித்துள்ளோம். இயற்கையின் சக்திகள் நமக்கு எதிராகச் செயல்படுவது எதிர்பாராத ஒன்றாகும். இத்தகைய இயற்கைப் பாதிப்புத் துன்பங்களைச் சந்தித்தாலும், நாங்கள் உறுதியுடன் முன்னேறினோம். இன்றுவரை எங்களின் வெற்றிகரமான முயற்சிகளில் ஒன்றாக இதை முத்திரை குத்துவதில் பெருமிதம் கொள்கிறேன்.

**கே: தண்ணீர்ப் பற்றாக்குறை அல்லது பிற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும் வழிமுறை உள்ளதா?**

பதில்: நிச்சயமாக, விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதி சபை ஆகியன ஒரே குடையின் கீழ் செயல்படும் இழப்பீட்டு வழிமுறை உள்ளது. தற்போதைய இழப்பீட்டுத் தொகையானது நமது விவசாயிகளின் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யாது என்பதை ஒப்புக்கொண்டாலும், அவர்களுக்கு சில அளவிலான உதவிகள் வழங்கப்படுவதை அங்கீகரிப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்த ஆண்டு யால பயிர்ச்செய்கைப் பருவத்தில் ஏற்பட்ட பயிர் சேதத்தின் அளவை உடனடியாக மதிப்பீடு செய்யுமாறு நாங்கள் உத்தரவிட்டுள்ளோம். சமமான இழப்பீட்டை எளிதாக்க சேதத்தை மூன்று நிலைகளாக வகைப்படுத்தியுள்ளோம். முழுமையான சேதம், நடுத்தர அளவிலான சேதம் மற்றும் சிறிய சேதம் ஆகியன அவையாகும்.

**கே: கோட்டாபய ராஜபக்ஷ நிர்வாகத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த படுதோல்வியின் பின்னர் அரசாங்கம் இயற்கை உரங்களிலிருந்து முற்றாக விலகிச் செல்கிறதா அல்லது அதன் மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடு சம்பந்தப்பட்ட சோதனைகள் தொடர்கின்றனவா?**

பதில்: தற்போதைய சூழ்நிலையானது ஒரு சிக்கலான இயக்கவியலை முன்வைக்கிறது, இதில் விவசாயிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இருதரப்பினரும் இயற்கை விவசாய முறைகளில் இருந்து விலகிவிட்டதாகத் தோன்றுகிறது. இதைத் தீர்க்க, நாம் ஒரு இணக்கமான நடுநிலையை உருவாக்க வேண்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நூறு சதவீத இயற்கைப்பசளை அணுகுமுறைக்கு முழுமையாக மாறுவதற்கு முயற்சித்த நமது கடந்தகால அனுபவம், நமது தேசத்திற்கு குறிப்பிடத்தக்க சவால்களை விளைவித்தது. மறுபுறம், இரசாயன உரங்களை முழுமையாக நம்புவது குறித்து சிந்திக்க வேண்டும். நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய அபாயங்களை அது கொண்டுள்ளது.

**கே: எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேட்புமனுவை நீங்கள் ஆமோதிக்கிறீர்களா?**

பதில்: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சவால்களை எதிர்கொள்ளும் துணிச்சலான தனிநபராக இருந்து, மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளதுடன், மக்கள் மத்தியில் நம்பிக்கை உணர்வை தீவிரமாக வளர்த்து வருகிறார். குறிப்பிடத்தக்க வகையில், எம்மைப் பாதித்த பல்வேறு பிரச்சினைகள், குறிப்பிட்ட அளவிற்குத் திறம்படத் தீர்க்கப்பட்டுள்ளன. இது குறிப்பிடத்தக்கதும் பாராட்டுக்குரியதுமாகும்.

உரம், சமையல் எரிவாயு (எல்.பி காஸ்) மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் இப்போது எளிதாகக் கிடைக்கின்றன. இது நமது முந்திய சூழ்நிலைகளிலிருந்து கணிசமான முன்னேற்றத்தைக் குறிக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவமானது, இந்த அம்சங்களை உறுதிப்படுத்துவதில் ஒரு முக்கிய பங்கை ஆற்றியுள்ளது, தேசத்தில் ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

**கே: தற்போதைய சூழ்நிலையில் நாடு எதிர்நோக்கும் சவால்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவமே ஒரே தீர்வு என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

பதில்: சந்தேகமில்லாமல் ஆம் என்பதே எனது பதில். இந்த சவால்களுக்கு முகங்கொடுத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகிய இருவரும் முன்வரத் தயங்கினர் என்பது தெளிவாகிறது. அவர்கள் மெத்தனமாக இருந்தபோதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பொறுப்பை அச்சமின்றி தனது தோள்களில் சுமந்தார். இந்தச் சுமையைத் தோளில் சுமப்பதில் அவரது உறுதியான நிலைப்பாடு குறிப்பிடத்தக்கது. அவரைத் தனித்துவமானவராகக் காண்பிக்கின்றது. மற்றும் தேசத்தின் தற்போதைய இக்கட்டான சூழ்நிலைகளுக்கு நம்பகமான தலைவராக அவரை நிலைநிறுத்துகிறது.

உகந்த விளைச்சலை உறுதிசெய்து, மண்ணின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து, சத்தான விளைபொருட்களை நுகர்வோருக்கு வழங்கும் ஒரு நுட்பமான சமநிலையை அடைவதில் நமது கவனம் இருக்க வேண்டும். எங்கள் மூலோபாயம் இயற்கை மற்றும் இரசாயன உரங்களின் நன்மைகளை ஒருங்கிணைக்கும் ஒரு செயலூக்கமான முயற்சியை உள்ளடக்கியது.

**நீடித்த வரட்சியினால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது உண்மை; ஆனாலும் தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்கின்றோம்**



**நாடு எதிர்நோக்கும் சவால்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவமே ஒரே தீர்வு; தேசத்தின் இன்றைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அவரே நம்பகமான தலைமைத்துவம்**




# நிலவை மனிதன் ஆராய்வது அங்குள்ள தண்ணீரை பெற்றுக் கொள்வதற்காகவா?

இலங்கையின் அரசியல் வரலாற்றில் நிலவில் இருந்து அரிசி கொண்டு வரப்படும் என்ற வாக்குறுதி காணப்பட்டது. அப்போது இலங்கையில் அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவியதுடன், அரிசியின் சந்தை விலை அதிகரித்ததால் பொதுமக்கள் சிரமமான சூழ்நிலைக்கு முகம்கொடுக்க நேரிட்டது. ஆட்சிக்கு வந்த பிறகு மக்களுக்கு மானிய விலையில் அரிசி வழங்கப்படுவதோடு, தேவையான அரிசி நிலவிலிருந்தாவது கொண்டுவந்து தரப்படும் எனக் கூறப்பட்டிருந்தது.

விவசாயத்தில் சமீபத்திய எழுச்சி காரணமாக உணவு உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இவர்களுக்கு தூயநீர் பிரச்சனை உள்ளது. எழுபத்தேழாவது சுதந்திர தினத்தன்று, ஜனாதிபதி நரேந்திர மோடி தனது 'ஜல ஜீவன்' கொள்கையை மீண்டும் வலியுறுத்தியிருந்தார். வளர்ச்சியடைந்த தேசத்தை நோக்கி நகரும் போது, ஒவ்வொரு வீட்டுக்கும் சுத்தமான குடிநீர் வழங்கப்படும் என்று தெளிவாகக் குறிப்பிட்டார்.

சுத்தமான குடிநீர் மற்றும் அரசாங்கத்தால் வழங்கப்படும் குழாய்நீர்ப் பற்றாக்குறை குறித்து இந்திய மக்கள் கவனம் செலுத்துகையில், சந்திரனை வெல்வதற்கான இந்தியாவின் சந்திரயான் விண்வெளிப் பயணம் தொடர்கின்றது. முதன்முறையாக நிலவின் தென்பகுதிக்கு சந்திரயான் விண்கலம் வெற்றிகரமாக சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. நிலவின்தென்பகுதியில் தண்ணீர் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். நீர் காணப்படுவது உயிரனங்களின் வாழ்க்கைக்கு ஏற்ற சூழலாக அமையும். மற்றும் நிலவின் தற்போதைய புவியியல் ஆய்வுகளில் ஒரு பெரிய உந்துதலை அளிக்கும். நீரின் கண்டுபிடிப்பு சந்திரனை ஆராய்ச்சி செய்வதற்கான நிரந்தர நிலையத்தை உருவாக்க ஒரு காரணமாக இருக்கும்.

சந்திரயான் பயணம் என்பது தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள இந்தியாவுக்கு நிலவில் இருந்து தண்ணீரைக் கண்டுபிடிப்பதற்கான நம்பிக்கையான செய்தியல்ல. உலகில் பல நாடுகள் மக்களுக்கு குடிநீர் வழங்க பல ஆராய்ச்சிகளை செய்து வருகின்றன. கடல்நீரை சுத்திகரித்து விநியோகிக்கும் முறை மாத்திரமன்றி கடும் குளிர்ப் பிரதேசங்களில் உள்ள பனிப்பாறைகளை உடைத்து கடலூடாக கொண்டு வந்து குடிநீராக விநியோகிக்கவும் சில நாடுகள் முடிவு செய்துள்ளன. ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள ஒரு நிறுவனம் ஒரு பனிப்பாறையை உடைத்து அதை பத்தாயிரம் கிலோமீட்டர் தூரத்திற்கு கொண்டு செல்லத் திட்டமிட்டது, மேலும் மில்லியன் கணக்கான மக்களுக்கு சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு இருபது பில்லியன் கலன் பனிக்கட்டி போதுமானதாக இருக்கும் என்று கணக்கிட்டது.

ஹைட்ரஜன் மற்றும் ஒக்சிஜனை இரசாயன முறையில் சேர்த்து தண்ணீரை உற்பத்தி செய்ய ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்தியா குடிநீர்த் தேவைக்காக நிலவின் மேற்பரப்பில் நீரைக் கண்டுபிடிப்பது குடிநீர்த் தேவைக்காக என கற்பனை செய்வது நியாயமல்ல.

சந்திரனின் மேற்பரப்பில் தெற்குப் பகுதியை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சந்திரயான் 2 முயற்சி 2019 ஆம் ஆண்டு தோல்வியடைந்தாலும், மூன்றாவது முறையாக வெற்றிகரமாக ஏவப்பட்டது. முன்னதாக நிலவில் பயணிக்கும் திறன் கொண்ட ஆறு சக்கர வாகனம் கொண்டு செல்லப்பட்டது. இம்முறை நுண்ணிய கமரா அமைப்புகளுடன் 42 நாட்கள் நிலவின் மேற்பரப்பில் ஆய்வுகள் நடத்தப்படுமென இந்திய ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

"இந்திய விண்வெளி வரலாற்றில் பொன்னெ முத்துக்களால் எழுதப்பட்ட நிகழ்வை உருவாக்கி நமது நாட்டின் கனவுகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் திறன் கொண்டது சந்திரயான் விண்வெளிப் பயணம்" என இந்தியப் பிரதமர் தனது ட்விட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார். அமெரிக்கா, சோவியத் யூனியன் மற்றும் சீனாவுக்குப் பின்னர் நிலவைப் பற்றி ஆய்வு செய்யும் நாடாக உலக வரலாற்றில் இந்தியா இணைந்துள்ளது.

சந்திரயான் விண்வெளித் திட்டம் 2008 இல் நிலவுக்கு முதல் விண்கலத்தை ஏவுவதன் மூலம் தொடங்கியது. நிலவின் தெற்குப் பகுதியில் இருள் சூழ்ந்துள்ளதால், தண்ணீர் இருக்கக்கூடும் என்பதை சர்வதேச சமூகத்திற்கு அறிவிக்க இந்த சந்திரயான் விண்வெளி ஆய்வுத் திட்டத்தால் முடிந்துள்ளது. இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள்,ஆய்வாளர்கள், விஞ்ஞானிகள் என ஆயிரக்கணக்கானோர் சந்திரயான் திட்டத்தில் இணைந்துள்ளனர். அது இந்தியர்களுக்கு பெருமை சேர்க்கிறது.

விண்வெளி ஆராய்ச்சி என்பது ஒவ்வொரு நாட்டிலும் ஆர்வமுள்ள விடயமாகும். சோவியத் யூனியனுக்குப் பின்னர் உருவான ரஷ்யா நிலவில் ஆராய்ச்சியை மீண்டும் தொடங்கியுள்ளது. அமெரிக்காவும் சீனாவும் சந்திரனுக்குப் பதிலாக உலகின் தொலைவில் உள்ள இலக்குகளில் கவனம் செலுத்தியுள்ளன. ஆர்வமுள்ள இளம் தலைமுறையினர் புதிதாகச் சிந்திக்க இக் கருத்துக்கள் ஒரு வாய்ப்பு.

தகவல் தொழில்நுட்பத்தைப் படித்துவிட்டு ஒரு நிறுவனத்தில் வேலை செய்வதற்குப் பதிலாக, பெரிய சர்வதேச நாடுகளுடன் விண்வெளி ஆராய்ச்சிகளில் இணையலாம். செயற்கைக் கோள்களை ஏவுவது வழக்கமான வணிகமாகி விட்டது. தனியார் துறைக்கு அதனை வழங்க இந்தியா தயாராகவுள்ளது. அதற்கான முடிவுகளை எடுக்க நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. ட்ரோன்கள், செயற்கைக்கோள்கள் மற்றும் விண்கலம் போன்ற துறைகளில் புதிய தொழில்வாய்ப்புகள் உருவாகும். அத்துடன் இளைஞர்கள் இந்தத் துறைகளில் கவனம் செலுத்தவும் முடியும்

இந்த யோசனைகள் ஆர்வமுள்ள இளைஞர்கள் புதிதாக சிந்திப்பதற்கு ஒரு வாய்ப்பாக உள்ளது. தகவல் தொழில்நுட்பத்தைப் படித்துவிட்டு ஒரு நிறுவனத்தில் பணியாற்றுவதற்குப் பதிலாக, முக்கிய சர்வதேச நாடுகளுடன் விண்வெளித் திட்டங்களில் சேரலாம். செயற்கைக்கோள் ஏவுவது பொதுவான வணிகமாகி விட்டது. செயற்கைக்கோள்களை தனியாரிடம் ஒப்படைக்க இந்தியா தயாராகவுள்ளது. அந்த முடிவுகளை எடுக்க நிபுணர்குழு நியமிக்கப்பட்டுள்ளது. மேலும் இளைஞர்கள் இத்துறையில் ஈடுபட முடியும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

## பொலிஸ் அதிகாரம் மத்திய...

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான நஸீர் அஹமட் அனுப்பி வைத்த கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகாரம் பரவலாக்கப்படுவதை முஸ்லிம் மக்கள் ஆதரிக்கின்ற போதிலும், 13ஆவது திருத்தம் ஏனைய விடயங்களில் திருத்தப்பட வேண்டுமெனவும், அவர் யோசனை முன்வைத்துள்ளார்.

மாகாணங்களை இணைப்பதற்கான தத்துவத்தை அகற்றும் வகையில் அரசியலமைப்பின் உறுப்புரை 154 A (03) நீக்கப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

சட்டம், ஒழுங்கு உள்ளிட்ட அனைத்து பொலிஸ் அதிகாரங்களும் பிரத்தியேகமாக மத்திய அரசாங்கத்திடம் மாத்திரமே ஒப்படைக்கப்பட வேண்டுமெனவும், அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான அதிகாரப்பகிர்வை முஸ்லிம்கள் ஆதரிக்கின்றனர். ஆனால், குறிப்பாக 13ஆவது திருத்தம் வேறு வகையில் திருத்தப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அமைச்சர் நஸீர் அஹமட் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், மாகாணங்களை இணைக்கும் அதிகாரத்தை நீக்கி அரசியலமைப்பின் 154 A (3) பிரிவை இரத்துச் செய்ய வேண்டுமென்றும் 'நிலம் மற்றும் குடியேற்றம்' தொடர்பான அதிகாரங்கள் முழுமையாக மத்திய அரசுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும் அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

## மேர்வினின் கூற்றுக்க...

கொண்டு வருவதாக களனியில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருக்கும் கூற்றை நாம் வன்மையாக கண்டிப்பதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் வடகொழும்பு பிரதான அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான சீ.வை.பி.ராம் தெரிவித்தார்.

ஆகையால், இந்தக் கூற்று தொடர்பாக அரசாங்கம் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அவர் ஆதரிவித்தார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டில் அனைத்து மக்களுக்கும் தங்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள போராடும் உரிமை இருக்கிறது. அதனை யாரும் தடுக்க முடியாது. என்றாலும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் அண்மைக்காலமாக அங்குள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் மற்றும் கோயில்கள் தொல்பொருள் ஆய்வு என்ற பேரில் கைப்பற்றி வரும் நடவடிக்கையை நாங்கள் அவதானித்து வருகிறோம்.

இந்நிலையில், அந்த மக்கள் தங்களின் வழிபாட்டு தலங்கள் மற்றும் காணிகளை பாதுகாத்துக்கொள்ள போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். அது அந்த மக்களின் உரிமை. அதனை யாராலும் தடுக்க முடியாது. அதேநேரம் வடக்கு, கிழக்கிலுள்ள பௌத்த விகாரைகளுக்கோ, அங்குள்ள தேரர்களுக்கோ யாரும் கை வைத்ததாக இல்லை. ஒரு சில சந்தர்ப்பங்களில் வாக்குவாதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

குருந்தூர்மலை விவகாரம் மற்றும் அங்குள்ள இந்துக் கோயில்களில் மக்கள் வழிபாடுகளில் ஈடுபடும் போது, அதற்கு தடைகளை ஏற்படுத்தியதாலேயே பிரச்சினைகள் தலைதூக்கி இருக்கின்றன.

## வீட்டினுள் பதுங்கியிருந்த ...

தலைமறைவாகி இருந்ததாகவும் இதன் காரணமாக போலி தகவலை வழங்கியதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்ட இந்த வர்த்தகர், மிரிஹான பிலுள்ள தனது நண்பரின் வீட்டில் பதுங்கியிருப்பதாக மிரிஹான பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பில் இரகசிய தகவல் கிடைத்தது.

பொலிஸார் உடனடியாக நண்பரின் வீட்டுக்குச் சென்று சோதனையிட்ட போது, வர்த்தகர் வீட்டில் பதுங்கியிருப்பது தெரியவந்தது. வர்த்தகரை கைது செய்த பொலிஸார், அவருக்கு அடைக்கலம் கொடுத்த நபரையும் கைது செய்தனர்.

பல்வேறு நபர்களிடம் இந்த வர்த்தகர் எழுபது இலட்சம் ரூபாவை கடனாக பெற்றிருந்ததாகவும் கடனை போக்குவதற்காக தலைமறைவாக திட்டமிட்டதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, தனது கணவர் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி கொலன்னாவ பொலிஸில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்திருந்தனர்.

இதற்கமைய வர்த்தகர் பயணித்த வான் உஹுலுவாவ பிரதேசத்தில் தெனிய கொலொன்னே வீதியிலுள்ள மயானமொன்றுக்கு அருகில் பொலிஸாரால் மீட்கப்பட்டது. வர்த்தகர் வானில் தெனியாய நகருக்கு சென்று, அங்கிருந்த வங்கியொன்றில் 10 இலட்சம் ரூபாயை எடுத்துக்கொண்டு சென்றுள்ளார்.

இதன்போது, அவர் நகரிலுள்ள கடையொன்றுக்கு சென்று, கடையை விட்டு வெளியேறுவது கடையின் பாதுகாப்பு கமெராவில் பதிவாகியது. இவற்றையும் அடிப்படையாக கொண்டு விசாரணையை ஆரம்பித்த பொலிஸார், தொழிலதிபர் தனது வங்கிக் கணக்கிலிருந்து 10 இலட்சம் ரூபாயை எடுத்திருப்பதை இதனூடாக கண்டுபிடித்தனர்.

## G.C.E. (A/L) பெறுபேறுகள்...

இதேவேளை, கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப்பத்திர பரீட்சையின் விடைத்தாள்களுக்கான முதற்கட்ட மதிப்பீட்டுப் பணிகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 27ஆம் திகதிவரை நடைபெறுமெனவும், அவர் தெரிவித்தார். இதேவேளை, ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டாளர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை கோரும் நடவடிக்கை எதிர்வரும் மாதம் முதலாம் திகதிவரை நடைபெறவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## துணைவேந்தராக...

ஆண்டுகளுக்கு துணைவேந்தராக இருக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார். இதனை ஜனாதிபதி செயலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

## தமிழரை பாதிக்கும் விடயத்தில் ...

தொல்லியல் திணைக்களம், வனவள பாதுகாப்பு, வனஜீவராசிகள் திணைக்களத்தின் சில முறையற்ற செயற்பாடுகளானவை தமிழ் மக்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையில் இருப்பதாகவும், அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் வடக்கு, கிழக்கு பகுதிகளில் வனவள பாதுகாப்பு, வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடுகள் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு மாறாகவே முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் முன்னெடுக்கப்படுக்கின்ற எவ்வகையான முயற்சிகளும் வெற்றியளிக்காதெனவும் தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்த உதவாதெனவும், அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வாக்காளர் பதிவேட்டில்...

அடையாள அட்டை இலக்கத்தை பயன்படுத்த வேண்டும். தேருநர் பதிவேட்டிலிருந்து தகுதியான

வாக்காளர்கள் யாரேனும் விடுபட்டிருந்தால், எதிர்வரும் செப்டெம்பர் 4ஆம் திகதிக்குள் கிராம நிர்வாக அலுவலரை தொடர்புகொள்ள முடியும். கடந்த 2005ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் பிறந்து, 18 வயது நிரம்பியவர்கள், 2023ஆம் ஆண்டில் தமது வழக்கமான குடியிருப்பு முகவரியில் வாக்காளராக பதிவு செய்வதற்கு தகுதியுடையவர்களெனவும், தேசிய தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

## கொழும்பிலிருந்து கண்டி...

அந்த வகையில், எதிர்வரும் 26ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை விசேட ரயில் சேவைகளை நடத்தவுள்ளதாக, ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எம்.ஜே.இதிபொலகே தெரிவித்தார்.

கொழும்பு, கோட்டையிலிருந்து கண்டிவரையும் மீண்டும் கண்டியிலிருந்து கோட்டைவரையும் இந்த விசேட ரயில் சேவைகளை நடத்தவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## கச்சதீவை நிச்சயம்...

இராமேஸ்வரம் மண்டபம் முகாம் அருகே நேற்று முன்தினம் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"மீனவர்களுக்கு அளித்த வாக்குறுதியை பிரதமர் நரேந்திர மோடி நிறைவேற்றவில்லை. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்து 9 ஆண்டுகளில் தமிழக மீனவர்களின் மீது இலங்கை கடற்படையின் தாக்குதல் தொடர்கிறது.

மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண பா.ஜ.க. அரசு என்ன செய்துள்ளது. எதிர்வருகின்ற 2024ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவந்து, கச்சதீவை இலங்கை அரசாங்கத்திடமிருந்து மீட்டு, தமிழக மீனவர்களின் உரிமையை நிலை நாட்டப்படும்" எனத் தெரிவித்தார்.

## சவூதிக்கு அனுப்புவதாக...

செய்துள்ளதாக, மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். இச்சந்தேகநபர் கடந்த வருடம் நவம்பர் மாதம் சவூதி அரேபியாவுக்கு வேலைக்கு அனுப்புவதாகக் கூறி கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரிடம் ஒரு இலட்சம் ரூபாயையும் இன்னொருவரிடம் 60 ஆயிரம் ரூபாயையும் பெற்றுக் கொண்டு, கடந்த 7 மாதங்களாக வெளிநாட்டுக்கு அனுப்புவதாக ஏமாற்றி வந்த நிலையில், அவருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து போலி முகவரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்த பொலிஸார், விசாரணையின் பின்னர் பண மோசடியில் ஈடுபட்ட முகவரான இச்சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரை நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

600 விசேட வைத்திய நிபுணர்கள் உட்பட

# நாட்டில் 3,000 டாக்டர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது

### சுகாதார அமைச்சு அதிர்ச்சி தகவல்

நாட்டில் 3,000 க்கும் மேற்பட்ட வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக தெரிவித்த சுகாதார அமைச்சு, இவர்களில் 600 க்கும் மேற்பட்ட விசேட வைத்திய நிபுணர்களுக்கும் பற்றாக்குறை நிலவுவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

விசேட வைத்திய நிபுணர்களுக்கான பற்றாக்குறையால், சில வைத்தியசாலைகளின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும், சுகாதார அமைச்சு தெரிவித்தது.

எவ்வாறாயினும் இந்த ஆண்டு இறுதிக்குள் 2,000 வைத்தியர்கள், வைத்திய சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் இதன் மூலமாக விசேட வைத்திய நிபுணர்களுக்கு நிலவும் பற்றாக்குறை பிரச்சினை ஓரளவு நிவர்த்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுவதாகவும், சுகாதார அமைச்சு தெரிவித்தது.

விசேட வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியமையால் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு விரைவான தீர்வை வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்தது.

இந்த ஆண்டு மே மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஒரு வருட காலத்துக்குள் 274 வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டுச் சென்றுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தது.

இக்காலப் பகுதிக்குள் விசேட தரங்களை சேர்ந்த 842 வைத்திய அதிகாரிகளும் நாட்டை விட்டுச் சென்றுள்ளதாகவும், அந்தச் சங்கம் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குறைந்தளவில் நாணயங்களை...

சட்டங்களின்படி நாட்டு மக்களுக்கு தற்போதைய நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு மட்டுமே அதிகாரம் உள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபைக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அரசியலமைப்பு பொறுப்பு, அதன் நாணயத் திணைக்களத்தால் நிறைவேற்றப்படுவதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கமைய நாணயத் திணைக்களம் கடந்த 2018ஆம் ஆண்டில் 796.5 பில்லியன் ரூபாயையும் 2019ஆம் ஆண்டில் 776.2 பில்லியன் ரூபாயையும் 2020ஆம் ஆண்டில் 697.3 பில்லியன் ரூபாயையும் 2021ஆம் ஆண்டில் 390.9 பில்லியன் ரூபாயையும் 2022ஆம் ஆண்டில் 385.5 பில்லியன் ரூபாவையும் வெளியிட்டதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியாளர்களுடனான சந்திப்பொன்று நீர்கொழும்பு ஹெரிடேஜ் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்ற போதே, இவற்றை தெரிவித்தார்.

சட்ட மற்றும் தொழில்நுட்ப விடயங்களை உள்ளடக்கிய மேற்படி விடயங்களில் முடிவெடுக்கவோ அல்லது தலையிடவோ அரசியல்வாதிகளுக்கோ, பொதுமக்களுக்கோ அதிகாரம் இல்லையெனவும், அமைச்சர் வலியுறுத்தினார்.

இவ்வாறான நிலையில் செயற்படும் சுயாதீன நிதி நிறுவனமான இலங்கை மத்திய வங்கிக்குள் சில குழுக்கள் பலவந்தமாக அத்துமீறி நுழைந்து அதிகாரிகளை அச்சுறுத்தியதாக தெரிவிக்கப்படுவதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வாறான முரண்பாடான செயற்பாடுகளை முன்னேறிய மற்றும் அறிவார்ந்த சமூகம் கண்டிக்க வேண்டுமென்றும் மத்திய வங்கி தனது அரசியலமைப்பு பொறுப்புகளை சுதந்திரமாக நிறைவேற்ற அனுமதிக்க வேண்டுமென்றும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## 13ஆவது திருத்த விடயத்தில்...

செய்த ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று கொழும்பு, பம்பலப்பிட்டியிலுள்ள ஜனநாயக மக்கள் காங்கிரஸ் அலுவலகத்தில் நடைபெற்ற போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"இலங்கையில் உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடத்தப்படாமலிருப்பது மக்களின் வாக்குரிமையை பறிக்கும் செயலாக இருப்பதுடன், அது மனித உரிமையை மீறும் செயலாகவும் பார்க்கப்படுகின்றது.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட போது, அவரிடம் இந்திய அரசாங்கம் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறும் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறும் வலியுறுத்தியிருந்தது.

மாகாணசபைத் தேர்தலென்று கூறும் போது, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் சம்பந்தமாக ஜனாதிபதி இன்று பேசிக் கொண்டிருக்கின்றார்.

வடக்கு, கிழக்கைச் சார்ந்த தமிழ்க் கட்சிகளை அழைத்து மாகாணசபைத் தேர்தலில் பொலிஸ், காணி அதிகாரம் சம்பந்தமாக பேசுகின்றாரென்றால், உண்மையிலேயே ஏற்கெனவே அவர்களுக்கு சொல்லி வைத்தது போன்று வடக்கு, கிழக்கிலுள்ள அரசியல்வாதிகள் பொலிஸ், காணி அதிகாரங்கள் தமக்கு வேண்டுமென ஒற்றைக்காலில் நின்று கொண்டிருக்கிறார்கள். இது ஜனாதிபதி எதிர்பார்த்த ஒன்றாகத்தான் பார்க்கின்றேன்.

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## எங்கள் கருத்து

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

# இலவசக் கல்வியை ஊட்டிய தாயகத்தை மறந்து விடுவதா?

மாதாந்த வருமானத்தைக் கொண்டு சிறப்பாக வாழ்க்கை நடத்த முடியுமென்ற எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போன பட்சத்தில், அவர்கள் அதிக வருமானமீட்டும் நோக்கில் வேறு நாடுகளுக்குச் செல்லத் தலைப்படுகின்றனர்.

அவர்கள் தங்களது சொந்த நலனை மாத்திரம் முன்னிலைப்படுத்தி அவ்வாறான முடிவுக்கு வருகின்றனர். தாங்கள் மாத்திரம் வசதிவாய்ப்புகளுடன் மற்றொரு நாட்டில் வாழ வேண்டுமென்று எதிர்பார்க்கின்ற அவர்கள், தங்களது தாய்நாட்டின் நலன் குறித்து ஒருகணம் சிந்திப்பதும் அவசியமாகின்றது. தங்களது நாடு இக்கட்டான நிலையில் உள்ள இவ்வேளையில் அதனைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு வழங்க வேண்டிய நிபுணர்கள், தாய்நாட்டைக் கைவிட்டு புலம்பெயர்ந்து செல்ல முற்படுவது நியாயமானதல்ல.

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் கல்வித்துறையில் போற்றப்பட வேண்டிய நாடு இலங்கை ஆகும். எமது நாட்டில் உள்ளது போன்ற இலவசக்கல்வி வாய்ப்பானது வேறெந்த நாட்டிலுமே கிடையாது. தரம்_1 தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வி முடிவுறும் வரை இலவசமாகக் கல்வியை வழங்குகின்ற நாடு இலங்கை ஆகும்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியைக் காரணமாக வைத்து தற்போது நாட்டை விட்டு வெளியேற முற்படுகின்ற நிபுணர்கள் அனைவருமே இலவசக்கல்வியின் பலனாகவே இன்று உயர்ந்த நிலைமைக்கு வந்துள்ளனரென்பதை மறந்து விடலாகாது.

'அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் – அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு' என்பது ஔவையார் கூறிய மூதுரை ஆகும். 'குளத்தில் நீர் நிறைந்திருக்கையில் அதில் தங்கி மீன்களை உண்டு வாழ்ந்த நீர்வாழ் பறவைகள் எல்லாம், அக்குளத்தில் நீர் வற்றுமானால் அங்கிருந்து அகன்று சென்று விடும். அதைப்போல, நாம் செழிப்பாக இருந்த காலத்தில் எல்லாம் நம்முடன் ஒட்டி உறவாடிப் பயன் அடைந்த நம் உறவினர்கள், நமக்கு வறுமை வருகையில் அல்லது நமக்கு ஒரு துன்பம் வருகையில், அவர்களால் இயன்ற உதவிகளை செய்ய மனமில்லாமல், நம்மை விட்டு அகன்று விடுவார்களேயானால், அவர்கள் எல்லாம் நமக்கு உறவினர்களே அல்லர். 'உறவினர்கள்' என்று சொல்லிக் கொள்ளும் அருகதை அற்றவர்கள் ஆகிவிடுகிறார்கள்!

நாட்டை விட்டு நீங்கிச் செல்ல முற்படுகின்ற எமது கல்விச்சமூகத்தினரை நினைக்கின்ற போது ஔவையின் மூதுரைதான் இங்கு நினைவுக்கு வருகின்றது.

## உள்ளூராட்சி மன்றங்களில்...

தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நாட்டு இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்குவதும் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் இளைஞர் பிரதிநிதித்துவத்துக்கான வாய்ப்புகளை வழங்குவதும் ஜனாதிபதியின் வேலைத்திட்டமெனவும், பிரேமநாத் சி.தொலவத்த எம்.பி. தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக பிரேமநாத் சி.தொலவத்த எம்.பி. மேலும் தெரிவித்த போது,

''இளைஞர்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக நாங்கள் தொடர்ந்து பேசி வருகிறோம். நம் நாட்டில் பல கலவரங்கள் நடந்துள்ளன. 1971 மற்றும் 1989ஆம் ஆண்டுகளை போலவே, கடந்த காலத்திலும் ஒரு இளைஞர் எழுச்சியைக் கண்டோம்.

ஆனால், 1989ஆம் ஆண்டுக்கு பின்னரே, எமது நாட்டு இளைஞர்கள் அரசியலுக்கு வருவதற்கான வாய்ப்பு கிடைத்ததுடன், அதற்கு தேவையான தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இளைஞர் அதிருப்தி ஆணைக்குழுவால், உள்ளூராட்சிமன்றங்களுக்கு 25 வீதம் இளைஞர்களின் வேட்புமனுக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால், துரதிஷ்டவசமாக கடந்த காலத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பாக உரிமை வழங்குவதற்கான உள்ளூராட்சி சட்டத் திருத்தத்தின் போது, இளைஞர்களுக்கான வாய்ப்பு பறிபோனது.

இதனால், 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இளைஞர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. அதன்படி, 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வயதானவர்களே அதிகமாக போட்டியிட்டனர்.

பாராளுமன்றத்தில் இளைஞர் பிரதிநிதித்துவம் தொடர்பாக நாம் பேசினாலும், அவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைப்பதை காண முடியவில்லை. ஆனால், உள்ளூராட்சிமன்றங்களில் இளைஞர் பிரதிநிதித்துவம் என்பது பல தசாப்தங்களாக நாம் காணக்கூடியதொன்று. அதன்படி, அரசியல் குடும்பப் பின்னணி இல்லாத இளைஞர்கள் பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, அமைச்சர்களாக பதவி வகித்த சந்தர்ப்பங்களை நாம் பார்த்திருக்கிறோம்.

25 சதவீதமான வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் உரிமையை இளைஞர்களுக்கு வழங்கும் வகையில் உள்ளூராட்சிமன்ற சட்டத்தில் திருத்தம் செய்யப்படுவதுடன், அவர்களுக்குரிய உரிமையை மீளப் பெற்றுக்கொடுப்பதற்காகவே இந்த பிரேரணை முன்வைக்கப்படுகிறது.

தனிநபர் பிரேரணையாக இந்த முன்மொழிவை நான் சமர்ப்பித்தேன். இந்த பிரேரணை கொண்டு வரப்பட்டு நீண்டகாலம் கடந்ததுடன், இந்த விடயங்கள் பாராளுமன்ற அரசியலமைப்பு தெரிவுக்குழுவிலும் அமைச்சரவையிலும் தொடர்ச்சியாக ஆராயப்பட்டது. சில நேரங்களில் தனிநபர் பிரேரணை சட்டமாக மாற மிகவும் கடினமானதென்பதுடன், நீண்டகாலம் எடுக்கும்.

இளைஞர் பிரதிநிதித்துவச் சட்டம், அமைச்சரவையில் இரண்டு முறை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த ஆண்டு இளைஞர் தினத்தையொட்டி, அடுத்த பாராளுமன்ற அமர்வில் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக அதிகரிப்பதற்கான சட்டமூலத்தை மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தனிநபர் பிரேரணையை பாராளுமன்றத்தில் சட்டமாக மாற்ற தேவையான ஆதரவை வழங்கியமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். மேலும், இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குவதில் அவரது பங்களிப்பை பாராட்ட வேண்டும்.

எமது நாட்டில் நீண்டகாலமாக இருந்து வந்த ஆனால், கடந்த காலத்தில் இரத்துச் செய்யப்பட்ட இளைஞர் பிரதிநிதித்துவத்தை மீளப் பெறுவதற்கு அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத ஏனைய கட்சிகளினதும் ஆதரவு கிடைக்குமென்று நம்புகிறேன்'' எனத் தெரிவித்தார்.

## நாட்டின் தேசிய...

நேற்று முன்தினம் (18) மாலை பூஸா கடற்படை உயர் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய சவால்களை ஆயுதங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாதெனத் தெரிவித்த ஜனாதிபதி, அவற்றை எதிர்கொள்ளும் வகையில் உயர் திறன்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப அறிவு கொண்ட பாதுகாப்பு படையை கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், பாதுகாப்பு படையினரின் நலன் மற்றும் ஓய்வு காலத்தை பாதுகாப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் புதிய தேசிய பாதுகாப்பு மீளாய்வில் இதனை உள்ளடக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பூஸா கடற்படை பயிற்சி நிலையத்துக்கு வருகை தந்த முப்படைகளின் தளபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா மற்றும் தொண்டர் படையணியின் கட்டளை தளபதி ரியர் அட்மிரல் தம்மிககுமார ஆகியோர் வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு விசேட இராணுவ அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டதுடன், அணிவகுப்பை ஜனாதிபதி பார்வையிட்டார்.

இலங்கை கடற்படையின் தொண்டர் படையணிக்கு ஜனாதிபதி வர்ணம் சூட்டியதுடன், வர்ணக்கொடிகளும் ஜனாதியினால் கையளிக்கப்பட்டன.

இதன் பின்னர் இடம்பெற்ற வர்ணமயமான கண்காட்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பார்வையிட்டார் .

இந்நிகழ்வில் மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"சுதந்திரத்துக்கு முன்னர் ரோயல் கடற்படையின் தொண்டர் சேவையாக ஆரம்பிக்கப்பட்ட கடற்படைக்கு இரண்டாம் உலகப் போரின் போது, கொழும்புத் துறைமுகத்தை பாதுகாக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. சுதந்திரத்துக்கு பின்னர், நிரந்தர கடற்படை உருவாக்கப்பட்டது. இன்று நீங்கள் அத்தகைய வரலாற்றைக் கொண்ட சிறப்பு வாய்ந்த இராணுவக் குழுவில் இணைகிறீர்கள்.

ஆரம்பத்தில் எங்களுக்கு கடல் சார்ந்த அச்சுறுத்தல்கள் இருக்கவில்லை. இந்து சமுத்திரம் முழுவதுமாக பிரிட்டிஷ் கடற்படையின் கட்டுப்பாட்டில் இருந்தது. அந்தக் கடற்படை இந்து சமுத்திரத்தை விட்டு வெளியேறிய பின்னர், எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. ஆனால், 1983 க்குப் பின்னர், நாம் ஒரு போரை எதிர்கொள்ள நேரிட்டது. அன்று எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு படகுகள் மூலம் தனது திறமையை வெளிப்படுத்தியது. கடல் அவர்களுக்கு புதிய அனுபவமாக இருக்கவில்லை. ஆனால், எங்களுக்கு கடலை பற்றி கற்க வேண்டியிருந்தது. சில காலங்களுக்கு பின்னர், எமது பாதுகாப்பு படைகளின் அர்ப்பணிப்பும் திறனும் காரணமாக கடற்புலிகள் அமைப்பை ஒழிக்க முடிந்தது. எமது கடற்படைக்கு இத்தகைய போர்களை செய்ய திறமையிருப்பதாக அங்கீகாரம் கிடைத்தது.

சோமாலியாவில் இத்தகைய குழுக்களை கட்டுப்படுத்துவதற்கு உலகின் பல பிரதான கடற்படைகள் தேவைப்பட்டன. ஆனால், இதை எங்களால் தனியாக செய்ய முடிந்தது. யுத்தம் நிறைவடைந்து தற்போது 14 வருடங்கள் கடந்துள்ளன. இப்போது நாம் நிகழ்காலம் தொடர்பாகவும் எதிர்காலம் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும்" எனத் தெரிவித்தார்.

## ஜனாதிபதியினால் மட்டுமே நாட்டை...

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"நாடு பூராகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு முன்னெடுக்கப்படுவதுடன், அதன் ஓரங்கமாக யாழ். மாவட்டத்திலும் கட்சியின் செயலாளரின் பங்குபற்றுதலுடன் வட்டுக்கோட்டை தொகுதியிலும் இடம்பெறுகின்றது.

தற்போதைய ஜனாதிபதி, பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அதாவது, வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டார். ஆனால், மக்களின் வாக்குகளில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படவில்லை.

கடந்த 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியிட்டிருந்தார். அந்தக் காலத்தில் வடக்கு மக்கள் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. அதன் காரணமாக தற்போதைய ஜனாதிபதியும் எமது கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வாக்குகளால் தோல்வியுற்றார். அதற்கு முன்னர் 1999ஆம் ஆண்டும் தேர்தலில் போட்டியிட்டிருந்தார்.

இதேபோன்று எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலிலும் அவர் போட்டியிடவுள்ளார். போட்டியிட்டு உண்மையிலேயே அமோக வாக்குகளை பெற்று நாட்டை முன்னோக்கிக் கொண்டு போவதற்கு உங்களுடைய போதிய ஒத்துழைப்பை வேண்டியே இந்தக் கட்சியின் மறுசீரமைப்பு தற்பொழுது முன்னெடுக்கப்படுகின்றது.

அந்த ஒரு நோக்கத்துடனும் அதற்கும் அப்பால் இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எமது கட்சித் தலைவரிடம் உள்ளது.

எனவே, வடக்கிலுள்ள மக்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், எமது கட்சியின் தலைவருக்கு அமோக வாக்களித்து அவரை வெற்றியடைய வைப்பதன் மூலமே எமது நாட்டை முன்னேற்றிக்கொள்ள முடியும்.

தற்போதுள்ள நிலையில் எமது கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும்.

கடந்த 2014ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ் மக்கள் அமோக வாக்களித்து வெற்றி அடைய வைத்தோம். ஆனால், அவரது ஆட்சியின் இறுதிக்காலத்தில் அரசியல் சூழ்ச்சியை செய்து நாட்டில் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்திய போதிலும், அப்போதைய பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவே அந்த நிலைமையில் கூட, நாட்டை சுமுகமான நிலைக்கு கொண்டு வந்தார்" எனத் தெரிவித்தார்.

# உத்தேச வேலைவாய்ப்புச் சட்டத்தின் 34 புதிய முக்கிய அம்சங்கள்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி & முகாமைத்துவ ஆலோசகர்




**இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சு உத்தேச வேலைவாய்ப்புச் சட்டத்தின் 34 முக்கிய விடயங்களை அண்மையில் வெளியிட்டது. தற்போதுள்ள தொழிலாளர் சட்டங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுவருதல், ஒழுங்குமுறைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பல்வேறு துறைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு நியாயமான மற்றும் சமமான கையாளும் முறைமையினை உறுதி செய்வதனை இந்தச் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.**

தொழிலாளர் சந்தையின் வளர்ச்சியடைந்து வரும் பல மாற்றங்கள் மற்றும் மிகவும் விரிவான சட்ட கட்டமைப்பின் தேவைக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் வேலைவாய்ப்புச் சட்டத்தை உருவாக்கத் தொடங்கியது. புதிய சட்டம் தற்போதுள்ள பல தொழிலாளர் சட்டங்களை மாற்றுவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது முதலாளிகள் மற்றும் பணியாளர்கள் இருவரும் தொழிலாளர் தொடர்பான ஒழுங்கு முறைகளைப் புரிந்துகொள்வதையும் பின்பற்றுவதையும் எளிதாக்குகிறது.

உத்தேச வேலைவாய்ப்புச் சட்டத்தின் முதன்மை நோக்கங்கள் ஒழுக்கமான வேலையை ஊக்குவிப்பது, தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் இலங்கையில் பொருளாதார வளர்ச்சி மற்றும் முதலீட்டுக்கு உகந்த சூழலை வளர்ப்பதாகும். தொழிலாளர் சட்டங்களை ஒத்திசைப்பதன் மூலம் தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளின் நலன்களுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்த அரசாங்கம் முயல்வதோடு நிலையான வளர்ச்சி மற்றும் சமூக நீதியை உறுதி செய்கின்றது.

உத்தேச வேலைவாய்ப்புச் சட்டத்தில் உள்ள 34 முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்தி வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சகம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. மேலும், இலங்கையில் ஒரு புதிய ஒருங்கிணைந்த தொழிலாளர் சட்ட அமைப்பை அறிமுகப்படுத்துவதில் அமைச்சகம் தீவிரமாக செயற்பட்டு வருகிறது.

அமைச்சகத்தின் கூற்றுப்படி, முன்மொழியப்பட்ட வேலைவாய்ப்பு சட்டத்தில் உள்ள 34 முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

வேலைவாய்ப்பில் அல்லது பணியிடத்தில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்க சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல். பணியிடத்தில் அனைத்து வகையான துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைகளைத் தடுப்பது தொடர்பான சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல். (No C190, வன்முறை மற்றும் துன்புறுத்தல் உடன்படிக்கையை இலங்கையில் அனுமதித்தல்).

தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் ஊழியர்களின் நலன் (OSH) தொடர்பான புதிய சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல் (பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி தொடர்பான ஒப்பந்த எண் C155 ஐ இலங்கையில் அனுமதித்தல்)

பணிக்கொடை (Gratuity) வழங்குவதில் ஏற்கனவே உள்ள கட்டுப்பாடுகளை நீக்குதல் (5 ஆண்டுகள் தொடர்ந்த சேவை மற்றும் 15 ஊழியர்களின் எண்ணிக்கை நீக்குதல்).

இரவு நேரத்தில் தொழிற்சாலை மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் ஆண் தொழிலாளர்களுக்கு 1 1/2 கட்டண முறையை அறிமுகப்படுத்துதல் (தற்போது பெண் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது)

சட்டத்தில் உள்ள சட்ட விதிகளைத் தளர்த்துதல்.

கூடுதல் நேர வேலை நேரம் மற்றும் செலுத்த வேண்டிய கணக்கீடுகள் குறித்து சீரான அமைப்பை அறிமுகப்படுத்துதல்.

பகுதி நேர வேலைவாய்ப்பு (Parttime employment) தொடர்பான சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல். பயிற்சி பெற்றவர்கள், பயிற்சி பெறுபவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் படிக்கும் போது பணிபுரிபவர்கள் (Apprentices) தொடர்பான சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல்.

மகப்பேறு விடுமுறை (Paternity leave) தொடர்பான சட்ட ஏற்பாடுகளை செய்தல்.

வீட்டிலிருந்து பணிபுரியும் ஊழியர்களின் (Work from home) உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல். வெளிநாட்டு ஊழியர் ஒருவரை இலங்கையில் பணியமர்த்துவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறையை அறிமுகப்படுத்துதல்.




பணி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான ஊதிய வாரியங்கள் ஆணை (Wages Boards Ordinance) மற்றும் கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டத்தின் (Shop and Office Employees Act) விதிகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை நீக்கி அனைத்து ஊழியர்களுக்கும் ஒரே மாதிரியான ஏற்பாடுகளை உருவாக்குதல்.

தற்காலிக வேலைவாய்ப்பில் பணியமர்த்தப்பட்டவர்களைத் தவிர ஆட்சேர்ப்பின் போது அனைத்து ஊழியர்களுக்கும் வேலைவாய்ப்புக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய நியமனக் கடிதத்தை எழுத்துபூர்வமாக வழங்குமாறு பணியமர்த்துபவர்களை கட்டாயப்படுத்துதல்.

ஊழியர்களின் தேவைகளுக்கு ஏற்ப வாரத்திற்கு 05 நாட்கள் மற்றும் மாற்றிக்கொள்ளக்கூடிய பணி நேரங்களை (Flexible working hours) அறிமுகப்படுத்துதல்.

சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு பெண் ஊழியர்களின் இரவுப் பணிக்கு அமர்த்தும் தற்போதுள்ள சட்டத்தில் உள்ள சட்ட விதிகளைத் தளர்த்துதல்.

தொழிலாளர் சட்டத்தின் கீழ், வீட்டு வேலைகளைச் (Domestic Work) சேர்த்தல்.

ஊதிய வாரியத்தின் முடிவுகள் மற்றும் சட்டபூர்வ சட்டத்தின் மூலம் குறைந்தபட்ச ஊதிய நிர்ணய முறைக்குப் பதிலாக தேசிய ஊதியக் குழுவை அறிமுகப்படுத்துதல், சமகால மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோல்களின்படி குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்க அந்த அமைப்புக்கு அதிகாரம் அளித்தல்.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஊழியர்களின் தவறான நடத்தை தொடர்பான இறுதி ஒழுங்கு முடிவுகளை வழங்குவதற்கு முதலாளிகள் மீது சட்டபூர்வ கடமையை நிறுவுதல்.

முதலாளிகளின் நியாயமற்ற தொழிலாளர் நடைமுறைகள் (Unfair labor practices) தற்போதுள்ள சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளதைப் போலவே தொழிற்சங்கங்களின் நியாயமற்ற தொழிலாளர் நடைமுறைகளும் சட்டத்தால் தடை செய்யப்பட வேண்டும் என்ற விதிகளை அறிமுகப்படுத்துதல்.

நியாயமற்ற தொழிலாளர் நடைமுறைகள் மீதான விதிகளை மீறி நீதிமன்றத்தில் இரு தரப்பினரும் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கான வாய்ப்பை உருவாக்குதல்.

தொழிற்சங்க அங்கத்துவ உறுப்பினர் கட்டணத்தை ஊதியத்திலிருந்து கழித்து தொழிற்சங்கங்களுக்கு அனுப்புவதை முதலாளிக்கு கட்டாயமாக்குதல்.

தொழிற்சங்கம் அமைப்பதற்குத் தேவையான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கையை 7ல் இருந்து அதிக எண்ணிக்கையாக உயர்த்துதல்.

தொழிற்சங்கத்தின் நிர்வாகக் குழுவில் குறிப்பிட்ட சதவீத பெண்களின் கட்டாயப் பிரதிநிதித்துவம்.

வேலைநிறுத்தம் தொடங்கும் திகதிக்கு முன்னதாக முதலாளிக்கு அறிவித்தல். மற்றும் வேலைநிறுத்தத்துக்கான உறுப்பினர்களின் பெரும்பான்மை ஒப்புதலைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்தல்.

சில வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு பணியிட விதிகளை (Workplace rules) முதலாளிக்கு அறிமுகப்படுத்தி அந்த பணியிட விதிகளுக்கு சட்டபூர்வ அதிகாரம் வழங்குதல்.

மோசமான செயற்திறன், மறுசீரமைப்பு அல்லது வணிக மறுசீரமைப்பு ஆகியவற்றின் காரணமாக வேலைகள் தேவையற்றதாக இருக்கும் போது, இழப்பீட்டுடன் பணி நீக்கம் செய்வதற்கான செயன்முறையை விரைவாகவும் எளிதாகவும் செய்தல்.

மூலப்பொருட்கள் கிடைக்காதது, ஆர்டர்கள் கிடைக்காதது, இயந்திரங்கள் பழுதடைதல் அல்லது முதலாளியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காக குறுகிய காலத்திற்கு பணிநீக்கம் செய்ய தொழிலாளர் ஆணையாளர் நாயகத்தின் அனுமதியைப் பெறுதல்.

ஒரு பணியாளர் தானாக முன்வந்து இராஜினாமா செய்தால் ஒரு மாதத்துக்கு முன்னதாகவே முதலாளியிடம் தெரிவித்து இராஜினாமா செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

**ஓய்வூதிய வயதின் திருத்தம்**

வேலை அல்லது தொழிலில் ஈடுபடும்போது பின்பற்ற வேண்டிய உழைப்பின் கண்ணியத்துக்கான தர நிலைகள் மற்றும் நெறிமுறைகளை அறிமுகப்படுத்துதல்.

சமூகப் பாதுகாப்புக் காப்பீட்டு நிதியத்தின் மூலம் மகப்பேறு நலன்கள், தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் வேலையின்மை ஏற்பட்டால் இழப்பீடு வழங்கும் சமூகப் பாதுகாப்பு அமைப்பை நிறுவுதல்.

வேலையின் செயற்திறனைக் கண்டறிய சட்ட ஏற்பாடுகளைச் செய்தல்.

மனித சக்தி வழங்கல் நிறுவனங்கள் (Man Power Supply institutes) மற்றும் வேலைவாய்ப்பு ஏஜென்சிஸ் (Employment Agencies) முறைப்படுத்துதல் தொடர்பான சட்ட ஏற்பாடுகளை செய்தல்.

மின் ஊதியங்கள் (EWages) அமைப்புத் தொடர்பான சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சகம், உத்தேச வேலைவாய்ப்புச் சட்டம், தொழிலாளர் அமைப்புகள், முதலாளிகள் சங்கங்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள் உள்ளிட்ட தொடர்புடைய பங்குதாரர்களுடன் விரிவான ஆலோசனையின் விளைவே மேற்கூறிய 34 முக்கிய அம்சங்கள். புதிய சட்டக் கட்டமைப்புக்கு ஏற்றவாறு வணிகங்களுக்கு மாறுதல் காலத்தை அனுமதிப்பதன் மூலம் ஒரு சுமூகமான நடைமுறைச் செயன்முறையை உறுதி செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

முன்மொழியப்பட்ட வேலைவாய்ப்புச் சட்டத்தின் கீழ் உள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் சட்ட அமைப்பு, அதிகரித்த உற்பத்தித்திறன், மேம்பட்ட தொழிலாளர் முதலாளி உறவுகள் மற்றும் மிகவும் கவர்ச்சிகரமான முதலீட்டு சூழல் போன்ற பல நன்மைகளைக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழிலாளர்கள் மேம்பட்ட பாதுகாப்பு, சிறந்த பணி நிலைமைகள் மற்றும் மேம்பட்ட சமூகப் பாதுகாப்பு பலன்களை அனுபவிப்பார்கள். இது ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தில் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். உத்தேச வேலைவாய்ப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கையில் தொழிலாளர் உரிமைகள், பணியிடப் பாதுகாப்பு மற்றும் நியாயமான வேலைவாய்ப்பு நடைமுறைகளை மேம்படுத்துவதை இந்த முக்கிய அம்சங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

நிறைவாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சினால் முன்மொழியப்பட்ட வேலைவாய்ப்புச் சட்டத்தின் 34 முக்கிய விடயங்கள் வெளியிடப்பட்டமை, மிகவும் ஒத்திசைவான மற்றும் பயனுள்ள தொழிலாளர் சட்ட அமைப்பை உருவாக்குவதற்கான இலங்கையின் முயற்சிகளில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. சட்டம் இயற்றப்பட்டவுடன் தொழிலாளர்களை உயர்த்தவும் சமமான வளர்ச்சியை ஊக்குவிக்கவும் மேலும், நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதாரத்திற்கு வழி வகுக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், அதன் வெற்றியானது, அரசாங்கம், முதலாளிகள், தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் சந்தையில் உள்ள பிற பங்குதாரர்களுக்கு இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பை நம்பியிருக்கும்.




# போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல்

## காலத்தின் தேவையறிந்து வெளியிடப்பட்ட படைப்பு

தகவல் யுகமான இருபத்தோராம் நூற்றாண்டு சகல துறைகளிலும் ஒரு போட்டிச்சூழல் மிகுந்த காலப்பகுதியாகும். 'வல்லன உயிர்வாழும்' என்பது போல போட்டிச் சூழலில் சவால்களை எதிர்கொள்ளக்கூடியவர்கள் நிலைத்து நிற்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்கின்றனர். இலங்கை போன்ற விருத்தியடைந்துவரும் நாடுகளும் இதற்கு விதிவிலக்கானவையல்ல.

இலங்கையில் நிலவிவரும் பிரச்சினைகளுள் கற்றோர் வேலையின்மை பொருளாதாரத்துக்குப் பெருஞ்சுமையாக உள்ளது. பட்டதாரிகள் வேலையின்மை எல்லோரதும் கவனத்தை ஈர்க்கும் முக்கிய பிரச்சினையாகும். பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு பல்கலைக்கழகங்களில் இருந்து ஆண்டுதோறும் வெளியேறும் பெருந்தொகையான பட்டதாரிகள் பெரும்பாலும் அரச துறையிலேயே வேலைகளை எதிர்பார்க்கின்றனர். கைத்தொழில் மற்றும் விவசாயத் துறைகளின் அபிவிருத்தி வேகம் துரிதப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் சேவைத்துறையில் சகலருக்கும் வேலை வழங்குதல் ஒரு பிரச்சினைக்குரிய விடயமாக மாறியுள்ள வேளையில் ஆட்களைத் தெரிவு செய்வதற்கு போட்டிப் பரீட்சைகளை நடத்துதல், அரச மற்றும் தனியார் துறைகளால் தவிர்க்க முடியாத விடயமாகிவிட்டது. பல்லாயிரக் கணக்கானோர் மத்தியில் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கு போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டு வருகின்றது.

போட்டிப் பரீட்சைகளுக்கு ஆயத்தங்கள் செய்தல் பயிற்சியுடன் கூடிய நுண்மதி வாய்ந்த செயற்பாடாகும். அறிவையும் அனுபவங்களையும் விருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் அதிகரித்துவரும் சூழமைவில் போட்டிப் பரீட்சைகளை எதிர்கொள்வது ஓர் எளிமையான விடயமுமல்ல. இத்தகைய பரீட்சைகளுக்கு அமரும் ஒவ்வொருவரும் உயர்மட்டத்திலான வினையாற்றலை வெளிப்படுத்த விரும்பும் வேளையில் ஏதோ ஒரு வகையில் அந்தச் சோதனைகளை எதிர்கொள்வதற்கு ஆயத்தம் செய்வது தவிர்க்க முடியாதது.

உலகப் புகழ்வாய்ந்த போட்டிச் சோதனைகளை உருவாக்குவதில் ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான் முதலிய நாடுகள் முன்னணியில் உள்ளன. இவற்றைப்போல இலங்கையிலேயே பி. உமாசங்கர் எழுதி வெளியிட்டுள்ள 'போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல்' ஒரு முக்கியமான நூலாகக் கருதப்படுகிறது. இந்த நூலானது இலங்கை நிருவாக சேவை, கல்விச்சேவை, முகாமைத்துவ சேவைகள், சட்டத்துறை, வங்கிச் சேவைகள், தகவல் தொழில்நுட்ப சேவைகள் முதலியவற்றில் ஆட்சேர்ப்புக்கென நடத்தப்படும் பரீட்சைகளுக்கு அமர்பவர்களை இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. பரீட்சைக்கு அமர்பவர்களின் பொது அறிவு, உளச்சார்பு, சமூக பொருளாதார மற்றும் அரசியல் செல்நெறிகள், தகவல் பகுப்பாய்வு, மொழித்திறன்கள், உலக விவகாரம் நிதி முகாமைத்துவம், உயர் கணக்காய்வுப் பகுப்பாய்வு போன்ற அத்தியாவசியமான விடயங்களை உள்ளடக்கியவாறு தொகுக்கப்பட்டிருப்பது கவனத்திற்குரிய விடயமாகும்.




போட்டிப் பரீட்சைகளுக்கு வழிகாட்டும் இந்த நூலானது தகவல்களைச் சுருக்கமாகவும் துரிதமாகவும் அறியக் கூடிய விதத்தில் குறைந்த நேரத்தில் கூடுதலான தகவல்களை கற்பதற்கு ஏற்றவகையில் பயிற்சிகள் வடிவத்தில் அமைக்கப்பட்டிருப்பதும் முக்கியமான விடயமாகும். சிக்கலான எண்ணக்கருவை விளங்கிக் கொள்வதற்கு தகவல்கள் அர்த்தமுள்ள விதத்தில் ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ளமையால் இலகுவாகக் கற்பதற்கும் கற்ற விடயங்களை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கும் ஏற்றவாறு பயிற்சிகள் திட்டமிட்டு வழங்கப்பட்டுள்ளன.

அரச மற்றும் தனியார்துறை சார்ந்த பதவிகளுக்கு ஆயத்தமாகும் வேலை தேடுபவர்களுக்கு ஏற்றவாறு மாதிரிப் பயிற்சிகளையும் விடைகளையும் உள்ளடக்கியிருப்பதனால் சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றலுக்கும் ஏற்ற வழிகாட்டல் நூலாக அமைந்துள்ளது. போட்டிப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்தல் என்பது குறித்த பரீட்சையை எதிர்கொள்கின்ற வரையறுக்கப்பட்ட ஒரு செயற்பாடன்று. அது பரீட்சைக்கு அமர்வோரின் அறிவு, திறன்கள், ஆக்கச் சிந்தனை, பிரயோகத் திறன்கள், பிரச்சினை தீர்க்கும் திறன்கள், திறனாய்வுச் சிந்தனை முதலியவற்றை அறிந்து கொள்வதற்கு வழிகோலுவதால் குறித்த தொழில்களுக்குத் தெரிவு செய்யப்படுபவரின் ஆளுமை தொடர்பான விளக்கத்தையும் பெற்றுக் கொள்ள இயலுமாகின்றது.

இந்த வழிகாட்டி நூல் வாயிலாகப் பெற்றுக் கொண்ட பயிற்சியும் அனுபவங்களும் நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்யப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் பரீட்சைகளுக்கு எவ்வாறான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதை எல்லோரும் அறிந்து கொள்வதை உறுதிப்படுத்தும் வகையிலும் திட்டமிட்டு நெறிப்படுத்தும் நோக்கோடு அமைக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். இந்த நூலைக் கற்பதன் மூலம் போட்டிப் பரீட்சைகளில் உயர்மட்டத்திலான வினையாற்றலையும் வெளிப்படுத்த முடியும் என்து எமது நம்பிக்கையாகும்.

காலத்தின் தேவையை அறிந்து தமது அறிவையும் அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு இத்தகையதொரு சிறந்த வழிகாட்டல் நூலை வெளியிட்டுள்ள மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் விரிவுரையாற்றும் பி. உமாசங்கரைப் பாராட்டுவதோடு மேலும் இது போன்ற பயனுள்ள நூல்களைத் தமிழ் மொழியில் வெளியிட வேண்டும் என எதிர்பார்ப்பதோடு அவருடைய பணிகள் சிறக்க மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஓய்வு நிலை பேராசிரியர்:
மார்க்கண்டு கருணாநிதி...
கொழும்பு பல்கலைக்கழக கல்வித்துறை

# பத்து வருட காலத்துக்குப் பின்னர் நாட்டில் உருவான கொடிய வரட்சி!

## தண்ணீர்ப் பிரச்சினையை அரசியலாக்குவதற்கு முற்படும் எதிரணியினர்!

**நாடு தற்பொழுது முகங்கொடுத்துள்ள வரட்சியான காலநிலையினால் பல்வேறு தரப்பினர் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். குறிப்பாக விவசாயத்துறையினர் கடுமையான பாதிப்புக்களைச் சந்தித்திருப்பது–டன், நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏறத்தாழ ஒரு இலட்சத்து 80 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்துள்ளனர்.**

சுமார் 10 வருடங்களின் பின்னர் நாடு இவ்வாறானதொரு வரட்சிக்கு முகங்கொடுத்திருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த நிலையில் நீரைப் பயன்படுத்துவது தொடர்பான திட்டமிடல்கள் குறித்த கரிசனைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக விவசாயிகளுக்கு நீரைத் திறந்துவிடுவது தொடர்பில் கடந்த சில நாட்களாக அரசியல்வாதிகள் பலர் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

எதிரணியினர் இதனை அரசியலாக்குகின்றனர்.

மொனராகலை மாவட்டத்தின் சமனலகந்த நீர்த்தேக்கம் மற்றும் உடவளவை நீர்த்தேக்கம் ஆகியவற்றிலிருந்து விவசாயிகளுக்கு நீரைத் திறந்துவிடுவது தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து ஆளும் கட்சி, எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மத்தியில் வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றன. நீர்மின் உற்பத்தியைக் கருத்தில் கொண்டு உடவளவை நீர்த்தேக்கத்திலிருந்து விவசாயத்துக்கான நீரைத் திறந்துவிடாதிருக்க முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும் விவசாயிகளின் போராட்டம் மற்றும் அரசியல் ரீதியாக முன்வைக்கப்பட்ட அழுத்தங்களைத் தொடர்ந்து அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டு விவசாயிகளுக்கு நீரைத் திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த விடயம் அரசியல் ரீதியாகப் பேசப்பட்டாலும் வளங்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் பின்பற்றப்படும் கொள்கைகளில் காணப்படும் குறைபாடே இதற்குப் பிரதான காரணம் எனலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் சகல வளங்களையும் கொண்ட நாடு. இயற்கையாகக் கிடைக்கும் வளங்களை சரியான முறையில் திட்டமிட்டு முகாமைத்துவம் செய்வதில் காணப்படும் குறைபாடுகளே இவ்வாறான பிரச்சினைக்குக் காரணம் எனக் கூறமுடியும். தற்பொழுது நாடு எதிர்கொண்டுள்ள வரட்சிநிலையை இதனைவிட வெற்றிகரமாகக் கையாள்வதற்கான வழிகள் காணப்படுகின்றன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் ஏறத்தாழ சராசரியான மழை பெய்துள்ளது. எனவே, மழை இன்மையால் இந்த வரட்சி ஏற்பட்டுள்ளது எனக் கருத முடியாது என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற புவியியல் பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

'திட்டமிட்டபடி மழை பெய்தாலும், ஆண்டு முழுவதும் மழை சரியாகப் பரவாமல் இருப்பதே இந்த நிலைக்கு முக்கிய காரணம் என்று நினைக்கிறேன். இதனால், மழையின்றி நீர்த்தேக்கங்கள் வரண்டு போகும் நிலை உள்ளது. சில சமயங்களில் ஒவ்வொரு பகுதியிலும் ஒரு நாளில் 100 மி.மீ.க்கு மேல் மழை பெய்துள்ளது. அந்தச் சூழ்நிலையில், உபரிநீர் நீர்த்தேக்கங்களுக்குள் இழுத்துச் செல்லப்படுவதால், அங்குள்ள நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு வெகுவிரைவில் அதிகரித்தது. இதனால் வான்கதவுகள் திறக்கப்பட்டு வெளியேற்றப்பட்ட நீர் வீணாகக் கடலுக்குச் சென்றது. மேலும், கனமழை காரணமாக நிலத்தடி நீர் உறிஞ்சப்படாமல் நிலத்தடி நீரின் அளவு குறைகிறது. இந்த அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு, தண்ணீர் நெருக்கடிக்கு வரட்சி முதன்மையான காரணம் என்று குறிப்பிடுவதில் தவறில்லை. எனவே, இந்த தண்ணீர் வீணாவதை தடுப்பது எப்படி என்பதை முதலில் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்' என்று பேராசிரியர் அதுல சேனாரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பல சகாப்தங்களாக நாம் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றோம். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளபோதும், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது மற்றும் நீண்டகால நோக்கத்தில் நீரைச் சேமிப்பதற்கான திட்டங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றே கூற வேண்டும்.

இயற்கையிடமிருந்து நாட்டுக்குக் கிடைக்கும் நீரில் 50 சதவீதம் வீண்விரயமாகின்றது. இதனை எவ்வாறு சாதகமாகப் பயன்படுத்தலாம் என்பது தொடர்பில் கடந்த காலத்தில் அரசாங்கத்துக்கு முன்மொழிவுகள் வழங்கப்பட்டுள்ளபோதும், அவை நடைமுறைப்படுத்தப்படாமை குறித்து பேராசிரியர் கவலை வெளியிட்டுள்ளார்.

காலநிலை, வானிலையால் ஏற்படக்கூடிய சவால்களைச் சமாளிப்பதற்கான திறன்கள் எம்மிடம் இருக்கின்றபோதும் அவற்றைச் சரியாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதிலேயே குறைபாடுகள் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் திட்டமிடல்கள், திட்டமிடல்களுக்குத் தேவையான தரவுகளைச் சேமிப்பது, திட்டங்களை நடைமுறைப்படுத்துவது போன்ற விடயங்களில் பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன. நாடு பொருளாதார ரீதியில் இந்தளவுக்கு மோசமான நிலைக்குச் செல்வதற்கு இதுவும் பிரதான காரணமாக உள்ளது. நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பது தொடர்பில் நடத்தப்படும் பல்வேறு கலந்துரையாடல்களில் தரவு சேமிப்பு குறித்த விடயம் அதிகமாகப் பேசப்படுகிறது.

வளர்ச்சியடைந்த நாடுகள் தரவு சேகரிப்பு மற்றும் சேகரிக்கப்பட்ட தரவுகளை மதிப்பாய்வு செய்து கொள்கைகளைத் தயாரிக்கின்றன. ஆனால் எமது நாட்டில் அவ்வாறான நடைமுறையொன்று இல்லையென்றே கூறலாம். தரவு சேமிப்பு என வரும்போது சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தமக்குத் தேவையான தரவுகளைப் பெற்றுக்கொண்டிருந்தாலும் அதனை ஒருங்கிணைக்கப்பட்ட கட்டமைப்பொன்றுக்குள் கொண்டுவந்து அதனை ஏனைய பங்குதாரர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான பொறிமுறையொன்று காணப்படவில்லை. குறிப்பாக பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் இவ்வாறான தரவுகள் இன்றி பல சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றன.

உதாரணமாகக் கூறுவதாயின் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதில் பங்கு வகிக்கும் அரச நிறுவனங்களில் ஒன்றான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் வரி செலுத்தவேண்டியவர்கள் பற்றிய முழுமையான தகவல்கள் இல்லை. இருந்தாலும், மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொண்டால் அதில் வரி செலுத்துவதற்கு தகுதி பெற்றவர்கள் பற்றிய விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த இரு நிறுவனங்களையும் ஒருங்கிணைப்பதற்கான கட்டமைப்பொன்று இல்லை. இது ஒரு உதாரணம் மாத்திரமே. இதுபோன்று பல்வேறு உதாரணங்களைக் கூறிக்கொண்டே போகலாம்.

நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள வரட்சி சூழ்நிலையை எடுத்துக்கொண்டால் வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றில் சரியான தரவுகள் காணப்படும் பட்சத்தில் அவற்றை அடிப்படையாகக் கொண்டு மதிப்பாய்வை முன்னெடுத்து முற்கூட்டியே வரட்சி குறித்த எச்சரிக்கையை விடுத்திருக்க முடியும். எச்சரிக்கை விடுப்பது மாத்திரமன்றி மின்சாரத்துறை, விவசாயத்துறை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட துறைகளை இந்த அனர்த்தத்திலிருந்து பாதுகாக்கும் திட்டங்களை முற்கூட்டியே வகுத்திருக்க முடியும். எனவே, கொள்கைத் திட்டமிடல்கள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் விடயங்களில் முன்னெச்சரிக்கையாகச் செயற்படுவதன் ஊடாக நாட்டில் ஏற்படக்கூடிய சவால்களை இலகுவில் சமாளிக்க முடியும் என்பதே உண்மை.

பி.ஹர்ஷன்...







காலநிலை விடயத்தில் எதிர்காலத்தில் திட்டமிடல் முகாமைத்துவம் அவசியம்!

# இந்தியாவுக்கு பாலம் நிர்மாணித்தால் இலங்கைக்கே அனுகூலங்கள் அதிகம்!

## சுற்றுலாத்துறை வருமானம் பெருகும்; உணவுப் பொருட்களின் விலைகள் குறையும்; எரிசக்தித் துறையில் இலங்கைக்கு அதிக நன்மைகள்

**இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் வகையில் பாலம் ஒன்றை அமைப்பது தொடர்பான கருத்தாடல்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளன. இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு இடையில் சமீபத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதும் இந்த விஷயம் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.**

ஆனாலும் அது தொடர்பாக முடிவு எதுவும் எட்டப்படவில்லை. அந்தத் திட்டம் என்பது வெறுமனே யோசனை மாத்திரமேயாகும். ஒரு புறம் அந்த யோசனையை எதிர்ப்போர், மறுபுறம் அதனை ஆதரிப்போர் உள்ளனரென்பதை மறுக்க முடியாது.

இந்தப் பாலத்தை அமைப்பது உண்மையில் நடைமுறைச் சாத்தியமானதா அல்லது இல்லையா என்பதை உறுதியுடன் கூற முடியாதிருக்கின்றது. ஆனாலும் தென்னிலங்கையில் பெரும்பான்மை தேசியவாதிகள் மத்தியில் இந்த விவகாரம் பெரும் சலசலப்பையே ஏற்படுத்தியிருந்தது. அவர்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைக்கப்படும் யோசனையை எதிர்க்கின்றனர்.

இவ்வாறான பாலத்தை அமைப்பதன் மூலம் இலங்கையில் இந்தியாவின் செல்வாக்கு அதிகரிப்பதற்கு வழியேற்படுமென்பது அவர்களது வாதம்.

ஆனால் இவ்வாறானதொரு பாலத்தை அமைக்கும் யோசனையை ஆதரிப்போரும் சிங்கள மக்களில் அதிகமானோர் உள்ளனர். இலங்கை_ இந்திய கடல்வழிப் பாலம் அமைக்கப்படுவதன் காரணமாக இந்தியா அடைந்து கொள்கின்ற நன்மைகளை விட இலங்கையே அதிகம் பயனடையுமென்கின்றனர் அவர்கள்.

இலங்கை கடந்த சில வருடங்களாக பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கின்றது. இலங்கை எதிர்காலத்தில் பொருளாதாரத்தில் மீண்டெழுவதானால் தனது வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை இந்நாடு தனது பொருளாதாரத்தை விரைவாக முன்னேற்ற வேண்டுமானால் அதற்கான சிறந்த பாதை சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதாகும். உலகில் பல நாடுகள் சுற்றுலாத்துறை ஊடாக பெரும் வருமானம் ஈட்டி வருகின்றன. அதேபோன்று சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையும் பொருளாதாரத்தில் உயர்வடைய முடியும் என்று பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இந்தியாவிலிருந்து சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்பதற்கான வாய்ப்பு இலங்கைக்கு அதிகம் இருக்கின்றது. மேற்கு நாடுகளிலிருந்து சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்பதை விட, இந்தியாவிலிருந்து சுற்றுலாப்பயணிகளை கவர்ந்திழுப்பதற்கு அதிக வாய்ப்பு இருக்கின்றது. அதுமாத்திரமன்றி, இந்திய சுற்றுலாப்பயணிகளின் வருகையும் சமீப காலமாக அதிகரித்து வருகின்றது. அதன் காரணமாக இலங்கையின் அந்நிய செலாவணி வருமானமும் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தரைவழியான தொடர்பு ஏற்படுத்தப்படுமானால் இந்திய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அதிகம் வரவழைத்துக் கொள்வதற்கு வழியேற்படும் என்று எதிர்பார்ப்போர் ஏராளம்.

அது மாத்திரமன்றி, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகளும் அதிகரிப்பதற்கு வழியேற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வர்த்தகரீதியில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நீண்ட காலமாகவே நெருங்கிய தொடர்புகள் நிலவி வருகின்றன. இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கான சிறந்ததொரு வியாபாரச் சந்தையாக இந்தியாவை ஆக்கிக் கொள்ளலாம் என்று வியாபார சமூகத்தினர் விரும்புகின்றனர்.

அதுமாத்திரமன்றி, எரிசக்தித் தேவையில் வெளிநாடுகளிலேயே தங்கியிருக்கும் இலங்கையைப் பொறுத்தவரை இந்தியாவுடனான தரைவழித் தொடர்பு அதிக அனுகூலங்களை அளிக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இலங்கையின் எரிபொருள் விநியோகத்தில் இந்தியாவின் பங்கு உள்ளதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

அதேசமயம், உணவு உற்பத்தியில் இந்தியா முன்னிலை வகிக்கும் நாடாக இருப்பதனால், இருநாடுகளுக்கும் இடையிலான தரைவழித் தொடர்பானது இலங்கைக்கு அதிக நன்மைகளை வழங்குமென்று நம்பப்படுகின்றது. இலங்கைக்கான உணவுப் பொருட்கள் அதிகளவில் இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. இருநாடுகளுக்குமிடையில் தரைவழியான தொடர்பு ஏற்படுத்தப்படுமானால், போக்குவரத்துச் செலவு குறைவதுடன் இலங்கையில் உணவுப் பொருட்கள் பலவற்றின் விலைகள் குறையுமென்று எதிர்பார்க்க முடியும். இந்தியப் பொருட்களை நியாயமான விலையில் இலங்கையில் வாங்கிக் கொள்வதற்கும் வழியேற்படுகின்றது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் கடந்த காலத்தில் அவ்வப்போது சீராக இல்லாதிருந்த சந்தர்ப்பங்களும் உள்ளன. ஆனாலும் வர்த்தகத் தொடர்புகளைப் பொறுத்தவரை இருநாடுகளுக்கும் இடையில் நெருக்கம் இருந்து கொண்டே வருகின்றது.

இரண்டு நாடுகளுக்கும் இடையே தரைவழிப் பாதையை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து நீண்டகாலமாகவே பேசப்பட்டு வருகின்றது. இந்தப் பாலத்தை அமைப்பது தொடர்பில் 2015ஆம் ஆண்டு பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல் பகுதியானது மிகவும் ஆழம் குறைந்த பகுதி என்பதால் பாலம் அமைப்பது இலகுவான காரியமென்று பொறியியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான பாலங்கள் அமைப்பது பல நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரான்சுக்கும், பிரிட்டனுக்கும் இடையில் கூட பாலம் அமைக்கப்பட்டுள்ளது. சிறந்த தொழில்நுட்பத்தின் ஊடாக அந்நாடுகளுக்கிடையில் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டது. அதன் காரணமாக இருநாடுகளுக்கிடையிலான பயணமும் இலகுவாகியுள்ளது. இலங்கை_ இந்திய கடல் வழிப்பாலம் அமைக்கப்படுமானால் அதனால் இலங்கைக்கு உண்டாகும் நன்மைகள் வெளிப்படையானவை. தற்போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பயணம் மற்றும் வர்த்தகம் கடல் மற்றும் வான்வழியாக மட்டுமே உள்ளது. உத்தேச பாலம் இரு நாடுகளுக்கும் தரைவழி தொடர்பையும் வழங்கும். இது இரு நாடுகளுக்கும் இடையே மக்கள் தொடர்பை அதிகரிக்கும், மேலும் வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை அதிகரிக்கும்.

கடல் பாலத்திற்கு எதிராக பெரும்பான்மை தேசியவாதிகள் வெளிப்படையாக கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இது இந்தியர்களின் குடியேற்றத்திற்கு வழிவகுக்கும் என்று அவர்கள் கற்பனையாகக் கூறி வருகின்றனர். ஆனால் அவர்கள் அரசியல் காரணங்களுக்காகவே அவ்வாறு கூறுகின்றனர் எனக் கூறுவோரும் உள்ளனர்.

எஸ்.சாரங்கன்...





**பெரும்பான்மை தேசியவாதிகள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தாலும், அவர்களது கருத்தின் பின்னணியில் அரசியலே உள்ளது**

**நாட்டில் தற்பொழுது நடைமுறையில் உள்ள 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் ஒரு திருத்தமாக இருக்கும் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிரும் 13 ஆவது திருத்தச்சட்டமூலத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்த ஜனாதிபதியின் நிலைப்பாடு தொடர்பில் பல்வேறு அரசியல் கட்சிகளும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றன.**



# 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக இனவாத ரீதியிலான முட்டுக்கட்டைகள்!

## மாகாணசபை முறைமையை முடிந்தவரை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி உறுதியான நிலைப்பாடு!

வார இறுதி

## அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டியிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் தனது திட்டத்தைக் கூறியிருந்ததுடன், இது பற்றி கடந்த பாராளுமன்ற அமர்வு வாரத்தில் சபையிலும் கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் கட்சிகள் கொண்டுள்ள நிலைப்பாடுகளை ஒகஸ்ட் 15 ஆம் திகதிக்குள் எழுத்துமூலம் சமர்ப்பிக்குமாறும் அவர் கோரியிருந்தார். இதனை ஏற்று பல்வேறு கட்சிகள் தமது நிலைப்பாடுகளை எழுத்துமூலம் ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளன.

இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவரும். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவருமான இரா.சம்பந்தன் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். ஐந்து பக்கங்களைக் கொண்ட இந்தக் கடிதத்தில், அர்த்தமுள்ள இனப்பிரச்சினைத் தீர்வொன்றை தமிழர்கள் எதிர்பார்த்திருப்பதாக சம்பந்தன் எம்.பி பிரஸ்தாபித்துள்ளார்.

நாடு சுதந்திரம் பெற்ற காலம் முதல் குறிப்பாக 1956 முதல் தமிழர்கள் சமஷ்டி அடிப்படையான தீர்வே தங்களது அபிலாஷை என்பதை எல்லாத் தேர்தல்களிலும் மாறாமல் வலியுறுத்தி வந்திருக்கின்றார்கள், இடையில் தனிநாட்டுக் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் அர்த்தமுள்ள எந்தத் தீர்வும் சமஷ்டி அடிப்படையில் அமைய வேண்டும் என சம்பந்தன் எம்.பி ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினை மற்றும் அவர்களின் நியாயமான அபிலாஷைகள் தொடர்பில் கடந்து வந்த ஒவ்வொரு அரசுகளும் அளித்த வாக்குறுதிகள் மற்றும் மேற்கொண்ட முயற்சிகளையும் அவர் இக்கடிதத்தில் விரிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவற்றின் அடிப்படையில், தமிழ் மக்களின் அபிலாஷைகளின் உட்கிடக்கைகளைப் புரிந்து கொண்டு, அவற்றுக்கு இணங்கவும், பல்வேறு அரசுகள் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் காலத்துக்குக் காலம் வழங்கி வந்த உறுதிமொழிகளைக் கவனத்தில் எடுத்தும் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையை விரைந்து முடித்து வைக்குமாறும் சம்பந்தன் எம்.பி ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.



அதேநேரம், 13 ஆவது திருத்தத்தை நிராகரிப்பதற்கான காரணங்களை முன்வைத்தும், கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக ரொமேஷ் டி சில்வா தலைமையில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவிடம் கையளித்த அரசியல் தீர்வுத் திட்ட யோசனையை முன்வைத்தும் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க இருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

மறுபக்கத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் இடைக்கால சபை தொடர்பான யோசனைகளை ஏற்கனவே முன்வைத்துள்ளார். அது மாத்திரமன்றி பிரதமர் தலைமையிலான அதிகாரப் பகிர்வுக்குழு செப்டெம்பர் முதல் செயற்படவிருப்பதாகவும், மாகாண ஆலோசனை சபை செயற்படுத்தப்படும்போது வடமாகாணம் சார்ந்து தான் பங்கேற்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைகளில் மாகாண ஆலோசனை சபையும் ஒரு விடயமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு மாகாணத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண ஆளுநர்களை உள்ளடக்கியதாக இந்த ஆலோசனைச் சபை செயற்படும். இந்த மாகாண ஆலோசனைச் சபையானது மாகாணங்கள் தனித்துவமாகக் கொண்டிருக்கும் சிறப்பியல்புகள் உள்ளிட்டவற்றை மையப்படுத்தி ஒவ்வொன்றிலும் முன்னெடுக்க வேண்டிய விடயங்கள் பற்றி ஆவன செய்து ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கவுள்ளது.

குறிப்பிட்ட மாகாணம் ஒவ்வொன்றுக்கும் மிகவும் தேவையாகவுள்ள நிதியச்சட்டங்கள் உருவாக்கம் தொடர்பில் குறித்த சபை ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும். இவ்வாறான சபையில் தனது பங்களிப்பை விக்னேஸ்வரன் உறுதிப்படுத்தியுள்ளார்.

இருந்தபோதும் ஏனைய தமிழ்க் கட்சிகள் எதுவும் இவ்வாறான சபையொன்றுக்கான இணக்கப்பாட்டைத் தெரிவித்திருக்கவில்லை. ஏனைய தமிழ்க் கட்சிகள் 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் உள்ள அதிகாரங்கள் யாவும் பகிரப்பட வேண்டும் என்ற விடயத்தில் பொதுவான நிலைப்பாட்டில் இருக்கின்றன. டெலோ போன்ற கட்சிகள் தமது யோசனைகளை ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவித்துள்ளன.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி இருந்தாலும், அவர் தலைமை தாங்கும் அரசாங்கத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள பொதுஜன பெரமுன கட்சியின் நிலைப்பாடு சற்று வேறுபட்டதாகவே அமைந்துள்ளது. அதிகாரப் பகிர்வொன்றை மேற்கொள்வதற்கான தருணம் தற்பொழுது இல்லையென அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

நாட்டைப் பொருளாதார ரீதியில் ஸ்திரப்படுத்துவதே நாட்டு மக்களின் அபிலாஷையாக இருக்கிறது என்றும், அதிகாரப் பகிர்வை முன்வைக்க இது சரியான தருணம் இல்லையென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, அதிகாரப் பகிர்வு விடயத்தைத் தற்காலிகமாக ஒருபுறத்தில் வைத்துவிட்டு நாட்டை ஸ்திரமான நிலைக்குக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்குமாறு கோருவதாகவும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதுபோன்று, பெரும்பான்மையான தென்னிலங்கை அரசியல் கட்சிகள் ஜனாதிபதி முன்வைத்துள்ள 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் அதிகாரப் பகிர்வு யோசனைகளுக்கு சாதகமான நிலைப்பாட்டைத் தெரிவிக்கவில்லை. 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திலிருந்து பொலிஸ் அதிகாரங்களை நீக்குமாறு கோரி பிவித்துறு ஹெல உறுமயவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தனிநபர் சட்டமூலமொன்றை சமர்ப்பித்துள்ளார். இது தொடர்பான யோசனை பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.



## ‘அர்த்தமுள்ள இனப்பிரச்சினைத் தீர்வே தமிழர்களின் எதிர்பார்ப்பு’ என்கிறார் சம்பந்தன்

மறுபக்கத்தில், ‘13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது மட்டுமல்ல அதற்கு அப்பால் அதிகாரங்களைப் பகிர்வதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. ஒத்திசைவு பட்டியலை நீக்குவதற்கான நடவடிக்கையும் இடம்பெறுகின்றது’ என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

‘13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்த நாட்டில் இருந்த ஏழு ஜனாதிபதிகள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. அதற்கு இனியும் இடமளிக்கக் கூடாது. மாகாணத்துக்கு இறைமையைப் பகிரவே இங்கு முயற்சி இடம்பெறுகின்றது. ஒத்திசைவு பட்டியல் நீக்கப்பட்டு, முழுமையாக அதிகாரங்களைப் பகிர்ந்தால் ஒற்றையாட்சியைக் காக்க முடியாது போய்விடும்’ என அவர் கூறியுள்ளார்.

இதுபோன்ற சந்தேகங்கள் தென்னிலங்கையிலுள்ள மேலும் பல அரசியல்வாதிகளால் மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் இதுபோன்றவர்கள் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்ததையும் நாம் மறந்து விட முடியாது. அதேநேரம், 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நீக்குவதற்கு முயற்சித்தால் நாடு பற்றியெரியும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா எச்சரித்துள்ளார்.



## ‘13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நீக்குவதற்கு முயற்சித்தால், நாடு பற்றியெரியும்’ என்பது பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவின் எச்சரிக்கை!

இனவாத அடிப்பைடயில் இல்லாமல் நல்லிணக்கம் தொடர்பில் எப்பொழுதும் குரல் கொடுத்துவரும் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். அதனை விடுத்து இதனை நீக்குவதற்கு முயற்சித்தாலோ அல்லது மாகாணசபை முறைமையை இல்லாமல் செய்வதற்கு முயற்சித்தாலோ நாட்டில் தேவையற்ற முழப்பமே ஏற்படும் என்பது அவருடைய நிலைப்பாடாக உள்ளது.

இதுபோன்று, பல்வேறு அரசியல் கட்சிகள் முன்னுக்குப்பின் முரணான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ள சூழ்நிலையில், ஜனாதிபதியின் இந்த அதிகாரப் பகிர்வுத் திட்டம் எவ்வாறு முன்னெடுக்கப்படப் போகின்றது என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் வலுவடைந்துள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் ஆட்சிசெய்தவர்களும் அதிகாரப் பகிர்வு குறித்து பேச்சளவில் கருத்துக்களை முன்வைத்திருந்தபோதும் எதனையும் செயற்படுத்தியிருக்கவில்லை. இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறந்ததொரு வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதனை அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதேநேரம், அடுத்த வருடம் நடைபெறக் கூடிய ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கான முயற்சியாகவும் சிலர் இந்த அதிகாரப் பகிர்வு விடயத்தைப் பார்க்கின்றனர். ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் இதுபோன்ற நிலைப்பாடுகளைக் கடந்தகாலங்களிலும் வெளிப்படுத்தியவர் என்ற ரீதியில் தேர்தலுக்கான காய்நகர்த்தலாக இதனைப் பார்க்க முடியாது என்கிறார்கள் நடுநிலையான சிந்தனையாளர்கள்.

இருந்தபோதும், ஜனாதிபதி முன்வைத்துள்ள இந்த யோசனையை அடிப்படையாகக் கொண்டு இனவாதரீதியான கருத்துக்களை முன்வைத்து சிலர் தமது அரசியல் இருப்பைத் தக்கவைப்பதற்கான முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர்.

எனவே, நாட்டின் ஒற்றுமையை உறுதிப்படுத்தும் வகையில் அதிகாரப் பகிர்வு நடவடிக்கைகள் கையாளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதே காலத்தின் தேவையாகும். நாடு ஏற்கனவே பொருளாதா ரீதியில் பாரியதொரு பின்னடைவைச் சந்தித்திருக்கும் சூழ்நிலையில் அரசியல் ரீதியாக ஏற்படக்கூடிய மற்றுமொரு பிரச்சினையை எதிர்கொள்ளும் சக்தி அதற்கு இல்லையென்பதே யதார்த்தமாகும்.





## தென்னிலங்கை பெரும்பான்மை அரசியல் சக்திகள் சிலவற்றிலிருந்து கண்டனக் கருத்துகள்!

## இராவணன் தமிழ் மன்னனா? சிங்கள மன்னனா?

# வரலாறுகளைக் கிளறும் வகையான பாராளுமன்ற தனிநபர் பிரேரணை

இராவணன் தன் தாயின் அந்தியேட்டி கிரியைகளை மேற்கொள்ள வெட்டியதே கன்னியா வெண்ணீர் ஊற்று. பாராளுமன்றத்தில் கடந்த வாரம் ஒரு சிறந்த சுவாரஸ்யமிக்க தனி நபர் பிரேரணை மீதான விவாதம் இடம்பெற்றது. புத்திக பத்திரன எம்பி இந்த தனிநபர் விவாதத்தைக் கொண்டு வந்திருந்தார்.

இராவணன் என்ற மன்னன் தமிழர் என்றும் அவர் எமது பூர்வீகத்தின் முதுசம் என்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்க, இல்லை இராவணன் இயக்கர் குலத்தைச் சேர்ந்த சிங்கள மன்னன். அவர் தமிழ் பூர்வீகம் என்பது உண்மைக்குப் புறம்பானது அதனை எடுத்துரைக்கும் வரலாற்றுச் சான்றுகள் இலங்கையில் காணப்படுகின்றன என சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களும் விவாதித்த சர்ச்சைக்குரிய விவாதம் ஒன்று அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

மன்னன் இராவணன் தொடர்பில் முறை சார்ந்த ஆய்வு ஒன்றை மேற்கொள்வது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன சபையில் கொண்டு வந்த தனி நபர் பிரேரணை மீதான விவாதமே அது. இந்த விவாதம் உண்மையில் சர்ச்சைக்குரியதாகவே அமைந்தது. ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் இதில் தமது கருத்துக்களை முன் வைத்த போதும் கருத்துக்கள் அனைத்துமே ஒன்றுக்கொன்று முரணானதாகவே காணப்பட்டது.

குருந்தூர்மலை தமிழர்களின் உரிமைச் சொத்தா அல்லது சிங்களவர்களின் உரிமைச் சொத்தா என்ற வாத விவாதங்கள், சர்ச்சைகள், குழப்பங்கள் எழுந்துள்ள இந்த நிலையில் இவ்வாறான ஒரு விவாதம் சபையில் முன் வைக்கப்பட்டு மேலும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இராவணனை ஆய்வு செய்யும் அதேவேளை, இராமாயணத்தையும் ஆய்வு செய்ய வேண்டும் என இந்த விவாதத்தில் உரையாற்றிய வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்பி தெரிவித்தார்.

எமது நாட்டுக்கு வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதில் இராமாயணமும் பங்களிப்பை வழங்கி வருகிறது. இலங்கையில் காணப்படும் இராமாயணத்தையொட்டிய சுற்றுலா பகுதிகளுக்கு இந்தியாவிலிருந்து பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அதனால் இராமாயணம் இந்த நாட்டுக்கு மிக முக்கியமானது.

அத்துடன் நுவரெலியா மாவட்டத்தில் சீதாஎலிய பகுதியில் இராமாயண சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளதாக வரலாறுகளிலிருந்து எமக்கு அறிந்துகொள்ள முடிகிறது.

அந்த பகுதியில் காணப்படும் மண் கறுப்பாக இருப்பதும் ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. அந்த பகுதியில் அனுமானின் பாதம் பதிந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வுகளுக்கு முக்கியமானவரான இராமரை நாம் ஒரு தெய்வமாக ஏற்று வழிபடுகிறோம். இராமர் பிறந்த இடம் இந்தியாவின் அயோத்தி.

அயோத்தியில் இருந்துதான் பெருமளவிலான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவதை காணமுடிகிறது. இத்தகைய பின்னணியில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் ஆரம்பத்திலிருந்தே உறவுப்பாலமாக இருப்பது இராமாயணம்தான்.அந்த வகையில் இராவணன் இல்லாவிட்டால் இராமாயணம் இல்லை. இராமாயணம் இல்லாவிட்டால் இராவணன் இல்லை. சீதையை இங்கு கொண்டுவராவிட்டால் இராமாயணத்துக்கும் இலங்கைக்கும் எந்த சம்பந்தமும் இருந்திருக்க முடியாது.

என்பதையும் இராதாகிருஷ்ணன் எம்பி தெரிவித்தார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ தரன் தமதுரையின்போது: இராமாயணத்தில் பிரதான பாத்திரத்தை ஈழம் வகிக்கிறது. இந்த நாட்டில் தமிழராக வாழ்ந்த இராவணேசன் என்கின்ற ஒரு தமிழ் மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் தான் இந்த இராவணன் பற்றிய வரலாறுகள் சொல்லப்படுகின்றன. அவர் இந்த மண்ணுக்கு உரித்தான மூத்த தமிழ் குடிமகன் ஆவார். நாகர் என்ற இனப்பரம்பலை அடிப்படையாக கொண்டவர் இராவணன்.

கன்னியாவில் ஊற்றை அவரே வெட்டினார். தன்னுடைய தாயின் அந்தியேட்டிக் கிரியைகளை செய்வதற்காக அந்த கன்னியா வெண்ணீர் ஊற்றை அவர் வெட்டினார் என்கிறது வரலாறு. இலங்கையில் இருக்கின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தமிழர்கள் தோன்றி வளர்ந்த இடங்கள் அதில் மிக முக்கியமாக கௌதாரி முனை உள்ளது. அத்துடன் பொலனறுவை, பலாங்கொடை ஆகிய இடங்களிலும் தமிழர் வரலாறுகள் உள்ளன.

இராவணனின் பரம்பரையும் இங்கே தமிழர்களாக வாழ்ந்தார்கள். தமிழர்களை அவர்கள் திருமணம் செய்த அடிப்படையில் தான் புதிய இனத்தோன்றல்கள் உருவாகின.

இந்த வரலாற்றை எவரும் ஒருபோதும் மறைக்க முடியாது. இராவணன் தொடர்பான முழுமையான ஆய்வை மேற்கொள்ளும்போது ஈழத் தமிழர்கள் இங்கு தோன்றி வளர்ந்த வரலாற்றையும் அவர்கள் இந்த மண்ணின் பூர்வீகக் குடிகள் என்பதும் உறுதியாகும். பஞ்ச ஈச்சரங்களுடன் இராவணேசன் என்ற மன்னனின் காலத்திலிருந்து இந்த மண்ணிலே தமிழர்கள் தொடர்ச்சியாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைத்தான் வரலாறுகள் கூறுகின்றன.

விஜயன் இலங்கைக்கு வந்தார். அவர் குவேனியை திருமணம் செய்து அவர்கள் தமிழர்களாக வாழ்ந்தார்கள் என்று வரலாறு குறிப்பிடுகிறது. ஆனால் பலர் மாறுபட்ட விடயங்களை குறிப்பிடுகிறார்கள். இலங்கையில் உள்ள பஞ்ச ஈச்சரங்கள் முன்னிலையில் முன்னேச்சரம் உள்ளது. யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று தமிழர்கள் குறிப்பிட்டுள்ளார்கள், தென்னாடுடைய சிவனே போற்றி என்று சிவனை முழுமுதற் கடவுளாக இராணவன் வழிபட்டுள்ளார். ஆகவே வரலாறு திரிபுபடுத்தப்படக்கூடாது.

வரலாற்று ரீதியான ஆய்வுகளை மேற்கொள்ளும் போது சர்வதேச ஆய்வாளர்கள், குறிப்பாக இந்திய ஆய்வாளர்களையும் இணைத்துக் கொள்வது அவசியம். அப்போது தான் இராணவன் ஒரு தமிழர், சிவனை வழிபட்டார் என்பது உறுதிப்படுத்தப்படும். ஆகவே தமிழ் வரலாற்றை ஆய்வு செய்ய மேற்கொள்ளப்படும் சிறந்த நடவடிக்கைகளுக்கு எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க முடியும் என்றும் சிறீதரன் எம்பி தெரிவித்தார். முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர சர்ச்சைக்குரிய குருந்தூர் மலை விவகாரத்திலும் எதிரான கருத்துக்களை தொடர்ந்து பாராளுமன்றத்தில் முன்வைத்து வருபவர். அவர் இந்த விவாதத்தில் உரையாற்றிய போது,

இராவணன் என்ற மன்னன் இயக்கர் குலத்தைச் சேர்ந்தவர். அவர் சிங்களவர். அந்த மன்னனை தமிழ் பூர்வீகம் என்று கூறுகின்றார்கள். சிலர் அவ்வாறு கூறி இனவாதத்தை தூண்ட முயற்சிக்கின்றார்கள். அவ்வாறு கூறுபவர்களின் கூற்றுக்கள் பொய் என்பதை நிரூபிக்கும் வகையில் இலங்கையில் பல வரலாற்றுச் சின்னங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் இராவணனை தமிழர் என்று கூறுபவர்கள் வெட்கப்பட வேண்டும் என தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் உதயகம்மம்பில இந்த விவாதத்தில் உரையாற்றும்போது, இராமாயணத்தை எமது எதிரிகளின் கதை என்று தான் கூற வேண்டும். எல்லா கதைகளிலும் மூன்று கதைகள் இருக்கும். ஒன்று நண்பர்களின் கதை. இரண்டு எதிரிகளின் கதை. இரண்டுக்கும் மத்தியில் உள்ள உண்மையான கதை ஒன்றும் இருக்கும். இதன்படி இராமாயணம் எதிரிகளின் கதையாகவே காணப்படுகிறது. அதன் உண்மை கதை வேறு என்று அவர் குறிப்பிட்டார். இலங்கை அந்தக் காலத்திலேயே தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் அடைந்த நாடு. இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள புஷ்பக விமானம் அதனை உறுதிப்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இத்தகைய விவாதங்கள் நேர்மையாகவும் ஆரோக்கியமானதாகவும் முன்னெடுக்கப்பட்டால் அறிந்திராத பல விடயங்களை அனைவரும் தெரிந்துகொள்ள அது சிறப்பாக அமையும் என்பதே எமது கருத்து.

**லோரன்ஸ் செல்வநாயகம்**




யாழ்.மாவிட்டபுரம், நல்லிணக்கபுரம் பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன. கனடா மெற்றோ லேண்ட் மீடியா தர்மலிங்கம் என்பவரின் நிதிப்பங்களிப்பில் யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினர் லயன் கலாநிதி நாகலிங்கம் தனேநதிரன் பொருட்களை வழங்கிய போது பிடிக்கப்பட்ட படம்.
(படம்: வேலணை குறூப் நிருபர்)

# ஏகத்தோடு போகத்தில் விதை விதைத்திடாரோ?

மறந்திட துணிந்து
மறந்து போனேன்
நேற்று நடந்தது போல
தசாப்தம் கடந்தது

நிசப்தமாக கிடக்கும்
நினைவுகள் மீள
வெந்த புண்ணில் வேல்
பாச்சி மகிழும் மூடர்

மௌனமானதே நன்று
நன்றி சொல்லி கடந்து
நலமே வாழும் எண்ணம்
இன்றும் இல்லை அவரிடம்

வம்புக்கு சண்டை ஏன்?
புதுமைக்கு எத்தனையோ
முயற்சிகள் இங்கிருக்க
வணங்கிடக் கூட தடையோ?

முடிவுகள் மாறி போக
முதல் பாதைகள் தங்கள்
திசைகளை மாற்றினால்
நிலைமைகள் தலைகீழாகும்

நிரந்தரமாக நாமிங்கே
ஒற்றுமை மேலோங்கிய
வேற்றுமை நீங்கிட தான்
மகிழ்ந்து வாழ முயலலாமே!

மலையில் கூடிய அந்த
கூட்டம் விதைக்கிறது
வானில் கூடிய மேகம்
கறுத்து இங்கே மழையாகிட

பெருவெள்ளம் வந்தால்
எல்லோரும் தான் அதில்
கரைந்து மறைவோம்
ஏன் இதை மறக்கிறாரோ?

பொறுமை இல்லாத போதும்
வெறுமையாகத் தானே!
நாட்டில் நாளும் நாம் வாழ
நாடோடி உழைத்திடத் தானே!

காற்றேறி கரைகிறோம்
உறவுகள் வழி பிறக்கும்
அன்பைத் தொலைத்து
விரக்தியோடு நாளும்

நாட்டில் ஒரு கூட்டம்
பிழைப்பை மறந்து போடும்
வெறுத்துப் போக வைத்து
பிழைப்பை கொடுத்திடாதோ?

புத்தருக்கும் சிவனுக்கும்
இருந்ததில்லை சண்டை
இன்று அவர்களால் ஆகுமோ
நாளை பெரும் போரிங்கே?

புத்திசாலிகளின் மௌனம்
சொல் கேளா மனிதரிடை
வீரம் செறிந்து போகிறது
மனிதம் மரித்துப் போயிட

பிழைப்புக்கும் நல்ல
இருப்புக்கும் ஆகாதோ
ஏகத்தோடு போகத்தில்
விதை விதைத்திட சேர்ந்து

அன்புடன் நதுருசி

# இனிய நந்தவனம் இலக்கிய சஞ்சிகை அறிமுக விழா

காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகம் நடாத்தும் இந்திய தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் இனிய நந்தவனம் இலக்கிய சஞ்சிகையின் இலங்கைச் சிறப்பிதழின் அறிமுக விழா நாளை பி.ப. 4.00 மணிக்கு காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இஸ்லாமிய இலக்கிய கழகத் தலைவர் கவிமாமணி ரீ.எல். ஜவ்பர்கான் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவும் முதன்மை விருந்தினர்களாக பண்பாட்டு அலுவலக திணைக்கள மாகாண பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன், காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ. உதயசிறீதரும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், தினகரன், வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் சிறப்பு அதிதிகளாக முன்னாள் நகர முதல்வர் அல்ஹாஜ் எஸ். எச்.எம். அஸ்பர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கவிஞர் ரி. மலர்ச்செல்வன், காத்தான்குடி கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம். ஜவாஹிர் கலந்துகொள்ளவுள்ளனர்.

முதன்மை பிரதியை மட்டு. மாவட்ட சென்ஜோன்ஸ் அன்புலன்ஸ் பணிப்பாளர் தேசபந்து அல்ஹாஜ் ஏ.எல். மீரா சாகிபு பெற்றுக்கொள்வார்.

சிறப்பு பிரதிகளை, மட்டக்களப்பு ஜாமியுஸ்ஸலாம் ஜும்ஆ மஸ்ஜித் தலைவர் கலாநிதி அல்ஹாஜ் எம்.எச்.எம். சியாம், இஸ்லாமிய இலக்கிய கழக பொருளாளர் கவிஞர் எச்.எம். இக்பால் கான், அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிரானி பிரதீபன் ஆகியோர் பெற்றுக் கொள்வார்கள்.

இந்நிகழ்வில் தலைமையுரை, வரவேற்புரையைத் தொடர்ந்து கவிஞர் செங்கதிரோனின் சஞ்சிகை விமர்சனம், இலக்கியச் செம்மல் இல்மி அஹமட் லெவ்வையின் வாழ்த்துக் கவிதையும் இடம்பெறும். தொடர்ந்து தே. செந்தில்வேலவரின் சிறப்புரை, கவிமேகம் அஜீரா ஹலீல்தீனின் கவிதை, அதிதி உரை, கலைமதி எம். ஏ.சி. றபாய்தீனின் கவி வாழ்த்து, பிரதம அதிதி உரை, நந்தவனம் சந்திரசேகரனின் (இந்தியா இனிய நந்தவனம் சஞ்சிகை பிரதம ஆசிரியர்) ஏற்புரையும் இடம்பெறும். கவிமேகம் ஏ.எல்.எம். சப்ரி (அதிபர்) இந்நிகழ்வைத் தொகுத்து வழங்குவார்.





# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

**வர்த்தகம்**

**207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு**

077438169 கண்டியில் ஹோட்டல், தோட்டம், வீடு, வெற்றுக் காணி, வியாபாரஸ்தலம் கொள்வனவு செய்வதற்கும், விற்பதற்கும். 0777282147. 052211

**208 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு/குத்தகைக்கு**

077 7 2821 47 கண்டி நக ரிற்கு 500 மீட்டர் தூரத்தி ல் சகல வசதிகளுடனான வீடுகள் 3+4 20, 15, 14, 10 பேர்ச். 70 மில்லியனுக்கு க் குறைவு. 0777438164. 052239

**வேலைவாய்ப்பு**

**318 வெற்றிடங்கள் டிரைவர்கள்**

கனரக வாகன சாரதி உரிமம் சகிதம் சாரதி டிலிவரி வாகனத்திற்கு இரத்மலானை, மொரட்டுவ, கல்கிசை சுற்றுப் புறத்தில் தேவை. சம்பளம் 50,000/= பெற்றுக் கொ ள்ளலாம் . விசாரணைக ளு க்கு நெஸ்கோ என்டர்பிரைசஸ், இல. 29/5, 4ஆம் ஒழு ங்கை, இரத்மலா னை. 048078

**321 வெற்றிடங்கள் தோட்டத்துறை**

ஹொரணையில் உள்ள பங்களா ஒன்றில் தங்கி தோட்ட பராமரிப்பு மற்றும் காவலுக்கு ஆ ள் தேவை. 60 வயதுக்குட்பட்டவர்கள் பயிர் செய்யும் திறன் கொண்டவர்கள் என்பது சிறப்பு. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு கொள்ளவும். 0714066455, 0716305184. 052134

**325 தொழில்துறை பொது**

கொழும்பு தொட்டலங்க சேதவத்த பாதையிலுள்ள பேக் தொழிற்சாலை நிறுவனத்திற்கு க.பொ.த. சா/ த பரீட்சையில் சித்தியுடன் கணனியில் கணக்கிடல் செய்யும் கொழும்பு புறநகரிலுள்ள ஆண்/ பெண் ஆகியோருக்கு வேலையுண்டு. சம்பளம் நேர்முகப் பரீ ட்சையில் தீர்மானிக்கப்படும். 0777106502, 0740327786. 052301

**327 வேலை தேவை**

கொட்டம்பா மரத்தின் கீழ் பழுத்து விழுந்துள்ள கொட்டம்பா இலைகளை சேகரித்து அவற்றை அயன் செய்வதற்கு (சாதாரண மின் ஸ்திரிக்கை மூலம்) முடியுமான செயற்பாடுள்ள நபர்கள் ஏற்றுமதி நிறுவனத்திற்கு தேவை. 1kg - 900/ = 0710324724, 0710556244 (ந.ப. 12.00 இரவு 7. 00) கவனிக்கவு ம். தகவல்களைப் பெற்றுக் கொ ள்ளும் நோக்கோடு மா த்திரம் அழைப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள். நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும் உப ஒப்பந்தக்காரர்கள் சுற்றாடல் செயற்பாடு உடைய ஒருவராக இருத்தல் வேண்டும். 051909

**பொது**

**406 தளபாடங்கள் விற்பனைக்கு**

சிறிய அலுமாரி பழுதடையாத உலோக கட்டமைப்பு, கழுவலாம், ஈரத்தன்மை உள் செல்லாதது. பப்ரிக் ஒவ்வொரு தட்டும் 10 கிலோ. 0775815569. 051394

**காணி/தோட்டம்**

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

கம்பஹா நகர மத்தியில் குடியிருப்புக்கு மிகவும் பொருத்தமான சகல வசதிகளுடனான சிறந்த காணி விற்பனைக்கு. ஒரு பேர்ச் 11.50. 0706460360, 0717590601. 049800

களுபோவில 20 பேர்ச் காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு. டி சில்வா வீதியில் அமைந்துள்ளது. வைத்தியசாலைக்கு மிக அருகில். விலை 140 (மில்.) (தரகர்கள் வேண்டாம்). 0776492313, 0776310866. 047409

கொள்ளுப்பிட்டியில் முஹந்திரம் வீதி 3 அறைகள், 2 குளியலறையுடன் மு முமையான வீடு விற்பனைக்கு. 0775262362. 050434

ராஜகிரிய கொத்தட்டுவ புதிய நகரம் காணி விற்பனைக்கு. 15.85 பேர்ச். 0777725726, 0712639906. 052056

வெள்ளவத்தை பள்ளிவாசலுக்கு அருகாமையில் 2 படுக்கையறைகள், 2 குளியலறைகள் கொ ண்ட வீடு விற்பனைக்கு. தொடர்புகளுக்கு 0741235666. (தரகர்கள் வேண்டாம்). 051982

பொரளை, கொழும்பு08, ச ர்பன்டைன் வீதி சரணபால ஹிமி மாவத்தைக்கு முகப்பாக விமானப்படை முகாம் அருகில் வர்த்தக பெறுமதியுடைய இரு மாடி வீடு. அருகில் பிரபல பாடசாலைகள், வர்த்தகம், களஞ்சியமாக அல்லது போர்டின் ஆக 1100 சதுர அடி தூய உறுதி, ஒரு கோடி அறுபத்து ஐந்து லட்சம். விலைகள் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். 0719152769, 0704904941. 051218

**617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு**

கம்பஹா, பெலும்மஹர, ஒருதொ ட்ட வீதியில் கொழும்பு கண்டி வீதிக்கு 150 m கம்பஹா நகரிற்கு 5 விநாடிகள். கடவத்த அதிவேக பிரவேசத்திற்கு 8 விநாடிகள். 5 அறைகள், (AC1) Hot Water உடன் 2 குளியலறை, சுற்றிவர மதிலுடன் வீ டு. 23 பேர்ச் 28/ = மில்லியன். 0703880243, 0762800093. 052194

**622 வீடு சொத்து மாத்தளை மாவட்டம் விற்பனைக்கு**

மாத்தளை கழுதாவளை 23 பேர்ச் இடத்திற்கு மின்சாரம் மற்றும் தண்ணீர் வசதியுடன் இடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 0662050231. 051802

**623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு**

மனங்கவர் காட்சிகள் கொண்ட குளிர்ச்சியான மலை நாட்டின் சுகத்தை அனுபவமிக்க விரும்பும் உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான பாதைக்கு முகப்பாக சிறந்த வியாபார மற்றும் குடியிருப்புக் காணித்துண்டுகள் 100 காணித்துண்டு 25 இலட்சம் சிறந்த கழிவுடன் வட்டி இன்றிய தவணைக் கொடுப்பனவு முறைகள். அழையுங்கள் சிரிபெல லேன்ட்ஸ் 0702484848 051899

ஹட்டன் நகரிற்கு அருகில் 10 பேர்ச் கொண்ட பெறுமதியான 100 காணித் துண்டுகள் விற்பனைக்கு. குழாய் நீர் மற்றும் மூன்று சுற்று மின்சாரத்துடன் ஆனது. ஒரு துண்டு 25 இலட்சம், தவனைக் கொடுப்பனவு மற்றும் சிறந்த கழிவுகளு டன் உங்களது காணிகளை இன்றே வேறாக்கிக் கொள்ளுங்கள். அழை யுங்கள் சிரிபெல லேண்ட்ஸ் 0702484848 051903

**வாரமஞ்சரி திருமண சேவைகள்**

**மணமகள்**

கொழும்பில் சிரேஷ்ட நி றைவேற்று அலுவலராக வேலை செய்யும் உயிரியல் ம ருத்துவ விஞ்ஞான பட்டத்தினைக் கொண்டுள்ள 28 வயதும் 5' 4" உயரமுள்ள மகளுக்கு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மார்க்கப்பற்றுள்ள படித்த மணமகனை கண்டியை சேர்ந்த கௌரவமான சோனக கும்பத்தினர் தேடுகின்றனர். மணமகள் தற்போது MBA படிக்கின்றனர். தந்தையும் இரு மூத்த சகோரர்களும் தொழில்புரிகின்றனர். தேவைப்படின் msmhuzair@yahoo.com உடன் தொடர்பு கொள்ளவும். B205123

வாரமஞ்சரி
திருமண சேவைகள்
600/- ரூபா

# BUDGET adz

It suits your budget

KOHUWALA APARTMENT FOR SALE
UNFURNISHED
Prices 45 Mil Negotiable

077 0 251 777

APARTMENT BUILDING FOR SALE
KALUBOWILA
HOSPITAL ROAD FACING 14.5 PERCH
FOR SALE
CALL AND GET MORE DETAILS
0762 177 814

0777 394 679 | 070 663 33 88

GARMENT FACTORY FOR SALE IN
KEBITHIGOLLEWA



BOI APPROVED facility with 125 (Juki) Machines, 250 KVA Caterpillar Generator (Used only for 1400Hrs). Ample workers
PRE FABRICATED IMPORTED, ALL STEEL STRUCTURES, INCLUDING STEEL TRUSSES.
ALL ROUND ALUMINIUM DOORS AND WINDOWS.
MAIN PRODUCTION BUILDING. 53 x 30 metres, eave height (side) 4 metres Centre 7 metres
FACILITY BUILDING, Including wash rooms, locker rooms, sick room and huge Canteen 30 x 15 metres
PRICE Rs.200 Million (US$.700,000/-)
0777-306 323, 070-3 318 970

NUGEGODA JUNCTION
BARE LAND FOR IMMEDIATE SALE
off stanly Thilakarathna Mawatha on Railway avenue
15 perches

கறையான்களை
Solution to Get rid of Termites
Hotline: 074 081 5517
Leemaka Industries (Pvt) Ltd.

COOK WITH JOY
3 MONTHS COOKERY COURSE
CONDUCTED IN 3 LANGUAGES
Classes on Fridays and Saturdays
9:30 AM to 12:30 PM
COMMENCE FROM 9TH SEPTEMBER 2023
Demonstration + takeaways
3 menus a day
HEALTH TIPS, COOKING TIPS, BAKING TIPS AND MORE
Ms. Hasna Thasneem
077 138 5122 / 077 723 7575

ARIYARATHNE CONSTRUCTIONS
WARE HOUSE CONSTRUCTION
Polycarbonate
0777 2423 19 / 0711 2423 19

Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuc@gmail.com

சிறு விளம்பரங்கள்
011 2 429 242 / 011 2 429 243
classified@lakehouse.lk

Islamic Tour with Umrah
Tour summary : 21 Days (Jordan 3, Jerusalem 4, Egypt 5 & Umrah 9 days)
Touring Cities : Amman, Jerusalem, Telaviv, Ramalla, Hebron, Jericho, Bethlehem, Sharm Al-Sheikh, St. Catherine (Mount Sinai) Cairo, Alexandria, Makkah & Madinah.
OUR GROUP AT



077 77 33 153
24th Sept. 2023
AALAM INTERNATIONAL TOURS & TRAVELS

BUDGET adz
போட்டோ குறும் விளம்பரம்

Advertise Here
BUDGET adz
5.8cm (Height) x 26.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 420 367 / 011 2 420 368

Looking for Your Life Partner..,
Marriage Proposals
Pay online and save your precious time
Acc. No. 000000377
Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# பிச்சைக்காரனின் புண்போல இலங்கை இனப்பிரச்சினை

## நிரந்தரத் தீர்வு கிடைப்பது எப்போது?

**ஒரு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும் இலங்கையில் அண்மைக்காலத்தில் உல்லாசப்பயணிகளின் வருகை கணிசமானளவு அதிகரித்துச் சென்றிருப்பதாக இற்றைப்படுத்தப்பட்ட தரவுகள் தெரிவிக்கின்றன. அதேவேளை அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் இலங்கைக்கு விஜயம் செய்யும் தமது பிரஜைகள் மிகக் கவனமாக இருக்கவேண்டும் என்ற எச்சரிக்கையையும் விடுத்திருக்கின்றன.**

இலங்கையில் வன்முறைகள் வெடிக்கலாம் என்ற தகவல்களின் அடிப்படையிலேயே மேற்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கலாம். கொவிட் கொள்ளை நோய் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் உச்சத்தில் இருந்து சற்றுத்தணிந்த காலப்பகுதியில் கடந்த ஒரு வருட காலமாக தொடர்ச்சியாகவே இனப்பிரச்சினை தொடர்பாக உறங்கிப்போயிருந்த வன்மங்கள் தூசு தட்டி எழுப்பப்பட்டு வருவதை தொடர்ச்சியாக அவதானிக்க முடிகிறது. தற்போதைய அரசுத் தலைவர் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த காலக்கெடுவுக்குள் ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்த காலந்தொட்டு தூசுபடிந்த கிடப்பில் கிடந்த 13வது திருத்தம் புதிய மெருகுடன் அரசியல் களத்திற்குள் வந்தது. பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் 13 தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றவில்லை எனக் கூறி அதை நிராகரித்தன. அரசாங்கங்கள் மாகாணங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களையும் மீளப்பெற்றுக்கொண்ட நிலையில் பல்லுப்பிடுங்கப்பட்ட பாம்பாக அது படுத்திருந்தது. சிங்களத் தரப்பைப் பொறுத்தமட்டில் 13 வழங்கப்பட்டால் நாடுபிளவுபட்டுவிடும் தமிழர்கள் அதிகாரங்களைப் பெற்றுவிடுவார்கள் என்ற கோஷத்தின் அடிப்படையில் 13ஐ எதிர்த்தார்கள். ஆனால் புலிகள் இருந்த காலப்பகுதியில் 13 பிளஸ் வழங்கவும் தயார் என்ற கருத்தை இலங்கை அதிபர் இந்தியாவுக்குத் தெரியப்படுத்தியிருந்தார். ஆனால் 2009இல் இந்தியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவுடன் ஆயுதப்போராட்டம் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழர்களின் அரசியல் போராட்டமும் ஆயுதரீதியில் தோற்கடிக்கப்பட்டு விட்டது என்றும் ஆயிரக்கணக்கான படைவீரர்களின் தியாகத்தின் மூலம் அது எய்தப்பட்டுவிட்டது. இனிமேல் அதைப்பற்றி பேசத் தேவையில்லை என்றும் ஒரு கருத்து அரசு உயர்மட்டத்தில் நிலவியது. புரையோடிப் போயுள்ளஇனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான ஒரு தீர்வை முன்வைத்து அனைவரும் இலங்கையர்களாகப் பயணிப்பதை நிராகரித்து யுத்த வெற்றியைக் காரணங்காட்டி யுத்தத்தில் வெற்றிபெற்ற ஒரு நாடு நடந்து கொள்வதையொத்த நடவடிக்கைகளை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக தொடர்ச்சியான காணி அபகரிப்புகள் குடியேற்றங்கள் தேசிய மரபுரிமைகள் என்ற போர்வையில் மக்களின் பயன்பாட்டில் உள்ள காணிகளை அடாத்தாக அபகரித்தல். சிங்கள மக்கள் வாழாத இடங்களில் புத்த கோயில்களை கட்டுதல் போன்ற நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்துள்ளன. குறிப்பாக குறுந்தூர் மலை விவகாரம் இதில் சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது. இந்நிலையிலே 13ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்ற ஜனாதிபதியின் முயற்சிகள் எதிர்ப்பைச் சந்தித்துள்ளதுடன் 13 ஐ அமுல்படுத்தும் அதிகாரம் அவருக்கு இல்லை என்று அவரது முகத்துக்கு நேராகவே சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறுவதையும் அவதானிக்க முடிந்தது. இப்போது மதகுருமார் ஒன்றிணைந்து 13ஐ அமுல்படுத்தக் கூடாது என்று ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்குமாறு மூன்று பௌத்த பீடாதிபதிகளுக்கும் வேண்டுகோள் விடுக்க இருப்பதாகவும் அறிக்கைகள் வருகின்றன. இந்நிலையில் பிரதான எதிர்க்கட்சியின் தலைவரும் 13 பிளஸ் கொடுப்பேன் என்று முன்னர் அறிவித்தவருமான முன்னாள் ஜனாதிபதி ஆழ்ந்த மௌனத்தில் உறங்குவதையும் அவதானிக்க முடிகிறது. இன்றைய சூழலில் பொருளாதார நெருக்கடிகளில் சிக்கித்தவிக்கும் மக்களின் கவனத்தை திசைதிருப்ப கொளுத்திப்போடப்பட்ட இந்த விவகாரம் எதிர்பார்த்ததைப்போலவே சூடுபிடித்திருக்கிறது. இலங்கை அரசியலில் மிகப்பெரிய கோமாளியாகக் கருதப்பட்ட மேவின் சில்வா தமிழர்களின் தலையைக் கொய்வேன் என்கிறார். வெறுப்பேற்படுத்தும் பேச்சு என்பது தண்டிக்கப்படக் கூடிய ஒரு குற்றம். அதே பேச்சை ஒரு சிறுபான்மை இனத்தவர் பேசியிருந்தால் எத்தகைய விளைவுகள் ஏற்பட்டிருக்கும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இனவாதத்தைக் கக்கும் வெறியர்கள் கூட்டம் சிறிது காலம் அடக்கி வாசித்த தமது திருவாய்களை இப்போது அகலத் திறந்து விட்டிருக்கிறார்கள்.



நாட்டில் பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக மக்களின் கவனக்குவிப்பு இதன் மூலம் வெற்றிகரமாகச் சிதறடிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த தேர்தலின் வெற்றிக்கான அடித்தளம் இதன் மூலம் போடப்படுகிறது. பௌத்த மக்களும் பௌத்த சாசனமும் மிகப்பெரிய ஆபத்தில் இருக்கிறது.

அதிலிருந்த நாட்டைக் காப்பாற்ற சிறந்த தலைவரை மக்கள் தெரிவு செய்ய வேண்டும் என்ற கோஷத்தோடு கடந்த2019 தேர்தலில் நடந்தது போலவே தேர்தல் சூடுபிடிக்கும். நாட்டைக் குட்டிச்சுவராக்கினார்கள் என்ற குற்றச்சாட்டுடன் சிலகாலம் முடங்கிக் கிடந்தவர்கள் புதிய உத்வேகத்துடன் மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். புலித் தலைவர் மற்றும் அவரது குடும்பம் தொடர்பாக இப்போது வரும் செய்திகள் இந்த எரிகிற நெருப்பின் மீது பெற்றோல் ஊற்றக் கூடும். 13ஐ முழுமையாக அமுல்படுத்துமாறு இந்தியா அழுத்தம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் 13 வேண்டவே வேண்டாம் என்று இலங்கையின் இனவாதிகள் கூறுகிறார்கள் அவர்களது கைகள் படிப்படியாக வலுப்பெற்று வருகிறது. இந்நிலையில் 13 வேண்டாம் என்றால் பாராளுமன்றத்தில் அதை வேண்டாம் என்று தீர்மானியுங்கள் ஒன்றில் அதை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் அல்லது முற்றாக நீக்கவேண்டும் அதை அரைவாசி கால்வாசியாக நடைமுறைப்படுத்த முடியாது என்றும் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

அவ்வாறு பாராளுமன்றம் தீர்மானித்தால் சிவில் யுத்தம் முடிவுற்று பதினைந்து ஆண்டுகளாகியும் சிறுபான்மை மக்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள குறைந்த பட்ச நிலையிலான தீர்வை வழங்கவும் தயாரில்லை என்ற முடிவினை தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் உரக்கச் சொல்லக் கூடியதாக இருக்கும். இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான முக்கியமான ஒரு முன்நிபந்தனையாக இனப்பிரச்சினை தீர்வு விவகாரம் இருக்கிறது. ஆகவே இந்தியாவும் சர்வதேசமும் இது தொடர்பிலே ஒரு முடிவினை எட்டக் கூடியதாக இருக்கும். ஆகவே 13 ஐ முழுமையாக அமுல்படுத்துகிறீர்களா இல்லையா என்பதே கேள்வியாக இருக்க வேண்டுமேயன்றி 13இல் உள்ள எவற்றை அமுல்படுத்தலாம் எவற்றை விடலாம் என்பது கேள்வியாக இருக்கக் கூடாது. சிறுபான்மைக்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் இதனை செய்து முடிக்க கூட்டாக அழுத்தம் கொடுக்க வேண்டும். அதன் மூலம் இனவாதிகள் பிச்சைக்காரனின் புண்போல இனப்பிரச்சினையை தேவைப்படும் போது மட்டும் சொறிந்து அரசியல் இலாபம் தேடுவதை நிறுத்த முடியும்.



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# அமெரிக்காவின் பேரம்பேசலும் ஈரான்-ரஷ்ய இராணுவ உறவும்?

**உலகத்தை ஆளுவதற்கான போட்டியே வல்லரசுகளுக்கிடையில் இடையறாது நிகழ்ந்து வருகின்ற அதிகாரப் போராட்டமாகும். அத்தகைய போராட்டத்தின் உச்சமான காலத்தை எதிர்கொண்டுள்ள உலக அரசியல் ஒழுங்கு மேற்காசியாவை அதிகம் முதன்மைப்படுத்துகிறது. காரணம் மேற்காசியாவின் பொருளாதார வளமும் அதன் முக்கியத்துவமும் தனித்துவமானது. அதில் அமெரிக்காவின் இருப்பானது மேற்காசியாவில் அதிகம் தங்கியிருந்தது. தற்போது அத்தகைய நிலையை சவுதி அரேபியா மட்டுமல்ல ஏனைய மேற்காசிய நாடுகளும் அமெரிக்க எதிர்ப்புவாதத்தை அவ்வப்போது வெளிப்படுத்தும் தருணத்தை கண்டுகொள்ள முடிகிறது.**

ஈரான் அமெரிக்காவினதும் அமெரிக்க நட்பு நாடான இஸ்ரேலினதும் எதிரியாக விளங்கிய நிலைப்பாட்டை முழு மேற்காசிய நாடுகளுமே எடுக்க ஆரம்பித்துள்ளன. ஆனால் அமெரிக்காவோ ஈரானை மீளவும் அரவணைக்க தனது தந்திரோபாயமான உத்திகளை கோரிக்கையாக முன்னெடுக்க ஆரம்பித்துள்ளது. அதனைத் தேடுவதாக இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவுக்கு ட்ரோன்கள் வழங்குவதை ஈரான் நிறுத்தினால் அதன் மீதான பொருளாதாரத் தடையை நீக்கப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. ஈரான் ஆளில்லாத அதிநவீன விமானங்களை ரஷ்யாவுக்கு விற்பனை செய்துவரும் நிலையில் அமெரிக்கா ஈரானுக்கு இத்தகைய வாய்ப்பொன்றை வழங்குவதாக அறிவித்துள்ளது. அதுமட்டுமல்ல ட்ரோன்களுக்கான உதிரிப்பாகங்களை ரஷ்யாவுக்கு வழங்குவதை முற்றாக ஈரான் நிறுத்த வேண்டும் எனவும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. இத்தகைய பேரம் பேசலுக்கான அடிப்படையையும் அதனால் ஏற்பட்டுள்ள நிலையையும் புரிந்து கொள்ளுதல் அவசியமானது.

ஜோனதன் மார்க்கஸ் எனும் போரியல் வல்லுனர் போர்க்களங்களுக்கு மிகப்பிந்திய வருகையைக் கொண்ட அதேநேரம் இராணுவ வல்லாதிக்கத்தை தீர்மானிக்கும் ஆற்றலைக் கொண்ட ஆயுதமாக ட்ரோன்கள் விளங்குகின்றன என்பதை இதே பக்கத்தில் மார்ச் 05 இல் வெளியான பதிவில் முன்வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஈரான், சிரியா, துருக்கி மற்றும் சீனத் தயாரிப்பு ட்ரோன்களை உக்ரைன் போர்க்களத்தில் அதிகம் பயன்படுத்தும் ரஷ்யா தனது தயாரிப்பையும் கொண்டு போரை எதிர்கொள்கிறது. ரஷ்ய_ உக்ரைன் போர் ட்ரோன் களது போராகவே மாறியுள்ளது. அமெரிக்காவினதும் மேற்கு நாடுகளதும் நவீன ஆயுத தளபாடங்களைக் கூட தக்கவைக்க முடியாது உக்ரைன் திணறுவதற்கு ட்ரோன்களே காரணமென்பதை அமெரிக்காவின் மேற்படி அறிவிப்பு தெளிவுபடுத்துகிறது. அதிலும் தற்போது ஈரானின் உற்பத்தியை ரஷ்யாவில் தயாரிப்பதற்கான உடன்பாடொன்றை இரு நாட்டுத் தலைவர்களும் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ரஷ்யாவுக்கும் ஈரானுக்குமான இராணுவ உறவு பலமானதாக அமைவதோடு ஈரானின் அணுவாயுத உற்பத்திக்கான ஒத்துழைப்பினை ரஷ்யா வழங்குவதாகவும் செய்திகள் உண்டு. ரஷ்ய, சீன ஒத்துழைப்புடன் ஈரான் அணுவாயுதங்களை தயாரித்துவிடும் என்ற புலனாய்வுத் தகவல்களை இஸ்ரேல் வெளிப்படுத்தியுள்ளது.

அதுமட்டுமன்றி ஈரான் அண்மையில் ஹைப்பசொனிக் ஏவுகணைகளை பரிசோதித்துள்ளமை அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் மேற்காசியா இருப்பினை அதிகம் பாதித்துள்ளது. இது பற்றி அமெரிக்கத் தரப்பு சுப்பசொனிக் வகையையே ஈரான் ஹைப்பசொனிக் எனக்குறிப்பிடுவதாக தெரிவித்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால் ஈரான் இதனை ஹைப்பசொனிக் எனக் குறிப்பிட்டதுடன் வளிமண்டலத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பிரயோகப்படுத்தும் திறன் கொண்டது எனவும் இது ராடர்களை தவிர்க்கும் என்பதோடு எந்த பாதுகாப்பு அரணையும் தகர்க்கும் திறன் கொண்டது எனவும் ஈரான் தெரிவித்துள்ளது. இதனை அடுத்து தெஹரானுக்கும் வோஷிங்டனுக்கும் இடையில் அதிக பதற்றம் ஏற்பட்டது. அமெரிக்கா தனது கடல்பாதுகாப்பு நிலைகளை கண்காணிக்கும் விதத்தில் உடனடியாக கடற்படைகளையும் போர்க் கப்பல்களையும் அணிவகுத்தது. ஈரானின் அச்சுறுத்தலிலிருந்து ஹமூஸ் ஜலசந்திப் பகுதிகளை பாதுகாக்கும் விதத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட படைகளை கொண்ட இரு போர்க்கப்பல்கள் செங்கடலை அடைந்திருந்தன. இதனை அமெரிக்க கடற்படை அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஹமூஸ் ஜலசந்தியை பாதுகாப்பதுடன் அமெரிக்காவின் வணிகக் கப்பல்களை பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டதென போரியல் ஆய்வாளர்கள் வலியுறுத்துகின்றனர். ஈரான் அமெரிக்காவின் இராணுவ பிரசன்னத்தை பல தடவை நிராகரித்திருந்ததென்பது தெரிந்ததே. அதனால் இப்பிராந்தியம் அதிக பதற்றமான பகுதியாக மாறிவருகிறது. இத்தகைய சந்தர்ப்பத்திலேயே அமெரிக்காவின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அமெரிக்கா எப்போதும் எதிரியை எதிர்த்து தோற்கடிக்கவே முனையும். அத்தகைய முயற்சி தோற்றுப் போனால் உடனடியாக தனது உத்தியை மாற்றிக் கொள்ளும். அத்தகைய மாறுதல் சரணடைவதல்ல. மாறாக பேரம்பேசலாகும். அதில் பல நெருக்கடியை அமெரிக்கா எதிர்கொண்டு வருகிறது. குறிப்பாக உக்ரைன் போர்க்களம் உக்ரைன் நிலப்பரப்பாக அமைந்தாலும் அது அமெரிக்க மற்றும் நேட்டோவின் போர்க்களமாகவே உள்ளது. அதன் தோல்வி என்பது அமெரிக்காவினது தோல்வியாகவே உள்ளது. அதற்கான அடிப்படை ட்ரோன்கள் என்பது ஒருபுறம் அமைய அது ஈரானுடையது மட்டுமானதல்ல. பல நாடுகளது தயாரிப்புக்களை ரஷ்யா பயன்படுத்தி வருகிறது. அப்படியாயின் ஏன் அமெரிக்கா ஈரானின் ட்ரோன்களை இலக்குவைத்து ஈரானை கையாள முனைகிறது என்பதே பிரதான குழப்பமாகும். அதனை விபரமாக நோக்குவது அவசியம்.



ஒன்று ஈரானின் ட்ரோன்களைவிட ஈரான் ரஷ்ய நட்புறவே அமெரிக்காவுக்கு நெருக்கடியாகவுள்ளது. அத்தகைய நட்புறவு அதிக இராணுவ ரீதியான மாற்றத்தை ஈரான் அடைய வழிவகுத்துள்ளது. ஈரானின் வியூகமானது தனித்து அமெரிக்காவை மட்டும் இலக்கு வைக்கவில்லை. அது இஸ்ரேலையும் இலக்கு வைத்துள்ளது. அதனால் மேற்காசியாவிலுள்ள நாடுகள் அதிகம் ஈரானையும் ரஷ்யாவையும் மையப்படுத்தி செயல்பட ஆரம்பித்துள்ளன. இதில் சீனாவும் ஒருபக்கமான பலத்தை ஈரானுக்கு கொடுத்துவருகிறது. அதனால் ஈரானை கையாளத் தவறினால் முழு மேற்காசியாவையும் அமெரிக்கா இழக்கும் நிலை தவிர்க்க முடியாததாகும். அதனை எதிர் கொள்வதே ஈரான் மீதான கரிசனையாக உள்ளது. இத்தகைய சூழலை எதிர்கொள்ள அல்லது வெற்றிகொள்ள ஈரானை வெளிப்படையாக எதிர்ப்பது சாத்தியப்படாது என்ற முடிவை அமெரிக்கா எடுத்துள்ளது. இதனையே ஒபாமா நிர்வாகம் அணுவாயுத உடன்பாட்டின் மூலம் எடுத்திருந்தது. அதனை கையாள முடியாது ட்ரம்ப் நிர்வாகம் ஈரானுடனான உடன்பாட்டை முறித்துக் கொண்டதன் விளைவே மீளவும் அமெரிக்காவால் ஈரானுக்குள் நுழைய முடியாத நிலை ஏற்பட வழிவகுத்தது. 1979 முதல் ஈரானுக்குள் அமெரிக்கா நுழைய எடுக்கும் அனைத்து முயற்சிகளும் தோற்றே போவதனைக் காணக்கூடியதாக உள்ளது. அதனை கையாளவே தற்போதைய அறிவிப்பு உதவும்.

இரண்டு, இது ஒரு தந்திரோபாய நகர்வே அன்றி வேறு எதுவாகவும் அமையாது. ஆனால் அமெரிக்கா வழிநடாத்தும் உக்ரைன் போரில் வெற்றி கொள்ள முடியாமல் இருப்பதற்கான காரணமாக ட்ரோன்கள் உள்ளதென்பதும் தவறான தகவலல்ல. அது ஈரானின் ட்ரோன்கள் மட்டுமல்ல. உலகளாவிய போரியல் வரலாற்றில் ட்ரோன்கள் புதிய இராணுவ உத்தியாகும். அதனை முன்னிறுத்திக் கொண்டு ஈரானை அமெரிக்கா பொருளாதார ரீதியாகத் தளர்த்துவதன் மூலம் அடைய முடியுமென கணக்குப் போடுகிறது. இதன் மூலம் ஈரானின் இராணுவ வளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வர முடியுமெனவும் அதன் அணுவாயுத வளர்ச்சியை கையாண்டுவிட முடியுமெனவும் அமெரிக்கா திட்டமிடுகிறது. ஈரானின் ஹைப்பசொனிக் ஏவுகணையின் வளர்ச்சியானது அதிகமான நெருக்கடியை மேற்காசியாவில் ஏற்படுத்தக் கூடியது. மேற்காசியப் பிராந்தியத்தில் அமெரிக்கா நிறுத்தியுள்ள போர்க்கப்பல்களும் வர்த்தக கப்பல்களும் அச்சுறுத்தலுக்குள்ளாகும் என்ற நிலையை அமெரிக்கா உணரத் தலைப்பட்டுள்ளது. இதுவே பேரம்பேசலுக்கான அடிப்படையாகும்.

எனவே மேற்காசியாவில் ஆபிரிக்கா போன்று ஒரு நெருக்கடியை அமெரிக்கா எதிர் கொண்டுள்ளது. அதனை இலாவகமாக கையாளும் நோக்கிலேயே ஈரானுக்கான சலுகை அறிவிப்பை முன்வைத்துள்ளது. எப்படியாவது தனது வல்லரசு அந்தஸ்தை அமெரிக்கா தக்க வைக்க வேண்டும் என கருதிச் செயல்படுகிறது. காரணம் மேற்காசியா இழக்கப்பட்டால் அமெரிக்காவின் ஆசியாவின் இருப்புக்கு அபாயமானதாக அமைந்துவிடும். அது படிப்படியாக உலகளாவிய ஆதிக்கத்தை இழக்கும் நிலைக்கு தள்ளிவிடும் என்பதனால் அமெரிக்க நகர்வு அனைத்து தரத்திலும் நிகழ ஆரம்பித்துள்ளது. அமெரிக்காவின் பேரம்பேசலானது அதன் பலவீனத்தை எடுத்துக் காட்டுவதாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும். அமெரிக்காவின் வீழ்ச்சி இலகுவானதல்ல. அதனால் அது சாத்தியமற்றதெனவும் கணித்துவிட முடியாது.









# மலையகம் 200 கடந்தும்

# அம் மக்கள் பரிதாபத்திற்குரிய பேசு பொருளாகவே இருக்கின்றனர்

## முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன் ...

எமது மலையக மக்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு 200 வருடங்கள் ஆகின்றன. அவர்கள் இன்னும் இடம்பெயர்வுகளுக்கும் பரிதாபத்திற்குரிய பேசு பொருளாக இருக்கின்றனர். 1983 க்கு பின்னர் நமது நாட்டில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மிகப் பெரிய இலக்கியங்களை வெற்றிகரமாகப் படைத்துள்ளார்கள். அனுதாபத்திற்குரிய இலக்கியங்களோ சோகமான இலக்கியங்களோ படைக்க வில்லை. அவர்கள் ஒரு நாட்டைக் மீட்டெடுக்க கூடிய இலக்கியங்கள் படைகின்றார்கள் என்று நாவப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் தேவஸ்தானத்தின் பிரதான அறங்காவலரும் சமூகச் செயற்பாட்டாளருமான முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன் தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஏற்பாட்டில் 'மலையகம் 200' ஆய்வு மாநாடு பல்கலைக்கழக கலை பீடக் கருத்தரங்கு மண்டத்தில் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன் தலைமையில் நடைபெற்றது.இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தாரர்.

தொடரும் அவரின் உரையில்,..

மலையக வர்த்தக சமூகத்தினர் பெருமளவில் கல்விக்காக சேவையாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கம் செய்யும் வேலைகளைக் கூட விஞ்சிடும் அளவுக்கு செய்து கொண்டிருக்கிறார்கள். இதை யாராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. சமூகப் பணியாளர்கள் இந்த மலையக சமூகத்தின் கல்வி எழுச்சிக்கு மிகப் பெரியளவில் உதவிகளை வழங்கிக் கொண்டு இருக்கிறாhகள். நிறைய உதவி செய்வதற்கு வர்த்தக சமூகம் தயாராக இருக்கின்றது.

கடந்த மூன்று மாதங்களாக நான் பாடசாலைகளுக்குச் சென்று களைத்துவிட்டேன். உங்களை சுற்றியுள்ள நாவலப்பிட்டியில் இருக்கும் வெஸ்ட்டொன் பாடசாலைக்குச் சென்றேன்.

அங்கு மாணவர்கள் மத்தியில் இந்த மலையக சமூகம் வெற்றி பெறுமா எனக் கேட்டேன். பேராதனைப் பல்கலைக்கழகம் போய் பார்த்துள்ளீர்களா? கையைத் தூக்குங்கள் எனக் கேட்டேன். அவர்களில் யாருமே கை தூக்க வில்லை. அதற்கு ஏன் எனக் கேட்டதும் வாய்ப்பில்லை என்றார்கள். அப்பொழுதுதான் எனக்கு தோன்றியது கல்வி என்னும் ஆயுதத்தை புரிய வைக்க வேண்டும் என்ற எண்ணம். ஏனென்றால் என்னுடைய அறிவும் மலையக மாணவர்களுடைய கல்வி மட்டம் குறித்து மேலும் சிந்திக்க வைத்தது.

கடுமையான உழைப்பினால் எந்தப் பெரிய வருமானமும் பெரிய பயனும் கிடைக்கப் போவதில்லை. ஒரு கடை வீதியில் உள்ள



நாட்டாமை தினசரி உழைத்துக் கொண்டு தான் இருக்கிறார். இப்படியான உழைப்புக்கள் எதிர்காலத்தில் பயன்தரப் போவதில்லை. உலகத்தின் அறிவு வேறு பக்கம் திசை திரும்பியுள்ளது.

உலக வெற்றியாளர்கள் ஒரு வித்தியாசமான முறையில் வெற்றியாளர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மலையக மாணவர்களையும் எங்கேயாவது ஒரு சரியான வழியில் நிலை நிறுத்த வேண்டியிருக்கிறது.

யாழ்ப்பாண பழமொழியான பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்று சொல்வார்கள். இது மலையகத்திற்கு ரொம்ப பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகின்றேன். இங்குள்ளவர்களை விட நான் இலக்கியத்தை சிறப்பாக பேசி விட முடியாது. என்னுடைய அனுபவத்தை உங்கள் முன் பதிவு செய்கின்றேன்.

எமது சமூகத்தில் ஆச்சரியப்படும் அளவுக்கு நிறையப் பட்டதாரிகள் உருவாகி இருக்கிறார்கள். ஆனால் அவர்களை நாம் சமூக முன்னேற்றத்திற்கும் பயன்தரக் கூடியவர்களாக மாற்றத் தவறியுள்ளோம். பொருளாதார ரீதியில் வெற்றிபெறக் கூடிய பயனுள்ள பட்டதாரிகளை உருவாக்க வேண்டும். இல்லையேல் நாங்கள் எதிர்காலத்தில் ரொம்ப பலவீனமான நிலைக்குச் சென்று விடுவோம். இக்கருத்தை இலக்கியவாதிகள் ஏற்றுக் கொள்வார்கள் என்பது எனக்குத் தெரியாது. சர்ச்சைகள் என்றால் எனக்குப் பிடிக்கும். கருத்து முரண்பாடுகளுடன் விவாதிக்கும் பொழுதுதான் சரியான தீர்வு வரும். 200 வருட பாதைகளை கடந்து வந்து நிற்கிறோம். அரசியல்வாதிகள் எந்தப் பாதைகளையும் காட்ட வில்லை. எந்த திட்டமும் அவர்கள் கையில் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பேராசிரியா எம். ஏ. நுஹ்மான் முதலாவது ஆய்வு அரங்கிற்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்திய போது

**************************

பேராதனை பல்கலைக்கழகம் நீண்ட காலமாக மலையக ஆய்வுத் துறையில் பங்களிப்புச் செய்து வருகின்றது. மலையகம் 200 ஆவது ஆண்டில் எந்தளவு மாற்றம் நிகழ்ந்துள்ளது என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். மலையக மக்கள்தான் இலங்கையின் வரலாற்றில் மிகக் குறுகிய கால வரலாற்றைக் கொண்டவர்கள் எனக் கூறுகின்றோம். 1820 – 2023 வரையிலான 200 வருட கால கட்டம் ஆகும்.

இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பிலே இந்த மலையக மக்கள் மிக முக்கியமான பங்கு வகித்து வருகிறவர்கள் என நமக்கு நன்கு தெரியும். ஆனால் அவர்களுடைய பொருளாதார கட்டமைப்பு ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கிறது என்பதும் நாம் அறிந்த விடயம். 1957 களில் இருந்து மலையக சமூக வளர்ச்சியிலே நாம் பல மாற்றங்களைக் காணலாம். குறிப்பாக மலையகத்தில் ஒரு கணிசமான எண்ணிக்கையில் பலம் வாய்ந்த படித்த மத்திய தர வர்க்கம் ஒன்று உருவாகி இருக்கிறது. இந்த 50 களுக்கு பிறகு ஏற்பட்ட மாற்றம் என்று சொல்ல வேண்டும். இதை இங்கு நாம் காணுகின்றோம். பல பேராசிரியர்கள் உருவாகியிருக்கிறார்கள். பல்வேறு மேல் மட்டங்களில் படித்த சமூகம் உருவாகி இருக்கிறது. ஒரு வர்த்தக சமூகம் உருவாகியிருக்கிறது. இப்படி பல்வேறு சமூகங்களுடன் ஒப்பிடும் போது சிறுபான்மையாயினும் இவர்கள் அச் சமூகத்தின் குரலாக சமூகத்தின் தேசிய உணர்வை கட்டமைப்பவர்களாக இருக்கின்றார்கள். அது ஒரு முக்கியமான வளர்ச்சி என்று சொல்லலாம். அவை போல தொழிற்சங்க இயக்கங்கள் வளர்ச்சியடைந்திருக்கின்றன. அரசியல் இயக்கங்கள் வளர்ச்சியடைந்திருக்கின்றன. ஒரு கட்சியில் இருந்து பல கட்சிகள் உருவாகி இருக்கின்றன. அவை எந்தளவு மக்களுக்கு உதவியாக இருக்கின்றன என்பது வேறு விடயம்.

## பேராதனை பல்கலைக்கழகத்தில் மலையகம் 200 ஆய்வு மாநாடு

மாவத்தகம தினகரன் நிருபர்

பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஏற்பாட்டில் 'மலையகம் 200' ஆய்வு மாநாடு பல்கலைக்கழக கலை பீடக் கருத்தரங்கு மண்டத்தில் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் துறைப் பேராசிரியர் ச. விஜேசந்திரன், சிறப்பு விருந்தினராக நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் அறங்காவலர் முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

'மலையக 200' ஆய்வு மாநாட்டின் முதல் அமர்வு கோ. நடேசையர் மீனாட்சியம்மாள் அரங்கு பேராசிரியர் எம். ஏ. நுஹ்மான் தலைமையில் நடைபெற்றது. இதில் பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகர் ஆர். மகேஸ்வரன், பிரபல எழுத்தாளரும் ஆய்வாளருமான ரா. நித்தியானந்தன், ஆய்வாளர் எல். ஜோதிகுமார், எழுத்தாளர் மு. சிவலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். சி. வி. வேலுப்பிள்ளை அரங்கு பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் கலாநிதி சோதிமலர் ரவீந்திரன் தலைமையில் ஆய்வாளர் ந. சரவணன், கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகம் கவிஞர் சு. முரளிதரன், ஆய்வாளர் மல்லிகைப்புச் சந்தி திலகர், ஆய்வாளர் மு. காளிதாஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

பேராசிரியர் அருணாசலம் அரங்கு சாரல் நாடன் அரங்கு போன்ற பெயர்களில் ஆய்வாளர்கள் மலையகம் குறித்த பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தார்கள்.

இதன் போது சு. தவச்செல்வன் எழுதிய இரு வருடகால மலையகமும் இலக்கியமும் ஒரு காலக் கணக்கெடுப்பு என்னும் நூல் வெளியீட்டு விழாவும் இடம்பெற்றது.

இதில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எழுத்தாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சனத்தொகை கணக்கெடுப்பில் 'மலையக தமிழர்' என பதிவிடும் கோரிக்கை வலுப்பெற்றுள்ளது...

2023/ 2024 ஆம் ஆண்டுக்கான சனத்தொகை கணக்கெடுப்பை நடாத்துமாறு அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. இந்த நிலையில் சிவில் சமூகத்தினர் இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களை மலையக தமிழர்கள் என அடையாளப்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கையை தொடர்ந்தும் முன்வைத்து வருகின்றனர்.

இந்த நாட்டின் வரலாற்றில் டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் இந்திய வம்சாவளி தமிழர்களின் சார்பில் தேர்தல் மூலமாக ஏழு பாராளுமன்ற அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். நாட்டின் பொருளாதார மேம்பாட்டை கருத்திற்கொண்டு ஆங்கிலேயரின் ஆட்சியின்போது கூலித் தொழிலாளர்களாக வருவிக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் உரிமையை மறுக்கும் நோக்கமாகக் கொண்டு பாராளுமன்றத்திற்கு சட்ட மூலம் கொண்டு வரப்பட்டு அவர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. அதன் பின்பு நேரு – கொத்தலாவல ஒப்பந்தம், ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தம்,

இந்திராகாந்தி – ஸ்ரீமா ஒப்பந்தம் ஆகிய ஒப்பந்தங்கள் மூலம் இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு இந்த நாட்டு வாக்குரிமை வழங்கப்பட்டது. அதன் பின்பும் நாடற்றவர்களாக வாழ்ந்த இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு மலையக பெருந்தலைவர் சௌமியமூர்த்தி தொண்டான் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ மூலம் வாக்குரிமை பெற்றுக் கொடுத்து அதன் பிரச்சினைக்கு முடிவு கண்டார்.

இந்த நாட்டில் இந்திய வம்சாவளி தமிழர்களின் குடியுரிமைக்கு தீர்வுகண்ட போதிலும் 1977 ஆம் ஆண்டுவரை பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் காலத்திற்கு காலம் இந்திய வம்சாவளி தமிழர்கள் சார்பில் அமரர்கள் சௌமியமூர்த்தி தொண்டமானும், அப்துல் அஸீஸும் மாறி மாறி நியமன அங்கத்தவர்களாக பாராளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்டார்கள். அதன் பின்பு 1977 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெற்றபோது தேர்தல் மூலம் இந்திய வம்சாவளி தமிழர் ஒருவர் தெரிவு செய்ய வழி வகுக்கும் விதத்தில் நுவரெலியா, மஸ்கெலியா ஆகிய இரண்டு தேர்தல் தொகுதிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு நுவரெலியா – மஸ்கெலியா என மூன்று அங்கத்தவர் தொகுதியாக உருவாக்கப்பட்டு தேர்தல் நடாத்தப்பட்டது.



இந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் நுவரெலியா – மஸ்கெலியா தொகுதியின் முதலாவது அங்கத்தவராக காமினி திசாநாயக்கவும், இரண்டாவது அங்கத்தவராக அனுர பண்டாரநாயக்கவும் மூன்றாவது அங்கத்தவராக சௌமிய மூர்த்தி தொண்டமானும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்கள்.

1977ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் ஜே.ஆர்.ஜயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி 168 அங்கத்தவர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 140 அங்கத்தவர்களைப் பெற்று பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று வரலாறு காணாத விதத்தில் அமோக வெற்றியீட்டியது. அந்த வெற்றியில் இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு பங்குண்டு என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரான சௌமியமூர்த்தி தொண்டமானை தனது அமைச்சரவையில் அமைச்சு பதவியை பொறுப்பேற்கும்படி கோர, ஜே.ஆர்.ஜயவர்தன தலைமையிலான அமைச்சரவையில் அவர் கிராமிய தொழில்துறை கால்நடை அமைச்சராக பதவியேற்றார். ஜே.ஆர்.ஜயவர்தனவினால் அரசியலமைப்புச் சட்டம் 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு அந்த அரசியலமைப்பு சட்டத்தில் இனவிகிதாசார தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்புதான் இந்த நாட்டில் இந்திய வம்சாவளி, தமிழர்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றில் அதிகளவிலானவர்கள் தெரிவு செய்யப்பட வழிகிட்டியது. 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு மூலம் இன விகிதாசார அடிப்படையில் அரச நிவாரணங்கள், சலுகைகள், பிரதிநிதித்துவங்கள் கிட்டவும் வழியேற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

எனவே, இந்த நாட்டின் பதினைந்தாவது குடிசனத் தொகை கணக்கெடுப்பு முன்னெடுக்கப்படவுள்ள இந்த காலகட்டத்தில் சிவில் சமூகத்தினர் இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி, தமிழர்களின் இன அடையாளத்தை 'மலையகத் தமிழர்கள்' என அடையாளப்படுத்தி மலையக அரசியல்வாதிகள் தோட்டத் தொழிற்சங்கவாதிகள் (பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிப்பவர்கள்) ஆகியோருடன் துரிதமாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு அவர்கள் மூலம் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் சகல கட்சி தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளச் செய்ய அவர்களை வலியுறுத்தி பாராளுமன்றத்தில் ஒரு சட்ட மூலத்தை கொண்டு வந்து அந்த சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அதுபற்றி இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களை சனத்தொகை கணக்கெடுப்பில் 'மலையக தமிழர்' என பதிவு செய்யும்படி கோர வேண்டும்.

சிவில் சமூகத்தினரின் இந்த வேண்டுகோளை பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் தொழிற்சங்கவாதிகள், மலையக அரசியல்வாதிகள் ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களின் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் மலையக அரசியல்வாதிகளுக்கு நடைபெறவுள்ள தேர்தல்களில் வாக்களிப்பதை தவிர்த்து அவர்களுக்கு பாடம் புகட்ட அணிதிரள வேண்டும்.

'சிலரை சில நாட்கள் ஏமாற்றலாம். பலரை பல நாட்கள் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லா நாட்களும் ஏமாற்ற முடியாது' என்பதை உரிய தரப்பினருக்கு இடித்துரைக்க வேண்டும். சனத்தொகை கணக்கெடுப்பு பத்து வருடத்திற்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே, கிட்டியுள்ள வாய்ப்பை ஏற்ற விதத்தில் பயன்படுத்த தவறுவது எட்டும் கனியை விட்டுவிட்டு எட்டாத கனியை பிடிக்க முயல்வதற்கு ஒப்பாகும். எனவே, இந்திய வம்சாவளி தமிழர்களின் சகல தரப்பினரும் காலத்திற்கேற்றாற்போல் நடவடிக்கைகளை முன்னெடுத்து உரிய தரப்பினருக்கான உரிமைகள் கிடைக்க வழி வகுக்க வேண்டும்.

சி.ப.சீலன்




# மனிதம் உணர்!

ஹிஷ்மா ஹிஷாம், பேருவளை

கண்களினூடே தரைநோக்கி வழியும் கண்ணீர்!
சொரிந்து உடலை நனைக்கும் வியர்வை!
உடலினுள்ளே நாலாபுறமும் ஓடும் சிவப்புக் குருதி!
எல்லாம் மனிதத்தில் தான்!
எல்லாம் மனத்தில் தான்!
ஒன்றென பார்!
பாரதை பார்!
மனதை விரித்துப் பார்!

மண்ணோடு உரசும் குருதிச் சிந்தல்கள்
இத்தோடு முடிந்திடட்டும்!
முற்றுப் பெறட்டும்!

முக்காடுகளும், பாவாடைகளும்
'பெண்' எனுமுறையில் மதிக்கப்படட்டும்!

பரவுகின்ற தீப்பொறிகள் பிராத்தனைகளின்
கண்ணீர் கொண்டாவது அணைந்திடட்டும்!

இவ்வாண்டு, இம்மாதம், இப்பொழுது;
மதமறிந்து மனிதத்தினை மறையத் தாக்குவதும்,
தூற்றுவதும் களைந்திடட்டும்!

மனம் கொண்டு மனிதத்தினை ஏந்திடு!

ஜாதி, மத, பேதமின்றி மனிதமென்று ஒன்றிப் பூத்திடு!
அறிவு சிந்தி, வியர்வை சிந்தி, குருதி சிந்தி;
ஐக்கியத்தை இன்றே உருவாக்கிடு!

நாளையில்லை! நாளில்லை!
இன்று
இந்நொடி மன உறக்கத்திலிருந்து விழித்திடு!

மனிதம் உணர்ந்திடு!

# கருவிலிருந்து ஒரு கவிதை

சி.எம். சங்கர் – பண்டாரவளை



கருவாக நான் இங்கு
உருவாகி விட்டேன் தாயே
உன் கணவனின் கருத்து
வேறுபாடுகளுக்காய் என்
கழுத்தை நெரித்துவிடாதே !
நான் பிறந்து நான் காணும் இந்த
உலகில் நான் வாழும் என் உரிமையை
எனக்கு தா...
கணவன் மனைவி முரண்பாடுகளுக்காய்
எங்களை முகம் சுழிக்க வைக்கும்
மணம் வீசும் குப்பை குழிகளில்
இட்டுச் செல்வதாகவும்
அச்சமே இல்லாமல் ஆற்றில் இடுவதாகவும்
பொதி செய்து வீதியில்
வைத்து செல்வதாகவும் செய்திகள்
சொல்லிய உலகுக்குள்
இன்று
ஐப்போன் வாங்க எங்களை
அயலவருக்கு விலைக்கு விற்று விட்டதாகவும்
பெற்ற குழந்தை உற்ற கணவனை
கைவிட்டு முகநூல் காதலனை
நாடு கடந்து தேடிவந்து
முகம் பார்த்து மறுமணம்
செய்த செய்தியும் வருவதில்
என் பிறப்பே எனக்கு
அச்சத்தை தருகிறது
தாயே நவீன யுகமென
தொழில்நுட்பமென அதனுள் உன்
தாய் பாசம் விஷமாகிட நீ
இடம்தரலாகாது
உன் நேசம் என்றும் வாசம் வீசும்
மலராக இந்த தேசம் முழுவதும்
மலர்ந்து இருக்கட்டும்
தாய் என்பவள் தெய்வத்துக்கு சமம் தவிர
காலனுக்கல்ல ...
தாயே நீ தெய்வமாகவே இரு ...



# வாட்டி வதைக்கும் வரட்சி

காத்தான்குடி எம்.ஐ.அப்துல் நஸார்

வற்றிக் குறையும் குடிக்கும் நீரும்
வரண்ட பயிர்கள் கருகுதே நாளும்
காற்றிலும் வெப்பம் சுழன்றே நீளும்
கானல் நீர்தான் வீதிகள் தோறும்

மேகங்கள் தாண்டி எரிக்கும் வெயிலில்
மேனி கொதிக்கும் நெருப்பின் சாயலில்
தாகம் நிறைந்து நாவுகள் ஏங்கும்
தாமதியாது நீரருந்த மெதுவாய் நீங்கும்

வாழ்கையில் காண்கின்ற காலாந்தர அனர்த்தம்
வாட்டி வதைத்து வரட்சியினை உணர்த்தும்
பாழ்பட்டு வெடித்துக் கிடக்கும் நிலங்கள்
பார்வையிலேனும் பசுமைக்கு ஏங்கும் இதயங்கள்

சிலகாலச் சூடு தாங்கவொண்ணா பாடு
சிக்கலான காலத்தில் வரட்சியினால் கேடு
விலங்கிற்கும் மானிடர்க்கும் நேரொத்த துன்பம்
விலகிட வேண்டும் வேகவைக்கும் வெப்பம்

# எங்கே போகிறது?

ரஜிதா அரிச்சந்திரன்

இச்சை கொண்ட இழிவு மாந்தர்
கச்சை அவிழ்த்த காட்சி எடுத்து
நச்சை உலகில் தவள விட்டே
இச்சை தீர்த்து இன்பம் கொண்டோர்

பாரில் நல்ல பாக னாக
ஏரை எடுத்து எங்கும் பண்படுத்த
தேரில் வந்த நேசன் சேவை
நேரில் சென்று நேசத் துடனே

பாங்காய் வழங்க பரிவு கொண்டு
ஏங்கும் மக்கள் எழுத்தறி விக்கவே
வந்த துறவி சரீர ஆசை
வந்து தன்னிலை அழித்து மாயையில்

வீழ்ந்து வீணே விதிய ழித்து
தாழ்ந்து போகும் தரணியில் கலிபிடித்து
ஆட்டும் அவலம் ஆங்காங் குதொடர
ஈட்டும் பாவம் ஈமை கபந்தும்

தாக்கிச் சரிக்கும் தரமாய் நாளும்
ஊக்கி யாகி உணர்விழந் தோரால்
இனியும் வேண்டாம் இழிவு சிந்தனையில்
கனிவை கலந்து அறிவால் மாறுங்கள்..



# போலிக்கு பொய் கேட்டு வாழவோ?

வரிகள் ஊகி
உடுப்புக்குளம்

இயற்கை வழி
ஒரு வாழ்வு
மகிழ்ந்து வாழ
மண்ணில் உண்டு

விண்ணில் வாழும்
எண்ணம் வந்தால்
முயன்று போக
வாய்ப்பு ஆக்கு

இயற்கை அதை
வெறுத்து போதல்
நம்மிடை வந்த
மாயை பாராயோ?

மாடும் மானும்
இயற்கை தான்
பயிரை மேய்தல்
இயற்கை செயலே!

அது சரியென்றால்
மனிதனின் செயலும்
சரியாகி போதல்
காணலில் கடினமே?

மாடும் மானும்
மனிதனில் வேறு
அளவுக்கு மீறிய
மனிதன் தவறு

அளவோடு இருப்பின்
விருப்போடு வாழ
வழி தானே கூடும்
காணல் நலமன்றோ?

போலிக்கு பலர்
பொய் உரைத்து
நமை இங்கே
தவறாய் நடத்துவார்

நடந்து போய்
நாறிப் போகிறோம்
நமது வாழ்வில்
நாளும் நாம்

காடழித்து வீடு
நாடும் ஆக்கும்
மனிதர் இடையே
வேதம் எதற்கு?

பாவம் உயிர்
ஏன் கொல்வான்?
கோப்பையில் மீன்
குழம்புக் கறி

மீனுக்கு உயிர்
இருப்பது பார்
அறியாது உண்டு
ஓதுவது போலன்றோ?

# உபசரிப்பு...?

திக்குவல்லை கமால்

சலசலென்று இசைபரப்பிக்
குளிரருவி
செய்திசொல்ல அழைப்பதுவும்
யாரைத்தானோ...?
கலகலென்று தமிழ்மொழிந்து
வேல்விழியார்
குடமெடுத்துக் கூடுவதும்
அதற்குத்தானோ...?
★★★
வண்டுறங்கும் பூங்காவில்
புள்ளினங்கள்
வாழ்த்திசைகள் பொழிவதுவும்
எதற்குத்தானோ...?
கண்டதனைப் பளபளக்கும்
தளிரசைந்து
தாளமிடும் மோகமதும்
அதற்குத்தானோ...?
★★
தேன்சிந்தும் மலர்வாசம்
தனைச்சுமந்து
தென்றலது தவழ்ந்துவரல்
எதற்குத்தானோ...?
வான்பூக்கள் முறுவலித்தே
மங்கையென
வெட்கமுடன் விழிமூடல்
அதற்குத்தானோ...?
★★
பொன்மலரின் மெல்லிதழில்
தூங்குபனி
பிரியாவிடை பெறக்காத்தல்
எதற்குத்தானோ...?
மண்ணுலகின் இருட்போர்வை
மெல்லமெல்ல
மாயமெனத் தான்விலகல்
அதற்குத்தானோ...?
★★
அற்புதமாய் அழகுபதி
பொற்புறவே
அடிவானில் கிளம்பியெழும்
செங்கதிரோன்
பொற்கதிர்கள் பூத்துவரும்
பவனிக்காக
புதுமைதிகழ் இயற்கையவள்
உபசரிப்போ...?

# மாறிட வேண்டும் தோழனாக!

தாலிபீன், கற்பிட்டி



அருகில் அமரவும்,
வார்த்தைகள் பரிமாறவும்,
உன் தோளில் நான் சாயவும்
பயணங்கள் செல்ல வேண்டுமே உன்னோடு

என்னை நீ கட்டியணைக்கவும்,
ஆனந்த கண்ணீரில் என்னை தழுவவும்,
உன் அறிவுரைக்கு நான் தலை அசைக்கவும்
நெடுந்தூரம் பயணம் செல்ல வேண்டுமே நான்

பயணம் நடுவே உன் அழைப்பு என்னை சேரும் வரை
தொலைபேசி தொல்லைபேசியே! பின்,
உன் குரல் என்னை தாலாட்டிடவே
தொலைபேசி தொட்டிலாக மாறும் நானும் உறங்கிடவே

பரீட்சையில் "நாயகன் நீ" என எழுதினேன் உண்மையே!
அதனாலேயே ரசிகர்கள் பலர் உனக்கு,
நான் என்ன அவர்களுள் உயர்த்தவனா, எதற்கு?
எழுதிடுவேன் "என் உயிர் தோழன் நீ!" என
கதைத்திடுவோம் காலம் இருக்கும் வரை

பேனா மையும் தீர்த்தது மாறிடவில்லை,
தந்தையும் தோழனாகுவாரோ! பாவி நானே!
அறிந்திடவில்லை தந்தைக்கு நாயகன் தனயன் என்று
தாய்க்கே நன்றி பறைசாட்டுவேன், மாறிட வேண்டும் தோழனாக

# போதையை நீக்கி வாதையைப் போக்குவோம்

கலாபூஷணம் ஏ.ஸீ.இஸ்மாலெவ்வை
சம்மாந்துறை

அருந்திய பானம்
அருட்டிய உணர்வால்
வருந்திய செயல்கள்
மழையெனக்குவிந்தன
திருந்திய மாந்தரும்
திசைமாறி நிற்பதும்
அருந்திய மாந்தர்கள்
அறிவு கெட்டலைவதும்
பொருந்திய செயல்களோ
புரிவதில் இடர்களும்
சீர்மையற்றுச்
சேதங்கள் முகிழ்ப்பதும்
பானமாய்ப் பஸ்பமாய்
பாஷாண இலைகளாய்ப்
பகட்டும் பண்டங்களாய்
நாக்கிலே பட்டதும்
நாசம் உண்டாக்கிடும்
போதைக்கு அடிமையாய்ப்
போவதை நிறுத்துவோம்
போதைக்கு அளித்திடும்
பாதையை முடக்குவோம்
போதையை நீக்குவோம்
வாதையைப் போக்குவோம்



# பன்முகம்

காரையூர்க்கவி
வ.வடிவழகையன்

வானத்தில் எரிந்தால்
சூரியன்

வீட்டில் எரிந்தால்
சமையல்

வீட்டை எரித்தால்
விபத்து

வீதியில் எரிந்தால்
வன்முறை

ஊருக்குள் எரிந்தால்
கலவரம்

உள்ளத்தை எரித்தால்
மனசாட்சி

நாட்டில் எரிந்தால்
நெருக்கடி

காட்டில் எரிந்தால்
காட்டுத்தீ

கோயிலில் எரிந்தால்
தீபம்

கேட்டை எரித்தால்
கர்மா

கொடுமையை எரித்தால்
தண்டனை

இனத்தை எரித்தால்
அராஜகம்

உடம்பை எரித்தால்
தகனம்

உடம்புள் எரிந்தால்
விரகம்

உளத்துள் எரிந்தால்
பொறாமை

சேற்றில் எரிந்தால்
கொள்ளிவாய்

கண்ணகி மனதில்
நீதி

சீதை வாழ்வில்
தூய்மை

" தீ "



கடலை ரசித்தவாறு மீண்டும்

# தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் பயணம்

'50 ஆண்டுகளுக்கு முன்னர் என் தந்தை, மாமா ஆகியோர் கப்பலில் இந்தியாவுக்கு சென்று புடவைகளை எடுத்து வந்து தொழில் செய்துவந்தனர். அந்தக் காலத்தில் வெளிநாடு செல்வதென்றால் பெரிய விஷயமாக கருதப்பட்டது. அவர்கள் செல்லும் போதும் நாடு திரும்பும் போதும் எல்லோரும் சென்று அவர்களை ரயில் நிலையத்தில் வழியனுப்புவதும் வரவேற்பதும் வழக்கம். அவர்கள் எங்களுடன் இருக்கும் போது 'தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் பயணம் பற்றிய சுவையான அனுபவங்களை பகிர்ந்து கொள்வார்கள். ரயிலுக்கு டிக்கெட் எடுத்தால், அதில் கப்பலிலும் பயணம் செய்யலாம். கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் தான் டிக்கெட் வாங்கவேண்டும். அதற்கென டி. ஆர். விஜேவர்த்தன வீதியில் தனியான டிக்கெட் கருமபீடமொன்றும் பிரிவும் அந்தகாலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ரயில் டிக்கெட்டில் தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழிகள் அச்சிடப்பட்டிருக்கும். கப்பலில் சைவ, அசைவ உணவுகள் தாராளமாக கிடைக்குமாம். குடிநீரை தவிர மற்றயவை அனைத்தும் பணம் கொடுத்து வாங்க வேண்டுமாம். எங்களுடைய ஊரிலிருந்தும் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்துக்கும் அதிகளவான பக்தர்கள் இந்த கப்பல் சேவை ஊடாகவே சென்றுவருவதுண்டு. புயல், யுத்தம் என்று கப்பல் சேவையை நிறுத்திவிட்டார்கள். அதனால் அந்த வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. மீண்டும் தலைமன்னார், இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது' என்கின்றார் சிலாபத்தைச் சேர்ந்த 75 வயதான வீரராஜன்.

'அந்தக் காலத்தில் இந்தியாவிலிருந்து கல்லூரி மாணவர்கள் இலங்கையை சுற்றிப் பார்க்க கப்பலில் சுற்றுலா வருவார்கள். அவர்கள் வரும் போது கவரிங் நகைகள், பொட்டு, இனிப்புப் பண்டங்கள் என்று பலவிதமான பொருட்களை கொண்டு வந்து இங்கு விற்று பணமாக்கி அதை செலவுக்கு வைத்துக் கொள்வார்கள். அப்படி நானும் அவர்களிடம் கவரிங் நகைகள் வாங்கி அணிந்திருக்கிறேன். சில நேரங்களில் பொருட்களை பண்டமாற்றிக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் உண்டு. இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து ஆசிரியர்கள் பணிபுரிவார்கள். அப்படி ஒருகாலம் இருந்தது என்கிறார் தலைமன்னாரைச் சேர்ந்த 64 வயதான எலிசபத் அம்மாள்.

'தலைமன்னார் – இராமேஸ்வரம் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவிருப்பதாக செய்திகள் வெளிவந்தவுடன் பலரும் அந்தக் காலத்து கப்பல் பயண நினைவுகளை அசைபோட ஆரம்பித்துள்ளனர். தலைமன்னார் ஒரு காலத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பிரதான நுழைவாயிலாக இருந்தது. மன்னார் நகரிலிருந்து ஒரு மணி நேர பஸ் பயணம். வண்ணமயமான மீன்பிடிப் படகுகள், பிரமிக்க வைக்கும் கலங்கரை விளக்கம், ஓலையால் வேயப்பட்ட கூரைகள் மற்றும் களிமண் சுவர்களால் கட்டப்பட்ட பாரம்பரிய வீடுகள், கம்பீரமாய் காட்சியளிக்கும் தலைமன்னார் இறங்கு துறை, கடலைகளின் ஓசை என கரையோர நகரங்களின் வசீகரத்தையும் அழகையும் இந்நகரம் தன்னகத்தே கொண்டுள்ளது. காலனித்துவ காலத்தில் ஆண்டு முழுவதும் முத்து குளித்தல் தொழிலுக்கு பெயர் பெற்ற இடமாகவும் தலைமன்னார் விளங்கியது.

இலங்கை இந்தியாவுக்கும் இடையில் நீண்டகாலமாகவே கடல்வழிப் போக்குவரத்து இருந்தது. இராமாயணகாலத்தில் இராமேஸ்வரத்திலிருந்து அனுமனின் படைகள் அமைத்த பாலத்தின் வழியாக இராமன் இலங்கைக்கு வந்து இராவணனிடமிருந்து சீதையை மீட்டுச் சென்றதாக புராணம் கூறுகின்றது. சோழ மன்னர்கள் கடல்வழியாக படையெடுத்து இலங்கையை கைப்பற்றி ஆட்சி செய்ததாக வரலாறு கூறுகின்றது. இது இவ்வாறிருக்க ஆங்கிலேய ஆட்சிக் காலத்தின் போது இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் 'போட் மெயில்' என அழைக்கப்படும் ரயில், கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டது.



கொழும்புக்கும் சென்னைக்கும் இடையில் போக்குவரத்து தொடர்பை ஏற்படுத்துவதற்காக 1876ஆம் ஆண்டு இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் ஒரு கட்டமாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கடலுக்குள் 145 தூண்களுடன் பாம்பன் பாலத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 1913இல் நிறைவடைந்தது. 1914ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி முதல் 'போட் மெயில்' சேவை ஆரம்பமாகியது.

சென்னையிலிருந்து தனுஷ்கோடி வரை ரயில் பயணம், அதனைத் தொடர்ந்து தனுஷ்கோடியிலிருந்து இலங்கை தலைமன்னார் வரையிலான 36 கிலோமீற்றர் நீண்ட கப்பல் பயணம், பின்னர் மீண்டும் தலைமன்னாரிலிருந்து கொழும்பு வரை ரயில் பயணம் என்று போக்குவரத்து சேவை நீடித்திருந்தது. குறைந்த கட்டணத்தில் இந்தியா சென்று வருவதற்கு இது பேருதவியாகவிருந்தது. திரை கடலோடியும் திரவியம் தேடு என்ற பழமொழிக்கேற்ப இலங்கை, இந்திய வர்த்தகர்கள், தொழிலாளர்கள் கப்பல் சேவை ஊடாக பெரும் பொருள் ஈட்டி இலாபம் பெற்றனர்.

இலங்கையிலிருந்து பலர் இந்தியாவிலுள்ள பிரசித்திப் பெற்ற வணக்கஸ்தலங்களுக்கு குறைந்த செலவில் சென்றுவந்தனர். இந்தியாவிலிருந்து பலர் இலங்கைக்கு கல்வி, தொழிலுக்காக வந்துசென்றனர். இதனால் தலைமன்னார் ஒருகாலத்தில் இலங்கையை இணைக்கும் பெரும் நகரமாகவிருந்தது. அதேபோல் தமிழகத்தின் இராமேஸ்வரம் உள்ளிட்ட நகரங்கள் பெரும் அபிவிருத்தி கண்டன.

1964ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட 07 இலட்சம் இந்திய வம்சாவளி மக்களும் பதுளையிலிருந்து ரயிலில் தலைமன்னார் வரை சென்று அங்கிருந்து கப்பல் சேவை ஊடாக இராமேஸ்வரத்தை சென்றடைந்ததாக கூறப்படுகின்றது.

எனினும் துரதிர்ஷ்டவசமாக 1964ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தனுஷ்கோடியை தாக்கிய புயல் காரணமாக பாம்பன் பாலத்துக்கு பெரும் சேதம் ஏற்பட்டது. பாம்பன் பாலத்தின் ஊடாக சென்ற ரயில் கடலில் கவிழ்ந்ததில் அதில் பயணித்த 130 பேர் வரை உயிரிழந்தனர். அதுமட்டுமின்றி இந்திய – இலங்கை ரயில் படகு சேவைக்கான முனையமாகவிருந்த தலைமன்னார் இறங்கு துறை முகத்துக்கும் குறிப்பிட்ட அளவு சேதம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து 45 நாட்களின் பின்னர் பாலம் புனமைக்கப்பட்டு 1965ஆம் ஆண்டு தலைமன்னார் முதல் இராமேஸ்வரம் வரை மீண்டும் கப்பல் போக்குவரத்து ஆரம்பமாகியது.

இராமானுஜம் என்று பெயரிடப்பட்ட கப்பல் வாரத்துக்கு 03 நாட்கள் தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் பயணித்தது. இந்த கப்பலில் அதிகபட்சமாக 400 பேர் வரையிலும் பயணம் செய்யலாம்.

ஆனால் இலங்கையின் உள்நாட்டு போர் தீவிரமடைந்தமையால் 1983ஆம் ஆண்டு இக்கப்பல் சேவையும் நிறுத்தப்பட்டது. இதன் காரணமாக ஆங்கிலேயர்கள் ஆரம்பித்த இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான போக்குவரத்து சேவை நிறுத்தப்பட்டது.

யுத்தம் காரணமாக தலைமன்னார் முதல் மதவாச்சி வரையிலான ரயில் பாதையும் முற்றாக சேதமடைந்தது. இந்நிலையில் யுத்தம் முடிவுக்கு வந்ததை தொடர்ந்து முடங்கிபோயிருந்த இலங்கை இந்தியா கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு பல்வேறு தரப்பினரிடமிருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தன. குறிப்பாக இந்திய அரசாங்கம் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பதில் பெரும் ஆர்வம் காட்டியது. எனினும் மிக நீண்ட இடைவெளிக்கு பின்னரே இதுதொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்நிலையில் யாழ். காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல் சேவை ஆரம்பிக்கப் படவிருப்பதாக செய்திகள் வெளிவந்திருந்தன. எனினும் தற்போது அது தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்குமிடையிலான கப்பல் சேவையாக மாற்றப்பட்டுள்ளது.

ஏனெனில் தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரம் குறுகிய தூரமாக காணப்படுகின்றமையால் விரைவான பயணத்தை மேற்கொள்வதற்காக, இத்திட்டம் தலைமன்னாருக்கு மாற்றப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அதுமட்டுமின்றி ரயில் சேவையுடன் இணைப்பதற்கான வசதிகள் காணப்படுவதால் இத்திட்டம் தலைமன்னாருக்கு மாற்றப்பட்டது. அதற்கமைய இலங்கை –இந்திய கப்பல் சேவையை மீள ஆரம்பிப்பதற்காக யுத்தத்தால் சேதமடைந்த தலைமன்னார் இறங்குதுறை புனரமைக்கப் படவுள்ளது.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவினர் அப்பகுதிக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்தனர். இதன் போது தலைமன்னார் இறங்குதுறையின் தற்போதைய நிலைமைகளை கண்காணித்தனர். அதன்படி புனரமைப்பு பணிகளுக்காக 1,800 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் இறங்குதுறையில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்கத்துக்கு சொந்தமான காணியில் 10 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்புனரமைப்பு திட்டத்தின் கீழ் நவீன பயணிகள் முனையம், களஞ்சியசாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் அரச மற்றும் உள்ளூர், வெளிநாட்டு தனியார் துறையின் பங்களிப்புடன் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

புயல் காற்று காரணமாக அழிக்கப்பட்ட தனுஷ்கோடி துறைமுகம் இந்திய அரசாங்கத்தினால் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், தலைமன்னார் – இராமேஸ்வரம் இடையிலான எதிர்கால பயணிகள் கப்பல் சேவைக்கு இந்திய அரசினால் தேவையான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதுதொடர்பில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கருத்து தெரிவிக்கையில், தலைமன்னார் கரையோரப் பகுதி அபிவிருத்தி செய்யப்படுவதை தொடர்ந்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஆரம்பகாலம் முதல் இருந்துவரும் உறவை பலப்படுத்த முடியும்.

குறிப்பாக இந்தியாவிலுள்ள சுற்றுலா யாத்திரிகை தலங்களுக்கு விசேட கப்பல் சேவையை ஆரம்பிக்க முடியும். தம்பதிவ, பௌத்த யாத்திரை செல்ல விரும்பும் பக்தர்கள் குறைந்த கட்டணத்தில் இந்தியா சென்றுவர முடியும். அதுமட்டுமின்றி இரு நாடுகளுக்கிடையிலான வியாபார நடவடிக்கைகள் விருத்தியடையும். வடபகுதி மக்களின் உற்பத்திப் பொருட்களை இந்தியாவில் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ. ஸ்டான்லி டீ மெல் கருத்து தெரிவிக்கையில்,

தலைமன்னார் – இராமேஸ்வரன் கப்பல் சேவையை ஆரம்பிக்கும் முகமாக தலைமன்னார் இறங்குதுறை புனரமைக்கப்படவுள்ளது. இரு நாடுகளுக்கிடையிலான கப்பல் சேவை ஆரம்பிக்கப்படுமாயின் மன்னார் மாவட்டம் பொருளாதார ரீதியாக அபிவிருத்தியடைவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். குறிப்பாக சுற்றுலாத்துறை பாரியளவில் அபிவிருத்தியடையும். பயணிகள் கப்பல் சேவை தான் முதலில் ஆரம்பிக்கப்படவுள்ளது. சரக்கு கப்பல் சேவையும் ஆரம்பிக்கப்படுமாயின் இங்குள்ள வியாபாரிகளுக்கு மேலும் பயனளிக்கும் என அவர் தெரிவித்தார்.

எனவே பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இலங்கைக்கு தலைமன்னார் – இராமேஸ்வரம் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டால் அதனூடாக பல்வேறு வரப்பிரசாதங்கள் கிடைக்கும். புதிய வர்த்தக முயற்சிகளுக்கான கதவுகளும் திறக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



**வசந்தா அருள்ரட்ணம்**

# இல்லற வாழ்வில் பிளவுகளை எதிர்நோக்கும் எண்காரர்கள் யார்?

## ஓர் எண் சோதிட ஆராய்ச்சி

இரண்டாம் எண்காரர்கள் புரியாத புதிர்களாகவும், ஐந்தாம் எண்காரர்கள் அவசரத்தில் முடிவெடுத்து அவதிப்படுபவர்களாகவும் ஏழாம் எண்காரர்கள் எப்போதும் எதிலும் முரண்பட்டு நிற்பவர்களாகவும் எண்சோதிடத்தில் காட்டப்படுகின்றனர்.

சில வாரங்களுக்கு முன்னால் இதே சோதிட ஆய்வுத் தொடரில் எண் சோதிடத்தில் ஒரு புதிய அறிமுகம்! என்னும் தலைப்பில் வெளிவந்த அதிர்ஷ்டப் பெயர் மாற்றம் சம்பந்தமான எனது கட்டுரையைப் படித்த வாசகரொருவர், இலக்கினாதிபதி, மற்றும் கொடுப்பினைக்குரிய 5ஆம் வீட்டுக்குரிய கிரகம், பாக்கிய வீடான 9ஆம் வீட்டுக்குரிய கிரகம் ஆகியவற்றில் ஒன்றாக பாவக் கிரகங்களில் முதன்மை வாய்ந்த சனி மாத்திரம் ஆட்சியோ, உச்சமோ பெற்றிருந்தால், அதற்குரிய எட்டாம் எண்ணில் பெயர் மாற்றம் செய்வது வாழ்வில் எதிர்பார்க்கிற வெற்றியையோ சௌபாக்கியங்களையோ தருமா என்று கேட்டிருந்தார்.



நல்ல கேள்வி. அவருக்கு மட்டுமல்ல! இது தொடர்பில் ஐயப்பாடுள்ள மற்றவர்களுக்கும் ஒரு தெளிவினை ஏற்படுத்தும் விதத்தில் எனது பதிலை தருகிறேன்.....

பாவக் கிரகங்களின் வரிசையில் சூரியனுக்கு அடுத்தவராக சனீஸ்வரன் குறிப்பிடப்பட்டிருப்பினும் உண்மையில் அவர் தீமையையே செய்பவரல்ல. வறுமை, வியாதி, கஷ்ட நஷ்டங்கள், துன்ப துயரங்களென ஒருவரை ஆயுள் பரியந்தம் பீடித்து அவரை ஜீவன் முக்தியடையச் செய்வது சனியின் வேலை. ஜீவன் முக்தியென்றால் இனி பிறப்பேயில்லாமல் இறைவனோடு இரண்டறக் கலந்து விடுகிற ஓர் உன்னத நிலை. இத்தகைய நிலையை அவரவர் சாதகங்களில் சனி அமைந்த இடமும் விதமும் தீர்மானிக்கின்றன. தங்கள் சாதகங்களில் இச்சனியின் ஆதிக்கத்தை அல்லது பாதிப்பைக் குறிக்கும் எட்டாம் எண்ணில் பெயர் கொண்ட மனிதர்கள் யாவரும் காலகதியில் மாமனிதர்களாக, சாமானியர்களால் அண்ணாந்து நோக்கத் தகுந்தவர்களாக உயர்ந்திருக்கின்றனர். பொறுமைக்கும் விடா முயற்சிக்கும் மனித நேயத்துக்கும் பேரறிவுக்கும் உத்தம குணங்களுக்கும் இவர்களே மற்றவர்களுக்கு உதாரணம் காட்டுப்படுகின்றார்கள்.

இயேசுநாதர், மகாத்மா காந்தி, வினோபாவே, கார்ல் மார்க்ஸ், பெனார்ட்ஷோ, ஆபிரகாம் லிங்கன், அன்னை தெரேசா, நெல்சன் மண்டேலா, மார்ட்டின் லூதர் கிங் போன்றவர்களெல்லாம் தத்தம் சாதகங்களில் சனியின் ஆதிக்கம், அல்லது பாதிப்பைக் கொண்டதோடு எட்டிலும் பெயர் அமைந்தவர்களே. இவர்களது உயர்வின் ஒவ்வொரு படியிலும் இவர்கள் நடத்திய போராட்டங்களை, பட்ட அவமானங்களை, அடைந்த துன்ப துயரங்களை நம்மால் பட முடியுமா? சீரிய கொள்கைகளை முன்னிறுத்தி, மக்களை ஒன்று திரட்டி, அவர்களின் மீட்சிக்காக நடத்திய போராட்டங்களை நம்மால் நடத்த முடியுமா? நாமெல்லாம் அன்றாட சீவியத்தில் கிடைக்கும் உணவு, வருவாய் உல்லாசம் போன்ற



சந்தோஷங்களையே பெரிதாக எண்ணி, அவற்றுக்காக ஓடியோடி உழைப்பவர்கள். கஷ்டங்கள் தொடர்வதென்பது நம்மால் நினைத்துப் பார்க்கவும் முடியாதது. உழைப்பு, தொண்டு, மனித நேயம், இவையே சனிக்குரிய இலட்சணங்கள். வருமானம், சௌக்கியம் என்று நம் வாழ்க்கை சுமுகமாகச் செல்ல விரும்பி கோயில்களில் பூஜை புனஸ்காரங்கள் செய்கிறோம். விரதங்கள் அனுஷ்டிக்கிறோம், கிரக சாந்திகள் செய்கின்றோம் அன்னதானங்கள் செய்கின்றோம், மேற்சொன்ன பெரியோர்கள் போல பிறருக்கான துன்ப துயரங்களை தோளில் தாங்கிப் பாடுபட நம்மால் முடியுமா? அவ்விதம் பாடுபட்டு மறுவுலக வாழ்வுக்கு, முக்திக்கு, ஒரு புடமிட்டபொன்னாக உங்களைத் தயார்படுத்த வேண்டுமென நினைத்தால் தாராளமாக எட்டாம் எண்ணில் பெயர் சூடி அதனை வலுப்படுத்தி வரலாம்!



எட்டாம் எண்ணுக்கும் அரசியலுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. ஆனால் அவ்வெண்ணில் பிறந்த அரசியல்வாதிகள் யாரும் எட்டில் பெயர்சூடி உச்சநிலையை அடையவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. மாறாக, அவ்விதம் பெயர் சூடி உச்ச நிலையை அடைந்தவர்கள், பெரும்பாலும் அணையப் போகும் தீபம் பெரிதாக சுடர்விட்டு எரிவது போல், தாம் வாழ்ந்த காலத்தில் வரலாற்றில் ஒரு முத்திரையைப் பதித்து அற்பாயுளில் மரணத்தைத் தழுவிக் கொண்டவர்களாயிருப்பர்!

திருமண வாழ்வில் பிரச்சினைகள், பிளவுகள் தோன்றுவதற்கும் சனிக்கும் பெரும்பாலும் தொடர்புகள் இருப்பதில்லை. அவ்விதம் பிரச்சினைகள் தோன்றுவதானால், அது வறுமை அல்லது ஆரோக்கியக் குறைபாடுகளால் வரலாம். பொதுவாக சனி ஆதிக்கத்தில் பிறந்தோர், பிறருக்காக உழைக்கும் சுபாவமுடையவர்களாகவும், சுகத்தைத் தியாகம் செய்யும் மனமுடையவர்களாகவும் இருப்பதால், தாம்பத்தியத்தில் பிரச்சினைகள் இவர்களை அணுகுவதில்லை. இவர்களது மிதவாதப் போக்கையும் விட்டுக் கொடுக்கும் சுபாவத்தையும் தமக்கு அடங்கிப் போகும் குணமாக எதிர்ப்பாலார் விளங்கிக் கொள்வதாலேயே பெரும்பாலும் பிரச்சினைகள் ஏற்படுவதாகச் சொல்லலாம்.

ஆனால் தாம்பத்தியத்தில் பிரச்சினைகள் தருபவைகளாக மூன்று வகை எண்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. அவையாவன 2, 5, 7. இரண்டாம் எண்ணைக் குறிக்கும் 2, 11, 20, 29 ஆகிய திகதிகளில் பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு குணவியல்புகளோடு விளங்குவதுதான் இந்த எண்ணுக்குரிய விசேடம்! இரண்டாம் திகதியில் பிறந்த உலக உத்தமர் காந்தி அஹிம்சைப் போரை அறிமுகப்படுத்தி கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் நடத்தி வெள்ளையர்களை இந்தியாவை விட்டு வெளியேற்றினார். அதேவேளை 20ஆம் திகதியில் பிறந்த ஹிட்லர் உலகக் கொடுங்கோலனாகி பல இலட்சம் உயிர்களைப் பலியெடுத்தார்!

தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோமென முழங்கிய புரட்சிக் கவிஞன் பாரதி பிறந்தது 11ஆம் திகதியில்.

அதேமாதிரி ஒரு 11ஆம் திகதியில் பிறந்து இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி அப்போதய பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோவை கழுவிலேற்றினார் பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி சியாவுல் ஹக்!



(19ஆம் பக்கம் பார்க்க)

**திருவோணம்**

# "வி.என்.மதிஅழகன் சொல்லும் செய்திகள்" நூற்பிரதிகள் அன்பளிப்பு





"வி.என்.மதிஅழகன் சொல்லும் செய்திகள்' நூலின் முப்பத்தைந்து பிரதிகள் உடுவில் மகளிர் கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி.ஷிராணி மில்ஸ் கல்லூரிக்கு நேரில் சென்று, கொழும்பு உடுவில் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் பிரதிகளை தற்போதைய அதிபர் செல்வி.றொசானா மதுரமதி குலேந்திரனிடம் அண்மையில் வழங்கியுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் வர்த்தக சேவையில் இருந்து ஓய்வு பெற்ற உயர் அதிகாரியும், கல்லூரியின் பழைய மாணவருமான பி.என்.ஜெயசீலன் கொழும்பு பழைய மாணவர் சங்கத்துடன் நூற் பிரதிகளை வழங்குவதற்கான ஒருங்கிணைப்பு பணிகளில் ஈடுபட்டமை குறிப்பிடத் தக்கது.

அதேவேளை வி.என்.மதிஅழகன் சொல்லும் செய்திகள்' நூலின் மற்றொரு தொகைப் பிரதிகள் யாழ்ப்பாணம், அளவெட்டி அருணோதயா கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. எழுத்தாளர் திருமதி.சந்திரா தனபாலசிங்கம் தமது கணவர் ஓய்வு பெற்ற நூலகர் தனபாலசிங்கம் சகிதம் சென்று பிரதிகளை வழங்கி வைத்தார். கல்லூரி அதிபர் ம.மகேந்திரனிடமும், மாணவ மாணவிகளிடமும் பிரதிகளை கல்லூரி திறந்தவெளியரங்கில் வைத்து கையளித்தனர். பிரபல தமிழ், ஆங்கில எழுத்தாளர் பொன். குலேந்திரன் ஞாபகார்த்தமாக அன்னாரது குடும்பத்தவர்கள் நூல் அன்பளிப்புக்கு அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் கௌரவிக்கப்பட்டார் பராசக்தி சுந்தரலிங்கம்



கனடா ரொறண்டோ நகரில் வெளியாகும் மாத சஞ்சிகையான "தமிழர் தகவல்" தனது சஞ்சிகையில் வரும் ஆக்கங்களுக்கு விமர்சனம் எழுதிய இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழும் யாழ்ப்பாணம், சிறாம்பியடியைச் சேர்ந்த பராசக்தி சுந்தரலிங்கத்தை, தனது 32ஆவது வருடாந்த விழாவில் கௌரவித்து தங்கப்பதக்கம் வழங்கி கௌரவித்துள்ளது.

இவர் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் ஓய்வுபெற்ற ஆசிரியையும்இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் மற்றும் லண்டன் BBC ஆகியவற்றின் செய்தி வாசிப்பாளருமான காலஞ்சென்ற சுந்தா சுந்தரலிங்கத்தின் மனைவியுமாவார்.

# ஹெல்மட்

அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தோப்பூர் றவுண்டபோட் கடந்து அல்லைநகர் மத்திய வீதியால் நேராகச் சென்று ஹாஜா மாமா ஜங்சனால் திரும்பி, இதுதான் அவருடைய வழமையான பாதை.

இன்றும் வழக்கம் போல சென்று கொண்டிருக்கையில் திடீரென ப்ப்பீபீபீபீ பீபீபீபீ சத்தம். வளைவில் மறைந்து நின்ற றபீக் பொலிசார் விசில் ஊதிக் கொண்டிருந்தனர். நான்கு பொலிசார். இரண்டு பைக்குகளில் கிளித்தட்டு விளையாட்டில் பழம் கொண்டு வருபவனை குறிவைத்து கோடு மறிக்கும் எதிரணியினர் போல கட்டம் போட்டு நின்றனர். யாரும் ஓட முடியாது.

நன்றாக மாட்டிக் கொண்டார். பொலிசார் சைகை காட்டியபோது, வீதியோரம் தனது மோட்டார் சைக்கிளைக் கொண்டுபோய் நிறுத்தினார். ஏற்கனவே பொலிசாரால் நிறுத்தப்பட்டிருந்த விடலைகள் பலர் மோட்டார் சைக்கிள்களுடன் தலையைச் சொறிந்து கொண்டும் மந்தமாகச் சிரித்துக் கொண்டும் நின்று கொண்டிருந்தனர்.

இக்கூட்டத்துடன் அவரும் நிற்பதற்கு உடலும் மனசும் கூசியது. ஹெல்மட் போடாமல் வந்து விட்டால் போக்குவரத்துப் பொலிசார் விடுவார்களா?

அண்மைக் காலமாக தலையில் ஹெல்மட் இல்லாமல் தான் அவர் மோட்டார் சைக்கிளில் சென்று வருகின்றார். " இவர் ஹெல்மட் போடறல்ல எப்பவும் சைக்கள்ல சும்மா தான் போறாரு ..." எனப் பலர் அவரது காது படவே கூறியதையும் சிலர் நேரடியாகவே "இப்பதான் றபீக் அடிக்கடி வாறானொலே ஹெல்மட்ட போட்டுட்டுப் போற தானே " எனக் கூறியும் உள்ளனர்.

அவர் நாட்டின் சட்டங்களை மதிக்கத் தெரியாதவரில்லை. மற்றவர்களுடைய ஏளனப் போச்சுக்களை காதில் வாங்கிக் கொண்டு சும்மா செல்லுமளவுக்கும் அவர் சுயகௌரவம் அற்றவருமில்லை. அவருக்கு இவ்வாறான கதைகளையும் பேச்சுக்களையும் பார்வைகளையும் சகிக்கவில்லை தான். சில்லறைக்கு, மரக்கறிக்கடைக்குச் சாமான் வாங்க கொப்பியுடன் செல்லும் போது, இறைச்சி மார்க்கட்டில் வரிசையில் நிற்கும் போது, ஆட்டோ பிடிக்காமல் நடந்து செல்லும் போது, பெற்றோல் இல்லாமல் நடுரோட்டில் பைக் நிற்கும் வேளையில் பைக்கில் பழுது என பொய் சொல்லும் போது, மீன் வியாபாரி முணுமுணுக்கும் போது, பேங் புத்தக மீதியை கண்களால் மேய்ந்து விட்டு கெசியர் நிமிர்ந்து பார்த்து பார்க்கும் போது, ஏதோ அருவருப்பை உடம்பு முழுவதும் பூசியதைப் போல உணர்வார். முதுகுச் சட் டைக்குள்ளால் இனம் தெரியாத பூச்சி ஊர்ந்து செல்வதைப் போல நெளிந்து கொள்வார். இருந்தும் என்ன செய்வது, நடைமுறைகளும் சந்தர்ப்பங்களும் அவரைப் படிப்படியாக மாற்றிக் கொண்டு வருகின்றன.

மீண்டும் பொலிசாரின் பீப்பீபீபீ சத்தம் காதைத் துளைக்க, சுயநினைவுக்கு வந்தவராய் கள நிலவரத்தை அவதானிக்கத் தொடங்கினார்.

இ ப்பொழுது பொலிசாரில் இருவர் "ஆட்கள் பிடிக்கும்" வேலையில் ஈடுபட மற்ற இருவரில் ஒருவர் "தடக்கொல" புத்தகத்தை எடுத்து எழுதத் தொடங்கினார். இன்னொரு பொலிசார் ஒவ்வொருவராகஅழைத்துவிசாரித்தபடிலைசென்ஸ், இன்சூரன்ஸ்களைப் பார்த்து "தடகொலகாரருக்கு" தகவல் சொல்லிக் கொண்டிருந்தார்.

"ஹொஸ்பிடலுக்கு போக அவசரமாக வந்தேன் சேர், உம்மாக்குச் சுகமில்லை. அவசரமாக பாமசிக்கு மருந்து வாங்கப் போனேன்" எவ்வளவு கெஞ்சியும் கடைசியில் "சப்போட் ஒண்ணு தாரேன்" என்று கூறியும் அவர்கள் மசிவதாகத் தெரியல்லை.

அவருக்கு முன்னால் உள்ளவர்களை அழைத்துக் கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் இவரைஏறெடுத்துப்பார்த்தார். அது முறைப்பது போலத் தோன்றியது. "என்னடா இவன் மொறச்சிப்பாக்குறான், பார்வையே சரியில்லயே. என்ன நடக்கப் போகுதோ" என எண்ணியவாறு தனது சந்தர்ப்பம் வரும் வரை எதைச் சொல்லி சமாளிக்கலாம், பொய் சொல்வோமா? இல்லை உண்மையைச் சொல்வோமா? உண்மையைச் சொன்னால் என்ன நினைப்பான்களோ! சத்தம் போட்டு இந்தக் கூட்டத்தில் ஏதாவது கூறினால் தனது மானம் மரியாதை என்னவாகும்? அல்லது ஒன்றும் சொல்லாமல் குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டால் "பைன்" கட்டப் பணத்திற்கு என்ன செய்வது? கறண்ட் பில் றெட் பில் வந்துள்ளது. அதற்குக் கட்டக் காசில்லாத நேரத்தில் "பைன்" கட்டக் காசுக்கு எங்கே செல்வது? அவர் மண்டையைக் குடைந்து கொண்டிருந்தார். "மொத்த அறிவாளிளும் ஒன்று சேர்ந்து நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்தில் புதைத்து எஞ்சியதையும் சுருட்டிவிட " இவன் எவ்வளவு அடிச்சாலும் நல்லவண்டா" என்ற வடிவேல் பாணியில் நாட்டின் நிலை. நடுத்தர வர்க்கத்தையும் குழி தோண்டிப் புதைத்துக் கொண்டிருப்பதையும் அதில் தானும் ஒருவன் என்பதையும் அவர் உணரத் தவறவில்லை.



பொலிஸ் உத்தியோகத்தர் அவரை நிமிர்ந்து பார்த்து பக்கத்திலிருப்பவரை " மெகின் எண்ட" எனக் கூப்பிட்டுக் கொண்டு இருந்தார். அப்போது தான் அவர் ஒரு விடயத்தை அவதானித்தார். மெல்ல நழுவியபடி பின்னோக்கி கடைசிக்குச் சென்று கொண்டிருக்கும் தன்னை பொலிஸ் உத்தியோகத்தர் அவதானித்தாலும் அதைக் கண்டும் காணாதது போல தனது முறை வரும் போதெல்லாம் மற்றவர்களை அழைத்துக் கொண்டிருப்பதையும் கண்டார்.

"என்னடா இவன் முதல்ல மொறச்சான், இப்ப என்னடாண்டா என்ன உட்டுப் போட்டு மத்தாக்களக் கூப்புர்றான்? என்னவோ, மாட்டிட்டோம் என்ன நடக்குமோ நடக்கட்டும் எல்லாம் மனுஷனுக்குத்தானே" என தன்னைத் தானே தேற்றிக் கொண்டார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களை பறிமுதல் செய்து கொண்டு ஏனையோருக்கு "தடகொல" கொடுத்து விட்டு கடைசியாக அவரது முறை. இனி யாரும் இல்லை. நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் இவரைச் சூழ்ந்து கொண்டனர். தர்ம சங்கடமாகப் போய் விட்டது. ஆட்களோட ஆட்களாகப் வரிசையில் போய் இருக்கலாம் போல் இருந்தது. வீதியால் போகின்றவர்கள் வருகின்றவர்கள் மற்றும் வழமையாக தோப்பூரில் என்னவென்றாலும் "ஆ" என வாய் பிளந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு கூட்டம் என அனைவரது பார்வையும் இவரை மொய்த்துக் கொண்டிருந்தன. நான்கு சிங்கங்களுக்கு மத்தியில் அகப்பட்ட மானைப் போல உள்ளே நடுங்கத் தொடங்கியது.

அவமானமாகப் போய்விடவே வேறு வழியில்லாமல் தலையைக் குனிந்து கொண்டார்.

பொலிஸ் உத்தியோகத்தர் மேலும் கீழும் இவரைப் பார்த்தார். "எங்க ஹெமட், லைசன், இன்சூரன்ஸ எடுங்க" என்றார். அவர் சற்றுத் தயங்கிய படி நின்றார். "நீங்க ஸ்கூல் சேர் தானே" என்ற பொலிசாரின் முகத்தில் மெல்லிய புன்னகை.

"ஓம் சேர்" என தழுதழுத்த குரலில் சொன்னவர் ஆச்சரியத்துடன் நோக்கினார். இவரை எனக்குத் தெரியாதே. எப்படி என்ன சேர் எண்டு சொல்லுவார். என்னிட்ட படிச்சவரா இருக்கச் சான்சே இல்ல இவரு சிங்கள மனுஷன், ஏதாவது ஸ்கூல்ல இருக்கிற சந்தர்ப்பத்தில ஹ்ஹு ம் அதற்கும் சந்தர்ப்பம் இல்ல" குழப்பநிலை முகத்தில் படர்ந்தது.

"ஒங்கட பொக்கற்றில இருந்த சிவப்பு பேனையும் கண்ணாடியும் ஒங்கட எதையோ தொலைச்சிட்டு முழிக்கிற மாதிரியான முகமும் தான் ஒங்கள சேர் எண்டு காட்டித் தந்திச்சு. சொல்லுங்க சேர் ஏன் ஹெல்மட் போட்டு வரல, மாணவர்களுக்கு முன்மாதிரியா இருக்க வேண்டிய நீங்களே இப்படி இருந்தா, மாணவர்கள் எப்படி சட்டத்த மதிப்பாங்க சொல்லுங்க"

இதற்குப் பிறகும் பொய் சொல்ல அவரது மனம் இடம் கொடுக்கவில்லை. ஏதாவது சொல்லி தப்பிச்சுப் போகவும் மானம் இடம் கொடுக்க முடியவில்லை. அவர் தலையைக் குனிந்த படி "சேர் நான் டீச்சர்தான். ஹெல்மட் போட்டுத்தான் பைக் ஓடுவேன். மூணு மாசத்துக்கு மொதல் கலியாண வீட்ல வெச்சி என்ர ஹெல்மட் காணாமப் போச்சு". அண்டையில இருந்து ஒரு ஹெல்மட் வாங்குறத்துக்கு றை பண்றன் சேர். என்ர சம்பளம் எடம் கொடுக்குதில்ல. மாசா மாசம் கடன்தான் கூடிட்டுப் போகுது. கரண்ட் பில் கட்டுவோமா, கறிக்கு கத்தரிக்கா வாங்குவோமா என யோசிச்சு திண்டாற்ற நேரத்துல ஹெல்மட் வாங்க ஏலுமா சேர்???? அதனால ஹெல்மட் வாங்க ஏலாமப் போய்ட்டுது, சேர். கண்ணோரம் இலேசார நீர் அரும்ப உண்மையை கூறிவிட்டு பெருமூச்சொன்றை விட்டார்.

பின்னர் சற்றுத் தலையை நிமிர்ந்து பார்த்தார்.

பெருமூச்சு விட்டவாறே அவர் நிமிர்ந்தார். நான்கு பொலிசாரும் பேசா மௌனிகளாகி அவரைப் பார்த்தபடியே நின்றனர்.

தோப்பூர் அன்ஸார்

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 83

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | ■ | 04 | 05 | | 06 |
| 07 | | | ■ | 08 | | ■ | |
| 09 | | | ■ | ■ | 10 | | |
| | ■ | 11 | 12 | 13 | | ■ | ■ |
| ■ | 14 | ■ | 15 | | ■ | 16 | 17 |
| 18 | | ■ | 19 | | 20 | ■ | |
| 21 | | 22 | ■ | ■ | 23 | 24 | |
| 25 | | | | ■ | 26 | | |

திரு/திருமதி.செல்வி ..............................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................

..............................

..............................

.................... ....................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 83
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 83

### இடமிருந்து வலம்

1. ஒத்தாசை அல்லது ஒத்துழைப்பு
4. முன்னேற்பாடு
7. ஒரு பொருளின் தரத்தை அறியும் சோதனைக்கு எடுக்கப்படும் மிகச் சிறிய பகுதி (குழம்பியுள்ளது)
8. இதுவும் ஒரு தானியம் (திரும்பியுள்ளது)
9. காய்ச்சல் (குழம்பியுள்ளது)
10. தரத்தால் பிரிக்கப்படுவது அல்லது வகைப்படுத்தப்படுவது
11. ஒரு வகைப் பறவை (குழம்பியுள்ளது)
15. வாரத்தில் ஒரு நாள்
16. அதிர்ஷ்டம் என்றும் சொல்லலாம்.
18. செவி
19. நாட்காட்டியில் காணலாம்.
21. உலகம்
23. தென்னிந்தியாவிலுள்ள ஒரு பெரு நகரம் (திரும்பியுள்ளது)
25. ஆரவாரம், கலகலப்பு (குழம்பியுள்ளது)
26. விவசாயம்

### மேலிருந்து கீழ்

1. இரத்தம்
2. பயிரிப்படாத வெற்று நிலம்
3. வானூர்தி (குழம்பியுள்ளது)
4. முள், ஊசி முதலியவற்றின் கூரான பகுதி
5. உறுதியானது அல்லது நிலையானது
6. வெளியே தெரியும்படியாக இருப்பது
12. களைப்பால் ஏற்படும் சோர்வு
13. திருமணம் செய்யாத பெண் குழம்பிவிட்டாள்.
14. இனிமை
17. ஒரு கருமத்தைச் செய்ய முடியாத கஷ்ட நிலை
18. இளம் ஆண் _ பெண் இருவருடையே ஏற்படும் அன்பு
20. ஆசனம் உடைந்து விட்டது
22. வேலை அல்லது கடமை ( தலைகீழ்)
24. போதை தரும் பானம் (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 82

### விடைகள்

#### இடமிருந்துவலம்

1. நடுநிலை
3. சோகம்
6. ஆறுதல்
7. மனை
9. பலி
10. புத்திமான்
13. தவில்
15. எரி
16. ஊதா
18. கதவு
19. வானம்
20. பிணி
21. அகம்

#### மேலிருந்து கீழ்

1. நண்பன்
2. நிம்மதி
3. சோறு
4. கதலி
5. ஆம்பல்
8. எத்தனை
11. மான்
12. புவி
14. சதம்
15. பிரிவு
16. ஊகம்
17. தானம்
19. அவா

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 82

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ. 500.00 | இரண்டாம் பரிசு ரூ. 350.00 | மூன்றாம் பரிசு ரூ. 150.00 |
|---|---|---|
| **ஏ. புஹாரி** 37, கண்டி வீதி உக்குவளை | **பி. அனுராதா,** 88 1/1 பஸல்ஸ் வீதி, கொழும்பு 06 | **கே.எப். மில்ஹானி,** 14, புளியடி குறுக்குத் தெரு, ஏறாவூர் |

### பாராட்டு பெறுவோர்

**1. எம்,ஏ. நஜுமுதீன்**
அக்கரைப்பற்று

**2. கே.எம்.எம். மாத்தளை**
மாத்தளை

**3. பி.முருகேசபிள்ளை**
களுவாஞ்சிக்குடி

**4. எம். பாசிர்,**
ஹாலிஎல

**5. ரஜினி புண்ணியமூர்த்தி**
மட்டக்களப்பு

**6. வை.ஏ.ஈ. ஜாசி**
பொலன்னறுவை

**7. இல்யாஸ் தாஸிம்**
பாணந்துறை

**8. எம்.எம்.எம். நிஸாம்**
காலி

**9. எஸ், கனகரத்தினம்**
திருகோணமலை

**10. எஸ். சிந்துஜா**
கொழும்பு 11

**AUTOWHEEL**
FAMILY RESTAURANT IS NOW OPEN
AA CEYLON Estd. 1904
"Friday Special Buriyani
RS. 455/- PER PACK
During Weekends
Lamprais Available
Rs.865.00 per pack
Order Now.
VISIT - PickMe
Automobile Association of Ceylon
40, Sir Mohomed Macan Marker Mawatha, Colombo 03
Tele. No: 0774369013 (Krishon)

**Repeat Your Ad For Better Offers**

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
வியாழக்கிழமை 2023.08.17
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5209
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ - 21,424,544.00
ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கங்கள்: 8 3 5 1 0 5

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 518
சீட்டிழுப்பு திகதி: 2023-08-17
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,706,838.00
வெற்றி இலக்கினம்: விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்: 20 24 48 54
விசேட இலக்கினம்: விருச்சிகம்

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம்: 3451
சீட்டிழுப்பு திகதி: 2023.08.17
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: Rs. 73,206,491.20
ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 01 38 64 75
விசேட எழுத்து: K
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம்: 51287

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம்: 1557
17/08/2023
60238
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 404,530,076.00
ஆங்கில எழுத்து: A
சுப்பர் இலக்கம்: 14
வெற்றி இலக்கங்கள்: 21 35 39 51
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

**Lucky 7**
திகதி: 17.08.2023
சீட்டிழுப்பு இலக்கம்: 0035
வெற்றி இலக்கினம்: மேஷம்
வெற்றி இலக்கங்கள்: 5 7 8 9 5 2
L7 இலக்கம்: 3 3
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு: ரூ. 11,041,681.52

**தன நிதானய**
தேதி: 2023/08/17
சீட்டிழுப்பு இலக்கம்: 1239
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 105,368,262.40
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 11 16 25 33
விஷேசட ஆங்கில எழுத்து: B
Double Chance இலக்கம்: 32325

## வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகையில் விற்றல்

### மொரட்டுவை பிரதேச செயலகம் - 2024

மேற்குறிப்பிட்ட மதுபானத்தவறணைகள் கீழ்வரும் திகதிகளில் குறிப்பிட்ட நேரங்களில் மொரட்டுவை பிரதேச செயலகத்தில் குத்தகையில் விற்கப்படும்.

1. வெளிநாட்டு மதுபான தவறணைகள் 2023.09.20 மு.ப. 10.30 மணிக்கு
2. மேற்குறிப்பிட்ட திகதிகளில் தவறணைகள் குத்தகையில் விற்கப்படாத இடத்து 2023.10.20ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மறுபடி விற்கப்படும்.
3. முழு விபரங்களுக்கு 2023.08.11ஆம் திகதிய இல. 2345 இலங்கை வர்த்தகமானி அறிவித்தல் பத்திரிகையைப் பார்க்கவும்.

**இஷன்கா டீ.கே. உடவத்த,**
**பிரதேச செயலாளர்,**
**மொரட்டுவை.**

**மொரட்டுவை பிரதேச செயலகம்,**
**மொரட்டுவை.**

## பெறுகை அறிவித்தல்

### மீரிகம பிரதேச சபை

**மீரிகம பிரதேச சபைக்கு கொம்போஸ்ட் களஞ்சியமொன்றை தயாரிப்பதற்கு காணியொன்றை கொள்வனவு செய்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

**உத்தேச காணி கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

1. குறித்த காணி மீரிகம அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்திருப்பதுடன் காணியின் அளவு 5 - 10 ஏக்கருக்கு இடையில் இருத்தல் வேண்டும்.
2. அக் காணியில் இருந்து 100 மீற்றர் சுற்றுவட்டத்தில் வீடுகள் இல்லாது இருத்தல் வேண்டும்.
3. நீரில் அமிலக்கூடிய காணியாக இல்லாதிருத்தல் வேண்டும்.
4. காணிக்கான பிரதேசத்திற்காக கிட்டத்தட்ட 15 அடி அளவான பாதை இருத்தல் வேண்டும்.
5. குடி நீர் வளங்களுக்கு அருகில் இல்லாதிருத்தல் வேண்டும்.
6. காணி வரை மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் இருத்தல் வேண்டும்.
7. கொள்வனவு செய்தல் அரச மதிப்பீட்டின் பிரகாரம் இடம் பெறும்.
8. மழை நீர் முறையாக வழிந்தோடக்கூடிய காணியாக இருத்தல் வேண்டும்.
9. மீரிகம நகரில் இருந்து கிட்டத்திட்ட 10 கி.மீ. சுற்று வட்டத்திற்குள் இக் காணி அமைந்திருத்தல் வேண்டும்.
10. ரிக்கலற்ற உறுதியுடனான காணியாக இருத்தல் வேண்டும். விலை மனுக்களைச் சமர்ப்பிக்கும் போது 30 வருட உறுதி ஆவணங்களுடன் இணைந்து அனுப்புதல் வேண்டும். (காணியின் வரைபடம் மற்றும் உறுதியின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)
11. கேள்விப் பத்திரம் இரு பிரதிகளுடன் "மூலப் பிரதி" மற்றும் "நகல் பிரதி" என்று குறிப்பிட்டு இரு பிரதிகளும் வேறு வேறு உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு "கொம்போஸ்ட் களஞ்சியத்திற்கான காணியை கொள்வனவு செய்தல்" என்று கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மீரிகம பிரதேச சபையின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
12. 2023 செப்டெம்பர் 12 மு.ப. 10.00 இற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையிலும் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு வருகை தரமுடியும். குறித்த தினம் குறித்த நேரத்திற்கு பின்பு கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். தபாலில் இடம்பெறும் தாமதங்கள் அல்லது தொலைந்து போதல் சம்பந்தமாக மீரிகம பிரதேச சபையின் பெறுகைக் குழுவினால் பொறுப்புக்கூறப்பட மாட்டாது. இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவையெனில் அரச வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் தொ.பே. இல. 033-2273206, 033-2276356 மூலம் செயலாளரை அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.
13. ஒரு கேள்வியை அல்லது பல கேள்விகளை அல்லது சகல கேள்விகளையும் நிராகரிக்கும் அதிகாரத்தை மீரிகம பிரதேச சபையின் பெறுகைக் குழு கொண்டிருக்கும். அக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.
14. நிபந்தனையுடனான குறித்த விண்ணப்பத்தை 2023 ஒகஸ்ட் 21 முதல் செப்டெம்பர் 11வரை வார நாட்களில் மு.ப. 8.30 முதல் பிற்பகல் 3.00 வரை மீரிகம பிரதேச சபையில் தலைமையகத்தில் மீளளிக்கப்படாத ரூ. 1000.00 கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**மீரிகம பிரதேச சபையின் செயலாளர்,**
**மற்றும் அதிகாரம், செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**மீரிகம பிரதேச சபை.**

## வெற்றிடங்கள்

### இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் - குளியாப்பிட்டி

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தினால் கல்விசார் பதவிகளில் உள்ள வெற்றிடங்களுக்கு, தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பட்டதாரி மாணவர்களிடமிருந்து 11.09.2023 வரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும். இது பற்றி மேலதிக விபரங்களுக்கு 2023.08.20ம் திகதிய Sunday Observer பத்திரிகை மற்றும் www.wyb.ac.lk இணையதளத்திற்கு பிரவேசியுங்கள்

**பதிவாளர்,**
**இலங்கை வயம்ப பல்கலைக் கழகம்**
**20.08.2023**

### இலங்கை களனி பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

2021/ 2022 ஆகிய கல்விசார் வருடத்திற்காக பின்வரும் பதவிகளுக்காக 2023.09.07 ஆம் திகதி வரையும் களனி பல்கலைக்கழகமானது விண்ணப்பங்களை வரவேற்கின்றது.

- தற்காலிக விரிவுரையாளர்
- தற்காலிக செய்முறை காட்டுநர்

**கணனியாக்கம் மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்**

முறைமைகள் பொறியியல் திணைக்களம்/ பிரயோக கணனியாக்கம் திணைக்களம்

மென்பொருள் பொறியியல் திணைக்களம்

**விண்ணப்பிக்கும் முறைமை:**

ஒன்லைனின் விண்ணப்பங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். ஒன்லைனின் விண்ணப்பம், விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டி மற்றும் தகைமைகள் தொடர்பான தகவல், சம்பளம் மற்றும் அனுகூலங்கள் ஆகியவற்றை அறிவதற்காக https://www.kln.ac.lk/vacancies என்ற பல்கலைக்கழக இணையதளத்தை பார்வையிடவும்.

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம்.**
18.08.2023.

### விஞ்ஞானபட்டப் பின் படிப்பு நிறுவனம்

## பேராதனைப் பல்கலைக்கழகம்

### 2023/ 2024ஆம் ஆண்டிற்காக போட்டோப் பிரதி சேவையை நடத்திச் செல்லல் மற்றும் அவ் இடத்திலேயே நிறுவனத்தினால் அனுமதித்த பொருட்களை விற்பனை செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்

விஞ்ஞான பட்டப் பின் படிப்பு நிறுவனத்திற்காக 2023/ 2024ஆம் ஆண்டிற்கு போட்டோப் பிரதி சேவை மற்றும் நிறுவனத்தினால் அனுமதிப்பு பொருட்களை விற்பனை செய்வதற்காக அனுபவமுற்ற நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து 2023.08.20 முதல் 2023.09.11 பிற்பகல் 2.30 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மீளளிக்கப்படாத ரூ. 1,000.00 கட்டணத்தை இந்நிறுவனத்தின் காசாளரிடம் அல்லது விஞ்ஞான பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் பெயரில் பேராதனை இலங்கை வங்கிக் கிளையில் நடத்திச் செல்லப்படும் கணக்கு இலக்கம் 0081041788 இற்கு செலுத்தி குறித்த பற்றுச்சீட்டை சமர்ப்பித்து விண்ணப்பங்கள் மற்றும் விபரப் பத்திரங்களை 2023.08.21 முதல் 2023.09.08 வரை வேலை நாட்களில் முற்பகல் 9.00 முதல் பிற்பகல் 3.00 வரை விஞ்ஞான பட்டம் பின் படிப்பு நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அவ்வாறே சகல விண்ணப்பத்துடனும் மத்திய வங்கியினால் அனுமதித்த வர்த்தக வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும் ரூ. 7,500.00 பெறுமதியுடைய 2023.11.26 வரை செல்லுபடியாகும் மீளளிக்கப்படும் கேள்விப் பிணையொன்றை அல்லது அத்தொகையை இந் நிறுவனத்தின் காசாளரிடம் செலுத்தி குறித்த பற்றுச் சீட்டின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட விண்ணப்பங்களை 2023.09.11 பிற்பகல் 2.30 அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு தலைவர், பெறுகைக் குழு (சிறிய), விஞ்ஞானபட்டப் பின் படிப்பு நிறுவனம், த.பெ. 25, பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது விஞ்ஞான பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். குறித்த விண்ணப்பங்கள் அன்றே பிற்பகல் 2.30 இற்கு திறக்கப்படும். கடித உறையின் இடது மூலையில், "போட்டோப் பிரதி சேவையை நடத்திச் செல்லல் மற்றும் அவ் இடத்திலேயே நிறுவனத்தினால் அனுமதித்த பொருட்களை விற்பனை செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரல் 2023/ 2024" என்று குறிப்பிடுதல் கட்டாயமாகும். தேர்ந்தெடுக்கப்படும் வழங்குநரால் குறித்த சேவையை ஆரம்பிப்பதற்கு முன்பு மீளளிக்கப்படும் ரூ. 30,000.00 பிணை வைப்பை வைப்புச் செய்வதுடன் மாதாந்த மின் கட்டணம் மற்றும் மாதாந்த வாடகையும் செலுத்துதல் வேண்டும். இது சம்பந்தமான மேலதிக விபரங்களை தொ.பே. இல. - 081-2394793 ஊடாக உதவிப் பதிவாளர் விஞ்ஞான பட்டப் பின் படிப்பு நிறுவனத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு (சிறிய), விஞ்ஞான பட்டப் பின் படிப்பு நிறுவனம்,**
**த.பெ. 25, பேராதனை,**
**2023.08.20**

## பதவிவெற்றிடம்

### கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட் (அரசாங்கத்தின் முழு உரிமையான கம்பனி)

### கைத்தொழில் அமைச்சு

கம்பனியில் தற்போது நிலவும் பின்வரும் பதவி வெற்றிடத்திற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. கணக்காளர் (01 பதவி வெற்றிடம்) –ஒப்பந்த அடிப்படையில்**

**1.1. தகைமைகள்: வெளியக விண்ணப்பதாரிகள்:**

**வெளியகம்:** 1. பட்டயம் பெற்ற தரசான்றிதழுடன் உரித்தான துறையில் பட்டப்பின் தகைமைப் பட்டத்துடன் 10 வருடஅனுபவம்.

**அல்லது**

பட்டயம் பெற்ற முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவக கற்கைநெறி/ பட்டயசான்றிதழ் கணக்கீட்டாளர் சங்கத்தின் கணக்கீட்டுக் கற்கைகள் பிரிவுA,B மற்றும் பாகம் 1,

**அல்லது**

கணக்கீட்டில் தேசிய உயர் டிப்ளோமா,வர்த்தகம் (இலங்கை தொழில்நுட்ப கல்லூரி),வர்த்தகபட்டதாரி

**அல்லது**

Equivalent with 10 years post qualifying Executive experience in the relevant field.

1.2. **சம்பள அளவுத்திட்டம்: எம்எம் 1-1-2016 [53,175-10x1,375-15x1,910-95,575 ரூபா]**

1.3 **வயதெல்லை: வயதானது 18 இற்கு குறையாமலும் 42 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.**

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்**

i. இலங்கை பிரஜையொருவராகவிருத்தல் வேண்டும்.
ii. பதவிக்குரிய கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கான உடல், உள ஆரோக்கியத்தையும் தீவின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கான ஆற்றலையும் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. மிகச்சிறந்த குணவியல்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**தயவு செய்து கவனிக்கவும்**

பதவி வெற்றிடமானது குருநாகல், தொடங்கஸ்லந்த, மதுராகொடகிரபைட் சுரங்கங்கள் வேலைத்தளத்தில்.
அரசாங்க சேவை/ கூட்டுத்தாபனங்கள்/நியதிச்சட்ட சபைகளில் ஏற்கனவே பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

**ஏனைய அனுகூலங்கள்**

1. அரசாங்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் ஊழியரினால் 10% சேமலாப நிதிய பங்களிப்பும் 15% தொழில் வழங்குநரினாலும் வழங்கப்படுவதுடன் (ஊ.ந.நி. இற்கு 3% அடங்கலானது), வாழ்க்கைப்படி, பிரயாணப் படி மற்றும் ஏனைய சட்டரீதியான பணக்கொடுப்பனவுகள். தினசரி கடமைக்கான வரவின் அடிப்படையில் மாதாந்த உணவு படி, ஊழியர் காப்புறுதி திட்டம் மற்றும் உற்பத்தி அடிப்படையிலான ஊக்குவிப்பு திட்டம்.
2. அரசாங்க திணைக்களங்கள்/கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட அமைப்புக்களின் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் அவர்களின் உரித்தான நிறுவனங்களின் தலைமையூடாகவே அனுப்பப்படல் வேண்டும்.
3. தயவு செய்து உங்கள் விண்ணப்பத்தை சான்றிதழ்களின் பிரதிகளுடன் பின்வரும் முகவரிக்கு 2023.09.03 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் தபாலில் அனுப்பப்படுவதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிப் பெயரையும் குறிப்பிடவும்.

**தலைவர்,**
**கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட்,**
**561/3, எல்விட்டிகல மாவத்தை, நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு-05.**

## HDFC வங்கி

HDFC BANK உங்கள் வீட்டு வங்கி

பன்முகப்படுத்தப்பட்ட நிதித் தீர்வுகள் மூலம் சமூகம் அடங்கலாக இலங்கையர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு தங்குமிடம் மற்றும் ஆதரவை வழங்கி, அனைத்து தரப்பினர்களுடன் மூன்று தசாப்தங்களாக தேசத்திற்கு சேவையாற்றி வரும் வங்கியுடன் இணைந்து வங்கித் துறையில் தொழில்சார் முன்னேற்றத்தை நீங்களும் அடைவதற்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

வங்கியானது அதனது அபிவிருத்தித் துறையில் புதிய கண்ணோட்டங்களை பட்டயப்படுத்தும் பணியில் உள்ளது.

HDFC வங்கி பின்வரும் பதவியை நிரப்புவதற்காக நிரூபிக்கப்பட்ட சாதனைப்பதிவைக் கொண்ட திறமையான, ஆற்றல் மிக்க மற்றும் பெறுபேறு நோக்கமுடைய நபரொருவரை தேடுகின்றது.

### முகாமையாளர் - உள்ளக கணக்காய்வு

**முக்கிய பொறுப்புக்கள்**

1. வங்கியின் அனைத்து பகுதிகளிலும் கிளைகள் அடங்கலாக கணக்காய்வுகள், விசாரணைகள் மற்றும் ஏனைய பணிகளை தகுந்த முறையில் திட்டமிட்டு திறம்பட செய்தல்
2. இடர் அடிப்படையிலான கணக்காய்வு எண்ணக்கருக்களை புரிந்து கொள்வது மற்றும் வங்கித்துறையில் நடைமுறையில் உள்ள செயற்பாட்டு இடர்களை பற்றி அறிந்திருத்தல்.
3. கணக்காய்வு அணியின் கண்காணிப்பு போக்கினை திறம்பட முகாமை செய்தல், காலக்கெடுவில் நிறைவேற்றுவதை உறுதி செய்தல், கணக்காய்வு நோக்கத்தை போதுமான அளவு நிறைவேற்றல் மற்றம் கணக்காய்வு செயல்முறைமையை பின்பற்றல்.
4. கணக்காய்வு மற்றும் விசாரணைகளை சுயாதீனமாக முடிவுக்கு கொண்டு வருதல், கணக்காய்வு அறிக்கைகளை தயாரித்தல்.
5. தலைமை கணக்காய்வு அதிகாரியால் பணிக்கப்படும் முறைமைகள், உற்பத்தி மற்றும் செயல்முறை அபிவிருத்தி திட்டங்களில் திறம்பட பங்களிப்பினை வழங்குதல்.

**தகுதித்தன்மைக்கான தகவுத்திறன்:**

- இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர்களின் நிறுவகம் (ICASL)/ பட்டயம் பெற்ற சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் (ACCA)/ சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் (CMA)/ ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டயம் பெற்ற நிறுவகம் (UK(CIMA)) ஆகியவற்றின் அங்கத்தினர்.

**மற்றும்**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து நிதி/ கணக்கியல்/ வர்த்தகம்/ வியாபார நிருவாகம்/முகாமைத்துவம்/ பொருளியல் ஆகியன தொடர்பாக பெற்ற பட்டம்.
- வங்கியியல் தொடர்பான முழுமையான தொழில்சார் தகைமைகள் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- நிதியியல் சேவைத் துறையில் முகாமையாளராகவோ/ உதவி முகாமையாளராகவோ 5 வருடகால கணக்காய்வு அனுபவம்.
- தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான கணக்காய்வு அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- கணக்கியல் மற்றும் நிதியியல் அறிக்கை நிர்ணயங்கள், இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டிகள் மற்றும் ஏனைய இணக்குவித்தல் மற்றும் ஒழுக்காற்றல் ஆகியவற்றில் முழுமையான அறிவு.
- நிதியியல் நிறுவனமொன்றின் கூட்டக நிருவக ஆளுமை செயன்முறை தொடர்பான ஆழ்ந்த அறிவை கொண்டிருத்தல்.
- மிகச்சிறந்த பகுப்பாய்வு, பொருள் விளக்கம் மற்றும் எழுதும் திறன்கள்.

**வயதெல்லை:** 45 வயதிற்கு கீழே விரும்பத்தக்கது.

சரியான அபேட்சகருக்கு கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் நடைமுறை**

மின்னஞ்சலின் விடய வரிசையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2023.08.30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் **careers@hdfc.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் விபரங்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

**HDFC வங்கி இலங்கை**
**சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை,**
**த.பெ. இல. 2085, கொழும்பு-02.**
**தொ.பே. 0112356800 www.hdfc.lk**

# மிகவும் மதிப்புமிக்க வர்த்தக நாமமாக தரநிலைப்படுத்தப்பட்டுள்ள Dialog Axiata



உலகின் முன்னணி சுயாதீன வர்த்தக நாம மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனமான Brand Finance தமது 20வது வருடாந்த ஆய்வில் 'இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க வர்த்தகநாமம்' எனும் மேன்மைமிகு பட்டத்தை நாட்டின் முன்னணி தொலைத்தொடர்பு இணைப்பு வழங்குனரான 'டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி இற்கு ரூ. 52 பில்லியன் வர்த்தக நாம பெறுமதியுடன் தொடர்ந்து ஐந்தாவது முறையாகவும் வழங்கி கௌரவித்துள்ளது. அதற்கமைய இலங்கையின் பலம் பொருந்திய வர்த்தகநாமமாக வளர்ந்திருக்கும் டயலொக், AAA+ ஃபிட்ச் மதிப்பீட்டை பெற்றுள்ளது. அத்துடன் டயலொக் ஆனது தொடர்ந்து 16வது முறையாக 'மிகவும் மதிப்புமிக்க தொலைத்தொடர்பு வர்த்தக நாமம்' எனும் பட்டத்தையும் சுவீகரித்துள்ளது.

இவை மட்டுமின்றி 17 மில்லியன் இலங்கையர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையை டயலொக் வென்றிருப்பதையும் இலங்கை மக்களின் வாழ்வு மற்றும் நிறுவனங்களை நிலைபேறான டிஜிட்டல் சூழல் அமைப்புகளின் ஊடாக வலுவூட்டி வளப்படுத்தும் நிறுவனத்தின் தீர்க்கமான அர்ப்பணிப்பையும் பறைசாற்றும் விதமாக 'மிகவும் விரும்பப்படும் தொலைத்தொடர்பு வர்த்தகநாமம்' எனும் பட்டத்தையும் தொடர்ந்து 7வது ஆண்டாக சூடிக்கொண்டது.

நாடளாவிய ரீதியில் சமூகத்தில் நல்மாற்றத்தை விளைவிக்கும் பொருட்டு நிறுவனமானது தனது கூட்டாளர்களுடன் இணைந்து நாட்டில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு தீர்வினை காணும் வகையில் 'தேசிய எரிபொருள் அட்டை (Fuel Pass)' யை அறிமுகப்படுத்தியது. மேலும், தனது பங்காளர்களுடன் கைகோர்த்து நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட 120,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குமுகமாக 'மனிதநேய ஒன்றிணைவு' எனும் மனிதாபிமான கூட்டின் மூலம் அத்தியாவசிய நிவாரண பொருட்களை வழங்கியது.

அத்துடன், 'Karuna.lk' எனும் இலங்கையின் முதல் crowdfunding தளத்தின் அறிமுகமானது தொழில்நுட்பம் மூலம் அர்த்தமுள்ள மாற்றத்தை நிகழ்த்த டயலொக் காட்டும் முனைப்பை எடுத்துக்காட்டுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# 6000 மரக்கன்றுகளை நட்டு 42ஆவது ஆண்டினை கொண்டாடிய Orient Finance PLC




இலங்கையில் முன்னணி வகிக்கும் நிதி நிறுவனமான Orient Finance PLC தமது 42ஆவது ஆண்டு நிறைவினை கடந்த 2023 ஜூலை 26ஆம் திகதி பெருமையுடன் கொண்டாடியது. இந்நாளை நினைவுகூறிடும் வகையில் பசுமைமிகு எதிர்காலத்திற்கு பங்களிப்பு செய்திடும் நோக்கத்துடன் மரக்கன்றுகளை நடும் திட்டத்தினை ஆரம்பித்ததன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான தமது உறுதிப்பாட்டை மேலும் உறுதி செய்துள்ளது.

முதற்கட்ட நடவடிக்கையாக வனாதவில்லுவையிலிருந்து அனுராதபுரம், கிளிநொச்சி மற்றும் மன்னார் வரை பரந்து விரிந்துள்ள பழைமையான வில்பத்து வனப் பகுதியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 6000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. இம்முயற்சியானது மனிதர்களுக்கு மட்டுமன்றி வனவிலங்குகளுக்கும் பாரிய அளவில் நன்மை பயக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

Orient Finance இன் இந்த மீள்காடாக்க முயற்சியானது இலங்கையில் ஏற்பட்டுள்ள காடழிப்பு மற்றும் நிலச்சீரழிவுக்கு எதிராக செயற்படுவதுடன் அதை மீட்டெடுக்கவும் உதவி செய்கிறது.

இதன் மூலம் வனவிலங்குகளின் வாழ்விடங்களை மீட்டெடுத்து, பல்லுயிர்த்தன்மையை பாதுகாத்து வனவிலங்குகளின் வாழ்வை செழிக்க வைப்பதன் மூலம் சூழல் சமநிலையை மேம்படுத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குகிறது. இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற எமது நிறுவனமானது பல்வேறு தொண்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், உள்நாட்டு சமூகம் என பல்வேறு பங்குதாரர்களுடன் கூட்டிணைந்துள்ளது. அவர்களின் சுற்றுச்சூழல் சமூகம் மற்றும் ஆளுகையின் மூலோபாயத்திற்கு ஏற்ப கூட்டு அணுகுமுறைகளை மேற்கொள்வதன் மூலம் நிறுவனமானது பல்வேறு விடயங்களில் பயனடைகின்றது.

# திரவப் பெற்றோலிய வாயுவின் பாதுகாப்பான பயன்பாட்டை ஊக்குவிக்கும் பாடசாலை விழிப்புணர்வுத் திட்டம்



இலங்கையில் முன்னணி திரவப் பெற்றோலிய வாயு விநியோகஸ்தரான லிற்றோ காஸ் லங்கா நிறுவனம், வீடுகளில் பாதுகாப்பான முறையில் திரவப் பெற்றோலிய வாயுப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் 'நாளையை பாதுகாக்கும் எமது குழந்தைகள்' என்ற பெயரில் பாடசாலை விழிப்புணர்வுத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இத்திட்டமானது நாடு முழுவதிலும் உள்ள 264 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதுடன், திரவப் பெற்றோலிய வாயுவைப் பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவது குறித்து அறிவூட்டுவது இதன் பிரதான நோக்கமாகும்.

இந்த அணுகுமுறை இளம் மாணவர்களுக்கு சிறுவயதிலிருந்தே தங்கள் குடும்பத்தின் நல்வாழ்வுக்கான பொறுப்பைப் பற்றி கற்பிப்பது மட்டுமல்லாமல், பாதுகாப்பு, வலுசக்தி மற்றும் வலு சக்தியின் இயக்கவியல் பற்றிய கருத்துக்கள் அடிமட்டத்திலிருந்து புரிந்துகொள்ளப்படுவதை உறுதி செய்கிறது. பாதுகாப்பான மற்றும் திறமைவாய்ந்த குடும்பப் பிரிவுகளை உருவாக்குவதற்கு உதவவும், தகவல்களுக்கான பொறுப்பை ஏற்பதற்கும் இது சிறுவர்களை வலுப்படுத்தும்.

மாணவர்களின் ஈடுபாடான பங்கெடுப்பு மற்றும் அவர்களின் முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில் 'நாளையை பாதுகாக்கும் எமது குழந்தைகள்' திட்டத்தில் பல்வேறு பரிசுகள் மற்றும் வெகுமதிகள் வழங்கப்படவுள்ளன.

லிற்ரோ காஸ் லங்காவின் பாடசாலை விழிப்புணர்வுத் திட்டமானது வீடுகளில் திரவப் பெற்றோலிய வாயுவின் பாதுகாப்பான பயன்பாட்டை உறுதிப்படுத்துவதை பிரதிநிதித்துவம் செய்கிறது. அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலமும், பங்கேற்பதற்கான ஊக்கத்தொகைகளை வழங்குவதன் மூலமும், இந்தத் திட்டம் பாதுகாப்பு விழிப்புணர்வை அதிகரிப்பது மட்டுமல்லாமல், இளைஞர்களிடையே பொறுப்பான நடத்தைகளையும் வளர்க்கிறது.

# புத்தாக்கத்துக்காக கௌரவிக்கப்பட்ட SLT- MOBITEL

இலங்கையின் தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL, அண்மையில் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடைபெற்ற Digital Transformation World Asia 2023, TM Forum Catalyst விருதுகள் வழங்கும் நிகழ்வில் 'The Metaverse Experience: Reinventing telco business Phase II' செயற்திட்டத்துக்காக 'Best Innovation & Future Techco' விருதைப் பெற்றுக் கொண்டது.

தொலைத்தொடர்பாடல் துறை, தொழிற்துறை நியமங்களுக்கான கொள்கை ஆதாரங்கள் மற்றும் நிலைபேறான இலக்குகளில் தாக்கம் ஆகியவற்றில் வெற்றிகரமான புத்தாக்கங்களை கௌரவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு அமைந்திருப்பதுடன்,

Digital Transformation Asia 2023 என்பது வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் விருதுகள் வழங்கும் நிகழ்வாக அமைந்திருப்பதுடன், தொழிற்துறையின் முன்னோடிகள், நிபுணர்கள் மற்றும் தொலைத் தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் துறைகளைச் சேர்ந்த பங்காளர்களை ஒன்றிணைத்து, புதிய போக்குகள், புத்தாக்கங்கள் மற்றும் டிஜிட்டல் மாற்றியமைப்பு நடவடிக்கைகளில் சிறந்த செயன்முறைகள் பற்றி கலந்துரையாடுவதாக அமைந்துள்ளது.

இந்த மாநாட்டை, டிஜிட்டல் மாற்றியமைப்பு மற்றும் வியாபார புத்தாக்கம் தொடர்பில் அறிவை பகிர்ந்து கொள்வதற்கு அங்கத்தவர்களுக்கு வாய்ப்பளிக்கும் சர்வதேச தொழிற்துறை சம்மேளனமான TM Forum ஏற்பாடு செய்கின்றது.

# சுற்றுலாத் துறைக்கான நிலையான கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் SLTDA மற்றும் USAID



கொழும்பு, இலங்கை – இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA) மற்றும் USAID ஆகியவை முக்கிய பொது மற்றும் தனியார் துறை பங்குதாரர்களுடன் இணைந்து சுற்றுலாத்துறைக்கான புதிய நிலையான கழிவு முகாமைத்துவ செயற்பாட்டை அண்மையில் ஆரம்பித்துள்ளன. இத்திட்டத்தில் சேருமிடத்தில் குப்பை சேகரிப்பு, தரம் பிரித்தல், சேமிப்பு, மீள்சுழற்சி மையத்துக்கு கொண்டு செல்லுதல் மற்றும் மீள்சுழற்சி செய்தல் ஆகியவை அடங்கும். திண்மக்கழிவுகளை அகற்ற உள்ளூராட்சி நிர்வாகத்திடம் வழங்க வேண்டும். சுற்றுலாவுக்குப் பொறுப்பான பொலிசார், அவ்வப் பகுதி சுற்றுலா சங்கங்களுடன் ஒருங்கிணைத்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு திட்டத்துடன் பாதுகாப்பை உறுதி செய்வார்கள். முதற்கட்டமாக, சிகிரியா, எல்ல, பெந்தோட்ட, பாசிக்குடா மற்றும் நீர்கொழும்பு ஆகிய ஐந்து முக்கிய சுற்றுலாப் பிரதேசங்களில் இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், சுற்றாடல் மற்றும் சுற்றுலா பொலிசார், உள்ளூராட்சி அதிகாரிகள், பிராந்திய சுற்றுலா சங்கங்கள் மற்றும் இரண்டு முன்னணி தனியார் துறை நிறுவனங்களான சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் மற்றும் விரிடிஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றால் ஆதரிக்கப்படும். கழிவு முகாமைத்துவ நிபுணர்கள்.கொவிட் தொற்றுநோயிலிருந்து விடுபட்டு பொருளாதார நெருக்கடியைக் கையாள்வதால் சுற்றுலா இலங்கையின் பொருளாதாரத்திற்கு முக்கியமானது.

தொற்றுநோய்க்கு முந்தைய சுற்றுலா, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது, 2018 இல் 4.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டியது.

# Zee வாடிக்கையாளர்களுக்காக MI திரைப்படத்தை திரையிட்ட NDB




நாட்டின் இளைஞர்கள், முக்கியமாக Z தலைமுறையைச் சேர்ந்தவர்கள், இந்த சகாப்தத்தில் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் எல்லாவற்றிற்கும் மேலாக வசதி, வேகம் மற்றும் இணைப்பு என்பவற்றுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர்.

இதன்மூலம், வங்கித் துறையில் டிஜிட்டல் மாற்றத்தின் முன்னணியில் இருக்கும், டிஜிட்டல் முறையில் செயல்படுத்தப்பட்ட வங்கியான, NDB வங்கியின் டிஜிட்டல் யூத் அக்கவுண்ட், "NDB Zee", இந்த இளைஞர்களின் பல்வேறு தேவைகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட டிஜிட்டல் அம்சங்களை உள்ளடக்கி உள்ளது.

இன்றைய இளைஞர்களின் நிதி உள்ளடக்கத்தை மேலும் ஊக்குவிக்கும் முயற்சியில், NDB வங்கி தனது Zee வாடிக்கையாளர்கள் மற்றும் ஆற்றல்மிக்க இளைய வாடிக்கையாளர்களைக் கவரும் நோக்கில் தொடர்ச்சியாக நிகழ்வுகளை ஏற்பாடு செய்து வருகின்றது. NDB Zee கணக்கு வாடிக்கையாளர்கள் மிஷன் இம்பொசிபிள் 2இன் முதல் காட்சியின் பிரத்யேகத் திரையிடலுக்கு அழைக்கப்பட்டதானது தனது NDB Zee வாடிக்கையாளர்களுக்காக வழங்கப்படும் "NDB மூவி ரீல்ஸ்" தொடரின் சமீபத்திய நிகழ்வாகும். NDB Zee சேமிப்புக் கணக்கு குறிப்பாக இளைஞர்களின் வாழ்க்கையில் புதிய விடயங்களை ஆராய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது அவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மைல்கற்களை அடைய வழிகாட்டுகிறது. NDB Zee ஆனது டிஜிட்டல் ஆர்வமுள்ள 18 முதல் 28 வயதிற்கிடைப்பட்ட வாடிக்கையாளர்களுக்காக பல நன்மைகளை உள்ளடக்கிய வகையில் வடிவமைக்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

## மகுடம் சூட்டப்பட்ட சிங்கர் ஸ்ரீலங்கா

# முதல் 10 வலுவான வர்த்தக நாமங்களில் ஒன்றாக அங்கீகரிப்பு




நீடித்த நுகர்வோரைக் கொண்ட முன்னணி சில்லறை விற்பனையாளரான சிங்கர் ஸ்ரீலங்கா, பிராண்ட் பினான்ஸ் [Brand Finance ]2023 இன் மிக பெறுமதிமிக்க நுகர்வோர் சில்லறை வர்த்தக நாமம் என்று பெயரிடப்பட்டதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையை எட்டியுள்ளது. இந்த அங்கீகாரமானது, வர்த்தக நாம பலத்தை பேணுவதில் நிறுவனத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுவதோடு, வெற்றியில் வர்த்தக நாமத்தின் முக்கிய பங்கினை எடுத்தியம்புகிறது.

சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சி ஆனது சிறந்த சேவை மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவற்றில் அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன், விற்பனைத் துறையில் புதிய தரங்களை நிர்ணயித்து, புதுமைகளை உருவாக்குவதன் மூலம் நீடித்த நுகர்வோரைக் கொண்ட நிலையில் முன்னோடியாக சேவையாற்றி வருகிறது.

பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் சிங்கர் ஸ்ரீலங்கா பல்வேறு தளங்கள் ஊடாக தனது வாடிக்கையாளர்களுடன் தொடர்ச்சியாக இணைந்திருப்பதில் கவனத்தை செலுத்தி வந்ததுடன், அவர்களின் வாழ்வில் வர்த்தக நாமமானது பலமான பிரசன்னத்தை உறுதி செய்து வருகிறது. தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் ஆகியவற்றை பயன்படுத்தி, சக்தி வாய்ந்த தொடர்பாடலை நிறுவனம் பேணி வருவதன் மூலம் தனது பிந்தைய தயாரிப்புகள் மற்றும் ஊக்குவிப்புகள் தொடர்பாக வாடிக்கையாளர்களுக்கு தகவல்களை வழங்கக்கூடியதாக உள்ளது.

# முன்மாதிரி பசுமை கிளையை திறந்துள்ள செலிங்கோ லைஃப்



இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையில் முதன்மை நிறுவனமான செலிங்கோ லைஃப் தனது அதி நவீன சுற்றாடலுக்கு சிநேகமான கிளையை ஜாஎலையில் தனக்கே சொந்தமான காணியில் திறந்து வைத்துள்ளது.

மிகவும் பரபரப்பான இந்த புறநகர் பகுதியில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வசதிகளைக் கொண்டதாக இது அமைந்துள்ளது. கம்பனியின் நிலைத்தன்மை இலக்குகளில் முன்னேற்றம் காணும் அதேவேளை வாடிக்கையாளர்களுக்கும் விரிவான அனுபவங்களை வழங்கும் வகையில் இந்தக் கட்டடம் அமைந்துள்ளது.

180 மில்லியன் ரூபா முதலீட்டில் ஐந்து மாடிகளைக் கொண்டதாக அமைந்துள்ள இந்தக் கட்டடம் 9664 சதுர அடிகளைக் கொண்டது. இலக்கம் 26 நெடுஞ்சாலை நுழைவு வீதி ஜாஎல என்ற முகவரியில் செலிங்கோ லைஃப்பின் இருப்பை அடையாளப்படுத்தும் வகையில் இந்தப் புதிய கட்டிடம் அமைந்துள்ளது. இன்று வரை செலிங்கோ லைஃப் நிர்மாணித்துள்ள இயற்கைக்கு இசைவான, 31வது கட்டடமாக இது அமைந்துள்ளது. மேலும் இது கம்பனியின் மூன்றாவது பெரிய கிளைக் கட்டடமாகும்.

கம்பனியின் காபன் வெளியேற்றப் படிவை மேலும் குறைப்பதற்கு பங்களிப்பு செய்யும் வகையில் இந்தப் புதிய கட்டடத்தில் 33 மறை வலு மற்றும் 5 மறை வலுகொண்ட மின்கள பின்புலத்துடனான சூரிய சக்தி முறை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

செலிங்கோ லைஃப் வலையமைப்புக்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏழாவது மிகப் பெரிய சூரிய சக்தி வளமாகவும் இது அமைந்துள்ளது.

## இல்லற வாழ்வில்...

(15ஆம் பக்க தொடர்)

இந்த இருவரினதும் குண விசேடங்களைக் கவனியுங்கள்! ஒருவரின் குரலில் முழுக்க முழுக்க மனித நேயம்! மற்றவரின் போக்கில் முழுக்க முழுக்க அதிகார வெறி! இந்த இருவரும் விபத்தில் இறந்தனர் என்பதே இருவரையும் இணைக்கும் பொதுவான காரணி!

புரியாத புதிர்கள்

அழகில் ஆறாம் எண்காரர்களை விட அதிகக் கவர்ச்சி வாய்ந்தவர்களாயிருந்தும், இரண்டாம் எண்காரர்கள் பொதுவாக தன்னம்பிக்கையற்றவர்களாகவே இருக்கிறார்கள். வாயில்லாவிட்டால் நாய் கொண்டுபோய் விடும் என்பார்களே! அந்தமாதிரி தமது பலவீனங்களை மறைக்க எதிலும் வாயடி அடித்துக் கொண்டே யிருப்பார்கள். கலாரசனை யுள்ளவர்கள். சினிமாவிலும் தொலைக் காட்சி தொடர்நாடகங்களிலும் ஒன்றிப்போய் அவற்றில் வரும் கதாபாத்திரங்களின் கஷ்டநஷ்டங்களுக்காக உருகிக் கரைந்து கண்ணீர் வடிக்கும் இவர்கள் அக்காட்சிகளில் வரும் குடும்பப் பிரிவினை, மாமியார் மருமகள் பிரச்சினை பற்றிய மணிமணியான யோசனைகளை, சூழ்ச்சிகளை நிஜ வாழ்விலும் பயன்படுத்தத் தவறுதில்லை. தமக்கு விரோதமாகச் சொல்லப்படும் சிறு சொல்லைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாமல் அனலாக வார்த்தைகளைக் கொட்டுவார்கள். தன்னை விட்டு விட்டு, மற்றவர்கள் சந்தோஷம் கொண்டாடுவதை சகித்துக்கொள்ள மாட்டார்கள். இக்கட்டான தருணங்களில் மௌன விரதம், உண்ணாவிரதமென்று தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டு, வருத்திக் கொண்டு, தம்மைச் சார்ந்தோரைச் சங்கடப்படுத்துவார்கள். சபைசந்திகளில் ஒத்த கருத்துடைய பல பேர் மத்தியில் வித்தியாசமாகக் காணப்படுவர். உள்ளூர விஷமத்தனமாகவும் செயற்படுவர்.

எதிலும் எப்போதும் சந்தேகம். முகஸ்துதி செய்பவர்களையே மிகவும் பிடிக்கும்! வாழ்க்கைக்குதவாத அசட்டுக் கற்பனைகளில் மிதப்பவர்கள். நாவலில் படித்ததை, சினிமாவில் ரசித்ததை அப்படியே வாழ்ந்து பார்த்துவிடத் துடிப்பவர்கள். இவர்களது குணவியல்புகள் வெளியாருக்கு வேடிக்கையாயிருக்கும்! சேர்ந்து பழகுகிறவர்களுக்கோ எரிச்சலை மூட்டும்! தங்கள் கனவுகளுக்கும் ஆசைகளுக்குமேற்ப வாழநினைக்கிறார்களேயல்லாது, தமக்குத் துணையாக வருபவர் மாறுபட்ட குணங்களை கொண்டவரென்றோ, வேறு வேறு கருத்துக்களைக் கொண்டவரென்றோ கருதுவதுமில்லை, ஒத்துப் போவதுமில்லை. இவர்களது பாலியல் உணர்வுகள் கூட இதர எண்காரர்களிலிருந்து வேறுபட்டதாகவும் கீழ்நிலைப்பட்டதாகவும் இருப்பதாக எண் சோதிடத்தின் பிதாமகர் கைரோ எழுதுகிறார்.

இயல்பாகவே வந்து வாய்த்து விடுகிற வாயாடித்தனம், தன்னைத் தவிர சூழவுள்ளவர்களைப் பற்றிச் சிந்திக்காத சுயநலம், தேகதிடமின்மை என்பன இவர்கள் விரைவில் சலித்து விடவும், வேறபடவும் துணைபுரிகின்றன. தமது பக்கத்து நியாயமற்ற தன்மையை உணர்ந்திருந்தும் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்காத வரட்டுப் பிடிவாத குணமுள்ளவர்கள்! இத்தகைய குணாதிசயங்கள் கொண்டவர்கள் குடும்ப வாழ்வில் தோற்றுப் போவதில் ஒன்றும் வியப்பில்லையல்லவா?

அவசரமும் வேகமும்

அடுத்து 5, 14, 23 ஆகிய திகதிகளில் பிறந்த ஐந்தாம் எண்காரர்கள். இவர்கள் எதிலும் அவசரக்காரர்கள். அத்தோடு சபல புத்தியும் அதிகம் கொண்டவர்கள்.

வெளிப்பகட்டு, கவர்ச்சியை அள்ளி வீசும் தளுக்கும் மினுக்குமான தோற்றம், பார்வை, பேச்சு, தம்மிலும் மேம்பட்ட அல்லது மாறுபட்ட நாகரிகம் போன்றவற்றால் இவர்கள் எளிதில் கவரப்படுகிறார்கள். எந்த வேகத்தில் கவரப்படுகிறார்களோ, அந்த வேகத்திலேயே சலித்தும் விடுகிறார்கள். கண்டதும். காதல் என்பது இவர்களுக்குதான் உண்டாகிறது. இவர்களின் காதலுக்கு சாதியுமில்லை, சமயமுமில்லை, வயதுமில்லை. எதையும் ஆய்ந்தோய்ந்து பாராமல் அவசரப்பட்டுக் கல்யாணம் பண்ணிவிட்டுப் பின்னால் அவதிப்படுவார்கள்.

இவர்கள் புதுமை விரும்பிகள், எப்போதும் எதிலும் மாறுதலையே விரும்புவார்கள், இடம் மாறுதல், தொழில் மாறுதல், சூழ்நிலை மாறுதல், உடை மாறுதல் உணவு மாறுதல், உறவு மாறுதல் என்று இப்படியே மாற்றிக் கொண்டிருப்பார்கள். இவர்களைப் புரிந்து கொள்வது இவர்களின் துணைவர்களுக்கு பெரும் சிரமமாகவிருக்கும். துணைவரால் தங்கள் எதிர்காலம் பாதிக்கப்படுவதாக இவர்கள் குறை கூறுவார்கள்.

பிறந்த திகதி, மாதம், வரும் மூன்றையும் கூட்டி வருகிற கூட்டெண் வலிமையுடையதாக இருந்தால், அதாவது புருஷத்துவ எண்கள் எனப்படும் 3 அல்லது 9 எண்களாக அமைந்தால் இந்த ஐந்தாம் எண்காரருக்கு ஸ்திரமான, சந்தோஷமான குடும்ப வாழ்வு அமைகிறது. குழந்தைப் பாக்கியமும் கிடைக்கிறது.

மற்றப்படி பிறப்பெண் கூட்டெண்கள் 5 2, 5 4, 5 5, 5 7, 5 8 என வருபவர்கள் பெரும்பாலும் இவ் வாழ்வில் பிரச்சினையுடையவர்களாகவே தோன்றுகின்றனர். அதிலும் பிறப்பெண் கூட்டெண் 5 1 என்று வருபவர் பாலுறவில் தமது துணையை திருப்திப்படுத்தும் சக்தி குறைந்தவராகவே காணப்படுகின்றார். அதே போல ஐந்தாம் எண்ணுக்கு இரண்டாம் எண் என வந்து வாய்க்கும் மணப்பொருத்தம், அடுத்தடுத்த கருச்சிதைவுகளுக்கும் வழிவகுக்கிறது.

கருத்து முரண்பாடு

7, 16, 25 ஆகிய திகதிகளில் பிறந்த ஏழாம் எண்காரர்கள், மற்ற எண்காரர்களைவிட குடும்ப சுகம் குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

ஏழாம் எண்காரருக்கு எதிலும் எப்போதும் தம் துணைவரோடு அபிப்பிராய பேதம் இருந்து கொண்டிருப்பது அவரது குடும்பப் பிரச்சினைகளுக்கு முதற் காரணம்! இதில் மற்றவரது அபிப்பிராயத்திற்கு அல்லது புத்திமதிக்கு தான் கட்டுப்படுவது அவமானம் என்று அவர் கருதுகிறார். பாலியல் பிரியமென்பது ஏழாம் எண்காரர்களில் அநேகருக்கு ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்கு பருவத்திற்கேயுரிய கவர்ச்சியாயிருந்தும் தேவையாயிருந்தும் பின்னர் மாறிவிடுகிறது.

துணைவரைக் கவரக் கூடிய அங்கப் பொலிவுகளோ, பார்வையில், பேச்சில் மிருதுத் தன்மையோ இங்கிதமோ சிலருக்கு இருப்பதில்லை அழகு வாய்ந்த சிலருக்கோ உடல் நிலை பாலுறவுக்கு இலாயக்கற்றும், குழந்தைகள் பிறவாமலும் வாழ்க்கையை ஒரு பயனற்ற நிலைக்கும் கொண்டு செல்கிறது. தங்கள் இயலாமையின் காரணமாக பக்தி வழியில் நாட்டத்தைத் திருப்பி இல்லற வாழ்வின் போகங்களிலிருந்து வெகு சீக்கிரத்தில் ஒதுக்கிக் கொண்டு விடுகின்றனர்.

## செவிப் புலனற்றவர்களுக்கும்...

(04ஆம் பக்க தொடர்)

அதேபோன்று நான் தனிப்பட்ட முறையில் பார்க்கும் இயற்கையின் விதி உள்ளது. ஐந்து புலன்களில் ஏதாவது ஒன்றில் குறைபாடு இருந்தாலும், மற்ற உறுப்புகள் உணர்திறன் அடைந்து, அந்தக் குறைபாட்டை நீக்கும்.

இந்த வாகனச் சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பித்தவர்களில் பெரும்பாலானோர் ஏற்கனவே வாகனம் ஓட்டி வருகின்றனர். இவர்களுக்கு சட்ட அங்கீகாரம் இல்லாதது தான் குறையாக இருந்தது. மறுபுறம் சிந்தியுங்கள். நாளொன்றுக்கு 08 பேர் வீதி விபத்துக்களில் இறக்கும் நாடு இது.

ஒரு வருடத்தில் 40,000 மோசமான போக்குவரத்து விபத்துகள் ஏற்படும் நாடு இது. ஐந்து புலன்கள் சுறுசுறுப்பாக இருப்பவர்களாலேயே இவ்விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

செவித்திறன் குறைபாடுள்ளவர்களால் வீதி விபத்துகள் அதிகரிக்கின்றன என்பதற்கு உலகில் எங்கும் ஆதாரங்கள் இல்லை. நாம் செய்ய வேண்டியது ஒட்டுமொத்த வீதி விபத்துக்களைக் குறைப்பதற்காக நம்மால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும்.

எவ்வாறிருந்தாலும், காது கேளாத வாகனச் சாரதிகளுக்காக இலகுரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் மாத்திரமே வழங்கப்படுகிறது. கனரக வாகங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை.

மற்ற ஓட்டுனர்களுடன் ஒப்பிடும் போது இவர்களுக்கு இருக்கும் ஒரே குறைபாடு அவர்களின் செவித்திறன் குறைபாடு மாத்திரமேயாகும். அந்த குறைபாட்டினால் வாகனத்தை ஓட்ட முடியுமா, முடியாதா என, வாகனப் போக்குவரத்து மருத்துவ நிறுவனம், வாகனப் போக்குவரத்து திணைக்களம், கண், காது, மூக்கு, தொண்டைக்கான விசேட நிறுவனம் போன்றன இணைந்து அறிவியல் பூர்வமான முடிவுக்கு வந்ததன் பின்னரே இந்த முடிவை நாம் அமுல்படுத்தினோம்.

இவ்விடயத்தில் இலங்கை பொலிஸாருக்கு விசேட நன்றிகளை தெரிவிக்க வேண்டும். இவ்விடயத்தில் அவர்கள் பெரும் பங்களிப்பை வழங்கினர்"

மனிதாபிமானத்தின் பெயரால் நாங்கள் ஒரு படி முன்னேறியுள்ளோம். இத்தகைய தீர்மானங்களால்தான் சமுதாயம் வலுப்பெறுகிறது.

**இலங்கை பத்திரிகை பேரவை அறிவித்தல்**

இலங்கை பத்திரிகைப் பேரவையின் வருடாந்திர (2023) பத்திரிகை பதிவுக்காக கீழ்க்காணும் புதிய பத்திரிகையானது தனது பெயரை முன்வைத்துள்ளது.

நாம் மனிதர்கள் அதன்படி,மேலே காணப்படும் பெயர் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அதனை இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் கீழ் காணும் முகவரிக்கு அல்லது தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொண்டு தெரிவிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பேரவை ஆணையாளர்**
**இலங்கை பத்திரிகை பேரவை**
**இல.155/5, காசல் வீதி, பொரளை,கொழும்பு-08.**
**தொலைபேசி இலக்கம் 011-2693272 / 011-2693274, தொலைநகல் - 011-2693271**
**மின்னஞ்சல்- info@slpc.lk**

**அறிவித்தல்**



LIC லங்கா காப்புறுதி நிறுவனத்தின் இரத்தினபுரி கிளையின் உதவி கிளை முகாமையாளராக பணியாற்றி இல. 33, மைதான வீதி, முத்துவ, இரத்தினபுரியில் வசிக்கும் பீ.ஏ. ரொஷான் லியனகே அவர்கள் (தே.அ.அ. 740372955V) 2023 ஜுலை மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் எமது நிறுவனத்தில் பணியாற்றவில்லை என்றும் இதன் பின்னர் அவர் தான எமது நிறுவனத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற எந்த ஒரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும் எமது நிறுவனம் பொறுப்பேற்காது என்றும் இத்தால் அறியத்தருகிறோம்.

**லைப் இன்சூரன்ஸ் கோபரேசன் (லங்கா) லிமிடெட்**
**இல. 29/2, ஷானெல் கட்டிடம்**
**விசாகா வீதி, கொழும்பு 04**

LIC The Hands that Protect Life Insurance Corporation (Lanka) Ltd.

LECO

**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) கம்பனி**

**மொறட்டுவை தெற்கு பாவனையாளர் சேவை அதிகாரியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்காக வீடொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளல்**

**கேள்வி இலக்கம்: LECO/23/NCB/PR4/185**

இலங்கை மின்சார (தனியார்) கம்பனியின் மொறட்டுவை தெற்கு பாவனையாளர் சேவை அதிகார சபை உத்தியோகபூர்வ இல்லத்திற்காக சீதுவை சந்தி மற்றும் கொலுமடம சந்திக்கு இடையில் காலி வீதிக்கு அருகில் வாகனங்களில் செல்லக்கூடிய பிரவேச பாதையுடன் கிட்டத்தட்ட 15 பேர்ச் காணியில் அமைந்துள்ள மூன்று அறைகள், கராஜ் மற்றும் ஏனைய சகல வசதிகளுடனான வீடொன்று வாடகைக்கு/ குத்தகைக்கு தேவை.

**எதிர்பார்க்கும் வாடகை/ குத்தகை உடன்பாட்டு காலம் 02 வருடமாகும்.**

பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் 2023.09.05 14.00 மணி வரை ஏற்கப்படும் விலைமனுப் பத்திரங்கள் திறத்தல் விலைமனுப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் நடைபெறும் கேள்வி வைப்போர்களினால் இப் பெறுகையுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பத்திரங்களின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

**சகல கேள்விகளிலும் கீழ்க்காணும் தகவல்கள் உள் அடக்கப்படல் வேண்டும்.**

- ❖ கேள்வி வைத்தல் ஆவணத்தில் (கேள்விப் பத்திரத்தில்) வேண்டியுள்ள சகல விபரங்கள்
- ❖ எதிர்பார்க்கும் மாதாந்த வாடகை/ குத்தகைத் தொகை.
- ❖ நிபந்தனைகள், வீதிகளுடன் உறுதி மற்றும் வரைபட பிரதிகள் கட்டிட விபரங்கள் போன்றன.

இப் பெறுகைக்கான கேள்விப் பத்திரங்கள் www.leco.lk (கேள்வி அறிவித்தல் பகுதி) இணைய தளம் அல்லது www.promise.lk இற்கு பிரவேசித்து அல்லது 011-2371637 ஊடாக LECO பெறுகை இலக்கத்தை அழைத்து எந்த காசு அறவிடலும் இன்றி இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடையும் திகதி மற்றும் நேரத்திற்கு முன்பு பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுப் பத்திரங்கள் கீழக்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கம்பனியின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். (தபாலில் அனுப்பப்படும் விலைமனுக்கள் திறக்கப்படும் தினம் மற்றும் நேரத்திற்கு முன்பு இலங்கை மின்சார (தனியார்) கம்பனிக்கு கிடைக்கப்பெறல் வேண்டும்.)

வளாகத்தின் உரிமையாளர் மாத்திரம் தமது விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கடித உறையின் மேல் மூலையில் பெறுகைத் தலைப்பு மற்றும் கேள்வி இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் தயவு செய்து மேலதிக பொது முகாமையாளர் மனிதவளங்கள் மற்றும் நிர்வாகம் தொ.பே. இலக்கம் 011-2371600 ஊடாக அழையுங்கள்

**பொது முகாமையாளர்**
**வ/ப இலங்கை மின்சார (தனியார்) கம்பனி,**
**ஈ.எச். குரே கட்டிடம்,**
**இல. 411, காலி வீதி,**
**கொழும்பு- 03**

PROCUREMENT NOTICE
www.leco.lk

LECO

Uva Wellassa University

# கேள்விக்கான அழைப்பு

**இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**

***மருத்துவ பீடத்திற்கான உடற்பாகங்களைப் பிரிக்கும் ஆய்வுகூடமொன்றை (மாற்று) நிர்மாணித்தல்***

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் சார்பாக பெறுகைக் குழுவின் தலைவரால் இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக உடற்பாகங்களைப் பிரிக்கும் ஆய்வுகூடம் ஒன்றை (மாற்று) நிர்மாணிப்பதற்காக தகுதியும் தகைமையும் உள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. பொறியியல் மதிப்பீடு ரூபா 42 மில்லியன் (வெட் இன்றி) ஆவதுடன் ஒப்பந்த காலம் 180 நாட்களாகும்.

தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் ஊடாக கேள்விகள் கோரப்படும்.

ஒப்பந்தங்களை வழங்குவதற்காக தகைமை பெறுவதற்கு, சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலப்படுத்தப்படாது இருப்பதுடன் அரச நிதி சுற்று நிருபத்தின் பிரகாரம் கட்டிட நிர்மாணத்தில் விசேடமான C6, C5 அல்லது C4 CIDA பதிவைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்களைப் இலவசமாகப் பரீட்சிக்க முடிவதுடன், 2023 ஒகஸ்ட் 21 முதல் 2023 செப்டம்பர் 08 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இலங்கை ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பிரதிப் பதிவாளர்/ மூலதன வேலைப் பிரிவிற்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து அல்லது www.uwu.ac.lk பல்கலைக்கழக இணையதளத்தின் மூலம் ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு ஆங்கில மொழியில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணத்தொகுதியொன்றை மீளளிக்கப்படாத ரூ. 10,500.00 கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் காசாளரிடம் செலுத்தி அல்லது ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கான இலங்கை வங்கியின் கணக்கு இலக்கம் 3114820 இற்கு காசு வைப்புச் செய்வதன் மூலம் கொள்வனவு செய்யலாம்.

கொடுப்பனவு முறை காசாக இருக்கும்.

சகல கேள்வியுடனும் கேள்விப் பிணையொன்றை வைத்தல் வேண்டும். கேள்விப் பிணை ரூ. 420,000.00 ஆகும். இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளும் "நிபந்தனையற்ற" வேண்டுதலின் அடிப்படையில் வங்கிப் பிணையொன்றுடன் வைத்தல் வேண்டும். கேள்விப் பிணையானது 2023 டிசம்பர் 11 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை நகல் பிரதியுடன் 2023 செப்டம்பர் 11 பி.ப. 2.00 இற்கு முன்பு பொறியிடப்பட்ட கேள்வி ஆவணங்களை தலைவர், பெறுகைக் குழு, இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பதுளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அத்துடன், அல்லது பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.

ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் மூலதனப் பிரிவிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. 055-3050847 பெக்ஸ் : 055-2226633) கேள்விகள் 2023 நவம்பர் 13 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

கேள்விகள் திறத்தல் 2023 செப்டம்பர் 11ம் திகதி இலங்கை ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் செனட் சபை மண்டபத்தில் பி.ப. 2.00 இற்கு கேள்விதாரர் அல்லது கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் இடம்பெறும்.

கேள்விக்கு முன்னரான கூட்டமொன்று 2023 ஒகஸ்ட் 28ம் திகதி மு.ப. 10.00 இற்கு இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பராமரிப்புப் பணிமனையில் நடத்தப்படுவதுடன், கேள்விதாரர்களுக்கு செயற்றிட்ட தேவைப்பாடுகள் பற்றி தெளிவுபடுத்தலைக் கோரலாம்.

அவ்வாறே நிர்மாணிப்பதற்கான உத்தேச இடத்தைப் பார்வையிடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**திகதி: 2023.08.20**

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்**
**சுகாதார அமைச்சு**

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம் - மேலதிக நிதியிடல் - கடனிலக்கம் 3727 SRI**

**ஆர்வ வெளிப்பாட்டிற்கான வேண்டுகோள்**

HSEP/PMU/PRO/S24/10/2023

**அங்கொடயில் தேசிய தொற்றுநோய்கள் நிறுவகத்திற்காக (NIID) புதிய ஆய்வுகூட கட்டிடத்தொகுதியின் நிர்மாணத்தை மேற்பார்வை செய்வதற்கான உசாத்துணை கம்பனியொன்றை தெரிவு செய்தல்**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கமானது **சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டத்திற்காக – (செயற்றிட்டம் ) அசல் நிதியிடலொன்றை** இலகு தவணை கடனில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுள்ளதுடன் பெறுகைகளின் பாகமொன்றை உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய ஆய்வுகூட கட்டிடத்தொகுதியின் நிர்மாணத்தை மேற்பார்வை செய்வதற்காக உசாத்துணை கம்பனியொன்றை (உசாத்துணையாளர்) ஈடுபடுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த பணி ஒதுக்கீட்டின் குறிக்கோளானது பின்வருவனவற்றிற்காக உசாத்துணை நிறுவனமொன்றை ஈடுபடுத்துவதாகும்.

(i) தொற்று நோய்களுக்காக தேசிய நிறுவனத்திற்காக உத்தேசிக்கப்பட்ட புதிய ஆய்வுகூடத்தில் உசாத்துணை சேவையை மேற்பார்வை செய்தல்

இதற்கமைவாக, சிவில் வேலைகள் தொடர்பான பின்வரும் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லலாம் ஆனால் வரையறுக்கப்பட்டதல்ல.

(i) நிருமாண கட்டத்தின்போது நிர்மாண மேற்பார்வை, ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் கண்காணித்தல் சேவையை வழங்கல்.

(ii) ஒப்பந்த ஆவணங்களில் குறிப்பிட்டவாறான நிபந்தனைகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களுடன் அனைத்து பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளை தேசிய தொற்று நோய்கள் நிறுவக பணிப்பாளரிடம் கையளித்தல்.

**குறிப்பு: மேலே குறிப்பிட்டுள்ள அமைப்பிற்கான அனைத்து வடிவமைப்புக்கள், கணியப்பட்டியல்கள்/ மதிப்பீடுகள் மற்றும் விவரக்குறிப்புக்கள் ஆகியன வடிவமைத்தல் உசாத்துணையாளரினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.**

1. பணி ஒதுக்கீட்டின் நியதிக் குறிப்புக்கள் மற்றும் ஏனைய உரித்தான விபரங்கள் ஆகியனவற்றை கீழேயுள்ள இணைப்பிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். **https://www.adb.org/projects/51107-002/main#project-tenders,**
2. இப்பணி ஒதுக்கீட்டின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவானது 26,000,000 இலங்கை ரூபாவாகும் (இடை நிகழ்வுகள் அடங்கலானது) வரிகள் நீங்கலானது.
3. தகுதியுள்ள உசாத்துணை கம்பனிகள் தேவைப்படும் சேவையை வழங்குவதில் அவர்களின் ஆர்வத்தை குறிந்துரைக்குமாறு இப்போது அழைக்கப்படுகின்றனர்.
4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆஅவ இன் கடன்பெறுநர்களுக்கான பெறுகை ஒழுங்குவிதிகளில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளுக்கமைவாக உசாத்துணை நிறுவனமொன்று தெரிவு செய்யப்படும்.

**ஆர்வ வெளிப்பாட்டை சமர்ப்பிப்பதற்கான அழைத்தல்**

5. **2023 செப்டம்பர் 18 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு பிந்தாமல்** கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு ஆர்வ வெளிப்பாட்டை ஒன்றில் ஆஅவ இன் உசாத்துணையாளர் முகாமைத்துவ முறைமையினூடாக அல்லது வன்பிரதியில் சமர்ப்பிக்கலாம்.

   வன்பிரதியில் சமர்ப்பித்தலுக்கானது: (1) **https://www.adb.org/projects/51107-002/main#project-tenders** என்பதிலிருந்து நிறுவனங்களுக்காக ஆர்வ வெளிப்பாட்டு குறிப்புக்களை பெற்றுக் கொள்ளலாம், அத்துடன் (2) **"Expression of Interest for Consulting Services: Supervision of Proposed New Laboratory complex for National Institute of Infectious Diseases"** என தெளிவான தலையங்கத்தை தபாலுறையொன்றில் குறிப்பிட்டு கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

6. **தெரிவு செய்தலுக்கான தகவுத்திறன்:** தகுதித்தன்மை, தொழில்நுட்ப திறன் - (நிகரான பணி ஒதுக்கீடுகளின் அனுபவம்), புவியியல் திறன், முகாமைத்துவ திறன்.
7. **நலன்களின் முரண்பாடு:** வளமுள்ள உசாத்துணையாளர்கள் ஆஅவ கடன் பெறுநர்களுக்கான பெறுகை ஒழுங்குவிதிகளின் உரித்தான பிரிவுகளை பார்வையிட்டு அவைகளுக்கு அமைந்தொழுகல் வேண்டும்.
8. **மேலதிக தகவலை பின்வருமாறு பெற்றுக் கொள்ளலாம்:**

**அஞ்சல் முகவரி:** செயற்றிட்டப் பணிப்பாளர், சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம், 3/19, கின்சி வீதி, கொழும்பு-08, இலங்கை.

**மின்னஞ்சல் முகவரி:** pmu@hsep.lk

**தொலைபேசி:** +94 112 697 173, +94 112 056 535

**தொலைநகல்:** +94 112 697 163

## கைத்தொழில் அமைச்சு

# இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

## பதவி வெற்றிடங்கள் – தலைமை அலுவலகம் / புல்மோட்டை பொறித்தொகுதி

முழுமையாக அரசுக்குரித்தான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் நிறுவனத்தில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பொது முகாமையாளர் (General Manager)**
சிரேஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதி (HM 2-1)

**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி - (01 பதவி)**
**(தேவைக்கேற்ப தகைமை அலுவலகம் மற்றும் புல்மோட்டை பொறித்தொகுதியின் சேவையாற்றுதல் வேண்டும்)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மனித வள முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் / கணக்கியல் தொடர்பில் ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்

அத்துடன்

மனித வள முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் / கணக்கியல் துறைக்கு இயைபான விடயத்துறையொன்றில் பட்டப் பின்படிப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

பட்டத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ நிலைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 18 வருட கால அனுபவம். (குறைந்தபட்சம் இதில் 5 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையிலாக இருத்தல் வேண்டும்)

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மனித வள முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் / கணக்கியல் தொடர்பில் ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்

அத்துடன்

மனித வள முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் / கணக்கியல் தொடர்பான விடயத்துறையில் கலாநிதிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

மற்றும்

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ நிலைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 5 வருட கால சேவை அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதிப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 5 வருட காலம் இயைபுடைய துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

அத்துடன்

பல்வேறு கடமைகளில் ஈடுபட்டுள்ள குழுவிற்கு தலைமைத்துவம் வகிப்பது போன்றே மனித மற்றும் ஏனைய வளங்களை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதில் நிலையான தேர்ச்சி.

**HM-2-1 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள குறியீட்டு இலக்கம் - HM-2-1, ரூபா 91,645/- = 2700x12 = 124,045/-

ரூபா 91,645/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**வயதெல்லை:** 35 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**பொதுவாக வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்குப் புறம்பாக HM-2-1 சம்பள வகுதிக்கு பின்வரும் மேலதிக கொடுப்பனவுகள் உரித்தாகும்.**

1. PED/1/2015, PED/1/2015(i) மற்றும் PED/1/2015(ii) எனும் சுற்றுநிருபங்களின் பிரகாரம் போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது கடமைகளுக்காக நிறுவனத்தின் வாகனம் எனும் இரண்டில் ஒன்று வழங்கப்படும்.
2. அரச வியாபார 02/2022ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு பற்றுச்சீட்டு கொடுப்பனவுகள்
3. முகாமைத்துவ சேவை 05/2017ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதவிக்குரித்தான செயல்நிலை சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்சார் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

**02. சந்தைப்படுத்தல் முகாமையாளர் - (Marketting Manager)**
முகாமைத்துவ சேவை தொகுதி (MM 1-1)

**வெற்றிடம் நிலவும் இடம்: பிரதான அலுவலகம் - (01 பதவி)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் தொடர்பாகப் பெற்றுக்கொண்ட பட்டம்

மற்றும்

பட்டத்தைப் பெற்றுக்கொண்தன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் நிதித் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**
**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல்**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. கனிஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதியில் (JM 1-2) இயைபுடைய விடயத்துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**MM-1-1 சேவை தொகுதிக்குரிய குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள குறியீட்டு இலக்கம் - MM-1-1, ரூபா 53,175/- = 1,375x10, 1,910x15 = 95,575/-

ரூபா 53,175/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள அளவு நிறுவனக் கோவையின் VII உப பந்தியின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**வயதெல்லை:** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**பொதுவாக வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்குப் புறம்பாக MM-1-1 சம்பள வகுதிக்கு பின்வரும் மேலதிக கொடுப்பனவுகள் உரித்தாகும்.**

1. அரச வியாபார 02/2022ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு பற்றுச்சீட்டு கொடுப்பனவுகள்
2. முகாமைத்துவ சேவை 05/2017ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதவிக்குரித்தான செயல்நிலை சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்சார் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

**கொடுப்பனவுகள்**

01. பொதுத் திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட 7800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப் படி
02. மாதாந்த உணவுக் கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
03. மாதாந்த வரவு ஊக்குவிப்பு கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
04. மாதாந்தம் 4,000.00 ரூபா கஷ்டப் பிரதேச கொடுப்பனவு (புல்மோட்டை பொறித்தொகுதியில் சேவையாற்றுபவர்களுக்கு மட்டும்)
05. மாதாந்த உற்பத்தியின் அடிப்படையில் வழங்கப்படும் உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவு
06. 5,000.00 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு

**அனுகூலங்கள்**

01. வருடாந்த உற்பத்தியை ஊக்கப்படுத்தும் கொடுப்பனவு
02. வருடாந்த போனஸ்
03. சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ விடுதி மற்றும் வெளியக சிகிச்சைக்கான காப்புறுதி பாதுகாப்பு
    i. ஒரு வருடத்துக்கு 200,000.00 ரூபாவுக்கான மருத்துவ விடுதிக் காப்புறுதி பாதுகாப்பு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    ii. ஒரு வருடத்துக்கு 20,000.00 ரூபாவுக்கான வெளியக சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    iii. ஒரு வருடத்துக்கு 5,000.00 ரூபாவுக்கான பற்சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
04. நிலையான (நிச்சயிக்கப்பட்ட) எல்லையில் மருத்துவச் செலவு வழங்கப்படும்.
    i. இரண்டு வருடத்திற்கு ஒரு முறை 12,000.00 ரூபாவுக்கான கொடுப்பனவு (மருத்துவ நிபுணர் கட்டணம், மருத்துவ பரிசோதனைக் கட்டணம், மூக்குக் கண்ணாடி மற்றும் செவிப்புல உபகரண செலவுகளுக்காக)
    ii. மகப்பேற்றிற்காக இரண்டு வருடத்திற்கொருமுறை 12,000.00 ரூபா கொடுப்பனவு.
05. இதற்குப் புறம்பாக நிரந்தர ஊழியர்களுக்கான ஏனைய சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிமை உண்டு.
06. ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பாக ஊழியரினால் 10% மற்றும் நிறுவனத்தினால் 15% மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு நிறுவனம் பங்களிப்புச் செய்யும்.

**பொது நிபந்தனைகள்**

1. அனைத்து விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு ஒப்படைக்கப்படும் விடயங்களை செவ்வனே நிறைவேற்றுவதுடன், நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்குத் தேவையான உடல் ரீதியான மற்றும் மன ரீதியான தகுதி உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் மொத்த உழைப்பில் இருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி (Pay as you earn Payee Tax) அறவிடப்படும்.

அரசாங்க சேவை / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டசபைகள் மற்றும் அரச நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்கள் அவர்களின் விண்ணப்பத்தை தமது திணைக்களம் / நிறுவனத்தின் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்பும்போது உங்களின் கையொப்பத்துடன் விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும் என்பதுடன் சகல சான்றிதழ்களினதும் புகைப்படப் பிரதியுடன் அனுப்புதல் வேண்டும். (முறையாக சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

நீங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணபிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு ராஜகிரிய, சரண மாவத்தை, இல. 341/21ல் அமைந்துள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் தலைவருக்குக் கிடைக்கும் வகையில் 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**தவைவர்,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**341/21, சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

## அம்பலந்தொட்ட பிரதான நகரில் அலுவலக வசதிகள் தேவை

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் அம்பலந்தொட்ட கிளைக்காக பின்வரும் வசதிகளையுடைய அலுவலக இடப்பரப்பொன்று வாடகைக்கு/ குத்தகைக்கு பெறுவதற்கான தேவைப்பாடொன்று உருவாகியுள்ளது.

| கிளை | சதுர அடி |
|---|---|
| அம்பலந்தொட்ட | 1700 - 2000 |

**தேவைப்படும் வசதிகள்:**

- பிரதான வீதியொன்றிற்கு முகப்பாகவுள்ள தரை மாடியொன்று
- ஆகக் குறைந்தது 4 வாகனங்களுக்கான நிறுத்துமிடம்
- போதுமானளவு காற்றோட்டத்துடனான தனியான மின்பிறப்பாக்கி அறைக்கான இடப்பரப்பு
- தீ பாதுகாப்பு காப்புறுதிச் சான்றிதழ்
- மாற்றுத்திறனாளிகளுக்காக தனியான உட்புகும் வழி
- நீர், தொலைபேசி, மூன்றுவழி (3 Phase) மின்சாரம், மின்பிறப்பாக்கி மற்றும் சுத்திகரிப்பு வசதிகள் அடங்கலான ஏனைய அடிப்படை தேவைப்படுத்தல்கள்.
- அவசர வெளியேறும் வழிகள்
- ஓடு பதிக்கப்பட்ட தரை
- ஆகக் குறைந்தது 25 அடியுள்ள வீதி முகப்பு

2023.09.08 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை, சதுர அடியின் எண்ணிக்கை, அங்கீகரிக்கப்பட்ட கட்டிட கிடைப்படம், COC, உறுதி மற்றும் நில அளவை கிடைப்படம் மற்றும் ஏனைய நிபந்தனைகள் அடங்கலான முத்திரையிடப்பட்ட விண்ணப்பம் மற்றும் அனைத்து விபரங்களையும் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது அதே முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். கேள்விகளை அவைகளை மூடியவுடன் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர் (பெறுகைக் குழு),**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு-03.**

மேலதிக விபரங்களுக்கு 011-7722879/011-7722784 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக மனித வளங்கள் மற்றும் லொஜிஸ்டிக்ஸ் இற்கான பிரதான முகாமையாளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்,**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு-03.**

# சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PGIIM)

# கொழும்பு பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம் - பணிப்பாளர் பதவி

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தை முகாமைப்படுத்துவதற்கும் தலைமைதாங்கிச் செல்லக்கூடிய பொருத்தமான தகுதி, தகைமை மற்றும் அனுபவமுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து, கொழும்பு பல்கலைக்கழக சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்கு இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

PGIIM பணிப்பாளரானவர் நிறுவகத்தின் முழுநேர அலுவலகராவர் என்பதுடன் முழுநேர நிறைவேற்று கல்விசார் மற்றும் நிதித்துறைக்கு பொறுப்பான அலுவலராகவும் விளங்குவார். அவர் (ஆண்/பெண்) நிறுவகத்தின் ஒழுங்கை பேனுவதற்காக பொறுப்பையும் கொண்டிருப்பார். அவர் (ஆண்/பெண்) நிறுவகத்தின் முகாமைத்துவச் சபையின் உத்தியோகபூர்வ உறுப்பினராகவும் தலைவராகவும் இருப்பார்.

**1. தகைமைகள்:**

- மருத்துவ கலாநிதி (MD/MS) அல்லது மருத்துவத்தில் அல்லது சுதேச மருத்துவ சிறப்புத் துறையில் முனைவர் (PhD அல்லது நிகரானது) பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- கலாநிதி தகைமையைப் பெற்ற பின்னர் ஐந்து (05) வருட நிருவாக அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- உயர் கல்வித் துறையில் குறிப்பாக சுதேச அல்லது அலோபதி மருத்துவத்தில் பெற்ற முன்னைய நிருவாக அனுபவத்தைக் கொண்டிருத்தல் ஒரு அனுகூலமாகும்.

**2. வயது:** முடிவுத்திகதியன்று விண்ணப்பதாரிகள் 63 வயதிற்கு கீழ்ப்பட்டவராகவிருத்தல் வேண்டும்.

**3. சம்பள அளவுத்திட்டம்:**
மாதமொன்றிற்கு ரூ 117,350-13x2700-152,450. U-AC5(II) அத்துடன் பதவிக்கு ஏற்புடையதான அனுகூலங்கள் வழங்கப்படும்.

குறித்த விண்ணப்பதாரர், மேற்படி சம்பளத்திற்கு மேற்பட்ட தொகையொன்றைப் பெறும், பல்கலைக்கழக சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான ஒரு ஆசிரியராக இருப்பின், அவர் (ஆண்/பெண்) பல்கலைக்கழக சுற்றுநிருபங்களின் பிரகாரம், கல்விசார் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுடன் தற்போதைய சம்பள மட்டத்தில் வைக்கப்படுவார்.

**குறிப்பு:** மேற்படி ஆரம்ப சம்பள அளவுத்திட்டத்திற்கு மேற்பட்ட சம்பளத்தைப் பெறும், தற்போது அரச துறையில் தொழில்புரிபவர்கள், அதற்கு சமனான ஒரு சம்பள நிலையில் வைக்கப்படுவார்கள்.

குறித்த நியமனத்தின் நியதி மற்றும் நிபந்தனைகள், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தினதும் (திருத்தம் செய்யப்பட்டவாறானது) 2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவக கட்டளைச்சட்டத்தின் மூலமாகவும் நிர்வகிக்கப்படும்.

**4. பதவிக்காலம்:**

நியமனத்திகதியிலிருந்து மூன்று வருடங்கள் அல்லது 65 ஆவது பிறந்த தினம், இவற்றுள் எது முன் நிகழ்கின்றதோ அது அமுல்படுத்தப்படும்.

**5. ஏனைய அனுகூலங்கள்:**

i. உத்தியோகபூர்வ போக்குவரத்து
ii. மகிழ்வூட்டல் தொடர்பான கொடுப்பனவு
iii. பல்கலைக்கழக சேமலாபநிதிப் பங்களிப்பு
iv. ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்பு

**6. விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்:**

உத்தேச விண்ணப்பதாரர்கள் தமது சுயவிபரக்கோவையை 2023 செப்டெம்பர் 12 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர், சுதேச மருத்துவப் பட்டப்பின் நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகம், 5 ஆம் மாடி, தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, கொட்டா வீதி, பொறளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்'' என குறிப்பிடுமாறு இத்தால் விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

விண்ணப்பங்களுடன்/ பெயர் குறித்தல்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

1. விண்ணப்பதாரியின்/ பெயர் குறிப்பிடப்படுபவரின் (சான்றுடன்) முழுமையான சுயவிபரக் கோவை அடங்கலாக விண்ணப்பதாரியின் பிறந்த திகதி (பிறப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்)
2. நிறுவகத்தின் அபிவிருத்திக்கான நோக்கு தொடர்பான கூற்றொன்று
3. பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படின் அவர் (ஆண்/பெண்) எதனை அடைய விரும்புகிறார் என்பதற்கான சுருக்கமான கூற்றொன்று.
4. பெயர் குறிப்பிடப்படுபவரெனின் அவரது இணக்கக் கடிதம்.
5. தற்போதய பணிப்பாளர் ஒரு விண்ணப்பதாரியானால், மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்களுக்கு மேலதிகமாக அவர் அலுவலகத்தில் முதல் காலத்தில் செய்த சாதனைகளை முன்னிலைப்படுத்தும் அறிக்கையை அவர் சமர்ப்பித்தல் வேண்டும்.

பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவகங்கள், பொதுச்சேவை, கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபை ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை பொருத்தமான தகைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்படாத அல்லது தெளிவற்ற அல்லது மேலேயுள்ள தேவைப்படுத்தல்களுக்கு ஒத்திராத அல்லது விண்ணப்பமுடிவு திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**சிரேஷ்ட உதவிப் பதிவாளர்,**
**முகாமைத்துவ சபைக்கான செயலாளர்,**
**சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம்,**
**கொழும்பு பல்கலைக்கழகம்,**
**5 ஆம் மாடி, தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை,**
**கோட்டா வீதி, பொறளை.**
**20.08.2023.**

# வாரபலன்



20.08.2023 - 26.08.2023

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

(அஷ்விணி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

பாக்யாதிபதி குரு 5, 7, 9 முதலிய ஸ்தானங்களைப் பார்க்கிறார். 5ஆம் இடத்தில் இராசி அதிபதியோடு தனாதிபதி சேர்ந்து இருக்கிறார். குரு பார்வை செய்கிறார். 6ஆம் இடத்து புதன் 6 க்கு 12 ஐந்தில் வரும்போது பகை நீங்கும். வியாதிகள் கட்டுப்படும். உத்தியோகம் சிறக்கும். கடன் குறையும். 7 இல் கேது இருப்பினும் குரு பார்வையால் கணவன் மனைவி கருத்து வேறுபாடு நீங்கும். முயற்சி வெற்றி அடையும். மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பு கிடைக்கும். வணிகம் முன்போலவே நல்ல விதமாக நடக்கும். வெளியில் இருந்து நிதி உதவி கிடைத்து தொழிலை விஸ்தரிக்கலாம். சனி 11 இல் இருக்கிறார். அது இலாபஸ்தானம். ஆயினும் பாதகஸ்தானம். எனவே வருவது போல் வந்து சில சங்கடங்களைத் தரும். நிதானமும் பொறுமையும் அவசியம். இப்பொழுது தொழில் விஸ்தரிப்பு வேண்டாம்.

## ரிஷபம்

(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )

கேந்திரத்தில் இராசிநாதன் குரு பார்வையோடு இருக்கிறார். 2க்குரிய புதன் அவர்களோடு இருக்கிறார். 7க்குரியவன் குரு பார்வை பெற்றிருப்பதால் குடும்பத்தில் கருத்து வேறுபாடு நீங்கும். 10 ல் தொழில்காரகன் சனி ஆட்சியாக இருக்கிறார். எனவே இதுவரை இருந்த சிறுசிறு தொழில் சங்கடங்கள் இனி நீங்கிவிடும். புதிய வாய்ப்புகள் புலப்படும். கேது ஆறில் இருக்கிறார். அது நல்ல இடம்தான். பக்தி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கக்கூடிய வாய்ப்புண்டு. 5க்குரியவன் நாலில் இருப்பதால் வேலைச்சுமை அதிகரிக்கும். நினைத்த பல விஷயங்கள் செய்ய முடியாது. திட்டமிடாவிட்டால் அவஸ்தை தான். குருவும் ராகுவும் சேர்ந்து விரயத்தில் இருப்பதால் செலவுகள் அதிகரிக்கும்.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்) 6க்கு உரிய செவ்வாய் நீசம் நீங்கி சிம்மத்தில் இருப்பதும் அதற்குரிய சூரியன் குருவுக்கு கேந்திரத்தில் தன ஸ்தானத்தில் இருப்பதும் சிறப்பு. புதிய உத்வேகம், தைரியம் பிறக்கும். உங்களைத் தேடி சில நல்ல வாய்ப்புகள் வரும். புத்தி கூர்மையாகச் செயல்படும். நிதானமாய் பயன்படுத்தினால் வெற்றி நிச்சயம். இந்த வாரம் பல கிரகங்கள் உங்களுக்கு அனுகூலமாகவே சஞ்சரிக்கின்றன. சுப காரியங்களில் இருக்கும் சிக்கல் விலகும். கல்யாண ஓசை கேட்கும் வாய்ப்புண்டு. பணவசதி நன்றாகவே இருக்கும். சிலருக்கு சந்ததி விருத்தி உண்டாகும். வீடு கட்டும் வாய்ப்பும், புதிய வீட்டுக்கு குடி போகும் வாய்ப்பும் உண்டு.

## கடகம்

( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

தன குடும்பகாரகன் சூரியன் இராசியிலேயே இருக்கிறார். குருவுக்கு கேந்திரம். 2இல் உள்ள கிரகங்களுக்கு குரு பார்வை கிடைக்கிறது. கணவன் மனைவி குடும்ப உறவுகள் நல்ல படியாக இருக்கும். 4,5 க்குரிய கிரகங்கள் கூடி நின்று குரு பார்வை பெறுவதால், புதிய ஆடை, ஆபரணம் வாங்குவதும், சொந்த ஊர் பிரயாணம் மற்றும் உறவுகளைச் சந்திப்பதும் நடைபெறும். புதிய வீடு குடி போகும் வாய்ப்பு கிடைக்கும் அல்லது வீடு வாங்குவீர்கள் நல்ல காரியங்கள் நடக்கும். பண விஷயமும் பெரிய அளவில் பாதிக்காது. சுக்கிர குரு இணைப்பு பலம் என்பதால் ஏதோ ஒரு உதவி கிடைத்துக் கொண்டே இருக்கும். பிறர் சொல்லும் நல்ல விஷயங்களை காது கொடுத்துக் கேளுங்கள். ஆலோசனை செய்யுங்கள்.

## சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)

இராசிநாதன் 12 இல் நிற்பது ஒரு பலவீனம்தான். ஆயினும் இராசியில் உள்ள கிரக பலத்தாலும் ராசிக்கு குரு பார்வையும் கிடைப்பதாலும் இராசி வலிமை பெறுகிறது. பெரிய தீமை எதுவும் வராது. குடும்ப உறவுகள் நல்லபடியாக இருக்கும். பாக்கிய குருவின் பார்வை மூன்றில் விழுவதால் தைரியம் கூடும். எதையும் எதிர்கொள்ளும் திறன் அதிகரிக்கும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். மூன்றில் உள்ள கேது, ஸ்தான பலத்தால் சில பிரச்சினைகள் தீர்ந்துவிடும். பத்திரிகை தொழில் நுட்பத்துறையில் உள்ளவர்களுக்கு முன்னேற்றம் கிடைக்கும். வீடு கட்ட கடன் உதவி கிடைக்கும். உடல் பாதிப்பு குறையும். சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். 7இல் சனி இருப்பதும் அவர் இராசியைப் பார்ப்பதும் நட்பு வட்டாரத்தில் சில தவறான கருத்துக்கள் தோன்றி பெயர் கெடும்.

## கன்னி

(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)

இராசி அதிபதி புதன் 10க்குரியவர். குரு பலம் பெற்று தன குடும்ப அதிபதியோடு குடியிருப்பது சிறப்பு. 6இல் சனி பலமடைந்து இருக்கிறார். 6ஆம் இடத்தை கூட்டு கிரகங்கள் பார்ப்பதாலும், குரு பார்வை பெற்றுப் பார்ப்பதாலும் நல்ல விஷயங்கள் நடக்கும். உத்தியோகத்தில் சிக்கல்கள் வந்து நீங்கும். சிக்கலை பொருட்படுத்தி பெரிதுபடுத்த வேண்டாம். வருமானம் நன்றாக இருக்கும். சுக்கிரன் வக்ரமாக இருந்தாலும் எதிர்பாராத அதிர்ஷ்டச் செய்திகளும் வரும். கணவன் மனைவி அந்நியோன்யம் நன்றாக இருக்கும். 2இல் கேது இருப்பதால் வார்த்தைகளை அளந்து பேசுங்கள். மேலதிகாரிகளோடு உரசல் வேண்டாம். நாலுக்குரிய குரு 8இல் ராகுவோடு இருப்பதால் திடீர் கஷ்டங்கள் வரும்.

## துலாம்

(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

குரு இராசியைப் பார்ப்பதும், 5ஆம் பார்வையாக லாபஸ்தானத்தைப் பார்ப்பதும் அங்கே கிரகங்கள் வலு இருப்பதும் மிக நன்மையான பலன்களைத் தரும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். மனதில் உற்சாகம் பிறக்கும். நற்சிந்தனை அதிகரிக்கும். செயலூக்கம் பிறக்கும். தன்னம்பிக்கையுடன் எந்தச் செயல்களையும் முடிப்பீர்கள். முயற்சிகள் வெற்றியை நோக்கி நகரும். பணவரவு திருப்தியாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். சுபகாரிய முயற்சிகள் வெற்றி அடையும். புத்தியைக் கூர்மையாக்கி நிதானத்தோடு பிரச்சினையை அணுகுங்கள். தெளிவாகும். எந்த சிக்கலுக்கும் விடைகள் கிடைக்கும். சனியின் வக்கிரகதி உடல் உபாதைகளைத் தரும். கவனம் சிதறினால் தொழிலில் நஷ்டம் ஏற்படும்.

## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

கேது உங்கள் விரய ஸ்தானத்தை விட்டு இலாபஸ்தானத்தை நோக்கி நகர்வது நல்ல பலன்களைத் தரும். தேவையற்ற செலவுகள் குறையும். சுபச் செலவுகள் அதிகரிக்கும். குருவின் பார்வையால் தொழில் வணிக அபிவிருத்தி நிகழும். பாக்கியஸ்தானத்தில் தொழில்காரகன் குருவுக்கு நாலில் இருப்பதும் நல்ல அமைப்பு. குலதெய்வ வழிபாடு, இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும். ஏழாமாதி சுக்கிரனை குரு பார்ப்பதாலும் அவர் இராசிநாதனோடு இருப்பதாலும் கணவன் மனைவி அன்பு அதிகரிக்கும்.

குடும்பத்தில் அமைதி நிலவும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு சனி வக்கிர கதியால் சாத்தியம். தாய்வழி உறவினர்கள் சில தவிர்க்க முடியாத சங்கடங்களைத் தருவார்கள். சில முயற்சிகளில் தாமதம் ஏற்படும். பூர்வீகச் சொத்து பிரச்சினை முளைக்கும்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

சனி 3 இல் வக்கிரகதி எனினும் பாக்கியஸ்தானத்தில் உள்ள கிரகங்கள் துணை நிற்கும். உங்களுக்கு ஆறுதலாக இருக்கும். அதற்கு குரு பார்வை கூடுதல் பலம். குடும்ப சிக்கல் அகலும். உற்சாகம் அதிகரிக்கும். குல தெய்வ, இஷ்ட தெய்வ வழிபாடுகள் செய்ய முடியும். வருமானம் சீராக இருக்கும். குழந்தைகள் படிப்பு, பூர்வீகம் போன்ற நல்ல சாதகமாக விஷயங்கள் நடைபெறும். குடும்பத்தில் புதிய வரவுக்கான சூழல் உண்டு. 7 1/2 சனி விலகினாலும் வக்கிரகதி அடைவதால் சிறு பின்னடைவுகள் இருக்கத்தான் செய்யும். சில தீர்மானங்கள் திட்டங்கள் போன்றவை மாறும். விரும்பியபடி பூரணமாக நடக்காது. 5 இல் உள்ள ராகு சனி பார்வை இணைப்பு சிக்கலை அதிகரிக்கும். எச்சரிக்கையுடன் அணுகுங்கள்.

## மகரம்

(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம், 2ஆம் பாதம்)

கேந்திரத்தில் குரு இருக்கிறார். அஷ்டமாதிபதி சூரியன் அஷ்டமத்திற்கு சென்றிருக்கிறார். எனவே கஷ்டங்கள் அதிகரிக்க வாய்ப்பு இல்லை. சற்று நிதானம் தேவை. திட்டமிட்டு செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். குடும்பத்தில் சிக்கல்கள் வந்து விலகும். அலுவலகத்தில் நல்ல பெயர், கௌரவம் அதிகரிக்கும். பொது சேவைக்கு அங்கீகாரம் கிடைக்கும். பழைய கடன் சுமை சற்று குறையும். குடும்பத்தில் அமைதியும் ஆதரவும் உண்டு. சுப காரியங்களுக்கான வாய்ப்பு உண்டு. ஆரோக்கியம் திருப்தியாகவே இருக்கிறது. நெருங்கிய உறவுகளால் சிக்கல் மற்றும் மன வருத்தம் நிகழும் சிறு சம்பவங்கள் நிகழலாம்.

## கும்பம்

(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

சனி இராசியில் இருப்பினும் ஆட்சி வீடு என்பதால் சிரமங்கள் சற்று குறைக்கவே செய்வார். 3இல் உள்ள ராகு உங்களுக்கு மன தைரியத்தையும் நல்ல வாய்ப்புகளையும் பெற்றுத் தரும். சப்தமராசி வலுவோடு இருப்பதால் கணவன், மனைவி உறவுகள், குடும்ப நிம்மதி குறையாமல் இருக்கும். செயலூக்கம் அதிகரிக்கும். முன்னேற்றம் கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். அதிகாரிகள் அனுசரணையோடு நடந்து கொள்வார்கள். மனத்தைரியம் உங்கள் பிரச்சினையைத் தீர்க்கும். சுக்கிரன் நல்ல நிலையில் இருப்பதால் கலைஞர்களுக்கு ஆதரவு உண்டு. புதிய வாய்ப்பும் உண்டு. மனதில் சோர்வு நீங்கி உற்சாகம் பிறக்கும். இராசியில் சனி இருப்பதால் எதுவும் சற்று தாமதம் தரும். அலைச்சல் அதிகரிக்கும்.

## மீனம்

(புரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

இராசிநாதன் நல்லபடியாக இருக்கிறார். 6,8,10 இராசிகளைப் பார்க்கிறார். வேலை, உத்தியோகம் சிறப்பாக இருக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் உண்டு. எதிர்பாராத சில நல்ல விஷயங்கள் நடைபெறும். தொழிலில் கௌரவம், லாபம் கிடைக்கும். எண்ணங்கள் பூர்த்தியாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு திருப்தியாக இருக்கும். புதிய பொருட்களை வாங்குவீர்கள். ஆரோக்கியத்தில் அபிவிருத்தி உண்டு. குடும்ப ஒற்றுமை ஓங்கும். கணவன் மனைவி ஒற்றுமை நிறைவாக இருக்கும். வெளிநாட்டு வேலை செய்பவர்களுக்கு நல்ல ஆதாயம் உண்டு.

6ஆம் இடம், 8ஆம் இடம் வலுப்பெறுவதால் உடல் ஆரோக்கியத்தில் கவனமும் தேவை என்பதை மறந்து விட வேண்டாம்.

# உலகைக் காக்க…

என் விரல்களை வெட்டினாய்
கைகளை வெட்டினாய். இறுதியில் என்
தலையை வெட்டினாய். உலகைக்
காக்க நான் வலிகொண்டெழுந்தேன்.
எனக்கு இன்னும் பல கைகள்
முளைத்தன. பல விரல்கள்
முளைத்தன. என் இனத்தைப் பெருக்க
விதைகளை வீசினேன்.
அவற்றையெல்லாம் கூட்டிக்
குப்பையில் குவித்தாய்.
என்னை விதைத்தவர் யாரோ ?
நான் அறியேன் .... அது
ஆநிரைகளோ அல்லது
பறவைகளாகவோ இருக்கலாம்
கண்டிப்பாக மனிதனாக இராது

நான் முளைவிட்டு
நுனி மொட்டுக்கொண்டு
கொழுந்துடன் வளர ஆரம்பித்த நேரம்
தண்ணீர் இல்லாமல்
தள்ளாடியபடி தவித்தேன்

நிலத்தடி நீரோ ஆற்றுநீரோ
ஊற்றுநீரோ எதுவும் இல்லை
விண்ணில் உலாவும் செயற்கை
கோள்களால் பருவமழையும்
பொய்த்துப் போனது

என் கிளைகளும் இலைகளும்
வெம்மையால் கருகி
வெகுவிரைவில் வாடி
வதங்கிப்போனேன்
உலகுக்கு உதவும் எண்ணத்தில்
உள்ள உறுதியுடன்
எப்படியோ வளர ஆரம்பித்தேன்

ஒரு பெரும் விருட்சமாகி
புதுப் பொலிவுடன்
புன்னகை பூத்தேன்
பறவையினமும் விலங்கினமும்
தங்கும் சமத்துவப்புரமானேன்

பாதசாரிகள் களைப்புடன் நின்றால்
பாசத்துடன் சாமரம் வீசுவேன்
மழலைகளைப் பார்த்தால்
மன மகிழ்ச்சியுடன் தலையாட்டுவேன்

பெரும் மழையோ வெள்ளமோ
மண்ணரிப்பு நேராவண்ணம்
பாதுகாத்தேன்
வருவோர்க்கும் போவோர்க்கும்
மழை நாளிலும் வெயில் நாளிலும்
குடையானேன்

அன்னை மடிபோல்
எந்தன் அடியில் உறக்கம்
தென்றலாய் நான் வீச
அசந்து நீ தூங்க
அசையாமல் நான்!

உனக்கே என்னை
முழுதும் அளித்தேன்
மானிடா
என் உயிர் மூச்சை
மட்டும் அறுத்து விடாதே
அடுத்து உன் வம்சத்தின்
குலக் கொடிகளை
காணும் ஆவலில்
நானும் வாழ விருப்புடையேன்

சாலையோர வாசியாக
சங்கீதம்பாடி வாழ்ந்த என்னை
அகலப்பாதை போடவேண்டி
அவசரம் அவசரமாக
வேண்டிய அளவுக்கு வெட்டி வெட்டி
வேரோடு வீழ்த்தினார்கள்

வேதனையோடு நான் சாய்ந்தேன்
என் மெய்யின் ஈரம் உலரும் வரை
வலிதாங்கி மௌனியானேன்

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க
வேண்டாம் என்பது உங்களுக்குத்
தெரியும். மரம் இல்லா ஊர்
பாலைவனம். அந்த
பாலைவனத்தையும் பசுமையாக்குவது
மரங்களாகிய நாங்கள் தான் என்பது
உங்களுக்குத் தெரியுமா?

மரங்களுக்காகதான் மேகங்கள்
பூமிக்கு மழையை பொழிகிறது
பூமியை குளிர்விப்பவர்களே நாங்கள்
தான். பச்சைப்பசேல் எனும் அந்த
பசுமையான எங்கள் தோற்றமே
கண்ணிற்கு குளிர்ச்சியையும்
மனதிற்கு இதமான ரம்மியத்தை
தருகிறது என்று தங்களை ஆசுவாசப்
படுத்திக்கொள்ள வருகிறவர்கள்
சொல்லி அனேகதரம்
கேட்டிருக்கிறோம்

எங்களின் மிகப்பெரிய பங்களிப்பாக
மனித இனத்தின்
ஜீவாதாரமான அவன் சுவாசிக்கும்
பிராண வாயுவை மனுகுலத்திற்கு
வழங்குகிறோம். இந்த பிராண
வாயுவை கொடுக்கும்
கொடையாளியாக நாங்கள்
விளங்குவது உங்களுக்குத் தெரியாதா

உடைந்தாலும் உனக்கு
உதவியாக உடைகிறேன்
விழுந்தாலும் விதையாய்
விழுந்து விருச்சமாய் வளர்ந்து
விடுவேன் உன் நலனுக்காக
நான் மனிதா



எனை அழிப்பதாக
எண்ணி உனை நீயே
அழித்துக்கொள்ளாதே
அறிவிலியே இந்த
அறிவியல் காலத்திலும்
என் அருகே நீ
இருந்தால் தான் உன் அருகில்
நோய் இருக்காது மனிதா
நாடும் வீடும் நலம்பெற நல்
உள்ளங்களே
உலகை காத்திட
உயிரென எம்மை காத்திடுங்கள்

பவானி சற்குணசெல்வன்
நெதர்லாந்து







# இதுவல்லோ மாநாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை 'சமூகக் கட்டுமானத்தில் சங்கமருவிய கால அற இலக்கியங்கள்' என்ற கருப்பொருளில் இருநாள் அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாட்டினை வெகுசிறப்பாக பெருமளவிலானோரின் பங்குபற்றுதலுடன் நடத்தியது. இது நடந்துமுடிந்த நிகழ்வுதானே, இது பற்றி பலரும் எழுதியிருக்கிறார்கள்தானே ஏன் இதையே திரும்பவும் எழுதவேண்டும் இப்படிக் கேள்விகள் எழலாம். ஆம் இம்மாநாடு, சமகாலத்தில் மிகவும் பேசப்படவேண்டிய தொன்று. அதனால் அம்மாநாட்டின் சிறப்புக்கள் குறித்து பேசத்தான் வேண்டும். ஆவணி 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை பல்கலைக்கழக கைலாசபதி அரங்கு மாநாட்டின் பொருட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது.

பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள், அண்ணாவிமார், பண்டிதர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் என்று பலரும் கைலாசபதி கலையரங்கினை நோக்கி படையெடுத்த வண்ணமிருந்தனர். ஆம் பெருந்தொகையானவர்கள்தான். காலை 8.00 மணிக்கு ஆய்வாளர் பதிவுகள் இடம்பெற்றன. பின்னர் மாநாட்டின் முதலாவது நிகழ்வு காலை 9.00 மணியளவில் ஆரம்பமானது. ஆரம்பமே பிரமாதமாக இருந்தது. இசையும் இறை கீதமும் முழங்கின. தொடர்ந்து இடம்பெற்ற நடனமும் ஆராதனையும் பார்த்தோரை வியப்பில் ஆழ்த்தின. நடனமாடிய ஒவ்வொரு மங்கையரும் ஆடலாலும் அங்க அசைவுகளாலும் இதுவல்லோ நடனமென்று பார்ப்போரின் கண்களைப் பறித்துச்சென்றனர். அழகுச்சிலைகளின் அபிநயமாக இது அமைந்தது. சிறந்ததொரு வரைவேற்புரையை முதுநிலை விரிவுரையாளர் ஈ.குமரன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து நான்கு உரைகள் நான்கு வெவ்வேறு நிலைகளில் இடம்பெற்றன. அவ்வுரைகள் அனைவருக்கும் பிடித்தும்போயின. கலாநிதி ஆறு. திருமுருகனின் ஆசியுரை அகன்றும் நீண்டும் ஒலித்து அவையோரை நிமிரச்செய்தது. நம் சமூகத்துக்காகத் தொடங்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை நாம் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் சமூகம் விழிப்படையவேண்டுமென்றும் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.



சமூகப் பிரக்ஞையுடன் மிகுந்த தெளிவுடன் அவ்வுரை இருந்தது. தற்போதைய சூழலில் பேசப்படவேண்டிய விடயங்களையே சிறப்பாக எடுத்துக்கூறினார். பேராசிரியர் கி.விசாகரூபனின் தலைமையுரை மாநாட்டின் கருப்பொருள், மாநாட்டையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகள், மாநாட்டின்போது கௌரவிக்கப்படுவோர் பற்றிய விடயங்கள், மாநாட்டுக்கான அனுசரணையாளர்கள், பல்கலைக்கழக நிருவாகத்தினரின் ஒத்துழைப்பு உள்ளிட்ட விடயங்களை வெளிப்படுத்தும் சிறந்த உரையாக அமைந்தது. பாரதி ஆய்வியல் அறிஞரும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித்துறைத் தலைவருமாகிய பேராசிரியர் ய.மணிகண்டன் 'தமிழில் அற இலக்கியம்: வரலாறும் பல்பரிமாணங்களும்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். 100 நிமிடங்கள் அவரது உரை இடம்பெற்றது. இப்படித்தான் சிறப்புரை இருக்கவேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாக மிக அருமையாக உரையாற்றினார். அவரது உரையில் கோட்பாடு இருந்தது. கருத்தியலும் இருந்தது. ஆனால் அதனை அப்படியே கேட்போருக்குத் திணிக்கவில்லை.

விரைந்து கொட்டித் தீர்க்கவில்லை. சபையைத் தூங்கவிடவில்லை. சுவாரசியமாக இன்னும் 100 நிமிடம் பேசினாலும் கேட்கலாம் என்கிற அளவுக்கு அனைவரையும் ஈர்க்கும் வகையில் பேசினார். எனக்கருகில் இருந்த பேராசிரியரொருவர் சொன்னார், இந்த மாநாட்டுக்கு வராதவர்கள் இவற்றையெல்லாம் இழந்தவர்களே என்று.

(22ஆம் பக்கம் பார்க்க)



அரசையூர் மேரா

# படித்ததும் பகர்வதும் 156



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### தண்ணீர் பாவனையில் சிக்கனம்

இலங்கையில் தற்போது நிலவுகின்ற வெப்பமான காலநிலை காரணமாக தண்ணீரின் தேவை பற்றிய பேச்சுக்கள் வெவ்வேறு வடிவங்களில், பல்வேறு தளங்களில் பரவலாகப் பேசப்படுகின்றன. உரிய காலத்தில் மழை பெய்யாமை, எதிர்பார்த்த மழை வீழ்ச்சி கிடைக்காமை போன்ற காரணங்களினால் இலங்கையின் அதிகமான பிரதேசங்களில் வரட்சியும், தண்ணீருக்கான தட்டுப்பாடும் காணப்படுகின்றது.



பல விவசாய நிலங்கள் இதனால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. சில இடங்களில் நிலங்கள் வெடித்து காணப்படுகின்றன. குளங்களிலும் நீர்த்தேக்கங்களிலும் தண்ணீரின் மட்டம் மிகவும் குறைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

விவசாயத்துக்காக நீர்த் தேக்கங்களிலிருந்து நீர் வழங்க வேண்டிய கட்டாய நிலை காணப்படுகிறது. அதேவேளை அவ்வாறு தண்ணீர் வழங்கப்பட்டால் மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டு மின் துண்டிப்பு ஏற்படக்கூடிய அபாயமும் நிலவுகிறது. இவற்றோடு பல பிரதேசங்களில் குடி நீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இத்தகைய சூழலில் மனித வாழ்வின், அடிப்படையான தவிர்க்க முடியாத தேவையாக உள்ள தண்ணீரை பொறுப்போடு சிக்கனமாக பாவிப்பது பற்றி சித்திப்பது ஒவ்வொருவர் மீதுமுள்ள தலையாய கடமையாகும். இப்போது போன்ற இக்கட்டான சூழ்நிலைகளின் போது மட்டுமன்றி எப்போதும், தண்ணீரின் வீண் விரயத்தை தவிர்ப்பதும் தண்ணீரை சிக்கனமாக பாவிப்பதும் அவசியமாகும்.

முகம் கை கால்களைக் கழுவுதல், குளித்தல் போன்ற அன்றாட அத்தியவசிய தேவைகளுக்கு நீரை பயன்படுத்தும் போதும் கூட அளவோடு பயன்படுத்துவதற்கு பழகிக் கொள்ள வேண்டும். ஒரு சிலர் இத்தகைய தேவைகளுக்கும் அளவுக்கு அதிகமான தண்ணீரை பயன்படுத்துவதும் வீண் விரயமாகவே கொள்ளப்பட வேண்டும். ஆடை, அணிகளை கழுவுகின்ற விடயத்துக்கும் இது சாலவே பொருந்தும்.

வீடுகளில் தண்ணீர் குழாய்களில் காணப்படுகின்ற பெரிய, சிறிய நீர்க் கசிவுகளையும், நீர் வெளியேற்றத்தையும் கட்டுப்படுத்துதல், பொது இடங்களில் தண்ணீர்க் குழாய்களை முறையாக மூடிவிடுதல் எங்கேனும் நீர் விரயமாவதை கண்டால் அவற்றை தடுக்க முயற்சி எடுத்தல், அத்தோடு அவற்றை உரியவர்களின் கவனத்துக்கு கொண்டுவருதல் போன்ற நடைமுறைகளை ஒவ்வொருவரும் தமது கடமையாக கொண்டு செயல்பட வேண்டும். எந்த வகையிலேனும் நீரை சிக்கனமாக பயன்படுத்தல், வீண் விரயத்தை தடுத்தல் என்பன தனிமனிதனுக்கு மட்டுமன்றி சமூகத்துக்கும், நாட்டுக்கும் நன்மையளிக்கும் நற்செயலாகும்.

## நெஞ்சுக்கு நீதி

**தண்ணீரைத் தங்கம் போல் காண்பதெம் கடமை**
**தறுதலையாய் வீண்விரயம் செய்வதோ மடமை**
**கண்ணாகக் காத்திட்டால் காண்போமே நலவை**
**கட்டாயம் குறைத்திடலாமே வீணான செலவை**

## புது வரவு

### 'விழுமியம்' இரண்டாவது இதழ்!

இலங்கை ஜமாத்தே இஸ்லாமியின் தயாரிப்பில், ஜஸ்ட் மீடியா பவுண்டேஷன் வெளியிடும் 'விழுமியம்' காலாண்டு சஞ்சிகையின் இரண்டாவது இதழ் (2023 ஜுலை – செப்டெம்பருக்கானது) வெளிவந்துள்ளது.

மனித வாழ்வின் ஒழுக்க விழுமியங்களை வளர்க்கும் நோக்கில் வெளிவரும் இச்சஞ்சிகையின் இந்த இதழில் மலையக தமிழரைப் பற்றிய விஷேட கட்டுரை முக்கிய இடம் பிடித்துள்ளது. 200 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் பெருந்தோட்டத் துறையில் வேலை செய்வதற்காக, இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட தொழிலாளர் பற்றிய விபரங்களை இக்கட்டுரை தந்துள்ளது. இன்று பரவலாகப் பேசப்படுகின்ற 'மலையகம் 200' பற்றிய இக்கட்டுரையை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜா எழுதியுள்ளார்.

'ஒழுக்க விழுமியங்களை பறைசாற்றுவோம்' என்ற ஆசிரியத் தலையங்கத்துடன் பல்வேறு தலைப்புகளில் பதினைந்துக்கும் கூடுதலான தரமான ஆக்கங்கள் இவ்விதழை அலங்கரித்துள்ளன.




இறைதூதர் (ஸல்) அவர்களது மனிதவள முகாமை – ஒரு பார்வை (கலாநிதி எம்.ஆர்.எம். நிஸ்மி), இலங்கை முஸ்லிம் சமூகம் மையப்படுத்த வேண்டிய மூன்று விடயங்கள் (உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர்), மாறிவரும் மனிதப் பண்பியலும் மதிப்பிழக்கும் குடும்பக் கட்டமைப்பும் (மௌலவியா ஸமீரா அப்துல் ஹலீம்), இறையுணர்வால் ஆளப்படும் சமுதாயம் (அஷ்ஷெய்க் எம்.ஆர்.எம். ரிழ்வான்), ஒரு தாயின் சிறந்த பண்புகளும் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் அவளின் பங்களிப்பும் (அஷ்ஷெய்க் என். ஜி. அப்துல் கமால்), இலங்கையில் காணப்படும் அராபிய கல்வெட்டுகள் (அப்துல் ஹலீம் ஜெஸ்மின்),

நிம்மதிக்கு வழிகோலும் இஸ்லாமிய இல்லம் (அஷ்ஷெயக் எம்.என். ஆலிப் அலி), சர்வதேச அரசியலில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் (கலாநிதி ஸகி பௌஸ்), மாற்றத்துக்கான சாவி மத்திய வர்க்கத்தினர் கையில் (எம்.எச்.எம். ஹஸன்), ஜனநாயக அரசியல் பிரதிநிதித்துவமும் அடிப்படைத் தகைமைகளும் (முகமட் அஜிவதீன்), புதிய நூற்றாண்டுக்கு இன்றியமையாத கற்றல் அணுகுமுறை (எஸ்.ஏ.எம். ரிஸ்வி), மனிதகுலம் நேசிக்கும் மாமனிதர் (இஸட். ஏ. எம். பவாஸ்), குடும்ப அலகில் பாதுகாப்பை வேண்டி நிற்கும் அடிப்படை நியமங்கள் (அஷ்ஷெய்க் அப்பான் அப்துல் ஹலீம்) என்பன இதில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளாகும்.

இவை தவிர, அஷ்ஷெய்க் நவாஸ் ஸனுர்தீன் தந்துள்ள 'இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு' நூலின் அறிமுகம், "போதையிலிருந்து விடுபட முடியாது என்பது பொய்" எனும் தலைப்பிலான, அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் சாக்கிய நாணயக்காரவுடனான நேர்காணல், 'ஷாறா' வின் "என்னென்பதோ ஏதென்பதோ" என்ற சிறுகதை, சிராஜ் மஷ்ஹூர் எழுதியுள்ள 'எங்கே வாழ்க்கை தொடங்கும்? அது எங்கே எவ்விதம் முடியும்' எனும் திட்டமிடல் தொடர்பான பதிவு என்பனவும் இவ்விதழில் இடம் பிடித்துள்ளன. அத்துடன் சிறுவர் பகுதி, கவிதைப் பகுதியான 'கவிவானம்' என்பனவும் இடம்பெறத் தவறவில்லை.

'விழுமியம்' சஞ்சிகை ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து பிறருக்கும் கொடுக்க வேண்டிய ஒரு இதழாகும்.

சஞ்சிகை: விழுமியம் (காலாண்டு சஞ்சிகை), ஆசிரியர்: அஷ்ஷெய்க் எம்.எச்.எம். உஸைர் இஸ்லாஹி, இதழ் 02: 2023 ஜுலை – செப்டெம்பர், வெளியீடு: ஜஸ்ட் மீடியா பவுண்டேஷன், விலை: ரூபா 200.00, தொடர்புகளுக்கு: 0765308509

## கேட்டதில் கவர்ந்தது

### 'பாரம்பரியம்' நிகழ்ச்சியில் 'எம். ஐ. சீ. எச்.'

இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவைக்கு பங்களிப்பு செய்தவர்களை அழைத்து, அத்துடன் காலஞ்சென்ற அத்தகையவர்களது குடும்ப உறவினர்களை அல்லது தொடர்பானவர்களை அழைத்து கலந்துரையாடி, அவர்களது விபரங்களையும், சாதனைகளையும், பங்களிப்புகளையும் தகவல்களையும் வெளிக்கொணர்ந்த 'பாரம்பரியம்' நிகழ்ச்சி, கடந்த ஆகஸ்ட் 15ம் திகதி செவ்வாய் இரவு ஒலிபரப்பான நிகழ்ச்சியில் ஒரு வித்தியாசமான முயற்சியை முன்னெடுத்தது.

தனி நபருக்குப் பதிலாக ஒரு இயக்கத்தின் பங்களிப்புகளை அலசி ஆராய்ந்தது. முஸ்லிம் சேவையின் தோற்றம், வளர்ச்சி, என்பவற்றில் பாரிய சேவைகளை செய்த, எம்.ஐ.சீ.எச். (M.I.C.H.) என பொதுவாக அறியப்படும் "சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்" சாதித்த சாதனைகளையும், அதன் ஸ்தாபகர் சேர். ராஸிக் பரீத்தின் தனிப்பட்ட கடுமையான வியக்கத்தக்க முயற்சிகளையும், அவரோடு இணைந்து செயலாற்றியவர்களின் சேவைகளையும் நேயர் முன் கொண்டு வந்தது.

இதற்கென அவரது "சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்" சாதித்த சாதனைகளை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பாகி, தனக்கென வானொலி வரலாற்றில் முஸ்லிம் சேவை' தனித்துவமான இடத்தை பெற்றுக்கொள்ள, அன்று பெரும் அர்ப்பணிப்பு செய்த சேர். ராஸிக் பரீத்தின் தனிப்பட்ட கடுமையான வியக்கத்தக முயற்சிகளையும், இதற்கென அவரது "சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்" சாதித்த சாதனைகளையும் மிகச் சிறப்பாக இந்நிகழ்ச்சி வெளிப்படுத்தியது.



இலங்கை வானொலியில் முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கு கூடுதலான நேரம் ஒதுக்கப்பட்டு, அது தனிப்பிரிவாக, சுதந்திரமாக இயங்க வேண்டும் என்ற கோரிக்கையை 1944ஆம் ஆண்டு உருவான சோனக இஸ்லாமிய கலாசார நிலையம் ஏனைய சில இயக்கங்களோடு முன் வைத்தது. இதற்காக ஆரம்பகால உறுப்பினர்களுக்கு வழிகாட்டியாக திகழ்ந்த, டப்ளியூ. எம். ஹாஸிம், அது சுதந்திரமாக செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி அதற்கென ஒரு தனியான அதிகாரி நியமிக்கப்பட வேண்டும் என்பதை அப்போதைய ஒலிபரப்பு ஆணைக் குழுவோடு, உரத்து பேசிய ஏ.எல். எம்.மரைக்கார், இவை தொடர்பாக சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தின் பிரதிநிதியாக ஒலிபரப்பு ஆணைக்குழுவோடு அடிக்கடி சந்தித்து பேசிவந்த, ஏ.எல்.எம்.லாபிர், ஏ.எம்.மாக்கான் மாக்கார் போன்ற பல மர்ஹூம்களை இந்நிகழ்ச்சி நமக்கு அறியத் தந்தது.

இவ்வரலாறு தொடர்பான அரிய தகவல்களை தந்த, இத்துறையில் ஆய்வை மேற்கொண்டுள்ள, கலாநிதி எம்.ஸி.ரஸ்மின், முன்னாள் முஸ்லிம் சேவை பணிப்பாளர் ஹாபிஸ் எஸ். எம். ஹனிபா ஆகியோரின் தேடல்களும், முன்வைப்பும் மெச்சத்தக்கவையாக இருந்தன. இவர்களின் இந்த தேடல்களுக்கு துணை புரிந்த சோனக இஸ்லாமிய கலாசார நிலைய தலைவர் ஓமர் காமில், செயலாளர் எஸ்.எம்.முர்ஸித் போன்றோரும் நினைவுகூரப்பட்டார்கள்.

'பாரம்பரியம்' நிகழ்ச்சியை சிறப்பாக வழங்க அர்ப்பணிப்போடு செயற்பட்டுவரும் தொகுப்பாளர் எம்.எஸ்.எம்.ஜின்னா, தயாரிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினோஷியா இருவரும் பாராட்டுக்குரியவர்களே.

இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவையின் வளர்ச்சி பற்றி அறிந்துகொள்ள இந்த கடந்தவார நிகழ்ச்சி தவறாது கேட்கப்பட வேண்டியதொன்றாகும். வானொலியில் கேட்க தவறியோர் யூடியூப் வாயிலாக இதனைக் கேட்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## செந்தமிழ் அது தேன் தமிழ்

### மெல்லத் தமிழினிச் சாகும்!

பாரதியாரின் பாடலில் இடம்பெற்றுள்ள "மெல்லத் தமிழினிச் சாகும்" என்ற கூற்று எல்லா இடங்களிலும் பரவலாகப் பேசப்படுகின்ற ஒன்றாகும். இக்கூற்றைப் பலர் பாரதியாரின் கருத்தாகக் குறிப்பிடுவதைக் காண்கின்றோம். ஆனால் அது பாரதியின் கருத்தல்ல.



"அறிவியல், கலைகள் சார்ந்த நூல்களை உருவாக்க மேலைத்தேச மொழிகளே ஏற்றவை. தமிழில் அவற்றை ஆக்க முடியாது. தமிழ் அழிந்து கொண்டிருக்கும் மொழி" என்ற கருத்துப்பட ஒருவர் எழுதிய கூற்றைக் கண்டித்துப் பாரதி பாடிய பாடலே இது.

பாடலின் ஒரு வரியை மாத்திரம் எடுத்துக்கொண்டு கருத்துரைப்பது, "கற்றதனா லாய பயனென்" என்பதை மட்டும் எடுத்துக்கொண்டு, 'கல்வியால் பயனில்லை' என்ற முடிவுக்கு வருவதைப் போன்றதாகும் எனலாம்.

உண்மையில் பாரதியார் கூறுவதென்ன? அவரது பாடலைப் பாருங்கள்!

இன்றொரு சொல்லினைக் கேட்டேன் இனி
ஏது செய்வேன்? எனதாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை இங்கு
கூறத் தகாதவன் கூறினான் கண்டீர்!
புத்தம் புதிய கலைகள் பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்"
என்றந்தப் பேதை யுரைத்தான் ஆ!
இந்த வசை எனக்கெய்திடலாமோ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!
தந்தை அருள் வலியாலும் இன்று
சார்ந்த புலவர் தவ வலியாலும்
இந்தப் பெரும்பழி தீரும் புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்

தமிழைப் பழித்துக் கூறியதற்காகப் பாரதியால் 'கூறத் தகாதவன், பேதை' என்று சுட்டப்படுபவர் யார்? என்பது பற்றியும் வெவ்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

'தென்னிந்திய வரலாற்றாசிரியரான பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி தான்' அவர் என்று ஆய்வறிஞர் ஆ. கா. பெருமாள் உட்படப் பலர் கூறியுள்ளனர். "எல்லாப் பாடங்களையும் தாய்மொழியில் கற்கலாம்" என யதீந்திர சர்கார் என்பார் கல்கத்தாவிலிருந்து வெளியான 'மொடர்ன் ரிவீவ்' (Modern Review) என்ற பத்திகையில் எழுதிய கட்டுரைக்கு எதிர்வினையாற்றி நீலகண்ட சாஸ்திரி இவ்வாறு "தமிழுக்கு அந்த வலிமை இல்லை" என எழுதியதாகக் கூறப்படுகின்றது. நீலகண்டசாஸ்திரியின் கூற்றைக் கண்டித்து பாரதியும் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இக்கட்டுரை பெரியசாமி தூரனின் 'பாரதி தமிழ்' நூலில் இடம் பெற்றுள்ளது.

பச்சையப்பன் கல்லூரியின் தலைமை ஆசிரியராகவிருந்த ஆங்கிலேயரான 'ரோலோ' என்பவரைக் கண்டித்து பாரதி எழுதிய கட்டுரையொன்றை ஆதாரமாகக் கொண்டு, பாரதியார் ' பேதை' என்றும் 'கூறத் தகாதவன்' என்றும் குறிப்பிட்டது 'ரோலோ' என்பவரைத்தான் என்று கூறுவோரும் உள்ளனர்.

---



# திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 52



கே. பத்மானந்தன்

# திருவள்ளுவத்தில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்



இடத்திற்குப் பொருத்தமான பொருட்களையே சந்தைப்படுத்தல் முகாமையாளர் சந்தைபடுத்த வேண்டும் அப்போதுதான் நுகர்வோர் வாங்குவார்கள் என்ற கருத்தினைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியிலும் தெளிவுபடுத்துகின்றார் .

**"காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா**
**வேலாள் முகத்த களிறு". (குறள் 500)**

பாகனுக்கு அடங்காததும் வேல் ஆழத் தாக்கிய வடுக்கள் உள்ள முகத்தினையுடைய தன்னை எதிர்க்கும் வேல் ஏந்திய வீரனைக் கூட தன் தந்தத்தால் தாக்கக் கூடியதுமான வலிமை உள்ள ஆண் யானையானது (களிறு) கால் புதையும் சேற்றில் சிக்கிக் கொண்டால் சிறு நரிகூட அதைக் கொன்றுவிடும் என்கிறார் திருவள்ளுவர். எவ்வாறு தேர் கடலிலும் கப்பல் நிலத்திலும் ஓட முடியாதோ, எவ்வாறு சேற்றில் புதைந்த வலிமை மிக்க யானையை நரி கூடக் கொன்றுவிடுமோ, அது போல் இடத்திற்குப் பொருத்தமில்லாத பொருட்களை சந்தைப்படுத்த முயன்றால் தனது நிறுவனம் நட்டத்தையே சந்திக்கும் என்ற உண்மையை, சந்தைப்படுத்தல் முகாமையாளர் உணர்ந்து கொண்டு தனது சந்தைபடுத்தல் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற உண்மையை திருவள்ளுவர் இங்கு வலியுறுத்துகின்றார்.

உண்மையில் எதற்கும் அஞ்சாத முகத்திலே போர்க்கள வேல்கள் தைத்த வடுக்கள் உள்ள பெருமையுடைய வலிமையான வீரமுள்ள யானையும் ஒரு வலிமையில்லாத நரியிடம் தோற்று விடுகிறது. அந்த யானை இடறி ஒரு புதை சேற்றில் சிக்கிக் கொண்டதுதான் அந்தத் தோல்விக்குக் காரணம். கால் புதையப் புதைய சேற்றில் இருந்து காலை எடுக்க முடியாமலும் இந்தப்பக்கமோ அந்தப்பக்கமோ திரும்பக்கூட இயலாமலும் துன்பப்படுகிறது. இச்சூழலைத் தனக்குப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த நரி யானைமீது பாய்ந்து தாக்க வாய்ப்பாகிவிடுகிறது. கால் ஆழப் பதிந்து விட்டதால் யானையால் நகர முடியவில்லை என்பதால் அது தோற்கும் நிலை உண்டாகி விடுகிறது. போர்க்களத்தில் உள்ள கெட்டியான நிலம் யானைக்குத் தக்க இடமாயிருந்தது. ஆனால் சேற்றுநிலம் அதற்குத் துணை செய்யமுடியவில்லை.

உண்மையில் யானை நரியுடன் பகை கொண்டு போர் செய்வதற்காகச் செல்லவில்லை அதேபோல சேற்று நிலத்திற்குத் தானாக விரும்பிச் செல்லவுமில்லை. தன்னையும் அறியாமல் சேற்றில் அகப்பட்டுக் கொண்டது. இதிலிருந்து அறியக்கூடியது என்னவென்றால், என்னதான் வலிமையும் ஊக்கமும் ஆற்றலும் கொண்டிருந்தாலும், வெற்றி பெறும் நோக்கம் கொண்ட ஒருவர் சேறு போன்ற பிரச்சினைகள் நிறைந்த இடம் நோக்கித் தெரிந்தோ தெரியாமலோ சென்றுவிடாமல், தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். பொருத்தமில்லா இடத்தில் மாட்டிக்கொண்டால் வலிமை உள்ள ஒருவரை வலிமை குறைந்த ஒருவரினால் வெல்லமுடியும் என்பது மட்டுமல்ல ஒருவரது திறமையை வெளிக்கொணர முடியாத இடத்தில் சிக்கிக் கொண்டால் அத்திறமை யாருக்கும் பயனற்றுப் போகும் என்று கூறுவதன் ஊடாகப் பெரும் உண்மையினைத் திருவள்ளுவர் சந்தைப்படுத்தல் முகாமையாளருக்குக் கூறுகின்றார் என்பதனையும் இதில் இருந்து அறிந்து கொள்ளலாம். அதாவது சந்தைப்படுத்தல் முகாமையாளர் எவ்வளவு திறமையானவராக இருந்தாலும் பொருத்தமற்ற இடத்தில் தனது நிறுவனத்தின் பொருட்களைச் சந்தைப்படுத்த முயன்றால் அவரால் அவற்றைச் சந்தைப்படுத்த முடியாமல் போய்விடும். அத்துடன் அவரது போட்டி நிறுவனம் அது சிறிதாக இருந்தாலும் அவரைத் தோற்கடித்து விடும் என்பதனால் தெரிந்தோ தெரியாமலோ பொருத்தமற்ற இடத்தில் பொருட்களைச் சந்தைப்படுத்துவதனைத் தவிர்க்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் அறிவுரை.

பொதுவாக எந்த ஒரு நிறுவனமும் தனது உற்பத்தியைத் தொடங்கு முன் அல்லது தனது உற்பத்திப் பொருட்களில் ஏதாவது மாற்றம் செய்ய முன், நுகர்வோரின் கருத்துக்களை அதாவது அவர்கள் எம்மாதிரியான பொருட்களை எத்தகைய தரத்தில் என்ன மாதிரியான அம்சங்களுடன் எப்போது என்ன விதத்தில் பெற விரும்புகின்றார்கள் என்ற கருத்துக்களை ஆய்வு செய்து அறிய முயல வேண்டும். அது மட்டுமில்லாமல் சந்தையில் உள்ள போட்டி நிறுவனங்கள் யாவை அவர்கள் எத்தகைய பொருட்களை, எவ்வாறு சந்தைப் படுத்துகின்றார்கள் அவற்றின் தரங்கள் என்ன? அம்சங்கள் என்ன? அவர்களின் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் என்ன? போன்ற விபரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும்.

அப்போதுதான் நுகர்வோரின் விருப்புக் கேற்ற பொருட்களை போட்டி நிறுவனங்களின் போட்டிக்கு மத்தியில் அவர்களின் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களை மீறி வெற்றிகரமாக சந்தைப்படுத்தித் தான் சார்ந்த நிறுவனத்தை இலாபகரமானதாக மாற்ற முடியும் என்ற உண்மையை சந்தைப்படுத்தல் முகாமையாளர் உணர்ந்து கொள்ள வேண்டும். இதற்காகச் சந்தை நிலவரங்களைச் சரியான முறையில் ஆய்வு செய்து சரியான சந்தை நிலவரங்களை சேகரித்துத் தரக்கூடிய அனுபவமும் திறமையும் உடைய பணியாளர்களை முகாமைத்துவம் பணியில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடிகளில் சிறப்பாக விளக்குகின்றார்.

**"வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு**
**அனைவரையும் ஆராய்வது ஒற்று". (குறள் 584)**

தாம் செய்கின்ற அதே தொழிலைச் செய்கின்றவர், தம் சுற்றத்தார், தம் பகைவர், அரச அலுவலர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அயலவர் என்று கூறப்படும் அனைவரின் சொல், செயல் கொண்டு அவர்களுடைய மனக் கருத்தைச் சரியாக அறிபவரே ஒற்றர் என்கிறார் திருவள்ளுவர். அரசுக்காக ஒற்றுவேலை செய்யும் பணியாளர்கள், அரசியல் சுற்றம், உறவு சுற்றம், ஆட்சியாளரை விரும்பாதவர் என அனைவரையும் ஆராய வேண்டும் வினைசெய்வார் என்று திருவள்ளுவர் கூறுவது ஆட்சியை நடத்துவதில் நேரடியாகப் பங்கு பெறுபவர்கள். சுற்றம் என்று அவர் கூறுவது என்பது ஆட்சி செய்பவர்களைச் சுற்றி இருக்கின்ற அரசின் கொள்கை வகுப்பவர்களும் அவற்றைச் செயல்படுத்துபவர்களுமாகிய ஆலோசகர்கள், நிபுணர்கள், அமைச்சர்கள் போன்றோருடன் அரசில் இருப்பவர்களின் உறவினர்களையும் நண்பர்களையும் குறிக்கும். இவர்கள் ஆட்சி அதிகாரத்துக்கு நெருக்கமாக இருப்பதால் செல்வாக்குடன் வலம் வருவர். வேண்டாதார் என்போர் ஏதாவது ஒரு காரணத்துக்காக ஆட்சிப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டோர், அல்லது ஆட்சியாளர் மீது மனவெறுப்புக் கொண்டு ஒதுங்கி நிற்பவர் அல்லது பழைய ஆட்சியாளர்கள். அரசில் இருப்பவர்கள் இந்த மூன்று தரப்பினரையும் முறையாக ஆராய வேண்டும். அப்போதுதான் ஆட்சியினைச் சிறப்பாக நடாத்துவதுடன், அரசுக்கு எதிராக யாரவது செயற்பட்டால் இலகுவில் அடையாளம் காண்பதுடன் பொருத்தமான நடவடிக்கைகளையும் எடுக்கக் கூடியதாக இருக்கும். அதற்காக அரசு உளவுத் துறையினைப் பயன்படுத்தும்.

உளவுத்துறை அல்லது புலனாய்வுத்துறையிடமிருந்து அரசுக்குப் போதுமான செய்திகள் கிடைக்கும். அந்த மூன்று தரப்பினரும் அரசுக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ பேசுவதாயிருந்தாலும், செயல்படுகிறவர்களாக இருந்தாலும் அது தொடர்பான செய்திகளைக் கூட நிறையப் பெறமுடியும். ஆட்சிக்கு ஊறு விளைக்கும் சொல், செயல்கள் நடைபெறுகின்றனவா என்பதனை அந்தத் தரப்பினரின் நடவடிக்கைகளை மறைவாக உளவுபார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். மேலும் அவர்கள் அரசுக்கு உண்மையாக இருக்கிறார்களா இல்லையா என்பது தொடர்பான தகவல்களையும் பெறமுடியும். பெறப்படும் அத்தகவல்களை அரசு ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

எவ்வாறு ஒரு உளவுத்துறை ஒற்றன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரினதும் கருத்துக்களை அவர்களின் சொல், செயல்களில் இருந்து அறிந்து கொள்கின்றானோ அதேபோல் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தனது நிறுவனத்திற்கு பயன் தரக்கூடிய இலாபம் தரக் கூடிய கருத்துக்களை ஆய்ந்து அறிந்து, அக்கருத்துக்களின் அடிப்படையில் ஏற்ற பொருட்களைத் தயாரித்து அல்லது பொருட்களில் ஏற்ற மாற்றங்களைச் செய்து பொருத்தமான சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களை உருவாக்கிச் செயல்படுத்தி தனது நிறுவனத்தை இலாபகரமானதாக மாற்ற வேண்டும் என்ற கருத்துக்களை இங்கு திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

(தொடரும்)

---

# இதுவல்லோ மாநாடு...

(21ஆம் பக்க தொடர்)

அந்த அளவிற்கு அற நூல்கள் சார்ந்து பல புதிய விடங்களை முன்வைத்திருந்தார். பல புதிய திசைகளை ஆய்வாளர்களுக்குக் காட்டியிருந்தார். தனது உரையில் தமிழ் நாட்டவர்களும் வியக்கும் வகையிலும் தமிழ் நாட்டுக்கு முன்னோடியாக இருக்கும் வகையிலும் ஈழ நாட்டவர்கள் செய்த தமிழ்ப்பணிகளையும் தொட்டுக் காட்டிப் பேசினார். சி.வை.தாமோதரம்பிள்ளை, வண.தனிநாயகம் அடிகளார் உள்ளிட்ட அறிஞர்களை வியந்து பேசினார். பல விடயங்களை நயந்தும் பேசினார். சுவாரசியமான உதாரணங்களைச் சொன்னார்.

அத்தகைய ஆளுமையை மாநாட்டுக்கு அழைத்தமைக்காக தமிழ்த்துறைத் தலைவர் உள்ளிட்ட அனைவரையும் பாராட்டியே ஆகவேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசாவின் உரையும் பேராசிரியர் ய.மணிகண்டனின் உரைக்கு ஈடாக இன்னொரு தளத்தில் சுவாரசியமாகவும் யதார்த்தமாகவும் அமைந்தது.

உடல்மொழியோடு ஆழமான கருத்துக்கொண்டதாக அவர் உரை இருந்தது. உபவேந்தர் மிகுந்த விருப்பத்தோடும் ஈடுபாட்டோடும் மாநாடு முடியும் வரை செயற்பட்டமையைக் காணமுடிந்தது. அவரது செயற்பாடு ஆச்சரியம் தரும் வகையிலும் அமைந்தது. பாராட்டவேண்டிய விடங்களை முதலாவது நபராக கைதட்டிப் பாராட்டிக்கொண்டிருந்தார். கலைஞர்களுக்கான கௌரவம் வழங்கும் வேளையில் அனைத்து கலைஞர்களினதும் காலைத் தொட்டு வணங்கியே அக் கௌரவங்களை வழங்கினார். அவரது செயற்பாடு அனைவரையும் ஈர்த்தது. மாநாட்டின்போது அண்ணாவிமார் கௌரவிக்கப்பட்டனர். வடக்கு, கிழக்கு, மலையகத்தைச் சேர்ந்தோர் அதிலும் வயதான அனுபவம் நிறைந்த அண்ணாவிமார் கௌரவப்படுத்தப்பட்டனர்.

அதேபோன்று பண்டிதர்கள் கௌரவிக்கப்பட்டனர். மூத்த ஓய்வுநிலைப் பேராசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். மாநாட்டினையொட்டி நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டி, தமிழறிவு, வினாவிடைப் போட்டிகளின்போது வெற்றியீட்டிய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இவ்வாறு பல நிகழ்வுகள் இடம்பெற்றன. தமிழியல் மாநாடு என்பதையும் தாண்டி தமிழ்ப்பெரும் விழா என்ற நிலையில் சிறப்பாக ஒவ்வொரு நிகழ்வும் இடம்பெற்றது.

பிற்பகல் 3.00 மணியிலிருந்து 6.00 மணிவரை வெவ்வேறு இடங்களில் ஆய்வு அமர்வுகள் இடம்பெற்றன. இலங்கையிலுள்ள ஆய்வாளர்கள் மட்டுமன்றி தமிழ் நாட்டிலிருந்தும் ஆய்வாளர்கள் வருகை தந்து தமது ஆய்வுக்கட்டுரைகளை அளிக்கைசெய்தனர். நான்காவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டு ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களும் விரிவுரையாளர்களும் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும் கூட்டுணர்வுடனும் ஆர்வத்துடனும் செயற்பட்டனர். காலைச் சிற்றுண்டி வழங்கல், மதிய உணவு வழங்கல், பிற்பகல் சிற்றுண்டி என அனைத்தும் சிறந்த திட்டமிடலுடன் நடைபெற்றன. மாணவர்கள் ஒவ்வொருவரையும் வரவேற்று உபசரித்தார்கள்.இரண்டாவது நாள் ஆவணி 8ஆம் திகதி கலை நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. பல்வேறு ஆற்றுகைகள் நிகழ்த்தப்பட்டதோடு அவை அனைத்தும் வியக்கவைத்தன.

# சிறுவர் உலகம்

சுகந்தி



**நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு**

***தெளிவுரை :***
எவ்வகையால் உயர்ந்தவரும் நீர் இல்லாமல் இவ்வுலகில் வாழ முடியாது. அதுபோலத் தண்ணீரின் இடையறாத ஓட்டமும் மழை பெய்யவில்லையென்றால் இல்லையாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 76

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | 08 | 09 | |
| 10 | 11 | 12 | | 13 | 14 |
| | 15 | | 16 | 17 | |
| 18 | 19 | 20 | 21 | | 22 |
| 23 | | | 24 | 25 | 26 |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
தொலைபேசி இல ..........................................
பாடசாலை பெயர் ..........................................
வதிவிட முகவரி ..........................................
..........................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) நூற்றாண்டு கடந்தாலும், தமிழுலகில் என்றும் அழியாத நாமம் கொண்ட புரட்சிக் கவிஞன்.
(4) தாவரங்களில் இருந்து எமக்குக் கிடைக்கின்ற இனிப்புச் சுவை கொண்ட உணவு இது. உயிர்ச்சத்துகள் நிறைந்த உணவு.
(7) நாம் அமர்ந்து கொள்வதற்கான தளபாடம்.
(10) பறவைகளின் வாயைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(13) சூரியக் குடும்பத்தில் கவர்ச்சியான கிரகமாகக் குறிப்பிடப்படுவது.
(16) நிறையுணவான திரவ ஆகாரம்.
(18) குறித்த தலைப்பு ஒன்றில் மாணவர்களாகிய நீங்கள் எழுதுகின்ற ஆக்கம் இப்பெயர் பெறும். (தலைகீழான சொல்)
(24) இடுக்கண் வரும் வேளையில் ஓடோடி வந்து தோள் கொடுப்பவன் இவன். (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) கமுகு மரத்தில் காய்ப்பது.
(3) இருப்பிடம் உட்பட உடைமைகள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக இடம்பெயர்ந்த ஒருவரைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(4) கரையம், கரைப்பான் ஆகியவற்றை இரண்டறக் கலந்த பின்னர் வருவது இது. (உதாரணம் உப்பும், நீரும் கலந்த பின்னர் கிடைப்பது)
(11) தித்திப்பு சுவை நிறைந்த உணவுப்பண்டம். உங்களைப் போன்ற சிறார்களுக்கு மிகவும் விருப்பமான இனிப்புப்பண்டம்.
(16) யானையைப் பராமரிப்பவன் இவன். யானை இவனுக்கு மட்டுமே கட்டுப்பட்டு நடந்து கொள்ளும்.
(18) நாம் கறி சமைப்பதற்குப் பயன்படுத்துகின்ற தாவர இலைகள். (தலைகீழான சொல்)
(22) பெண்கள் காதுகளில் அணிந்து கொள்கின்ற ஆபரணம். ஆண்கள் சிலரும் நாகரிகத்துக்காக இதனை அணிந்து கொள்கிறார்கள். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 75

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கிரிக்கெட் 09. கோடி 14. அம்புலி 18. மதில் 22. படகு

**மேலிருந்து கீழ்**

02. கோடரி 04. கசப்பு 08. அல்லி 19. மகுடி 14. பல்லி 16. குடம்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 74

### பாராட்டு பெறுவோர்

**1. இப்திகார் ஸைத்**
தரம் 6, கே/மா/தேசிய கல்லூரி, ஹிங்குர.

**2. ஆலா பயாஸ்**
எகட்டுமுல்ல நாகொல்லகொட.

**3. பஹ்மா**
தரம் 9, ஏபென்ஹில் கல்லூரி 12/22ஏ எல்லதுர கம்பளை.

**4. இ. சயந்தவி**
தரம் 6, மட்/வின்சன்ட் ம,உ,பா ஜெயந்திபுரம், மட்டக்களப்பு

**5. பாத்திமா ரினூசியா**
தரம் 6
கொழும்பு 10.

**6. க. ஜகஸ்வனி**
தரம் 9ஏ, தி/தி. கலைமகள் மு.ம. வித்தியாலயம் அன்புவழிபுரம், திருகோணமலை

**7. நவாப் பாத்திமா ரிப்தியா**
தரம் 6, அல் அமான் மு.ம. வித்தியாலயம் கல்லொலுவ, மினுவாங்கொடை.

**8.எம்.ஏ ஆயிஷா சைனப்**
தரம்12 ஏ, களு/ ரஹ்மானியா வித்தியாலயம், 41 பி, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை

**9. ச.குபேனிகா**
மட்/பட்/ துறைநீலாவணை ம.வி கண்ணகி அம்மன் கோயில் வீதி, துறைநீலாவணை 05.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 76
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

# உலகில் மிகவும் அதிக மதிப்பு உள்ள நாணயம் எது?



அமெரிக்க டொலர் அல்லது பிரிட்டனின் பவுண்ட்தான் உலகில் மிகவும் அதிக மதிப்புள்ள நாணயங்கள் என்று நினைக்கிறோம். ஆனால். உண்மை அதுவல்ல. நாணயங்களின் மதிப்பு அடிக்கடி கூடும் அல்லது குறையும். அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள்படி, குவைத் அதிக அளவில் பெட்ரோல் ஏற்றுமதி செய்யும் நாடு. ஆகவே, உலகில் மிகவும் செல்வமான நாடுகளில் ஒன்று குவைத். இந்த நாட்டு நாணயத்தின் பெயர் தினார். இந்த தினார்தான் உலகின் மிக அதிக மதிப்புள்ள நாணயமாகப் பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. டொலருக்கு எத்தனை தினார்கள் (குவைத் நாட்டு நாணயம்) கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? ஏறக்குறைய மூன்றே கால் டொலர்கள் (8.24) கொடுத்தால் தான் ஒரு டினார் கிடைக்கும். அமெரிக்க. டொலரின் மதிப்பு அவ்வளவுதான். குவைத் தினாருக்குப் பிறகு பஹ்ரைன், ஓமான் மற்றும் ஜோர்டான், நாட்டின் தினார்களும் மதிப்பு மிகுந்தவை. அதாவது வரிசைப்படி பார்த்தால் குவைத், பஹ்ரைன், ஓமான் தினார் மதிப்பு மிகுந்தது. அதன்பிறகு இங்கிலாந்தின் பவுண்ட். இந்த நாணய மதிப்பு வரிசையில் அமெரிக்க டொலர் 9வது இடத்தில்தான் இருக்கிறது.

**இரா.கிஷாலன்...**
வத்தளை

## அறிந்து கொள்வோம்





1.கண்டங்களில் பெரியது ஆசியா கண்டம்.
2. கடல்களில் பெரியது பசுபிக் பெருங்கடல்.
3. தீவுகளில் பெரியது அவுஸ்திரேலியா.
4. சிகரங்களில் பெரியது எவரெஸ்ட் சிகரம்.
5. மலைகளில் பெரியது இமயமலை.
6. ஆறுகளில் பெரியது அமேசான் ஆறு.
7. ஏரிகளில் பெரியது காஸ்பியன் ஏரி.
8. பாலைவனங்களில் பெரியது சஹாரா பாலை–வனம்.
9. பாறைகளைப் பற்றிய படிப்புக்கு பெட்ராலஜி என்று பெயர்.
10. வெள்ளை யானைகளின் நிலம் என்றழைக்கப்படு–வது தாய்லாந்து.
11. மலைகளின் நிலம் என்றழைக்கப்படுவது மியான்மர்.
12. மணலின் இரசாயனவியல் பெயர் சிலிகான் – டை – ஒக்ஸைட்
13. மண்புழுவுக்கு ஐந்து இதயங்கள் உள்ளன.
14. மிக வெப்பமான கோள் வெள்ளி.
15. உலகில் 2000 வகையான பாம்புகள் உள்ளன.
16. சூரிய ஒளி பூமியை வந்தடைய 8.3 நிமிடங்கள் ஆகின்றன.
17. அரபிக் கடலின் ராணி எனப்படுவது கொச்சின்.
18. ஓர் அணிலின் சராசரி ஆயுட்காலம் ஒன்பது ஆண்டுகள்.
19. பிலிப்பைன்ஸ் தீவுகளைக் கண்டுபிடித்தவர் மெகல்லன்.
20. எரிமலை இல்லாத கண்டம் அவுஸ்திரேலியா.

**பாத்திமா ஆப்னா...**
அக்கறைப்பற்று

## இவ்வார மழலை




முகுந்தன் – நிரோமி,
கொட்டாஞ்சேனை

# விடுகதைகளும் விடைகளும்

1. சிறகடித்து பறப்பவனை சமாதனத்துக்கு உதாரணம் சொல்வர் அவன் யார்?
2. வெள்ளை ராஜாவுக்கு கறுப்பு உடை அது என்ன?
3. சின்ன மீசைக்காரன் மியாவ் ஓசைக்காரன் அவன் யார்?
4. தொட்டுப் பார்க்கலாம் ஆனால் எட்டிப் பார்க்க முடியாது அது என்ன?
5. இருட்டில் கண் சிமிட்டும் ஆனால் நட்சத்திரம் அல்ல. அது என்ன?
6. பற்கள் இருக்கும் ஆனால் கடிக்க மாட்டான் அவன் யார்?
7. சங்கீத பாட்டுக்காரன் மழையில் கச்சேரியே செய்வான் அவன் யார்?
8. காற்றை குடித்து, காற்றில் பறப்பான் அவன் யார்?
9. எட்டு கால் ஊன்றி இருகால் பட வட்ட குடை பிடித்து வருவான் அவன் யார்?
10. வயதான ஒருவருக்கு புதிதாக ஒரு கை அது என்ன?
11. கேடயமுள்ள வீரனுக்கு வாள் இல்லை அவன் யார்?
12. அம்மா படுத்திருக்க மகள் ஓடிதிரிவாள் அது என்ன?
13. ஒற்றைக்கால் வெள்ளைச்சாமி நீரோடையில் மீன் பிடிக்கிறான் அவன் யார்?
14. பச்சை நிற அழகிக்கு உதட்டு சாயம் பூசமலே சிவந்த வாய். அவள் யார்?
15. குடியிருக்க கோட்டை கட்டும் அந்த கோட்டையை உடைத்து வெளியே வரும் அது என்ன?

***1. புறா***
***2. உளுந்து***
***3. பூனை***
***4. முதுகு***
***5. மின்மினிப் பூச்சி***
***6. சீப்பு***
***7. தவளை***
***8. பலூன்***
***9. நண்டு***
***10. பொக்கை***
***11. ஆமை***
***12. அம்மி, குழவி***
***13. கொக்கு***
***14. கிளி***
***15. பட்டாம்பூச்சி***



## பள்ளிக் கூட மணி



ட்ரீங். ட்ரீங். ட்ரீங். ட்ரீங்
ட்ரீங். ட்ரீங். ட்ரீங். ட்ரீங்
காலைக் கூட்டம் மணியடிக்குது
அதிபர் பேச்சைக் கேட்டிலாம்
ட்ரீங். ட்ரீங். ட்ரீங். ட்ரீங்
ட்ரீங். ட்ரீங். ட்ரீங். ட்ரீங்
பாடநேர மணி அடிக்குது
புதிய பாடம் படித்திடலாம்
ட்ரீங். ட்ரீங். ட்ரீங். ட்ரீங்
ட்ரீங். ட்ரீங். ட்ரீங். ட்ரீங்
இடை வேளை மணியடிக்குது
தின்று உண்டு மகிழ்திடலாம்

ட்ரீங். ட்ரீங். ட்ரீங். ட்ரீங்
ட்ரீங். ட்ரீங். ட்ரீங். ட்ரீங்
வீடு போக மணியடிக்குது
வரிசையாகச் சென்றிடுவோம்
நேரப் படி வாழ்ந்திடுவோம்
பிள்ளைகளே வாருங்கள்
ட்ரீங். ட்ரீங். ட்ரீங். ட்ரீங்

**இக்பால் அலி...**

## கண்டுபிடிப்பாளர்கள்

# நோபல் பரிசு பெற்ற முதல் அறிவியல் மங்கை மேரி கியூரி





நோபல் பரிசை பெற்ற முதல் விஞ்ஞானி மேரி கியூரி.

1898 ஜூலை மாதத்தில் மேரியும் அவரது கணவர் பியரி கியூரியும் புதிய கதிரியக்க மூலகமொன்றைக் கண்டுபிடித்தார்கள். தாய்நாடு போலந்தை பெருமைப்படுத்தும் விதமாக அந்த மூலகத்துக்கு 'பொலோனியம்' என்று பெயரிட்டார் மேரி. அதே ஆண்டில் இன்னொரு மூலகத்தை கண்டுபிடித்த கியூரி தம்பதிகள் அதற்கு ரேடியம் என பெயரிட்டனர்.

கதிரியக்கம் தொடர்பான மேரி கியூரியின் கண்டுபிடிப்புகள் அவரை சர்வதேச அளவில் பிரபலமாக்கியது. இயற்பியல் மற்றும் வேதியியல் என இருவேறு துறைகளுக்காக 1903ஆம் ஆண்டில் இயற்பியலுக்கான நோபல் பரிசு, மேரி கியூரி, பியரி கியூரி, ஹென்றி பெக்குரேல் என மூன்று பேருக்கு வழங்கப்பட்டது. எட்டாண்டுகளுக்கு பிறகு மேரி கியூரிக்கு வேதியியலில் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

பிரோநிஸ்லாவா வ்லேடிஸ்லாவா ஸ்க்லடவ்ஸ்கி தம்பதிகளின் கடைசி மகளாக 1867ஆம் ஆண்டு மேரி பிறந்தார்.

போலந்தில் பிரபலமான ஆசிரியர்களாக திகழ்ந்த பெற்றோரின் ஐந்து குழந்தைகளில் கடைக்குட்டியான மேரி, முறையான கல்வி கற்பதற்காக சிறு வயதிலேயே பகுதி நேர வேலைகளில் ஈடுபட்டவர்!

இயற்பியலிலும், கணிதத்திலும் முதுநிலை பட்டங்களை பெற்றவர் மேரி.

1906ஆம் ஆண்டு மேரியின் கணவர் பியரி கியூரி ஒரு விபத்தில் இறந்தார்.

சோர்போன் பல்கலைகழகத்தில் பேராசியராக பணிபுரிந்த கணவரின் வேலையை மேரி கியூரி தொடர்ந்தார்.

அந்த பல்கலைக்கழகத்தின் முதல் பெண் பேராசிரியர் என்ற பெருமையையும் பெற்றார் அவர். தொடர்ந்து பல ஆண்டுகளாக கதிரியக்க ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்த மேரி கியூரி, கதிரியக்க வெளிப்பாடுகளின் பாதிப்புகளுக்கு உள்ளானார்.

அதனால் இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மேரி கியூரி 1934 ஜூலை நான்காம் திகதியன்று காலமானார்.

# மஞ்சரி விளையாட்டு

# யார் தவறு?



வனிந்து ஹசரங்க 2017 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டுக்கு அறிமுகமானபோது இலங்கை அணி சொந்தக் காலில் நிற்க முடியாமல் தட்டுத் தடுமாறிக்கொண்டிருந்தது. லெக் பிரேக் பந்துவீச்சே அவரது சிறப்பு என்றபோதும் துடுப்பெடுத்தாடும் திறன் அவரை ஒரு சகலதுறை வீரராக அறிமுகப்படுத்தியது.

ஆரம்பத்தில் இலங்கை துடுப்பாட்டத்தில் சோபிக்காதபோது ஆபத்பாந்தவராக வந்தவர் வனிந்து. அதாவது வழக்கத்துக்கு மாறாக மத்திய வரிசையில் அவர் களமிறக்கப்பட்டபோது அது அவருக்கு சுமக்க முடியாத சுமையாகத்தான் இருந்துவந்தது. என்றாலும் வனிந்து என்பவர் இலங்கை அணியின் அடுத்த நட்சத்திரம் என்பது ஆரம்பத்திலேயே புரியக் கூடியதாக இருந்தது.

அனைத்து வகை கிரிக்கெட்டிலும் அவர் சோபிப்பார் என்பது அப்போது பெரும் நம்பிக்கையாக இருந்தது. ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது.

வனிந்து இலங்கையை தாண்டி ஒரு சர்வதேச நட்சத்திரமாக மாறிவிட்டார். ஆனால் அவரது ஆட்டம் என்பது அனைத்து வகை கிரிக்கெட்டிலும் சோபிக்கும் ஒரு வீரர் என்பதைத் தாண்டி குறிப்பிட்ட கிரிக்கெட்டுக்கு மாத்திரம் நிபுணத்துவம் பெற்ற விசேட வீரர் வரையறைக்குள் இருக்கிறது.

சுற்றிவளைப்பான் ஏன்? வனிந்து ஹசரங்க டி20 கிரிக்கெட்டில் ஒரு மாபெரும் வீரர். அதாவது சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் டி20 பந்துவீச்சாளர் வரிசையில் மூன்றாவது இடத்தில் இருக்கிறார். சில நாட்களுக்கு முன் முதல் இடத்தில் கூட இருந்தார். எனவே, டி20இல் அவர் தவிர்க்க முடியாத வீரர். இதனால் அவரது கிரிக்கெட் வாழ்க்கை முழுக்க முழுக்க டி20இல் தங்கி இருக்கிறது.

மற்றது, இப்போது பெரிதாக ஆர்வம் இழந்து வரும் ஒருநாள் கிரிக்கெட்டிலும் வனிந்து என்பவர் குறிப்பிடத்தக்க வீரர். ஒருநாள் பந்துவீச்சாளர் தரவரிசையில் அவர் 31 ஆவது இடத்தில் இருந்தாலும் இலங்கையை பொறுத்தவரை மஹீஷ் தீக்ஷனவுக்கு அடுத்து (20 இடம்) இலங்கை பந்துவீச்சாளர் ஒருவரின் சிறந்த தரநிலை இது தான்.



**வனிந்துவுக்கு டெஸ்ட் கிரிக்கெட் என்பது இப்போதைய சூழலில் வீண் சுமையாக மாறி இருப்பதே அவர் டெஸ்ட் கிரிக்கெட்டை கைவிட முக்கிய காரணமாக இருக்கிறது என்பது மாத்திரம் நிச்சயம்.**



**பானுக்க ராஜபக்ஷ ஒரு சிறந்த டி20 கிரிக்கெட் வீரராக இருக்கும் அதேநே-ரம் அவரை ஒருநாள் கிரிக்கெட்டிலும் தேர்ந்த வீரராக பயன்படுத்தி இருக்க முடியும். என்றாலும் அவர் இப்போது இலங்கை அணியில் டி20 போட்டி-களில் கூட தேர்வு செய்ய முடியாத அளவுக்கு சர்வதேச லீக் கிரிக்கெட்டில் வேலைப்பளுவுடன் இருக்கிறார்.**

ஆனால் டெஸ்ட் போட்டிகளில் வனிந்து ஹசரங்க என்பவர் இலங்கையின் ஒரு சாதாரண பந்துவீச்சாளரை விடவும் மோசமானவர். அவர் அந்தத் தரவரிசையில் முதல் 100 இடங்களில் கூட இல்லை.

எனவே வனிந்து ஹசரங்க தனது 26ஆவது வயதிலேயே டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதற்கு நியாயமான காரணம் இருக்கிறது. கடந்த வாரம் அவர் சிவப்புப் பந்து கிரிக்கெட்டை கைவிடப்போவதாக கூறியபோது இலங்கை கிரிக்கெட் சபையும் அதனை ஆமோதித்துவிட்டது.

'அவரது முடிவை நாம் ஏற்றதோடு எமது எதிர்கால வெள்ளைப்பந்து திட்டங்களில் அவர் முக்கியமானவராக இருப்பார் என்று நாம்புகிறோம்' என்று இலங்கை கிரிக்கெட் சபை தலைமை நிர்வாக அதிகாரி ஆஷ்லி டி சில்வா குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை கிரிக்கெட் சபையும் கால மாற்றத்திற்கு நெகிழ்ந்து கொடுத்திருக்கிறது என்பதே அதன் முடிவு காட்டுகிறது. இதற்கு முன்னர் சகலதுறை வீரர் திசர பெரேரா தனது 20 வயதுகளிலேயே டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற தீர்மானித்தபோது இலங்கை கிரிக்கெட் அதனை அனுமதிக்கவில்லை. ஆனால் வனிந்து விடயத்தில் அந்த இறுக்கமான போக்கை கைவிட்டிருப்பதன் பின்னணியை முழுமையாக அனுமானிக்க முடியாது.

என்றாலும் வனிந்துவுக்கு டெஸ்ட் கிரிக்கெட் என்பது இப்போதைய சூழலில் வீண் சுமையாக மாறி இருப்பதே அவர் டெஸ்ட் கிரிக்கெட்டை கைவிட முக்கிய காரணமாக இருக்கிறது என்பது மாத்திரம் நிச்சயம்.

ஹசரங்க முதல் முறை ஒருநாள் சர்வதேச போட்டியில் ஆடவே இலங்கை அணிக்கு அழைக்கப்பட்டார். தொடர்ந்து டி20 போட்டியில் அவருக்கு இடம் கிடைத்தபோதும் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமாகி மூன்று ஆண்டுகள் கழித்தே அவருக்கு டெஸ்ட் போட்டியில் ஆட வாய்ப்பு கிடைத்தது.

அதுவும் மிக்கி ஆத்தர் இலங்கை அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட பின்னரே வனிந்து ஹசரங்க பக்கம் பார்வை திருப்பியது.

2020 ஆம் ஆண்டு இலங்கை அணியின் தென்னாபிரிக்க சுற்றுப் பயணத்திலேயே ஹசரங்க டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டார். தனது முதல் போட்டியிலேயே நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தினார். அதுவும் தென்னாபிரிக்க அணி ஓர் இன்னிங்ஸ் மாத்திரமே துடுப்பெடுத்தாடியபோது 45 ஓவர்கள் பந்துவீசி 171 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

என்றாலும் அதற்குப் பின்னர் அவர் மேலும் மூன்று போட்டிகளில் ஆடினார். ஆறு இன்னிங்ஸ்களில் பந்துவீசினார். ஆனால் ஒரு விக்கெட் கூட வீழ்த்தவில்லை. துடுப்பாட்டத்திலும் இதே கதை தான். இதனால் கடந்த 2021 ஏப்ரலுக்குப் பின்னர் அவர் டெஸ்ட் அணிக்கு அழைக்கப்படவே இல்லை.

ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டில் வனிந்து உச்சத்தையே தொட்டுவிட்டார். அவர் இதுவரை 48 ஒருநாள் சர்வதேச போட்டியில் 67 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு 58 டி20 சர்வதேச போட்டிகளில் 91 விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கிறார்.

நவீன கிரிக்கெட்டில் டெஸ்ட் கிரிக்கெட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டும் இரண்டு படகுகளில் பயணிக்கும் கதையாகிவிட்டது. டி20 கிரிக்கெட்டில் பிரதானமாக வீரர்கள் ஓட்டங்கள் பெறுவதைத் தடுக்கும் வகையிலான உத்தியே பந்துவீச்சில் பயன்படுத்தப்படுகிறது. அதாவது ஓட்டங்களை தவிர்க்க முடியும் என்றால் தானாக விக்கெட்டுகளையும் வீழ்த்த முடியும். ஆனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் துடுப்பாட்ட வீரர்கள் விக்கெட்டை காத்து ஓட்டங்களை பெற முயல்வதால் அப்போது பந்துவீசும் பாணியே தனியாக இருக்கும். இந்த இரண்டுக்கும் இடை நடுவே பந்தை வீச முடியுமாக இருந்தால் ஒருநாள் போட்டிகளில் சோபிக்கலாம்.

உண்மையில் வனிந்து ஹசரங்க டி20 பக்கம் சாய்ந்தபோதும் அவரது ஆரம்ப கிரிக்கெட் என்பது முழுக்க முழுக்க மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டாக இருக்கவில்லை. 2016 ஆண்டு முதல்தர கிரிக்கெட்டில் ஆட ஆரம்பித்த அவர் மொத்தம் 44 போட்டிகளில் 102 விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கிறார்.

இன்னிங்ஸ் ஒன்றில் அவர் சிறந்த பந்துவீச்சாக 26 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து 8 விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கிறார். அதேபோன்று 3 சதங்கள் மற்றும் 19 அரைச்சதங்களுடன் 2657 ஓட்டங்களை பெற்றிருக்கிறார். ஓட்ட சராசரியும் 39.65 என துடுப்பெடுத்தாடக் கூடிய ஒருவருக்கான அளவிலேயே இருக்கிறது.

என்றாலும் அவர் போகப்போக மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் பக்கம் திரும்புவதற்கு அவரது திறமையை கடந்து சந்தை வாய்ப்புகளும் அப்படித் தான் இருந்திருக்கிறது. ஒரு சிறந்த டி20 வீரருக்கான சந்தை வாய்ப்பு என்பது டெஸ்ட் கிரிக்கெட் வீரருக்கு கிடைக்கும் வாய்ப்பில் பல மடங்கு அதிகம்.

நாட்டுக்கொரு டி20 லீக் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் அதில் ஆடுவதற்கு சர்வதேச அளவில் சிறந்த விரர்களுக்கான வாய்ப்பு அதிகம். குறுகிய கால தொடர்களிலேயே போதுமான அளவு சம்பாதித்துவிடலாம். அது சர்வதேச கிரிக்கெட்டில் ஆடுவதை விடவும் இலாபகரமானது. இப்படியாக வீரர்களுக்கு சர்வதேச கிரிக்கெட் என்பது தனது திறமையை சந்தைப்படுத்துவதற்கான வாயிலாகவே மாறி இருக்கிறது.

இப்படியான டி20 லீக்குகளில் வனிந்து ஹசரங்கவுக்கான கேள்வி அதிகம். அவர் எந்த டி20 லீக்கில் ஏலத்தில் விடப்பட்டாலும் போட்டி அதிகமாக இருக்கும். அவரை வாங்க அணிகள் பணத்தை வீசும்.

இப்போது ஹசரங்க இந்திய பிரீமியர் லீக்கில் முக்கியமான வீரர். ரோயல் சலஞ்சஸ் பெங்களூர் அணிக்காக ஆடி வருகிறார். தவிர பாகிஸ்தான் சுப்பர் லீக், கரீபியன் பிரீமியர் லீக் என பல்வேறு லீக்குகளிலும் ஆடுகிறார். இப்போது நடைபெற்றுவரும் லங்கா பிரீமியர் லீக்கில் அவர் பி லவ் கண்டி அணியின் தலைவராக செயற்படுகிறார்.

இப்படி இருக்க டெஸ்ட் போட்டி அவருக்கு பெரும் இடையூறாகிவிட்டது. ஹசரங்க டெஸ்ட் அணியில் இடம்பெறாததற்கு என்ன டெஸ்ட் அணிக்காக பயிற்சி முகாம்களுக்கு அழைக்கப்படுகிறார். அங்கே பயிற்சி பெற்று விட்டு பார்த்தால் டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டிருக்க மாட்டார். அண்மையில் கூட இவ்வாறான ஒரு பயிற்சி முகாமில் சேர்க்கப்பட்டதால் அமெரிக்காவில் நடைபெற்ற மேஜர் லீக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்க முடியாமல் கடைசி நேரத்தில் விலகிக் கொண்டார்.

எனவே, டெஸ்டில் இருந்து அவசரப்பட்டு ஓய்வு பெறுவதற்கு இதுவும் ஒரு காரணம். என்றாலும் இந்தப் போக்கு சர்வதேச கிரிக்கெட்டில் அதிகரித்து வருகிறது. பல வீரர்களும் தனது கிரிக்கெட் வாழ்வின் ஆரம்பத்திலேயே டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு முழுமையாக விடை கொடுக்கும் போக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இங்கிலாந்து சகலதுறை வீரர் மொயின் அலி சர்வதேச அளவில் டி20 லீக்குகளில் ஆடுவதற்காகவே டெஸ்ட் கிரிக்கெட்டுகளில் இருந்து ஓய்வு பெற்றது குறிப்பிடத்தக்க ஒன்று. என்றாலும் ஆஷஸ் போட்டி ஆடுவதற்காக ஓய்வு முடிவை மாற்றிக்கொண்டது வேறு கதை.

என்றாலும் இந்தப் போக்கை கட்டுப்படுத்த ஐ.சி.சி முதல்கொண்டு பல கிரிக்கெட் சபைகளும் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்திருக்கின்றன. மேற்கிந்திய தீவுகள் போன்ற பொருளாதார ரீதியில் பலவீனப்பட்டிருக்கும் கிரிக்கெட் சபைகள் தமது சொந்த வீரர்களை கட்டுப்படுத்த முடியாததால் இப்போது ஒட்டுமொத்த கிரிக்கெட்டும் அங்கு பலவீனப்பட்டிருப்பது இதற்கு நல்ல உதாரணம்.

மறு பக்கம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தனது பொருளாதார பலத்தால் சொந்த வீரர்கள் வெளிநாட்டு டி20 லீக்குகளில் பங்கேற்பதை கட்டுப்படுத்த முடிந்திருக்கிறது.

ஆனால் இலங்கை போன்ற நாடுகள் ஒரு சமநிலை போக்கை கையாள்வது அவசியமாகும். இப்போதைய நிலைப்பாட்டின்படி இலங்கை வீரர் ஒருவருக்கு நான்கு லீக் கிரிக்கெட் போட்டிகளிலேயே ஆட இலங்கை கிரிக்கெட் சபை அனுமதி அளிக்கிறது. இதில் இலங்கையில் நடைபெறும் லங்கா பிரீமியர் லீக் மற்றும் டி10 லீக்குகளை தவிர்த்துப் பார்த்தால் இரு வெளிநாட்டு லீக்குகளிலேயே வீரர்களுக்கு ஆட முடியும்.

என்றாலும் இது கல்லில் எழுதப்பட்ட சட்டமாகக் குறிப்பிட முடியாது. வீரர்களை கட்டுப்படுத்த முடியாதபோது இதில் அங்கங்கே மாற்றங்கள் நிகழ்வதை காண முடிகிறது. அது மஹேல ஜயவர்தன, குமார் சங்கக்கார காலம் தொடக்கம் நீடித்து வரும் சம்பிரதாயம்.

பானுக்க ராஜபக்ஷ ஒரு சிறந்த டி20 கிரிக்கெட் வீரராக இருக்கும் அதேநேரம் அவரை ஒருநாள் கிரிக்கெட்டிலும் தேர்ந்த வீரராக பயன்படுத்தி இருக்க முடியும். என்றாலும் அவர் இப்போது இலங்கை அணியில் டி20 போட்டிகளில் கூட தேர்வு செய்ய முடியாத அளவுக்கு சர்வதேச லீக் கிரிக்கெட்டில் வேலைப்பளுவுடன் இருக்கிறார். இப்படியான நிலைமை மற்ற வீரர்களிடமும் ஏற்பட்டால் அது நாட்டில் ஒட்டுமொத்த கிரிக்கெட்டையும் பாதிக்கும்.

வனிந்து ஹசரங்க டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றிருப்பது வெளிப்படையாக பார்த்தால் சாதாரணமான ஒன்றாக இருந்தாலும் அது ஒரு வழக்கமான போக்காக மாறாமல் பார்த்துக் கொள்வது எதிர்கால கிரிக்கெட்டுக்கு அவசியமாகும்.

**எஸ்.பிர்தௌஸ்...**



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# Senthooram
# செந்தூரம்

2023 ஓகஸ்ட் 20 ஞாயிற்றுக்கிழமை



யாழில் சிறப்பாக இடம்பெற்ற 11
குவியம் விருதுகள் 2023

றெய்கி 06
வைத்தியத்தில்
சிறந்து விளங்கும்
சுகந்தினி யசோதரன்

இஸ்லாமியர்களும் 07
சிவகுருநாதனும்

நடிகை
கௌசிராஜ்

# ப்ரூக்ஸின் பின் லாடன் வேட்டை



ஹொலிவுட் திரைப்படம் பார்த்து கெட்டுப்போனவர்களில் கரி ப்ரூக்ஸ் என்பவரும் ஒருவராக இருப்பார். பாகிஸ்தானில் 2010 ஆம் ஆண்டு அவர் கைது செய்யப்பட்டபோதுதான் அது உலகுக்கு தெரிந்தது. கையில் வாளோடு இருந்த அவர் பாகிஸ்தான் சென்றிருந்தது அல் கொய்தா தலைவர் ஒசாமா பின் லாடனை பிடித்துக் கொல்வதற்கு.

ப்ரூக்ஸிடம் வாளுடன், கைத்துப்பாக்கி ஒன்று, இரவில் பார்க்கும் கண்ணாடி ஒன்று, வரைபடம் ஒன்று மற்றும் பைபிள் ஒன்றும் இருந்தது. ஒசாமா பின் லாடனைத் தேடி அவர் பாகிஸ்தான் சென்றிருந்தது அது பதினொறாவது தடவை. பின் லாடனை பிடிக்கும் இறைவனின் திட்டத்தையே தாம் நிறைவேற்ற வந்ததாக குறிப்பிட்டார்.

அவரை பத்து நாட்கள் சிறைவைத்த பாகிஸ்தான் பின்னர் குற்றச்சாட்டு பதிவு செய்யாமல் விடுவித்தது.

ஒசாமா பின் லாடன் பற்றி அமெரிக்காவின் பூச்சாண்டிகள் அதிகரித்தபோதும் இவ்வாறு திரைப்படப் பாணியில் வேட்டையாட வந்தவர்கள் அதிகரித்தார்கள். 2011 ஆம் ஆண்டு பின் லாடன் கொல்லப்படாதிருந்திருந்தால் இவ்வாறான கதைகள் இன்னும் தொடர்ந்திருக்கும்.

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

## சொதப்பிய மனைவியின் கொலை முயற்சி





அமெரிக்காவின் பிளோரிடாவைச் சேர்ந்த 45 வயது மைக்கல் மொய்லானுக்கு படுக்கையில் இருந்து எழுந்தபோது தாங்க முடியாத தலைவலி. மனைவியை அழைத்து தன்னை மருத்துவமனைக்கு அவசரமாக அழைத்துச் செல்லும்படி கேட்டார். சோதித்துப் பார்த்ததில் மருத்துவர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. தலைக்கு பின்புறமாக உள்ளே துப்பாக்கி குண்டு ஒன்று இருந்தது. தலைக்குள் துப்பாக்கி குண்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து மனைவி ஏப்ரல் மொய்லான் அங்கிருந்து தப்பியோடினார். உறக்கத்தின்போது கணவரை தவறுதலாக சுட்டதாக பின்னர் வாக்குமூலம் அளித்தார். வீட்டில் இருந்து துப்பாக்கி மற்றும் இரத்தம் தோய்ந்த துணி கண்டுபிடிக்கப்பட்டது. அந்த மனைவி கைது செய்யப்பட்டார்.

## பழைய புத்தி மாறாது!



கன்னத் மக்டப் அமெரிக்காவைச் சேர்ந்த தொடர் கொலையாளி. 16 வயது எட்னா சுலைவன் என்ற பெண்ணை கற்பழித்து கொடூரமாக கொலை செய்த அவர், அவளின் 17 வயது காதலன் மற்றும் 15 வயது மார்க் டுனமன் என்ற சிறுவனையும் கொலை செய்தார்.

1966 ஆம் ஆண்டு குற்றம் நிரூபிக்கப்பட்ட அவருக்கு ஒன்று, இரண்டு அல்ல மூன்று மரண தண்டனைகள் விதிக்கப்பட்டன. பின்னர் அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டு தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு நன்னடத்தை பிணையில் விடுவிக்கப்பட்டார்.

என்றாலும் மக்டப்பின் பழைய புத்தி மாறவில்லை. வீடு திரும்பிய அவர் மேலும் நான்கு கொலைகளைச் செய்தார். 1992 ஆம் ஆண்டு மீண்டும் அவர் பொலிஸிடம் சிக்க மீண்டும் ஒருமுறை மரண தண்டனை விதிக்கப்பட்டது. கடைசியில் 1998 ஆம் ஆண்டு அவருக்கு உண்மையிலேயே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

## பாதசாரிகளுக்கும் சமிக்ஞை விளக்கு



பொதுவாக வாகனங்களுக்குத்தான் வீதியில் சமிக்ஞை விளக்குகள் பொருத்துவார்கள். ஆனால் பெரகுவேயில் பாதசாரிகள் பயணிப்பதற்கே ஒரு வீதியில் சமிக்ஞை விளக்கு பொருத்தி இருக்கிறார்கள்.

வினர்னா செர்டேவ்கா என்ற அந்த வீதி ஒரு நேரத்தில் ஒருவர் மாத்திரமே செல்லும் அளவுக்கு மிகக் குறுகலானது. அதாவது 19.6 அங்குலம் அளவே அகலம் கொண்டது. இருவர் எதிர்த் திசைகளில் வந்தால் மாட்டிக்கொள்ள வேண்டியது தான். ஆனால் இந்த பாதையை தவிர்த்து பயணித்தால் அந்த நகரில் ஒரு இடத்தில் இருந்து குறித்த மற்ற இடத்திற்கு போவதற்கு இரண்டரை மணித்தியாலம் வரை செல்லும். எனவே இந்தப் பாதை தவிர்க்க முடியாத ஒன்றாக மாறி இருக்கிறது.

என்றாலும் பாதையின் இரு பக்கமும் சமிக்ஞை விளக்கு பொருத்தி இருக்கிறார்கள். அதில் பச்சை நிறம் காட்டினாலே பாதையில் செல்ல முடியும்.

## துப்பாக்கியும் அமெரிக்காவும்



சிறு ஆயுதங்கள் தொடர்பாக கணக்கெடுப்பு அமைப்பு உலகெங்கும் 230 நாடுகளில் துப்பாக்கி வைத்திருப்பவர்கள் பற்றிய கணக்கெடுப்பு ஒன்றை வெளியிட்டது. அதன்படி பார்த்தால் அமெரிக்காவில் 393 மில்லியனுக்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு சொந்தமாக துப்பாக்கிகள் இருக்கிறதாம்.

இதனை வைத்து வொசிங்கடன் போஸ்ட் பத்திரிகை வெளியிட்ட ஆய்வு முடிவுகளின்படி, அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண், பெண் மற்றும் குழந்தைகளும் ஒவ்வொரு துப்பாக்கியை வைத்திருந்தால் கூட மேலும் 67 மில்லியன் துப்பாக்கிகள் மிஞ்சுமாம். அதாவது அமெரிக்காவில் தோராயமாக 100 பேருக்கு 120.5 துப்பாக்கிகள் இருக்கின்றன.

இது யெமனை விடவும் இரண்டு மடங்கு. உலகில் அதிக சிவில் பயன்பாட்டு துப்பாக்கிகளை வைத்திருக்கும் நாடுகள் வரிசையில் அமெரிக்காவுக்கு அடுத்து யெமனே இருக்கிறது. அந்த நாட்டில் 100 பேருக்கு 52.8 துப்பாக்கிகள் இருக்கின்றன.



தளபதி : போர் தொடங்க இன்னும் கொஞ்ச நேரம்தான் இருக்கு... ஏன் இன்னும் நமது ஆயுதக் கிடங்கை திறக்கவில்லை?
வீரன் : நமது அரசர் அதுக்குள்ளேதான் ஒளிஞ்சுக்கிட்டிருக்காரு... எப்படித் திறப்பது?

நண்பர் : என்ன ஜோஸியரே, கிளிக் கூண்டு ரொம்பச் சின்னதாயிருக்கு ?
ஜோசியர் : உள்ளே இருக்கிறது, வெட்டுக்கிளிங்க





ஜோன்ஸ் : இவர் பழக இனிப்பானர்
பீன்ஸ் : என்ன செய்றார்?
ஜோன்ஸ் : ஸ்வீட் கடை வச்சிருக்கார்

வேலு : நேத்து பல்லே விலக்கலை .. ..
ரமனன் : ஏன் .. ..
வேலு : என் மனைவி பக்கத்திலே இருந்ததால் வாயே திறக்க முடியலை ..





அப்பா : டேய் உலகத்துலயே காசு தாண்டா முக்கியம் காசு இல்லன்னா எதையுமே வாங்க முடியாதுடா.
மகன் : ஏன் கடன் வாங்கலாமே . . .



போலிஸ் : டெய்லி போலிஸ் ஸ்டேஷன்ல வந்து 2 வேளையும் கையெழுத்து போட்டு போகணும் தெரியுதா?
திருடன் : கையெழுத்து போட்டுட்டு நான் வழக்கம்போல திருடப் போலாங்களா ஐயா?

பூஜா : அவர் ஏன் தூங்கும் போது கண்ணாடி போட்டுக்கிறார்?
ராஜா : அவருக்கு அடிக்கடி லைப்ரரி போற மாதிரி கனவு வருமாம்.

நோயாளி : "டாக்டர் மயக்க ஊசி போடாம ஆபரேஷன் செய்றீங்க. எனக்கு பயங்கரமா வலிக்குது."
டாக்டர் : கொஞ்சம் பொறுத்துக்குங்க. கொஞ்ச நேரத்துலதான் "எல்லாமே" முடிஞ்சுடுமே."





நண்பர் 1 : சீக்கரமே பணத்தை பெருக்க என்ன வழி?
நண்பர் 2 : கீழே போட்டுட்டு விளக்குமாறு எடுத்து பெருக்க வேண்டியதுதான்



# ஊருக்குப் பெருமை தேடித் கொடுத்த சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்கள்

எம்.எஸ்.எம்.ஸாகிர்

கலாசார அலுவல்கள் அமைச்சினால் வருடம் தோறும் நடாத்தப்பட்டு வரும் பிரதீபா 2023 போட்டியானது தற்போது இடம்பெற்று வருகின்றது.

இதில் ஓர் அங்கமான மாகாண மட்டப் போட்டிகள் மட்டக்களப்பு பிள்ளையாரடி மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (12) இடம்பெற்றது.



இந்தப் போட்டிகளில் சுமார் 15க்கு மேற்பட்ட மத்திய நிலையங்கள் பங்குபற்றியிருந்தன. அதில் முஸ்லிம் பிரிவில் சுமார் 07 மத்திய நிலையங்கள் கலந்து கொண்டன.

இந்த கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் முதல் முறையாகக் கலந்து கொண்டு சிரேஷ்ட நிகழ்ச்சியான கோலாட்டம் போட்டியிலும் மற்றும் கனிஷ்ட நிகழ்ச்சியான ரபான், கோலாட்டம் போட்டியிலும் கலந்து கொண்டது. இந்த இரண்டு பிரிவுகளில் கோலாட்டம் சிரேஷ்ட நிகழ்ச்சியில் 83 புள்ளிகளைப் பெற்று சாய்ந்தமருது வரலாற்றில் முதலாவதாகக் கலந்து கொண்ட போட்டியிலேயே முதல் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு சாய்ந்தமருதுக்கு பெருமை சேர்க்கும் வகையில் வரலாற்றுச் சாதனை படைந்துள்ளனர்

அதேபோல் மற்றுமொரு சாதனையாக கனிஷ்ட பிரிவு போட்டியில் ரபான் கோலாட்டம் 73 புள்ளிகளோடு இரண்டாமிடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டது.



இது சாய்ந்தமருது வரலாற்றில் பாரியதொரு வெற்றியாகும். ஏனெனில், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் திறந்து எட்டு மாத காலப்பகுதியில் மிக நீண்ட காலமாக செயற்பட்டு வந்த மத்திய நிலையங்களை வீழ்த்தி இவ்வெற்றிச் சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.

இந்த வெற்றியில் கலந்து கொண்ட கோலாட்ட பிரிவு மாணவர்களான எம்.எப்.எம்.றிஹ்பத், ஏ.ஜீ.எம்.ஆஸிப், என்.ஹம்தி, என்.எம். இஷாம், ஜே.எம்.றிப்காஸ், என். நப்ரின், ஜே.எம்.ஷாபீத், என்.எம். அல்தாப், ஏ.எம்.எம்.நுஸ்கி, என்.எம். எம்.றுக்ஸான், ஏ.எம்.அஸ்ரி, ஏ.எம். ஹபீஸ், ஜே.எம்.ஜகி, ஏ.எம்.எம். அர்ஷிக், எப்.எம்.ஹசீன், எஸ்.எம். சௌஸான், எச்.எம்.அப்ரத், ஜே.எம். சஹ்ரான், என்.ரீ.எம்.அஸ்ரிப் மற்றும் ரபான் கோலாட்ட பிரிவு மாணவர்களான ஜே.எம்.ஜரிஹ், எம்.எப்.எம். அஸ்பல், எம்.எப்.எம்.பஹட் , ஏ.ஆர்.எம்.சப்கி, என்.அமைத் அஹமட், எஸ்.எம்.ஏ. மஹ்தி, எம்.ஆர். இஸ்ஸத், எம்.ஐ.எம்.அபான், எஸ்.எம். ஆதிப், எம்.பிஸ்மில்லாஹ், எம்.ஏ.எம்.அப்துல் ஹாதி, எப்.எம்.பர்ஹான், ஆர்.ஏ.எம்.அஹ்னாப், மற்றும் கலாசார மத்திய நிலையத்தில் இம் மாணவர்களைப் பயிற்றுவித்த வளவாளர்களான, எம்.ஐ.எம். அமீர் (ஆசிரியர்)எம்.ஐ. அலாவுதீன்எம்.எச். பைசர்ஏ.எல்.எம். சாஜி (ஆசிரியர்)மற்றும் எஸ்.எச்.ஏ. கபூர் (வாத்தியம்) மற்றும் கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்ஏ.பி. நௌசாத் ஆகியோர் உட்பட வெற்றிக்காகப்பங்கு பற்றி பாடுபட்ட அனைவருக்கும் கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் வாழ்த்துக்களோடு பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் நீண்ட காலமாக கலாசார நிகழ்வுகள் தொடராக நடந்து வருகிறது. இருந்த போதிலும் அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தை வைபவ ரீதியாக இன்னும் திறக்கப்படாத நிலையிலும் இவ்வெற்றி கிடைத்தமை சவாலானதொரு விடயம்.

இதேவேளை இவ்வெற்றிக்காக முழுமூச்சாகவும் பக்க பலமாகவும் இருந்து மாணவர்கள் மத்தியில் இரவுபகல் பாராது அயராது செயற்பட்டு இவ்வெற்றிக்கு காரணகர்த்தாவாகவும் உந்து சக்தியாகவும் அமைந்த நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான், இதற்கு பின்புலமாக இருந்து செயற்பட்ட சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் மற்றும் இம்மாணவர்களை போட்டியில் பங்குபற்ற அனுமதி வழங்கிய கல்முனை சாஹிராக் கல்லூரி அதிபர் எம்.ஐ.எம்.ஜாபீர் மற்றும் சாய்ந்தமருது அல்ஜலால் பாடசாலை அதிபர் எஸ். சைபுதீன் மற்றும் இம் மாணவர்களின் பெற்றோர் ஆகியோருக்கும் நன்றி தெவித்தார்.

















கொழும்பு பிராந்திய இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி, தாருல் ஈமான் இலக்கிய வடடத்துடன் இணைந்து நடாத்திய 'ஹிஜ்ரத்' சிறப்புக் கவியரங்கம் கொழும்பு.10, தெமட்டகொட வீதி, தாருல் ஈமான் கேட்போர் கூடத்தில், 'ஹஸ்ஸான் பின் ஸாபித்' அரங்கில், கடந்த செவ்வாய்க்கிழை (15) மாலை வெகு சிறப்பாக நடைபெற்றது. தாருல் ஈமான் மண்டபத்தில் இடம் பெற்ற முதலாவது கவியரங்கம் இதுவாகும்.

தேசிய சூரா சபையின் பொதுச் செயலாளர், சிரேஷ்ட சட்டத்தரணி, இலக்கியச் செம்மல், கலாபூஷணம், கவிஞர் ரஷீத் எம் இம்தியாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கவியரங்கில் கவிஞர்களான ரவூப் ஹஸீர், கஸ்ஸாலி அஷ் ஷம்ஸ், நாச்சியாதீவு பர்வீன், புத்தளம் மரிக்கார் ஆகியோர் கவிதைகள் பாடி கவியரங்கைச் சிறப்பித்தார்கள்.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி பாரிஸ் சாலி கவிதையில் வரவேற்புரையை நிகழ்த்தினார். தாருல் ஈமான் இலக்கிய வட்டத் தலைவர் எம்.எச்.எம். ஹசன் முடிவுரையையும் நன்றியுரையையும் வழங்கினார். அஷ்ஷெய்க் அஸ்ஹர் சாதாத் (நளீமி) நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்க, இடைவேளையின்போது அஷ்ஷெய்க் நளீர் நஸீம் (நளீமி) இஸ்லாமிய கீதமொன்றை இசைத்தார். சகோதரர் எம். எல். எம் தவ்பீக் இந்நிகழ்ச்சி ஏற்பாட்டில் முக்கிய பங்கு வகித்தார்.

கவியரங்க தலைவர் சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ் உட்பட கவிதைகள் பாடிய கவிஞர்கள் அனைவருக்கும் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

வகவத்தின் தலைவர் என். நஜ்முல் ஹுசைன், செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், வகவ கவிஞர்களான 'தமிழ் தென்றல்' அலி அக்பர், 'செந்தமிழ் செல்வன்' எம்.எஸ்.எம். ஜின்னா, யாழ் அஸீம், வாழைத்தோட்ட வஸீர், நியாஸ் ஏ சமத், சமூக ஜோதி ரபீக், மலாய்க்கவி டிவான்சோ, நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் மற்றும் ரமீஸா இம்தியாஸ், நூருல் ஷிபா ஸாஹிர் உட்பட கவிஞர்கள், கலைஞர்கள், துறைசார் நிபுணர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் சபையை அலங்கரித்தனர்.

மாதம்பை இஸ்லாஹியா அரபுக்கல்லூரியின் மாணவர்கள் இந்நிகழ்ச்சிக்காகவே வருகை தந்து கலந்து கொண்டமை விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.



என். நஜ்முல் ஹுசைனின் "வேறாகா வேர்கள்" சிறுகதை நூல் வெளியீட்டு விழாவின் போது பிரதம அதிதி ரவூப் ஹக்கீம், முன்னிலை வகித்த இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோரிடமிருந்து கொழும்பு அல் ஹிதாயா கல்லூரியின் முன்னாள் அதிபர் நாகூர் உம்மா காதர், இலங்கை வானொலி முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் பாத்திமா ரினூஸியா, பிரபல சிங்கள நாவலாசிரியை பதியபெலல்ல சம்சாத் பேகம், கொழும்பு 2, மர்யம் பெண்கள் கல்லூரி அதிபர் ரிஹானா மர்சூக் ஆகியோர் பிரதிகள் பெறுகிறார்கள். முதல் பிரதி பெற்ற அல்ஹாஜ் எம். சீ. பஹார்தீன், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், தமிழ்த் தென்றல் அலி அக்பர், எம். எஸ். எம். ஜின்னா, நூலாசிரியர் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர்.



வலம்புரி கவிதா வட்டத்தின் 90 ஆவது கவியரங்கம் அண்மையில் நடந்த போது பிடிக்கப்பட்ட படம். கவிஞர் தி. ஸ்ரீதரன் கவியரங்கைத் தலைமையேற்று நடத்துகிறார். மேடையில் வகவத் தலைவர் நஜ்முல் ஹுசைன், செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், பொருளாளர் ஈழக ணேஷ், தேசிய அமைப்பாளர் எஸ். தனபாலன். எம். யூ. கமர்ஜான் பீபி கவிதை பாடுகிறார்.

# DAN TV பணிப்பாளர் குகநாதனுக்கு கனடாவில் சாதனைத் தமிழன் விருது



DAN TV பணிப்பாளர் எஸ் எஸ் குகநாதனுக்கு கனடாவில் சாதனைத் தமிழன் விருது வழங்கப்பட்டது. கனடா, ஒன்ராறியோ மாகாண ரொறன்ரோ நகர சபா அங்கத்தவர்கள் சபா மண்டபத்திலே 32வது தமிழர் தகவல் விருது விழா அண்மையில் மிக நேர்த்தியாக வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தை தலைமையகமாகக் கொண்டியங்கும் டான் தொலைக்காட்சியின் நிர்வாக இயக்குநர் எஸ்.எஸ்.குகநாதனுக்கு 2023 ஆம் ஆண்டுக்கான 'சாதனைத் தமிழன் விருது' வழங்கப்பட்டது. ஊடகக் துறையின் அச்சு மற்றும் இலத்திரனியல் பரப்பில் முன்னோடி சாதனைகளைப் புரிந்தவர் குகநாதன். யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் ' ஈழநாடு' பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் இவர் விளங்கி வருவது சகலரும் அறிந்ததே. குகநாதன் விருதினை ஏற்று ஆற்றிய உரை சபையோர்கள் கவனத்தை வெகுவாக ஈர்த்தது.

DAN TV பணிப்பாளர் எஸ் எஸ் குகநாதனுக்கு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையின் முன்னாள் பணிப்பாளர் வி.என. மதியழகன் பாராட்டி வாழ்த்து தெரிவித்தபோது பிடிக்கப்பட்ட படம்.



தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் முன்னாள் பிரதம ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் பற்றி எழுதி வெளியிடப்பட்ட 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூலின் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நூலின் சிறப்புப் பிரதியொன்றை இலங்கை பொன்மனச் செம்மல் கவியமுதன் எம். எம். தாஜ்மஹான் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்திலவேலவரிடம் ஆசிரிய பீடத்தில் வைத்து பெற்றுக் கொண்டபோது பிடிக்கப்பட்ட படம்.

SELFIE!




அபிவிருத்திக்கான சமூக முயற்சியாளர்களின் வலையமைப்பு

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் தலைவரும் "ஜயப்பன்" திரைப்படத்தின் தயாரிப்பாளருமான எஸ். விஜேராஜின் தயாரின் பிறந்தநாளை எளியமுறையில் கொண்டாடியபோது...





Dinesh இன் பிறந்தநாள் நிகழ்வில் மகன்மார்களுடன்

**உள்ளங்கை வைத்தியமாகிய ரெய்கியைப் படித்து அத்துறையில் சிறந்து விளங்கும் சுகந்தினி யசோதரன் அத்துறையைப் பற்றி அண்மையில் அளித்த விபரங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.**



# சிங்கப்பூரில் ரெய்கி வைத்தியத்தில் சிறந்து விளங்கும் சுகந்தினி யசோதரன்

**நீங்கள் இலங்கையில் பிறந்து சிங்கப்பூர் சென்று வாழ்வை அமைத்துக் கொண்ட அந்த வாழ்க்கை வட்டத்தை கூறமுடியுமா...?**

வணக்கம்! எனது பெயர் சுகந்தினி யசோதரன். நான் 1983 ஆம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறையில் பிறந்தேன். எனது பெற்றோர் சந்திரகாந்தன், ராதா ராணி. குடும்பத்தில் மூத்த மகளாக பிறந்த நான் பெண்கள் மெதடிஸ் கல்லூரியில் உயர்தரம் கற்றேன். நாட்டின் சூழ்நிலை காரணமாக படிப்பை தொடர முடியவில்லை. எனவே இந்தியாவிற்கு சென்று +2 வரை கற்று பின்னர் நாடு திரும்பினேன். 2004 ஆம் ஆண்டு திருமணமாகி சிங்கப்பூர் சென்றேன். சிங்கப்பூரில் கணவன் தொழிலுக்கு சென்ற பின்னர் தனியாக வீட்டில் வாழும் சூழல், புதிய இடம், தாயின் திடீர் மறைவு ஆகிய காரணங்களால் மன அழுத்தத்திற்கு உள்ளாக நேர்ந்தது. அச்சந்தர்ப்பத்தில் என் தோழியான மயூரா ரெய்கி வகுப்பிற்கு 2019 ஆம் ஆண்டு என்னை அழைத்து சென்றாள். அவளோடு இணைந்து ரெய்கியை கற்று, எனக்கு நானே சிகிச்சை செய்து முற்று முழுதாக மன அழுத்தத்திலிருந்து விடுபட்டதன் பின்னர், ரெய்கியை மென்மேலும் ஆராய்ந்து அறிந்து கொண்டு இதன் பலனை எல்லோரும் பெற வேண்டும். என்ற நோக்கத்தில் வசதியானவர்கள் மட்டுமே கற்றுக் கொள்ளக்கூடிய இந்த கலையை ஏழை எளிய மக்களுக்காக 2022 ஆம் ஆண்டிற்கு பின்னர் கற்பிக்கிறேன்.

**ரெய்கி உள்ளங்கை வைத்தியம் எனவும் அழைக்கப்படுகிறதில்லையா... இந்த ரெய்கி எனர்ஜியைப்பற்றி கொஞ்சம் எடுத்துரையுங்கள்...**

ரெய்கி என்பது பிரபஞ்ச சக்தியே ஆகும். பிரபஞ்ச சிருஷ்டியின் மூல தத்துவமாகிய அந்தப் பேராற்றலே ரெய்கி எனர்ஜியாகும். இதை நமது சித்தர்கள், ஞானிகள், பண்டைய கால யோகிகள், பரப்பிரம்மம் அருட்பேராற்றல், இறை சக்தி, தெய்வீக சக்தி, ஆழ்மனதின் அற்புத சக்தி இப்படி பல பெயர்களில் அழைத்து அதைக் கொண்டு பற்பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்கள். உண்மையில் இந்த எனர்ஜியானது பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து பொருட்களிலும் நிறைந்துள்ளது. அதை அறிந்து நம்பி உள்வாங்கி வெளியிடும் கலையை அறிந்தவர்களுக்கே இந்த எனர்ஜியை முழுமையாக உணர முடியும். இனிப்பின் சுவை உண்பவருக்கு மட்டுமே தெரியும்.

**நீங்கள் குருவாக யாரை வணங்கி பின்பற்றுகிறீர்கள்....?**
**ரெய்கி என்ற இந்த சொல் எந்த மொழியிலிருந்து பிறந்தது....?**

மிக்காவோ உசுயி என்ற பௌத்த மதத்தைச் சேர்ந்தவர் தான் ரெய்கியின் குரு. இவர் ஒரு ஜப்பானியர். ஜப்பானிய பல்கலைக் கழகம் ஒன்றில் உளவியல் விரிவுரையாளராக பணியாற்றியவர். இயேசுவும், புத்தரும் கைகளால் மனிதர்களை தொடும்போது குணமடைகிறார்கள் ஏன் அதை நம்மால் செய்ய முடியாது? என்று மாணவர்கள் கேட்ட கேள்வியினால் விரிவுரையாளர் பதவியை விட்டு மாணவர்களின் கேள்விக்கு பதில் தேடினார். அவர் பல நாடுகளுக்கு சென்று பல முயற்சிகளின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட சக்திக்கு "ரெய்கி" என பெயர் வைத்தார். ரெய்கி என்பது ஜப்பானிய சொல். ரெய் என்பது பிரபஞ்சம். கி என்பது சக்தி பிரபஞ்ச சக்தி என்பது இதன் பொருளாகும்.

**ஜப்பானின் பழமையானதொரு மருத்துவக்கலையல்லவா இது... எத்தனை படிமுறைகளாக இதனைக் கற்றீர்கள்....?**

ஜப்பான் மட்டுமல்ல அமெரிக்கா, லண்டன் போன்ற பல் வேறுப்பட்ட நாடுகளில் இப்போது ரெய்கி என்று அதாவது மருந்தில்லா மருத்துவம் என்று தனிப்பிரிவு வைத்தியசாலைகளில் உள்ளது. மிகப் பழமையான இந்த மருத்துவக் கலையை கற்பதற்கு தீட்சை மிக அவசியமாகும். இந்த கலை நான்கு படி முறைகளின் கீழ் கற்க முடியும். முதலாம் படிமுறையில் ரெய்கி கற்பவரின் உடல்நிலை, மனநிலை, வாழ்வு நிலைகளை மேம்படுத்துவதற்கான தீட்சை அளிக்கப்படும். இரண்டாம் படி நிலையில் கற்பவரோடு அவரின் குடும்பத்தினரின் உடல், மன, ஆற்றல் நிலையை மேம்படுத்துவதற்கான தீட்சையும், மூன்றாம் படிமுறையில், (மாஸ்டர்) சமூகத்தை சீரமைத்து நோய்களை குணமாக்குவதற்காக தீட்சை அளிக்கப்பட்டு மென்மேலும் எனர்ஜியை அதிகரிக்கும் செயன்முறையாகும். இரண்டாம் படிமுறையிலும், மூன்றாம் படிமுறையிலும் வெவ்வேறுபட்ட பிரபஞ்ச குறியீடுகள் கற்றுக் கொடுக்கப்படும். இக் குறியீடுகள் பிரபஞ்சத்தோடு விரைவில் தொடர்பை ஏற்படுத்தி பிரபஞ்ச சக்தியை உடலுக்குள் அதிகரிப்பதற்காக உதவி செய்யும். நான்காவது படிமுறை ஆசிரியர் படிமுறை கற்ற ரெய்கி கலையை மற்றவருக்கு கற்றுக் கொடுப்பதற்கான தீட்சையாகும். இவ்வாறு நான்கு படிமுறைகளின் கீழ் அதிக பணம் செலவு செய்து பல குருமார்களிடம் ரெய்கியை கற்றுக் கொண்டேன்.

**ரெய்கிக்கு கைதான் முக்கியம் என நினைக்கிறேன்...இதன் மூலம் உண்மையில் ஒருவரது எனர்ஜியை அதிகரிக்கலாமா.....?**

ரெய்கிக்கு கையும் முக்கியம்தான். ஆனால் கை மட்டுமே முக்கியம் இல்லை. கை இல்லாத ஒருவரால் கூட ரெய்கி ஆசிரியராக வர முடியும். மனதை திறந்த நிலையில் வைத்திருந்து, நம்பிக்கையுடன் மனதளவில் சரியாக இருந்தால் கைகள் இல்லாமலே பிரபஞ்ச சக்தி உடலுக்குள் வருவதை உணர முடியும். பிரபஞ்ச சக்தியை உணர்வதற்கோ, அல்லது உடலின் சக்தியை அதிகரிப்பதற்கோ எந்த கட்டுப்பாடுகளும் நிபந்தனைகளும் கிடையாது. திறந்த நிலையில் உள்ள ஒருமித்த மனமே போதும் ஒருவரது உடலின் சக்தியை அதிகரிக்க முடியும்.

**ரெய்கி சிகிச்சை முறை அலோபதி சிகிச்சை முறைக்கு மாற்றமானதா...?**

அப்படியல்ல. அலோபதி சிகிச்சையானது முழுவதுமே உடலில் நோய்களுடன் தொடர்புடையது. ஆனால் ரெய்கி என்பது மிக மிக நுண்ணிய அளவில் வேலை செய்யக்கூடியது. மனித உடலிலுள்ள அனைத்து சக்கரங்களையும் தூய்மைப்படுத்தி, சக்தி அளிப்பதன் மூலம் உடலை சுற்றியுள்ள ஆராவை பலப்படுத்தி, மேம்படுத்தி, உடல்நிலை, மனநிலை, சக்தி நிலை ஆகிய மூன்று வகையிலும் ஒரு சமநிலையை ஏற்படுத்தி எங்களை சரியாக வழிநடத்தக்கூடிய பிரம்மாண்டமான கலையாகும். ஆகவே ஹிப்னாடிஸம் மெஸ்மரிஸம் போலவே அலோபதி மருத்துவத் துறையுடன் ரெய்கி இணைந்து பணியாற்றக் கூடிய வாய்ப்பு எதிர்காலத்தில் உருவாகினால் மனித குலத்திற்கு மென்மேலும் நன்மைகள் விளையாலாம். ஆனால் இரண்டும் இணைந்து பயணிக்கலாமே தவிர ஒன்றுக்கொன்று மாற்றல்ல.

**உடல் மனம் ஆகிய இரு கருவிகளையும் ஒரே ஒத்த நிலையில் வைத்து பஞ்ச பூதங்களை தன் வசப்படுத்தி பிரபஞ்ச ஆற்றலை பெறலாமா...?**

நிச்சயம் பெற முடியும். பஞ்சபூதம் என்பது வெளி உலகில் மட்டுமல்ல. நம் உடலுக்குள்ளும் இருக்கிறது. அதாவது,உடலில் நீர் என்பது ரத்தம், வியர்வை, சிறுநீர், சளி போன்றவைகளாகவும், நிலம் என்பது முழு உடலாகவும், நெருப்பு என்பது உடம்பின் சூடு, செரிமானத்தன்மை என்பவற்றையும், காற்றானது சுவாசத்தையும் ஆகாயம் என்பது உயிரையும் குறிப்பதாகும். எனவே அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உள்ளது என்பதால் பஞ்சபூதங்கள் ஏற்கனவே உடலில் இருக்கிறது. நாம் விரும்பியோ விரும்பாமலோ நம் உடலின் இயக்கத்திற்கு பஞ்சபூதங்கள் இயல்பாகவே உதவி செய்கின்றன. உடலிலுள்ள பஞ்சபூதங்களின் இயக்கத்தை அதிகரிப்பதற்கு வெளியில் உள்ள பஞ்சபூதமான பிரபஞ்ச ஆற்றலோடு தொடர்பு கொள்வதற்கான கருவியாக உடலும், மனமும் அமைகிறது. அந்த சக்தியை பெறுவதற்கான வழிமுறையாக ரெய்கி கலை அமைகிறது.

**உண்மையான சிறந்த ரெய்கி நிபுணரை எப்படி இனங்கண்டு கொள்வது...?**

உண்மையான ரெய்கி குரு என்பவர் முதலில் ரெய்கியை தனது சொந்த வாழ்வில் பயன்படுத்தி முன்னேறியவராகவும், பெற்ற அனுபவம் மூலம் அதிகமானோருக்கு ரெய்கி சிகிச்சை அளித்து அதில் வெற்றி கண்டவராகவும் இருக்க வேண்டும். வருமானத்திற்காக மட்டும் இந்த துறையை தெரிவு செய்யாமல் மிக்காவோ உசுயி ஐயா கூறிய வழியை பின்பற்றி, சேவை மனப்பாங்குடனும் நம்பிக்கையுடனும் இத்துறையில் ஈடுபடுபவராக இருக்க வேண்டும். 80% சமூக நோக்கத்திற்காக செயல்படுபவராக ஒரு ரெய்கி குரு இருப்பது அவசியம்.

**இந்த ரெய்கி மூலம் உண்மையான நோய்க்கான காரணிகளை கண்டறியலாமா...இதனால் பின் விளைவுகள் ஏதும் உண்டா...?**

ரெய்கி மூலம் எத்தனை பெரிய நோய்களையும் கண்டறிய முடியும். முறையாக ரெய்கியை கற்று அதனை பயன்படுத்தும் போது, சிகிச்சை செய்பவருக்கோ அல்லது சிகிச்சை பெறுபவருக்கோ எந்த பின்விளைவுகளும் ஏற்படாது. சிகிச்சை அளிப்பவரும் அதைப் பெற்றுக் கொள்பவரும் முழுமையான நம்பிக்கையோடும், முழு மனதோடும் ரெய்கியை ஏற்றுக் கொள்பவர்களேயானால் நிச்சயம் அது எந்த பிரச்சனையானாலும் அதிலிருந்து வெளிவர முடியும் என்பது எனது சொந்த கருத்தும், அனுபவமுமாகும்.

**யோக நிலை மனக்கட்டுப்பாடும் இந்த ரெய்கி மருத்துவமும் ஒன்றோடு ஒன்று தொடர்ப்புடையதா....?**

ஆம். யோகம் என்பது தனிமனித வாழ்க்கையோடு மட்டும் தொடர்புடையது. ஆனால் ரெய்கி என்பது தனிமனிதனுடன் சமூக நலமும் அளிப்பது. இரண்டும் சென்று சேரும் இடம் வேறு வேறாயினும் இரண்டையும் தொடர்புப்படுத்துவது மனமாகும். யோகா பயிற்சிகள் மூலம் மனதை ஆளும் முறை, அடக்கும் முறை என்பவற்றையும் தியானமூலம் மனதை ஒரு நிலைப் படுத்தவும் முடியும். அந்த மன ஒருமைப்பாட்டோடு பிரபஞ்ச சக்தியை உடலில் அதிகரித்து, மருத்துவ முறையாக மனிதர்களை குணப்படுத்தும் வேலையை ரெய்கி செய்கிறது. மன ஒருமைப்பாடு என்ற ரீதியில் யோகம் ரெய்கி இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை

**நீங்கள் கற்ற இந்த கலையை மனத்திருப்திக்காக செய்கிறீர்களா...அல்லது பணம் சம்பாதிக்கும் தொழில் ரீதியான நோக்கத்தோடு செய்கிறீர்களா...?**

என் கணவர் சிங்கப்பூரில் ஒரு நிறுவனத்தின் முகாமையாளராக இருப்பதினால் அதிலிருந்து கிடைக்கும் வருமானமே எங்களின் குடும்ப வாழ்க்கைக்கு போதுமானது. ரெய்கி ஒரு அற்புதமான கலையாகும். பல்வேறு நாடுகளில் இருப்பவர்களுக்கு ரெய்கியை கற்றுக் கொடுக்கவும், அவர்களின் உடல் சக்தியை அதிகரிக்கவும், அதேபோல் நோய்களையும் அதன் காரணிகளையும் குணமாக்கவும், கண்டறியவும் தொலைதூரத்தில் இருப்பவர்களோடு பேசவும் அவர்களை தொடர்பு கொள்ளவும் தொலைபேசி இணைய வசதிகளுக்காக பணம் தேவைப்படுகிறது. மேலும், இது ஒரு மருத்துவ முறை என்பதால் சக்தி நிலையுடன் தொடர்புடைய பொருட்களும், சக்தியை உள்வாங்கி தக்க வைத்திருக்கக்கூடிய பொருட்களும் எனக்கு தேவைப்படுகிறது, ரெய்க்கியை நான் கற்க முற்பட்ட போது, அதிக பணத்தை செலவழித்தும் முறையான வழிகாட்டல்கள் இல்லை. சுயமாகவே ரெய்கி கலையை புரிந்து சொந்த வாழ்வில் பிரயோகப்படுத்திய பின்னரே ரெய்கி சிகிச்சையை மற்றவருக்கு சரியான முறையில் கிடைக்க வேண்டும். என்ற 80% உயர்ந்த சமூக நோக்கத்தோடும் 20% சிகிச்சை முறைக்கு தேவையான விடயங்களுக்காகவும் ஆகக் குறைந்த பணத்தை பெற்று ரெய்கியை கற்பிக்கிறேன்.

நேர்காணல் – **பாத்திமா நளீரா**

# வெளிச்சத்திற்கு வராத விஷயங்கள்

# இஸ்லாமியர்களும் சிவகுருநாதனும்



சென்ற 16 அன்று தினகரன் வார மஞ்சரியில் முன்னாள் 'தினகரன்' ஆசிரியர் மறைந்த ஆர். சிவகுருநாதன் பத்திரிகைத் துறையில் நீண்ட காலம் சேவையாற்றி சாதனை படைத்ததையொட்டி, அன்று மாலை வெள்ளவத்தை தமிழ்ச்சங்கம் மண்டபத்தில் 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் வெளியீடு செய்வது பற்றிய செய்திகளும் ஓரிரு கட்டுரைகளும் கவிதைகளும் பிரசுரமாகி யிருந்தன. இது செய்நன்றி மறவாமையாகும். பாராட்டுக்கள்.

மறைந்த ஆசிரியர் சிவகுருநாதன் தொடர்பாக பிரசுரமான பிரஸ்தாப ஆக்கங்கள் எதிலும் இஸ்லாமியர்களுடன் சிவகுருநாதன் ஆசிரியர்க்கிருந்த உறவு பற்றி ஒரு வார்த்தையேனும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பது, எதிர்கால ஆய்வு மாணவர்களுக்கு செய்யும் இருட்டடிப்பாகும். இக்குறைப்பாட்டை முடிந்தளவு நீக்கும் நன்னோக்கில் இவ்வாக்கம் முன்வருகிறது.

வசதி வாய்ப்புள்ளவர்கள் தம் பிள்ளைகளை வேறு நாடுகளில் ஊர்களிலுள்ள பிரபலாமான பாடசாலைகளில் சேர்த்து படிப்பிக்க வழி செய்வதில் மகிழ்ச்சியடைவர்.

இலங்கை சுதந்திரம் (1948ல்) பெற்றபின், இந்த அடிப்படையில் வடபுலத்தவர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்களில் வசதி வாய்ப்புள்ளவர்கள் தம் பிள்ளைகளை தலைநகரம் கொழும்பில் படிக்க வைத்து மகிழ்ந்தனர். அக்காலப் பிரிவில் யாழ்ப்பாணத்து தமிழறிஞர் செனேட்டர் மர்ஹூம் ஏ. எம். ஏ. அஸீஸ் என்பவர், கொழும்பு மருதானை ஸாஹிராக் கல்லூரியின் அதிபராக இருந்தார். தமிழ்ப் புலவர்கள் உட்பட, தரமான நல்லாசிரியர்கள் ஸாஹிராவில் பணியாற்றிட, ஸாஹிரா அக்காலை பிரபலமான கல்லூரியாகத் திகழ்ந்தது; தீந்தழிழை வளர்த்தது. இக்காலப் பிரிவில் 1949 – 1950 அளவில் ஸாஹிராவில் சேர்ந்து, நாளடைவில், தமிழ் ஆளுமைகளாக உயர்ந்த யாழ் மண்ணின் மைந்தர்கள் தாம் சிவகுருநாதன், கார்த்திகேசு சிவத்தம்பி, பீ. பாலசிங்கம் போன்றோரும் முஸ்லிம்களில் பிரபல எழுத்தாளர் எச். ஏம். பி. முஹிதீன், எஸ். எம். ஹனீபா, 'முமீசா' எனும் முஹம்மது மீராசாகிபு போன்றோராவர்.

நம் சிவகுருநாதன் யாழ்ப்பாணம் கந்தர் மடத்தில் பிறந்து, உரிய காலத்தில் சிறுவனாக இருக்கும் போதே யாழ்ப்பாணம் இந்து கல்லூரியில் சேர்ந்தார்.

நாளடைவில் கொழும்பு வந்து ஸாஹிராவில் சேர்ந்து படிப்படியாக உயர்ந்தார். இலட்சியத்தை உருவாக்கி ஓர் இலக்கை நோக்கிய பயணத்திற்கு கொழும்பு ஸாஹிராவே இவருக்கு வழிக்காட்டியது. கொழும்பு ஸாஹிராவின் தமிழ்ச் சங்கம் அக்காலை பல அரிய சாதனைகளை – நம் சிவகுருநாதன் அதன் தலைவராகவும், எச். எம். பி. முஹிதின் செயலாளராகவும் இருக்கையில் புரிந்தது. அவற்றுள் முக்கியமானது எது தெரியுமா? இதோ...

சமீபத்திய சில மாதங்களாக தமிழிலக்கியத்தின் பிரபல நாவலான 'பொன்னியின் செல்வன்' பற்றி அதனை படித்தவர்களும் படிக்காதவர்களும் பேசி மகிழ்ந்ததை அறிவோம்;. இக்கதையை எழுதிய கல்கி கிருஷ;ணமூர்த்தி – பெ. தூரன் என்ற பிரபல எழுத்தாளரையும் பிரபல ஓவியரான மணியன் அவர்களையும் அழைத்துக் கொண்டு பிரஸ்தாப கதைக்கான சரித்திர முக்கியத்துவமான இடங்களைப் பார்வையிட இலங்கை வந்தார். அப்பயணத்தில் 'பொன்னியின் செல்வன்' ஆசிரியர் கல்கி கிருஷ;ணமூர்த்தி சென்ற ஒரே கல்லூரி நம் ஸாஹிராவே. ஸாஹிராவின் தழிழ்ச் சங்கத்தின் தலைவரான சிவகுருநாதன் கல்கியை வரவேற்று கண்ணியப்படுத்தியது என்றும் மறக்க முடியாத சாதனையாகும். இது 1951இல் நடந்தது.

மற்றது – 'தினகரன் என்றால், அது தமிழ்ப் பேசும் முஸ்லிம்கள் பெரிதும் வாங்கிப் படிக்கும் பத்திரிகை; தினகரன் ஒரு முஸ்லிம் பத்திரிகை' எனப் பலராலும் பேசப்பட்டும் புகழப்பட்டும் வந்த ஒரு காலம், நமது இந்த சிவகுருநாதன் அவர்கள் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய காலமே.

இன்றும் அந்த எண்ணம் தற்போது செந்தில் வேலவர் இருக்கும் காலத்திலும் தொடர்கிறது எனலாம். இந்த உணர்வுக்கு வழிவிட்டது நம் சிவகுருநாதன் அவர்களே எனத் துணிந்துரைக்கலாம்.

மர்ஹூம்களான எம். கே. எம். அபூபக்கர் (இவர் தமிழ்நாடு, மதுரையைப் பூர்வீகமாகக் கொண்டவர்) எம். கே. எம். கியாஸ் (தன் பெயரை ஆங்கிலத்தில் புரட்டிப் போட்டு, 'ஸாயிக்' என்ற பெயரில் தினகரனில் பிரதி வெள்ளிதோறும் முஸ்லிம் பக்கம் நடத்தியவர்) எஸ். எம். ஹனீபா (இவர் மலையகத்தில் சிங்கள கிராமங்களுக்கு நடுவே – கல்ஹின்ன என்ற தன் ஊரில் 'தமிழ்மன்றம்' நடத்தி, 100 எழுத்தாளர்களின் நூல்களை இலவசமாக அச்சிட்டு, சாதனை படைத்தவர்) செய்னுல் ஹுஸைன் (கொழும்பைச் சேர்ந்தவர் இவர், பிரயாணக் கட்டுரைகள் எழுதி, வாசகர்களின் உள்ளங்களை தினகரன் பால் ஈர்த்தவர்). மேற்கண்ட தரமான முஸ்லிம் எழுத்து வேந்தர்கள் நம் சிவகுருநாதன் ஆசிரியர் தலைமையில் முஸ்லிம் வாசகர்களை தினகரன் பக்கம் கவர, அதன் தலைமையே காரணம் எனத் துணிந்துரைக்கலாம்.

எந்த முஸ்லிம்களின் இலக்கிய கூட்டமானாலும், இந்த சிவகுருநாதன் 'ஸலாம்' கூறியே பேச்சைத் துவங்குவார். புல முஸ்லிம்களை தினகரனுக்கு எழுத வாய்ப்பளித்து எழுத்தாளர்களாகத் தூக்கிவிட்ட ஏணியாகவும் கரை சேர்த்த தோணியாகவும் திகழ்ந்து, முஸ்லிம்களின் மனங்களில் இடம் பிடித்தவர் இந்த சிவகுருநாதன் அவர்களே.

இவ்வாறு பல வழிகளில் முஸ்லிம் சமுதாயத்தோடு இவர் இரண்டறக் கலந்து பணியாற்றியமையினால், முஸ்லிம் கலை இலக்கியவாதிகளை வாழும் போதே வாழ்த்தி சாதனை படைத்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் மர்ஹூம் ஏ. எச். எம். அஸ்வர், இந்த ஆர். சிவகுருநாதன் ஆசிரியருக்கு அரபு மொழியில் 'ஆஷறக் மில்லத்' எனும் பட்டமளித்து வாழ்த்தி மகிழ்ந்தார்.

இத்தகையை பொற்காலத்தை உருவாக்கிய பெரியார்களுள் நமதிந்த சிவகுருநாதன் ஐயா அவர்களும் மறக்க முடியாத மனிதர் என்பதை காலம் எப்போதும் புதையலாய் தன்னுள் புதைத்து வைத்துக் கொள்ளும்.



' சத்திய எழுத்தாளன் '
கலாபூஷணம்
எஸ்.ஐ.நாகூர் கனி



# அட்லி மீது கொல காண்டில் இருக்கும் விக்கி






அட்லி இயக்கத்தில் ஷாருக் கான் நடிப்பில் உருவாகி இருக்கும் ஜவான் படத்துக்கு வேற லெவலில் எதிர்பார்ப்பு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இதன் மூலம் பாலிவுட்டில் ஹீரோயினாக என்ட்ரி கொடுக்கும் நயன்தாராவும் பெரும் ஆர்வத்தை தூண்டி இருக்கிறார். மேலும் விஜய் சேதுபதி, அனிருத் என கோலிவுட்டின் முக்கிய புள்ளிகள் இப்படத்தில் இணைந்திருப்பது மிகப்பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. ஏற்கனவே படத்திலிருந்து வெளியான முன்னோட்ட வீடியோ போஸ்டர் என அனைத்தும் ரசிகர்களை கவர்ந்த நிலையில் முதல் பாடலும் வெளியாகி சக்கை போடு போட்டது. அதைத்தொடர்ந்து இரண்டாவது பாடல் வெளியாகும் என்று நேற்று அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது வெளியான வீடியோ பலரையும் ஆச்சரியப்படுத்தி இருக்கிறது. அதிலும் இந்த வீடியோவை பார்த்தால் விக்னேஷ் சிவன் நிச்சயம் கதிகலங்கி போய்விடுவார். அந்தளவுக்கு அதில் ரொமான்ஸ் பொங்கி வழிகிறது. அந்த வகையில் ஹையோடா என்று ஆரம்பிக்கும் இந்த பாடல் முழுக்க முழுக்க ஷாருக் கான், நயன்தாராவின் ரொமான்டிக் பக்கமாக இருக்கிறது. அதிலும் ஷாருக், நயனை அலேக்காக தூக்கி சுற்றும் ஒரு காட்சி கொஞ்சம் ஓவராக இருப்பதாகவே தோன்றுகிறது. பாலிவுட்டில் இதெல்லாம் சகஜமப்பா என்று கூறினாலும் நயன்தாரா சமீப காலமாக இது போன்ற ரொமான்ஸ் படங்களில் நடிப்பதை தவிர்த்து வந்தார். ஆனால் பாலிவுட்டில் வெற்றி கொடியை பறக்க விட வேண்டும் என்பதற்காக அவர் இப்படி உருகி உருகி ரொமான்ஸ் செய்திருப்பது ரசிகர்களை ஆச்சரியமடைய வைத்திருக்கிறது. அதற்காகத்தான் ஜவான் படத்தில் அவர் எந்த லிமிட்டும் இல்லாமல் நடித்திருக்கிறாராம். அந்த வகையில் தற்போது வெளிவந்துள்ள செகண்ட் சிங்கிள் பாடல் பல விமர்சனங்களை பெற்று வருகிறது. ஏனென்றால் அதில் நயன், ஷாருக்கானுடன் ரொம்பவும் நெருக்கமாக நடித்திருக்கிறார். டாப் ஹீரோக்களுடன் சில படங்களில் நடித்திருந்தாலும் எல்லை மீறாத அளவுக்கு தான் அவர் நடித்திருக்கிறார். ஆனால் ஜவான் செகண்ட் சிங்கிள் பாடலில் அவர் ஓவர் ரொமான்டிக்காக நடித்திருப்பதை பார்த்த ரசிகர்கள் தமிழ் ஹீரோக்களுடன் இப்படி எல்லாம் நடிக்கவில்லையே என்று கேள்வி எழுப்பி வருகின்றனர். காதல் பாடலாக வெளிவந்துள்ள அதில் முத்தக் காட்சியும் இருக்கிறது. இப்படி ரொமான்ஸ் பொங்கி வழியும் அந்த பாடலை பார்த்த பலரும் என்ன விக்கி இதெல்லாம், உங்கள் மனைவி இப்படி ரொமான்ஸ் செய்கிறாரே என்று கலாய்த்து வருகின்றனர். மேலும் சமீப காலமாக நயன்தாரா சோலோ ஹீரோயின் படங்களை தான் தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார். ஆனால் உண்மையில் பாலிவுட்டில் தன்னுடைய அஸ்திவாரத்தை ஸ்ட்ராங்காக போடுவதற்காக தான் நயன்தாரா எந்த கண்டிஷனும் இல்லாமல் நடிக்க சம்மதித்திருக்கிறாராம். அந்த வகையில் விக்கி பயந்ததில் தப்பே இல்லை என்றும் இதுதான் நயன்தாராவின் புது அவதாரம் என்றும் ரசிகர்கள் கலாய்த்து வருகின்றனர். எது எப்படி இருந்தாலும் தற்போது வெளியாகி உள்ள இந்த பாடல் ஃபர்ஸ்ட் சிங்கிளை விட அதிக கவனம் பெற்று இருக்கிறது என்பதுதான் உண்மை.







# குஷியில் விஜய்தேவரகொண்டா

விஜய்தேவரகொண்டா செப்டம்பர் 1ந் திகதி வெளியாக உள்ள 'குஷி' படத்தை பெரிதும் எதிர்நோக்கி இருக்கிறார். தெலுங்கில் முன்னணி நடிகராக இருக்கும் விஜய் தேவரகொண்டா மற்றும் நடிகை சமந்தா நடிப்பில் உருவாகியிருக்கும் திரைப்படம், 'குஷி'. இந்தப் படத்தை விஜய் தேவரகொண்டா, சமந்தா இருவருமே, தங்கள் சினிமா வாழ்க்கையில் அதிகமாக எதிர்பார்த்து வருகின்றனர். ஏனெனில் அவர்கள் இருவருக்குமே, கடந்த சில படங்கள் சரியாகப் போகவில்லை. இந்த நிலையில் 'குஷி' படத்தின் டிரெய்லர் சமீபத்தில் வெளியாகி, பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்தப் படம் காதல் மற்றும் குடும்ப பிணைப்பை, கணவன் மனைவிக்குள் ஏற்படும் ஊடல், கூடலைப் பற்றிச் சொல்வதாக இருக்கலாம் என்று டிரெய்லரைப் பார்த்தால் புரிகிறது. 'கீதா கோவிந்தம்' திரைப்படம் மூலம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்று, உயர்ந்த நிலைக்கு வந்த விஜய் தேவரகொண்டாவுக்கு, அதன்பிறகு வந்த அனைத்து படங்களும் சுமார் மற்றும் தோல்வி படங்களாகவே அமைந்துவிட்டன. அதுவும் கடந்த ஆண்டு வெளியான 'லைகர்' திரைப்படம் படுதோல்வியை சந்தித்தது. எனவே செப்டம்பர் 1ந் தேதி வெளியாக உள்ள 'குஷி' படத்தை பெரிதும் எதிர்நோக்கி இருக்கிறார், விஜய்தேவரகொண்டா.

# ஜெயிலர் சூட்டுடன் ஆரம்பிக்கப் போகும் தலைவர்-170



தலைவர் 170 படதில் ரஜினியின் சம்பள விவரம் வெளியாகி இருக்கிறது.இப்போது திரையரங்குகளையே அலறவிட்டு வரும் படம் தான் ரஜினியின் ஜெயிலர். கடந்த சில வருடங்களாகவே விமர்சன ரீதியாக ரஜினி தோல்வி படங்களை கொடுத்து வந்த நிலையில் நெல்சன் இயக்கத்தில் உருவான ஜெயிலர் படத்தின் மீது பெரிதும் நம்பிக்கை வைத்திருந்தார். அதை இயக்குனர் நெல்சன் காப்பாற்றி விட்டார் என்று தான் சொல்ல வேண்டும்.

ஏனென்றால் கடந்த வியாழக்கிழமை தியேட்டரில் வெளியான ஜெயிலர் படம் வசூலை வாரி குவித்து வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் விமர்சன ரீதியாகவும் பாராட்டுக்கள் பெற்று வருகிறது. ஜெயிலர் வெற்றி சூட்டுடன் அடுத்த படத்தையும் ஆரம்பிக்க வேண்டும் என்ற விறுவிறுப்புடன் இருக்கிறார் ரஜினி. ஏற்கனவே தலைவர் 170 படத்தை ஜெய் பீம் படத்தின் இயக்குனர் டிஜே ஞானவேல் இயக்க லைக்கா தயாரிப்பதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியானது. ஆக்சன் திரில்லர் ஜானரில் உருவாகும் இந்த படத்தில் தலைவர் மாஸ் காட்டப் போகிறார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ரஜினி இமயமலையில் இருந்து வந்த உடனே இந்த படத்தின் அக்ரிமெண்ட் கையெழுத்திட இருக்கிறது.

ஜெயிலர் படத்தைப் போல தலைவர் 170 படமும் பான் இந்திய படமாக உருவாகிறது. ஆகையால் மல்டி ஸ்டார்கள் இந்த படத்திலும் இணைந்துள்ளார்களாம். அதன்படி இப்போது தமிழ் சினிமாவில் ஆட்டிப்படைத்து வரும் பகத் பாசில் ரஜினிக்கு வில்லனாக நடிக்க இருக்கிறார். மாமன்னன் படத்திற்கு பிறகு கோலிவுட்டில் இவருக்கு வரவேற்பு அதிகமாக இருக்கிறது.

இவரைத் தொடர்ந்து நானியும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். விரைவில் இந்த படத்தின் படப்பிடிப்பு தொடங்க இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் கடந்த சில வருடங்களாக ரஜினியின் சம்பளம் சரிவை நோக்கி சென்று கொண்டிருந்தது. ஜெயிலரின் வெற்றியை பொருத்து தான் தலைவர் 170 படத்தில் ரஜினியின் சம்பளம் நிர்ணயிக்கப்பட இருந்தது.

அதன்படி ரஜினி இந்த படத்திற்கு 135 கோடி சம்பளமாக கேட்டாராம். உடனடியாக எந்த மறுப்பும் தெரிவிக்காமல் லைக்கா கேட்ட தொகையை கொடுக்க சம்மதம் தெரிவித்துள்ளனராம். மேலும் பாலிவுட்டில் முன்னணி நடிகரான அமிதாப் பச்சனும் தலைவர் 170 படத்தில் நடிக்க இருக்கிறார் என்ற கூடுதல் தகவல் வெளியாகி இருக்கிறது. ஜெயிலர் சூட்டுடன் ஆரம்பிக்கப் போகும் தலைவர் 170..

# நயன்தாராவை மீண்டும் வம்புக்கு இழுத்த கஸ்தூரி

என்னை பொறுத்தவரையில் நடிகைகளில் 'லேடி சூப்பர் ஸ்டார்' யார்? என்று கேட்டால் பழம்பெரும் நடிகைகள் கே.பி.சுந்தராம்பாள், விஜயசாந்தி போன்றவர்கள்தான்' என்று கஸ்தூரி கூறினார். திரை உலகில் சர்ச்சையான கருத்துகளை கூறி பரபரப்பு வளையத்துக்குள் இருப்பவர் கஸ்தூரி. அரசியலிலும் பல்வேறு கருத்துகளை கூறி சர்ச்சை ஏற்படுத்தி இருக்கிறார். நடிகர் நடிகைகளின் கருத்துகளை விமர்சித்து பரபரப்பு ஏற்படுத்தி வந்த கஸ்தூரி, நயன்தாரா வாடகைத்தாய் மூலம் குழந்தை பெற்ற நேரத்தில், 'இந்தியாவில் வாடகைத்தாய் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ளும் முறை தடை செய்யப்பட்டுள்ளது' என்று டுவிட்டரில் கருத்து பதிவிட்டார். சில பரபரப்பான கருத்துகளையும் தெரிவித்திருந்தார். இதனால் கடுமையான விமர்சனத்துக்கும் ஆளானார். இந்தநிலையில் கஸ்தூரி மீண்டும் நயன்தாராவை சீண்டியுள்ளார். சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற கஸ்தூரி, நயன்தாரா தொடர்பான ஒரு கேள்விக்கு பதில் அளித்தார். இந்த நிலையில் கஸ்தூரி மீண்டும் நயன்தாராவை சீண்டியுள்ளார். சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற கஸ்தூரி, நயன்தாரா தொடர்பான ஒரு கேள்விக்கு பதில் அளித்தார். அதில், 'தென்னிந்தியாவில் நயன்தாராவை 'லேடி சூப்பர் ஸ்டார்' என்று அங்கீகரிக்க முடியாது. என்னை பொறுத்தவரையில் நடிகைகளில் 'லேடி சூப்பர் ஸ்டார்' யார்? என்று கேட்டால் பழம்பெரும் நடிகைகள் கே.பி.சுந்தராம்பாள், விஜயசாந்தி போன்றவர்கள் தான்' என்று கஸ்தூரி கூறினார். கஸ்தூரியின் இந்த கருத்து பல்வேறு விமர்சனங்களை எழுப்பியுள்ளது. நயன்தாராவின் ரசிகர்கள் அவரை சரமாரியாக விமர்சித்து சமூக வலைதளங்களில் கருத்துகளை பதிவிட்டு வருகிறார்கள்.



# ஒரே படத்தால் மலர்ந்த காதல்





சாக்லேட் பாயாக வலம் வந்த அசோக் செல்வன் போர் தொழில் படத்தில் தனது வித்தியாசமான நடிப்பின் மூலம் ரசிகர்களின் கவனத்தை பெற்றிருந்தார். புதிதாக வேலை பார்த்திருக்கும் போலீஸ் அதிகாரியாக தனது துறுதுறுப்பான மற்றும் எதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தி இருந்தார். இப்படம் திரையரங்குகளில் சக்கை போடு போட்ட நிலையில் சமீபத்தில் ஓடிடியில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இந்நிலையில் சினிமாவில் எப்படி அசோக் செல்வன் அடுத்தடுத்து வளர்ச்சி அடைந்து வருகிறாரோ இந்த சூழலில் திருமணத்தையும் விரைவில் முடிக்க இருக்கிறார். அதன்படி வருகின்ற செப்டம்பர் மாதம் அசோக் செல்வனுக்கு திருமணம் நடைபெற இருக்கிறது. பிரபல நடிகை ரம்யா பாண்டியனின் சகோதரியை தான் அசோக் செல்வன் மனக்க இருக்கிறார். போட்டோ சூட் மூலம் பிரபலமான ரம்யா பாண்டியன் சில சின்னத்திரை நிகழ்ச்சியில் பங்கு பெற்றார். அதோடு மட்டுமல்லாமல் வெள்ளித்திரையிலும் சில படங்களில் நடித்திருக்கிறார். அருண் பாண்டியனின் சகோதரர் பெண்தான் ரம்யா பாண்டியன். இந்நிலையில் இவரின் தங்கையும் அருண் பாண்டியனின் மூன்றாவது மகளும் ஆன நடிகை கீர்த்தி பாண்டியனை தான் அசோக் செல்வன் மணக்கயிருக்கிறார். இவர்கள் இருவருக்கும் எப்படி காதல் மலர்ந்தது என்பது பலருக்கும் புதிராக இருக்கும். அதாவது அசோக் செல்வன் மற்றும் கீர்த்தி பாண்டியன் இருவரும் ப்ளூ ஸ்டார் என்ற படத்தில் இணைந்து நடித்து வருகிறார்கள். கிரிக்கெட்டை மையமாக வைத்து எடுக்கப்படும் இந்த படத்தில் சாந்தனு பாக்யராஜும் நடித்து வருகிறார்.ப்ளூ ஸ்டார் படத்தின் படப்பிடிப்பு தளத்தில் இருவரும் நெருங்கி பழகி வர நாளடைவில் இது காதலாக மாறி உள்ளது. இப்போது இவர்கள் இருவரும் திருமண பந்தத்தில் இணைய இருக்கிறார்கள். மேலும் விரைவில் இவர்களது திருமண தேதியை இருவரும் சேர்த்து அறிவிப்பார்கள் என்ற எதிர்பார்க்கலாம்.

# கோபிசந்த் ஜோடியாக பிரியா பவானி சங்கர்



கோபிசந்த் ஜோடியாக நடிக்க இரண்டு கதாநாயகிகளில் ஒருவராக தமிழ்நாட்டின் நாயகியான பிரியா பவானி சங்கர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். ஆரம்பத்தில் வில்லனாக நடித்துக் கொண்டிருந்த தெலுங்கு நடிகர் கோபிசந்த், பின்னர் கதாநாயகனாக நடிக்கத் தொடங்கினார். மிகப்பெரிய வெற்றிப்படம் என்று எதுவும் அமையாவிட்டாலும், அவரது படங்கள் அனைத்தும் ஓரளவு சுமாராக ஓடும் என்பது தெலுங்கு சினிமாத் துறையின் நம்பிக்கை. ஆனால் கடந்த இரண்டு படங்களில் சறுக்கலை சந்தித்திருந்தார், கோபிசந்த். இந்த நிலையில் அவரது நடிப்பில் 31வது படம் அறிவிக்கப்பட்டுள்ளது. 'பீமா' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்தை, கன்னட மொழி திரைப்பட இயக்குனரான ஹர்ஷா என்பவர் இயக்குகிறார். போலீஸ் அதிகாரியாக கோபிசந்த் நடிக்கிறார். இந்தப் படத்திற்கான முதல் பார்வை (போஸ்டர்) சமீபத்தில் வெளியாகி ரசிகர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இந்தப் படத்தில் கோபிசந்த் ஜோடியாக நடிக்க இரண்டு கதாநாயகிகள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர், தமிழ்நாட்டின் நாயகியான பிரியா பவானி சங்கர். மற்றொருவர் மாளவிகா ஷர்மா.

# "இது தான் புது ட்ரெண்ட்"

சமீபகாலமாகவே ட்ரெண்ட் என்ற வார்த்தையை அடிக்கடி கேட்டு வருகிறோம். அது என்ன ட்ரெண்ட் அப்படி என்றால் தற்போதைய கலாச்சார லெவல் என்று அர்த்தம். 90ஸ் கால ட்ரெண்ட், 2K கால ட்ரெண்ட் என வகை பிரிக்கப்பட்டுள்ளது.பாரம்பரியமாக இருப்பதை ஒரு வகையாகவும், மார்டனாக இருப்பதை ஒரு வகையாவும் கூறுகின்றனர். அப்படி தற்போதைய காலகட்டத்தின் ட்ரெண்ட்தான்என்ன.அதைநாமலும்ஃபாலோ செய்யலாமே என்று தானே நினைக்கிறீர்கள். அதை பற்றி இந்த கட்டுரையில் பார்க்கலாம்.

பெண்ணுக்கு அழகு சேர்ப்பது தலை முடியாகும். அப்படிப்பட்ட முடியை பெண்கள் அவர்களின் உடை, பாவனைக்கு ஏற்றவாறு வெட்டி கொள்வார்கள். அதன் தொடர்ச்சியாக தற்போது ஹேர் கலரிங் என்பது தற்போது ட்ரெண்டாகி வருகிறது. பல பெண்கள் தற்போது தலைமுடியை கலரிங் செய்வதில் மிகவும் ஆர்வமாக உள்ளனர்.



ஒரு காலத்தில் வெள்ளை முடி வந்தால் டை அடிப்பார்கள்.



தற்போது நீலம், மஞ்சள் என வேண்டுமென்ற வண்ணத்தில் தலை முடியை மாற்றி கொள்ள முடியும்.

பெண்களுக்கு மேலும் அழகு சேர்ப்பதில் நகைகளுக்கு முக்கிய பங்கு உண்டு. அப்படி உடலில் நகை அணிவதை தொடர்ந்து, முகத்தில், புருவத்தில் நகைகள், கற்கள் அணிந்து கொள்வது புது ட்ரெண்டாகி வருகிறது.

கண்களில் அதிக லைனர்:

பெண்களின் முக அழகுக்கு கண்மை ரொம்ப முக்கியமானது. எதிரில் இருக்கும் நபரை சட்டென ஈர்த்து விடும் தன்மை கண்மைக்கு உண்டு. முந்தைய காலத்திலேயே பெண்கள் கண்மை போடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். தற்போது ஐ லைனர், காஜல், மஸ்காரா என கண்களுக்கே வெரைட்டி வெரைட்டியான கண்மைகள் வந்துள்ளது. கண்களில் அதிக மையை நீட்டுவது தற்போது ட்ரெண்டாகி வருகிறது.

சிறிய புருவம்:

முகத்தில் புருவம் இல்லை யென்றால் நாம் எப்படி இருப்போம் என்று தெரியாது. அனைவருக்கும் புருவம் ஒரு தனி அழகு தான். பலரும் புருவத்தை ட்ரிம் செய்து வருகின்றனர். சிறிய புருவம் வைத்து கொள்வது தான் தற்போது ட்ரெண்டாகி வருகிறது.



# 'இயற்கை அழகு குறிப்புகள்'

அரிசி கழுவிய நீரில் முகம் கழுவினால் சருமத்தில் உள்ள அழுக்குகளை மட்டும் நீக்காமல் உள்ளிருக்கும் அதிக எண்ணெய் மற்றும் கரும்புள்ளிகளையும் அகற்றும். முகம் பளபளக்க புதினா சாறு, எலுமிச்சை சாறு இரண்டையும் வெந்நீரில் கலந்து மூன்று நாட்களுக்கு ஒரு முறை ஆவி பிடித்தால் அழுக்குகள் அகன்று சுத்தமாகவும் வசீகரமாகவும் இருக்கும்.

கசகசாவை ஒரு ஸ்பூன் எடுத்து தண்ணீருடன் சேர்த்து அரைத்து முகத்தில் பூசிக் கொண்டு அரை மணி நேரம் கழித்து வெதுவெதுப்பான வெந்நீரில் கழுவி வந்தால் முகம் பளிச்சென்று இருக்கும்.

தினமும் சீரகத் தண்ணீர் குடித்து வந்தால் முகத்தில் பருக்கள் வராது.

குளிர்ந்த நீர் சிறிதளவு எடுத்துக் கொண்டு அதனோடு பால் சேர்த்து துணியில் தொட்டு முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து முகத்தை கழுவி விடவும். இதை தொடர்ந்து செய்வதால் முகம் பளபளப்பாகவும் மிருதுவாகவும் மாறும்.

தக்காளி வெள்ளரிக்காய் இவைகளை நன்றாக அரைத்து இதனுடன் முல்தானி மெட்டி கலந்து முகத்தில் தடவி காய்ந்ததும் கழுவினால் முகம் பொலிவு பெறும்.

இரவு வெந்தயத்தை ஊற வைத்து மறுநாள் அரைத்து முகத்தில் பூசினால் எண்ணெய் வடிதல் மற்றும் சரும அழுக்குகள் நீங்கும்.

வெந்தயத்தை ஊறவைத்த நீரில் காட்டன் துணியால் (Cotton Cloth) நனைத்து முகத்தில் தடவினால் நொடியில் முகம் பளபளப்பாகும்.

வெந்தயத்தை ஊற வைத்து அரைத்து அதனுடன் பால் கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து கழுவ முகம் மென்மை அடையும்.

எலுமிச்சையை போலவே உருளைக் கிழங்கிலும் ப்ளீச்சிங் தன்மை அதிகம் உள்ளது.

ஆகவே உருளைக்கிழங்கை அரைத்து அதனை தினமும் முகத்தில் தடவி நன்கு ஊற வைத்து கழுவினால் முகம் பொலிவோடு மின்னும்.









# யாழில் சிறப்பாக இடம்பெற்ற குவியம் விருதுகள் 2023






ஈழத்தமிழ் சினிமா கலைஞர்களை தொடர்ந்தும் ஆதரித்து வரும் குவியம் ஊடகம் இரண்டாவது தடவையாக ஏற்பாடு செய்திருந்த "குவியம் விருதுகள் 2023" நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை (13) யாழ். தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கடந்த 2022 ஆம் ஆண்டு வெளிவந்த திரைப்படங்கள், குறும்படங்கள், காணொளிப் பாடல்கள் மற்றும் ஆவணப்படங்களில் இருந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (இதற்கான விண்ணப்பங்கள் கடந்த மே மாதம் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது).

இன்றைய இளசுகளின் இதயம் வென்ற "ரப் சிலோன்" குழுவினரின் கலக்கல் பாடல் மற்றும் "காங் எக்ஸ்" குழுவினரின் அனல் பறக்கும் நடனம் என பல கலை நிகழ்ச்சிகளும் இந்த விழாவில் அரங்கேறியது.

அது மட்டுமல்லாது காரை சிவநேசனின் இயக்கத்தில் விரைவில் வெளியாகவிருக்கும் "புஷ்பக27" என்ற திரைப்படத்தின் ட்ரெயிலரும் நிகழ்வில் வெளியிடப்பட்டது. அத்துடன், ஈழத்தமிழ் சினிமாவுக்கான தனித்துவத்தையும் அடையாளத்தையும் வேண்டி ஓயாது பயணித்துக் கொண்டிருந்த வேட்கையாளன் அமரர் நவரட்ணம் கேசவராஜா அவர்கள் எம் சினிமாவுக்கு ஆற்றிய சேவையைக் கௌரவிக்கும் முகமாக "வாழ்நாள் சாதனையாளர்" விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அமரர் கேசவராஜா சார்பாக அவரது துணைவியார் மற்றும் மகன் ஆகியோர் அந்த கௌரவத்தினை பெற்றுக் கொண்டனர். மேலும், மூத்த சினிமா கலைஞர்கள் ஐவரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும, IDM நேஷன்ஸ் கெம்பஸின் சர்வதேச செயற்பாடுகளுக்கான சமூக நலத்துறையின் தலைவரும், சர்வதேச இசைக்கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவருமான அதிவணக்கத்துக்குரிய பிதா/ அருட்கலாநிதி எஸ்.சந்துரூ பெர்ணான்டோ, வட மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் மஹிந்த குணரத்ன, பிரைட்மூன் புரொடக்ஷன் நிறுவுனர் பகீரதன் கனகரட்னம், கர்ணன் படைப்பகம் நிறுவுனர் சபேசன் சண்முகநாதன், IDM நேஷன்ஸ் கெம்பஸின் யாழ். மாவட்ட முகாமையாளர் பி.ரஜீவ் உள்ளிட்ட விருந்தினர்களும் சினிமா கலைஞர்கள், சினிமா ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




இத்திரைஇசை பாடல்களின் வரிகளை பாரதியார், குவேந்திரன், ஜெயமோகன், ஆதி எழுதியுள்ளனர். பொய்மான் படத்தின் இசையை சாரு ராம், ஆதி, குரு பி ஆகியோர் மெருகூட்டியுள்ளனர். அத்துடன் பொய்மான் பட பாடல்களை கலைமாமணி பூஷணி கல்யாணராமன், கிரே, ஆர்.பி ஷ்ரவன் (சூப்பர் சிங்கர்), ஆதி ஆகிய பாடகர்கள் பாடியுள்ளனர்.

அவுஸ்திரேலிய தயாரிப்பான "பொய்மான்" திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா இவ்வருடம் ஜனவரி மாதம் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் திரையிடப்படும் ஆஸியில் உருவான

# "பொய்மான்"




இந்திய சினிமாக்களுக்கு ஈடிணையற்ற புலம்பெயர் கலைஞர்களின் படைப்பில் அவுஸ்திரேலியாவில் உருவான "பொய்மான்" திரைப்படம் தற்போது இலங்கையில் திரையிடப்படுகிறது. அவுஸ்திரேலிய மண்ணில் ஷோபனம் கிரியேஷன்ஸ் கலைஞர்களால் உருவான "பொய்மான்" திரைப்படம், தமிழ்க் கலைஞர்களின் அரியதொரு படைப்பாகும்.

கங்காரு தேச தமிழ் சினிமா படைப்பாற்றலில் இத்திரைப்படம் ஓர் மைல்கல்லாக தடம் பதித்தது. அவுஸ்திரேலிய மண்ணில் உருவாகிய "பொய்மான்" திரைப்படத்தில் ஜனார்தன், கவிஜா, ஜெயமோகன், ஷர்மினி நடித்துள்ளனர். ஷோபனம் கிரியேஷன்ஸ் தயாரிப்பில் புற்றுநோய் மருத்துவராகவும், மேடை நாடகம், குறும்பட இயக்குனாராகவும் நன்கு அறியப்படும் மருத்துவர் ஜெயமோகன் இத்திரைப்பட இயக்குனாராவார். ஆஸ்திரேலியாவில் தயாரிக்கப்பட்ட இந்த திரைப்படத்தை ஒரு கப்புசினோ காதல் மற்றும் பூமராங் போன்ற பாராட்டப்பட்ட குறும்படங்களையும் இயக்கிய டாக்டர் ஜே ஜெயமோகன் எழுதி இயக்கியுள்ளார். இயக்குனர் ஜெயமோகனின் இரண்டு குறும்படங்களும் உலகளவில் 50,000க்கும் அதிகமான பார்வைகளுடன் பலத்த பாராட்டுக்களையும் பெற்றுள்ளன.

பொய் மான் திரைப்படத்தின் எடிட்டிங்கை செந்தில்குமார் ஆர் மற்றும் ஹரிஷ் செய்துள்ளனர். கலை இயக்கம் பணியை ஷாமினின் சி ஆற்றியுள்ளனர்.

புலம்பெயர்ந்த இளங் கலைஞர்களை உள்ளடக்கிய முழு நீள திரைப்படமான பொய்மான், இந்திய திரைப்படங்களைப் போன்ற தொழில்நுட்ப உபகரணங்களை இணைத்து இலங்கை, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் படமாக்கப்பட்டுள்ளது.

## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்



## நிறங்களின் பெயரை எழுதுங்கள்



## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



## தொடர்புபடுத்துங்கள்



ஏடு

ஊசி

ஈ

இலை

ஒன்று

எறும்பு





# சமூக சேவையில் தடம் பதித்து வரும் தென்கிழக்கின் ஆளுமை மருதமுனை ஏ.ஆர்.எம். சாலிஹ்

சமூக சேவையில் தடம் பதித்து வரும் தென்கிழக்கின் ஆளுமை ஏ.ஆர்.எம். சாலிஹ். தனது அரச உத்தியோகத்தின் மூலமாக ஆழமான சமூக சேவையில் பயணித்து வருகின்றார். மருதமுனையைச் சேர்ந்த இவர் கல்முனை பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவில் சிரேஸ்ட சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளராகப் பணிபுரிகின்றார்.

உயர் அதிகாரிகளுடன் நல்லுறவைப் பேணிக் கொண்டு தனக்குக் கீழ் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்களுடன் நல்லிணக்கத்துடன் பணியாற்றி வருகின்றார்.பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் சமுர்த்திப் பிரிவின் ஊடாக பயனாளிகளுக்கும்,ஏனைய தரப்பினருக்கும் பல்வேறுபட்ட பயன் தரும் உதவிளைச் செய்து வருகின்றார்.

இன, மத வேறுபாடுகளின்றி அனைவருடனும் நல்லுறவைப் பேணி இன ஐக்கியத்துடன் தனது பணியை முன்னெடுத்து வருகின்றார்.பல சமுக சேவை அமைப்புக்களில் இணைந்து தனது சமூகப்பணியை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றார். இவர் மருதமுனையைச் சேர்ந்த அப்துல் றஹீம்,மைமுனும்மா தம்பதிக்கு 1965.0312ஆம் திகதி மருதமுனையில் பிறந்தவர்.

தனது ஆரம்பக் கல்வியை 1970ஆம் ஆண்டு மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். அதன் பின்னர் 1976ஆம் ஆண்டில் இருந்து மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் இணைந்து கற்றார்.அங்கு கற்று 1984ஆம் ஆண்டில் உயர் தர கணிதப்பிரிவில் தோற்றி சித்திபெற்று 1987ஆம், 1998ஆம் கல்வியாண்டில் பௌதீக விஞ்ஞான கற்கை நெறிக்காக கிழக்குப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்.

அங்கு முதலாம் ஆண்டு கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த நிலையில் கிழக்கில் ஏற்பட்ட பயங்கரவாத பிரச்சினை காரணமாக கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு இடம்பெயர்ந்த மாணவராக இணைக்கப்பட்டு தனது பல்கலைக் கழகப் பட்டப்படிப்பை 1994ஆம் ஆண்டு பூர்த்தி செய்தார்.அதன் பின்னர் 2016ஆம் ஆண்டு அல்லியன்ஸ் சர்வதேச பல்கலைக்கழகத்தில் மனித வள அபிவிருத்தி தொடர்பில் வியாபார நிருவாக முதுமானி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

19940101ஆம் திகதி அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பட்டதாரிப் பயிலுனராக இணைந்து தனது அரசசேவையை ஆரம்பித்தார். அதன் பின்னர் 1993-03-01ஆம் திகதி தொடக்கம் தற்காலிக சமுர்த்தி முகாமையாளர் பதவிக்கு உள்ளிர்க்கப்பட்டு சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் கடமையேற்றார். இதன் பின்னர் 1996-08-09 ஆம் திகதி தொடக்கம் நிரந்தர சமுர்த்தி முகாமையாளராக கல்முனை பிரதேச செயலகத்திற்கு நியமிக்கப்பட்டார். அங்கு 2007-01-30ஆம் திகதி வரை சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளராக கடமையாற்றினார்.

இதன் பின்னர் 2007-02-01ஆம் திகதி அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்று அங்கு சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளராக 2008-01-30ஆம் திகதி வரை கடமையாற்றிய நிலையில் 2008-02-01ஆம் திகதி மீண்டும் கல்முனை பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றார். இங்கு கடமையாற்றிய நிலையில் மீண்டும் 2018-09-18ஆம் திகதி சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்று அங்கு சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளராக 2020-09-17ஆம் திகதி வரை கடமையாற்றினார். பின்னர் மீண்டும் 2020-09-18ஆம் திகதி கல்முனை பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்று இன்று வரை சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளராகப் கடமையாற்றுகின்றார்.






இவரது சமுக சேவைக்காக பல்வேறு சமூக சேவை அமைப்புக்கள் பல விருதுகளை இவருக்கு வழங்கியுள்ளன. 2011ஆம் ஆண்டின் சமூக சேவைக்கான 'சாமஸ்ரீ தேச கீர்த்தி விருது', 2012ஆண்டின் சமூக சேவைக்கான 'இரத்தின தீப விருது', 2012ஆம் ஆண்டுக்கான பிரதேச செயலக மட்டத்திலான' சமூக செயற்பாட்டாளருக்கான விருது', 2016ஆம் ஆண்டு சமூகசேவைக்கான 'சமாதானத் தூதுவர் விருது', 2017ஆம் ஆண்டின் சமூகசேவைக்கான 'கலாசார திணைக்கள விருது', 2018ஆம் ஆண்டு இவரது சமுக சேவைக்காக 'மாண்புறும் மருதமுனை விருது', 2019ஆம் ஆண்டின் சமூகசேவைகக்கான' அப்துல் கலாம் ஞாகார்த்த விருது', இவரது சமூக சேவையை கௌரவித்து நீதி அமைச்சு தீவு முழுவதிற்குமான சமாதான நீதவானாக 2013ஆம் ஆண்டு நியமித்துள்ளது.

இவர் 'மருதமுனை கலை,இலக்கிய பேரவையின்' ஆயுட்காலத் தலைவராக செயற்பட்டுவருகின்றார். இலக்கியத்தில் ஆர்வம் கொண்டு சிறு சிறு கவிதைகளையும் இவர் எழுதிவருகின்றார். எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் நூல் வெளியீடுகளில் கலந்து கொண்டு நூல்களை கொள்வனவு செய்து வருகின்றார். எழுத்தாளர்களின் கலை,இலக்கிய ஊடகப்பணிகளுக்கும் உதவிகள் செய்து வருகின்றார்.இவரது சமூகசேவைப் பணி மேலும் தொடர செந்தூரம் வாழ்த்துகின்றது.

**–பி.எம்.எம்.ஏ.காதர்–**
**(மருதமுனை தினகரன் நிருபர்)**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181

# புதுநானூறு 01

மொழியாலானது வாழ்க்கை: வாழ்க்கையாலானது கவிதை: கவிதையாலானது மொழி.

மொழியெனும் அற்புதத்தின் ஒளிக்கீற்று கவிதையாலானது: கவிதையை வாழ்தல் கொண்டு இயங்குதல் காலாகாலமாக நிகழ்ந்து வரும் அனுபவம் தான்.

தமிழில் நான் வாசித்த கவிதைகளின் நானூறு கவிதைகளை/ கவிதையின் வாசிப்பு அனுபவத்தை/ திறனாய்வுக் குறிப்புரைத்தலை நிகழ்த்திப் பார்த்தலே இப்பத்தியெழுத்தின் அவா.

என்னளவான மதிப்பீட்டுப் பட்டியலின் எழுமாறான பத்துக் கவிதைகளை இத்தொடரில் தொடர்கிறேன்.

தமிழில் நவீன கவிதையின் தொடக்கப் புள்ளியாக பாரதி தெரிகிறான். வசன கவிதை மூலம் புதிய தொடக்கத்தை பாரதி ஏற்படுத்தினான்.

பாரதியின் காட்சி, வசனகவிதையாகி நின்றது. அதன் முதற்கிளை இன்பம். இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான் இனிமையுடைத்து காற்றும் இனிது. தீ இனிது. நீர் இனிது. நிலம் இனிது. ஞாயிறு நன்று திங்களும் நன்று. வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன. மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது. கடல் இனிது. மலை இனிது. காடு நன்று. ஆறுகள் இனியன.

உலோகமும், மரமும், செடியும், கொடியும், மலரும், காயும், கனியும் இனியன. பறவைகள் இனியன. ஊர்வனமும் நல்லன. விலங்குகளெல்லாம் இனியவை. நீர் வாழ்வனவும் நல்லன. மனிதர் மிகவும் இனியர். ஆண் நன்று பெண் இனிது. குழந்தை இன்பம். இளமை இனிது. முதுமை நன்று. உயிர் நன்று காதல் இனிது.

பாரதியின் காட்சியெனும் வசன கவிதையின் முதல் பகுதி இது. எளிய வசனத்தில் கவிதையின் முன்வைப்பை அதன் உள்ளடக்க, உருவ புதுவார்ப்பாக பாரதி படைத்த கவிதை இது.

பாரதி திரட்டில் வசன கவிதையெனப் பெயரிடப்பட்ட காட்சி தமிழ்க் கவிதை வெளியில் இன்னொரு பாய்ச்சல்.

இத்தகைய திருப்பங்களோடும்; புத்தாக்க சிந்தனையோடும் புதுக் கோட்பாடுகள் அல்லது சொல்முறையோடும் இன்றுவரை தமிழில் கவிதை நகர்ந்து வருகிறது.

எண்ணற்ற கவிதைகளை வாசிக்கின்றோம். நான் வாசித்த புதுநானூறு கவிதைகளை புதுநானூறாக காணுகிறேன். அந்த காணல் வரலாற்று நெடுந் தொடர்ச்சியின் கூறு.

அத்தகைய கூறுகளில் பதின்மரது பத்துக் கவிதைகளை இந்தப் பத்தியில் முன்வைக்க முனைகிறேன்.

பாரதி இதன் தொடக்கம். காட்சி அழகின்பம். இன்பத்தை வாசிக்கிறபோது இன்பக் கிளர்ச்சி எழுகிறது. சுற்றியுள்ள இயற்கை மீதான ஈர்ப்பை கவி தொற்ற வைக்கிறான்.

உலகை இனிதாய்க் காண்பதென்பது, வாழ்வை வாழ்வின் இடையிடும் இயற்கையை மனிதத்தை வாழ்வின் இயங்கியலை இன்பமாய்க் காண்பதாகும்.



ஐம்பூதமும் வசப்படுமிடம் அல்லது அதன் மீது மனிதம் செலுத்தும் இணைவு வாழ்வை இனியதாக்கி விடும் உணர்வை பாரதி பாய்ச்சுகிறான்.

வாழ்வே இனியதாகி விடும்போது காதல் மட்டும் எப்படி இன்னாததாக முடியும்? உயிர் நன்றெனில் காதலும் இனிமையானது தானே. தோன்றி முடியும் உலகில் இயங்கி மடியும் மனிதன் இன்பமாக எண்ணுகிறான்; எண்ணமே வாழ்வு.

பாரதியின் சொற்களின் கனதி இயங்கியலின் பெறுமானமே.

# எண்மவெளி இலக்கியம்



இலக்கியத்தின் வெளிப்பாட்டுத் தளம் காலவோட்டத்தின் மாற்றங்களின் விளைபொருளாக இருந்து வந்துள்ளது.

கல்வெட்டுக்காலம் கணிணிக்காலமாக மாறிய அறிவியல் போக்கு தமிழ் இலக்கிய வெளிப்பாட்டு முறையியலிலும் பெரும்பாய்ச்சலை நிகழ்த்தியுள்ளது.

இந்த மாற்றத்தின் பின்புலத்தில் உட்பொருள், உருவக்கட்டமைவு, படைப்புக் கோட்பாடு, படைப்பாள மனோபாவம், வாசக மனப்பாங்கு, இலக்கியப்போக்கென மாற்றங்களும் நிகழ்ந்தேறின.

இன்றைய எண்ம யுகம் இலக்கிய வெளியை எண்மவெளியாக்கி விட்டது. இதன் உடன்பாடான எதிர்மறையான தாக்கங்கள் இலக்கியத்தை நிர்ணயிக்கும் அல்லது முனைவுறுத்தும் சக்தியாக மாறிவிட்டது.

எண்மவெளி இலக்கிய வெளிப்பாட்டு வகைமை படைப்புவெளியை அகலித்திருக்கிறது. கவிதை முதல் நாவல் வரை எண்மத்தில் களம் காண்கிறது. புதிய எண்ம வெளியாளர் பட்டாளம் தோன்றி விட்டது. முன்னைய படைப்பாளருள் பலரும் எண்மத்துக்கு மாறி விட்டனர். மேலும் பலர் ஓய்ந்து விட்டனர் அல்லது கடதாசி யுகத்தில் இருக்கின்றனர்.

எண்ம வெளியில் தொகையளவு கூடியது போல் பெறுமான அளவு குறைந்து விட்டதா என்கிற எழுவினா மேலெழுகிறது.

இன்று பேனா இல்லாத நுனி விரலின் அசைவெழுத்தாகி விட்டது. எண்ணற்ற, கட்டற்ற போக்கு முன்னம் போல் படைப்புக்களைச் சீர்செய்கிறஃ செதுக்குகிற பண்பாட்டை மாற்றி விட்டது. அதனால் காத்திரமற்ற எழுத்துக்களின் குவியல் வந்து குவிந்து விட்டது.

மறுபுறம் இந்த எண்மக் கவர்ச்சி எல்லாவற்றையும் ஏற்கத் தொடங்கியது. வர்ணமய முன்வைப்பு வாய்ப்பு காத்திரத்தைப் பின் தள்ளி வைத்தது.

இன்னொரு புறம் எண்மவெளியில் உலாவுவோர் லைக், கொமன்ற், செயார் என ஊடுருவி வாசக வெளியென்ற பரப்பில் அல்லது குழுநிலை இயக்கத்தில் முனைப்புறுகின்றனர்.

இன்னொரு புறம் பாராட்டுப்பத்திரங்களும், போட்டோக்களும், விருதுகளுமென அதிகரித்துள்ளது. இதனால் தெரிவாகுபவை அல்லது தாம் எண்மத்தில் பதிபவை எல்லாம் காத்திரமான படைப்பென மதிப்பிடும் பலவீனமொன்றும் பலம் போல உலாவத் தொடங்கி விட்டது.

மற்றொரு நோக்கில் மின் இதழ் வடிவத்தோற்றம் இலக்கிய வெளிப்பாட்டை இலகுவாக்காயுள்ளது. வாசிப்பு முறையும் மாற்றத்துக்குள்ளாகி நிற்கிறது.

இன்றைய எண்ம யுகத்தில் எண்மத் தலைமுறையின் கீழ் இலக்கிய வெளி தவிர்க்க முடியாதவாறு எண்மத்தில் நிரம்பி நிற்கிறது.

# எனினும் நான் எழுகின்றேன்

என் பாலினக் கவர்ச்சி
உன்னை சஞ்சலப்படுத்துகிறதா?
என் தொடைகளின் இடுக்கில் வைரங்கள் இருப்பது போல
நான் இறுமாப்புடன் நடனமாடுவது
உன்னை ஆச்சரியப்படுத்துகிறதா?
அவமானத்தின் வரலாற்றுக் குடிசைகளிலிருந்து
நான் எழுகின்றேன்
வலியின் வேர் கொண்டதோர் கடந்த காலத்திலிருந்து
நான் எழுகின்றேன்
பாய்ந்து பரந்தோடும் ஒரு கருங்கடல் நான்
கடற்பெருக்கின் பொங்குதலும்
நிரம்பிப் பெருகுதலும்
எனக்குள் கொண்டுள்ளேன்
அச்சமும் பயங்கரமுமான இரவுகளையும் விட்டுவெளியேறி
நான் எழுகின்றேன்
அற்புதமான தெளிவுடன் புலரும் அதிகாலையில்
நான் எழுகின்றேன்
என் மூதாதையர் கையளித்த கொடையைக் கொண்டுவரும் நானே
அடிமைகளின் கனவும் நம்பிக்கையுமாவேன்
நான் எழுகின்றேன்
நான் எழுகின்றேன்
நான் எழுகின்றேன்

Still I Rise
Does my sexiness upset you?
Does it come as a surprise
That I dance like I've got diamonds
At the meeting of my thighs?
Out of the huts of history's shame
I rise
Up from a past that's rooted in pain
I rise
I 'am a black ocean,leaping and wide,
Welling and swelling I bear in the tide
leaving behind nights of terror and fear
I rise
into a daybreak that's wondrously clear
I rise
Bringing the gifts that my ancestors gave,
I am the dream and the hope of the slave,
I rise
I rise
I rise.
–Maya Angelou
தமிழில – க.நவம்





# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.– 21

ஒரு பக்கம் தனது தாய், மறு பக்கம் மனைவி, மேலும் மனைவி உயிருடன் இருக்கும் போது வேறு ஒரு பெண்ணை காதலிப்பதோ, திருமணம் செய்து கொள்வதோ சட்டப்படி குற்றம் என்பதை எம்.ஜி.ஆர் நன்கு அறிந்து செயல்பட்டார். இருந்தும் பெண் என்றால் பேயின் மனமும் இறங்கும் என்பது போல எம்.ஜி.ஆரும் ஜானகி விடயத்தில் மனதை பறிகொடுத்தார். எம்.ஜி.ஆர் நாடகம், சினிமா, குடும்ப வாழ்க்கையில் மிகவும் அனுபவம் பெற்றவர். எதையும் யோசிக்காமல் செய்யமாட்டார். இருந்தும் அப்படிப்பட்ட இவருக்கு நடிகை ஜானகி விடயத்தில் சிக்கல் ஏற்பட்டு விட்டது. ஆதலால் ஒரு நாள் படப்பிடிப்பு முடிந்து வீட்டுக்கு வந்ததும் எம்.ஜி.ஆர் தனது மனைவி சதானந்தவதியிடம் ஜானகி பற்றி முழுவிபரத்தையும் சுருக்கமாக சொல்லிவிட்டு தொடர்ந்து காதல் திருமணம் விடயத்தையும் சொல்லி விட்டு தனது மனைவியின் கையை பிடித்துக்கொண்டாrhர். இந்த விடயத்தில் மனைவியின் சம்மதம் இருந்தால் போதும் பிறகு மற்றவர்களுடைய சம்மதத்தை பெற்று விடலாம் என்று நினைத்துதான் எம்.ஜி.ஆர் முயற்சி செய்தார். எம்.ஜி.ஆர் ஜானகி விடயத்தை சொன்னதும் சதானந்தவதியின் கண்களில் கண்ணீர் வடிந்தது. உடனே எம்.ஜி.ஆர் கண்ணீரை துடைத்து விட்டுக்கொண்டே தனது மனைவியிடம் உனக்கு இது பிடிக்காவிட்டால் விட்டு விடுகின்றேன். அழாதே! உனது சம்மதம் இல்லாமல் இனிமேல் ஜானகியிடம் பேசக்கூடமாட்டேன். கவலைப்படாதே! இதை அம்மாவிடம் கூட நான் சொல்லவில்லை. நீ நன்றாக யோசித்து உனது முடிவை ஆறுதலாக சொல்லலாம் அவசரம் இல்லை என்று கூறி முடித்தார்.சதானந்தவதி தனது கணவருடைய நிலைமையை பற்றியும் அவருடைய வேண்டு கோளைப் பற்றியும் நினைத்து இந்த விடயத்தை அடுத்த நாள் தனது மாமியிடமும் அண்ணியிடமும் பேசினார். இந்த விடயத்தை கேட்டதும் இருவரும் அதிர்ச்சியடைந்தனர். மனைவியை வைத்துக்கொண்டு இன்னொரு பெண்ணுடன் தொடர்பா? இது என்ன அநியாயம்? வரட்டும் நான் கேட்கிறேன் என சத்தியபாமா கத்தினார். சதானந்தவதி சத்தியபாமாவை சமாதானப் படுத்தினார். தனது கணவர் விருப்பப்படி ஜானகியை திருமணம் செய்து கொள்ளட்டும். எனக்கு எனது கணவருடைய மனநலம்தான் முக்கியம். அவருடைய மனம் நோகக்கூடாது. எனது உடல் இனிமேல் நலம் பெற்று நான் எழுந்து மீண்டும் எனது பொறுப்புக்களை சேவைகளை அவருக்கு செய்யமுடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. எனவே தயவு செய்து அவரிடம் எந்தவித மறுப்பும் சொல்லாமல் கேள்விகள் கேட்காமல் சம்மதத்தை அவரிடம் நீங்களே உங்களுடைய சம்மதத்தை சொல்லுங்கள். அவர் மனம் புண்படாமல் நல்ல சந்தோஷமாக இருப்பது தான் நமக்கு முக்கியம் என்று சொல்லிக் கொண்டு சத்தியபாமாவின் கையை பிடித்து கண்ணீர் விட்டார்.எந்த சூழ்நிலையிலும் தனது கணவர் எவ்வளவு மோசமானவராக இருந்தாலும் வைப்பாட்டியோ அல்லது இரண்டாவது பொண்டாட்டியோ வைத்து கொள்ள நல்ல மனதுடன் எந்த பொண்ணும் சம்மதிக்கமாட்டாள். ஆனால் சதானந்தவதி தனது கணவர் தன்னிடம் இன்னொரு பெண்ணை திருமணம் செய்து கொள்ள அனுமதி கேட்டதை நினைத்து பூரிப்படைந்து போனார். தனது மனைவி ஒரு படுக்கை நோயாளி என்று நினைக்காமல் பாசத்தோடும் பற்றோடும் கேட்டாரே! இவர் வேறு திருமணம் செய்து கொண்ட பிறகு நம்மீது வைத்துள்ள அன்பும் பாசமும் பற்றும் போய் விடுமோ என்று நினைத்து எதுவானாலும் சரி அவர் நல்லா இருந்தால் போதும். நான் சாகும் வரை அவருடைய முகத்தை பார்க்கும் பாக்கியம் கிடைத்தால் போதும் என்ற நிலையில் சதானந்தவதி சம்மதம் தெரிவித்தார். இந்த விடயத்தில் சத்தியபாமாவும் சக்கரபாணியும் எந்தவித மறுப்பும் சொல்லவில்லை. 1957 இல் எம்.ஜி.ஆரும் ஜானகியும் பதிவுத்திருமணம் செய்து கொண்டார்கள். எம்.ஜி.ஆர் ஜானகியை திருமணம் செய்து கொண்ட உடனே ஜானகியை சதானந்தவதிக்கு அறிமுகப்படுத்தினார். உடனே ஜானகி சதானந்தவதியின் காலை தொட்டு வணங்கி விட்டு அக்கா நான் உங்களுடைய உடன் பிறவா தங்கை என்னை உங்கள் தங்கை போல் நினைத்து கொள்ளுங்கள். இதைக்கேட்ட சதானந்தவதி ஜானகியுடைய கையைப் பிடித்து கொண்டு நான் அக்காவாக இருக்கிறேன். கவலைப்படாதே என்றார். அன்று மதியம் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டார்கள். திருமணத்திற்கு பிறகு ஜானகி இனிமேல் சினிமாவில் நடிப்பதில்லை. நான் உங்கள் மனைவி. வீட்டோட இருந்து விடுகிறேன் என்று எம்.ஜி.ஆரிடம் சபதம் எடுத்துக்கொண்ட ஜானகி கடைசி வரை சினிமாவில் நடிக்கவில்லை. எம்.ஜி.ஆரும் ஜானகியும் தினமும் தாய் வீட்டிற்கு வந்து சதானந்தவதியின் உடல் நலத்தைப் பார்த்து கவனித்து தேவையான உதவிகளை செய்பவர்களாக இருந்தனர். தனது இளைய செல்ல மகன் ஜானகியை திருமணம் செய்ததன் மூலம் இல்லற வாழ்க்கையில் திருப்திகரமாக இருப்பதை பார்த்து சத்தியபாமா மிகவும் சந்தோஷப்பட்டார். சத்தியபாமா 1958 இல் இறந்து விட்டார்.எம்.ஜி.ஆர், எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ் என்ற பெயரில் சொந்தமாக "நாடோடி மன்னன்" என்ற பெயரில் பிரமாண்டமான முறையில் தானே டைரக்ட் செய்து தயாரித்து வெளியிட்டு வெற்றியும் கண்டார்.

நாடோடி மன்னன் 161 நாட்கள் ஓடி வெற்றியும் கண்டு வசூலிலும் வெற்றி பெற்றது.

(தொடரும்)



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்



# வியட்நாம் வீடு

முதன் முதலில் சிவாஜி கணேசன் நடித்த வியட்நாம் வீடு என்ற படத்தில் வசனம் எழுதினார் அந்த படத்தின் வசனங்கள் வலுவாக இருந்ததால் யார் இந்த வசனகர்த்தா என மக்கள் தேடிப் பார்க்க துவங்கினர். இந்த படத்தில் பிரஸ்டீஜ் பத்மநாபன் என்ற கேரக்டரில் சிவாஜி வாழ்ந்திருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும் அந்த கதாபாத்திரத்தை வியட்நாம் வீடு சுந்தரத்தின் வசனங்கள் வலுவாக்கியது என சொல்லலாம். அதனால் முதல் படத்தின் பெயரை தனது பெயருக்கு பின்னால் சேர்த்துக்கொண்டு வியட்நாம் வீடு சுந்தரம் ஆனார் இவர்.இவரது வசனங்கள் மற்ற நடிகர்களுக்கு பொருந்துவதை விட அதிகம் நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்குத்தான் பொருந்திப்போனது.

வியட்நாம் வீடு, ஞான ஒளி உள்ளிட்ட படங்களில் இவரது வசனங்கள் பெரிதும் புகழ்பெற்றது ஞான ஒளி படத்தில் இடம் பெற்ற ஒரு மந்தையில் இரண்டு ஆடுகள் வேறு வேறு பாதையில் போய்விட்டன, இரண்டும் சந்தித்தபோது பேசமுடியவில்லையே என்ற இவரது வசனங்கள் எல்லாம் வேற லெவல் வசனங்கள்.

சிவாஜி நடித்த கௌரவம் படத்துக்கு வசனம் எழுதி அந்த படத்தை இயக்கியவர் இவர். அந்த படத்தில் ரஜினிகாந்த் என்ற வேடத்தில் வக்கீலாக சிவாஜி நடித்திருந்தார் அந்த படத்தில் இடம்பெற்ற வசனங்கள் புகழ்பெற்றவை.

யாருமே பொதுவாக ஜாலியாக யாரையும் கேலி செய்யும்போது பெரிய கௌரவம் சிவாஜி என்று கேலி செய்வார்கள். அந்த அளவு கௌரவம் படம் வியட்நாம் வீடு சுந்தரத்துக்கு ஒரு கௌரவமான இடத்தை பெற்றுக்கொடுத்தது.



எம்.ஜி.ஆர் நடித்த நாளை நமதே படத்துக்கு இவரது வசனம்தான். எம்.ஜி.ஆருடன் அதிக படங்களில் இவர் பணியாற்றவில்லை சிவாஜியுடனே அதிகம் பணிபுரிந்துள்ளார்.

1991ம் ஆண்டு சிவாஜி , மனோரமா ஜோடியாக நடித்த ஞானப்பறவை என்ற படம் வித்தியாசமான கதையம்சம் கொண்ட படமாகும்.

இந்த படத்தில் நடிகர் சிவாஜிகணேசன் ஒருவரின் கண்களை பார்த்தே அவரை முடிவு செய்து விடுவார் அவரது எதிர்காலத்தை சொல்லும் வித்தியாசமான படம் இது. இந்த படத்தை வியட்நாம் வீடு சுந்தரம் இயக்கி இருந்தார். இந்த படம் பெரிய அளவில் போகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கார்த்திக் ரகுநாத் இயக்கி கார்த்திக் மற்றும் சிவாஜிகணேசன் நடித்த ராஜ மரியாதை என்ற படம் அருமையான கதையம்சம் கொண்ட படமாகும் இந்த படத்திற்கு வியட்நாம் வீடு சுந்தரம் வசனம் எழுதி இருந்தார்.

முருகனின் திருவிளையாடல்களை நினைவு கூறும் விதமாக வியட்நாம் வீடு சுந்தரம் கந்தர் அலங்காரம் என்ற பக்தி படத்தையும் இயக்கியுள்ளார். இந்த படத்தில் தேவர் தயாரித்த தெய்வம் படத்தில் வருவது போல முருகனை பற்றி ஒவ்வொரு கதையாக வரும். வெற்றிகரமாக ஓடிய பக்திப்படமிது.

வியட்நாம் வீடு சுந்தரம் 80களின் இறுதியில் வந்த ஆனந்த், ஜல்லிக்கட்டு, சூரசம்ஹாரம் உள்ளிட்ட படங்களுக்கும் வசனம் எழுதியுள்ளார் அதில் இவர் வசனம் எழுதிய ஜல்லிக்கட்டு படத்தின் வசனங்கள் மிக புகழ்பெற்றது உன் எதிரிதான் என்னுடைய எதிரியும் என சத்யராஜை பார்த்து சிவாஜி பேசும் வசனங்கள் புல்லரிக்க வைக்கும் என்று சொல்லலாம். பஞ்சபாண்டவர்கள் 5 பேர் இருக்கும்போது அர்ஜீனனை மட்டும் ஏண்டா கண்ணன் சூஸ் பண்ணான் அர்ஜூனன் கிட்ட வீரம் இருந்தது கண்ணன்கிட்ட விவேகம் இருந்தது. உன்னுடைய வீரமும் என்னுடைய விவேகமும் சேர்ந்தா குருசேத்திரம்.குருஷேத்திரத்தை என்னடா நெனச்ச யாரை எங்க எப்போ முடிக்கணும்னு இப்போ உனக்கு நான் குருஷேத்திரம் சொல்லித்தர போறேன் என சத்யராஜிடம் சிவாஜி பேசும் வசனங்கள் பார்க்கும் ரசிகர்களை சிலிர்க்கவைத்தது. வியட்நாம் வீடு சுந்தரத்தின் வசனமும் சிவாஜி சத்யராஜின் நடிப்பும் அபாரமாக இருந்தது.

இப்படத்தில் இடம்பெற்ற இன்னொரு வசனம் வில்லன் கோஷ்டியினர் சிவாஜியை பார்த்து பேசுவார்கள், சத்தியம் , தர்மம்னு பேசி பேசி வீணாப்போயிட்டிங்களே ராம்பிரகாஷ், சத்தியம் மவுண்ட்ரோடுல தியேட்டர் ஆயிடுச்சு, தர்மம் அங்க படமா ஓடிக்கிட்ருக்கு என நறுக்கு தெறித்தாற் போல வசனங்களை எழுதியவர்.

அந்த படத்தின் 100வது நாள் விழாவில் வியட்நாம் வீடு சுந்தரம் எம்.ஜி.ஆர் கையால் சிறந்த வசனத்திற்காக விருது பெற்றார்.



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# காலி மாவட்ட ஓய்வு பெற்ற கல்வியியலாளர்கள் அமைப்பு ஏற்பாடு செய்த 'ஓயாத ஆளுமைகள்' நூல் வெளியீட்டு விழா



காலி மாவட்ட ஓய்வு பெற்ற கல்வியியலாளர்கள் அமைப்பு ஏற்பாடு செய்த 'ஓயாத ஆளுமைகள் ' நூல்வெளியீட்டு விழா அண்மையில் காலி முஸ்லிம் மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்களை படத்தில் காணலாம். இடமிருந்து வலமாக: முன்னாள் அதிபர் அப்லல் ஹுஸைன், முன்னாள் ஆசிரியர் நிஸாம், முன்னாள் அதிபர்களான ஏ.எச்.முஹம்மத், பளுஹுர் ரஹ்மான், வலயக் கல்வி அதிகாரி பாரூக், காதி நீதவான் ஜலால்டீன், முன்னாள் தென்மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஜே.மொஹமட், தென்மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். மசாயிர், பிரதம அதிதி கொழும்பு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானப் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ். அனீஸ் , கௌரவ அதிதி மின்சக்தி எரிசக்தி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ரிஸ்னா அனீஸ், முன்னாள் ஆசிரிய ஆலோசகர் எம்.எஸ்.எம். ஹிசாம், முன்னாள் அதிபர் ஆரிப், காதி நீதவான் ஏ.எச்.எம் ஜிப்ரி,டொக்டர் சாஜஹான், அமைப்பின் தலைவர் கலாபூஷணம் ஏ.சி.எம்.ஜிப்ரி ஆகியோரைக் காணலாம்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒகஸ்ட் மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.